# பொருளியல் நோக்கு

அக். / நவம். 1995
இரட்டை இதழ்

# பணவீக்கம்
## வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் அதன் தாக்கம்



மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 21 இதழ் 7/8 அக். / நவம். 1995

# உள்ளே

## சிறப்புக் கட்டுரைகள் / நிரல்கள்


| | | |
|---|---|---|
| | 42 | போர் நிலவும் நாடுகளில் பணவீக்கம் |
| ஜோன் . ஈ. கொஸ் | 44 | பணவீக்கத்துடன் நிச்சயமற்ற நிலை தீவிரமடைகின்றதா ? |
| மாணவர் பொருளியல் | 61 | மிதக்கும் செலாவணி முறை |


## விசேஷ அறிக்கை

### பணவீக்கம்


| | | |
|---|---|---|
| டனி அத்தபத்து | 3 | பணவீக்கம் : அதன் தோற்றம், வளர்ச்சி மற்றும் தாக்கங்கள் என்பன குறித்த ஒரு விரிவான பரிசீலனை |
| ஹார்வர்ட் நிக்கலஸ் | 30 | பணவீக்கம் : ஒரு கண்ணோட்டம் |
| என். எம். பெரேரா | 33 | பணவீக்கம் மற்றும் உலக நெருக்கடி என்பன குறித்த சில குறிப்புக்கள் |
| டப்.ஜீ.எஸ். வைத்தியநாத | 35 | கொள்கைச் சீர்திருத்தங்களின் பின்விளைவாக பணவீக்கம் |
| டப்.ஏ. விஜேவர்தன | 37 | பணவீக்கத்துக்கூடாக மூலதனவாக்கம் |


வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

**அடுத்த இதழ்**
பொருளாதார கொள்கை சீர்திருத்தங்கள்
இலங்கைக்கான படிப்பினைகள்


**சந்தாதாரர் கவனத்துக்கு :**

சந்தா நோக்கங்களுக்காக இந்த இதழ் இரு தனித்தனி இதழ்களாக கருதப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.


அட்டைப் படம் : எஸ். பீ. குணசேன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பணவீக்க குறிகாட்டிகள்





முன்னைய வருடத்திலிருந்து % மாற்றம்




தரவுகள் : பார் ஈஸ்டர்ன் எக்கனமிக் ரிவியூ





புள்ளிகள்





(a) நிறைவேற்று அதிகாரிகள் அல்லாத ஊழியர்கள் மற்றும் சிறுஊழியர்களுக்கான கூட்டு சுட்டெண்


ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை, 1994 செய்தி விவரணம்

பொது முதலீடு 1995 - 1999, நிதி, திட்டமிடல் அமைச்சு, கொழும்பு, ஏப்ரல் 1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பணவீக்கம் :

# அதன் தோற்றம், வளர்ச்சி, பல்வேறு வடிவங்கள் மற்றும் தாக்கங்கள் என்பன குறித்த ஒரு பரிசீலனை

*டனீ அத்தபத்து ருகுண பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியரும் மானிடவியல் மற்றும் சமூக கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியும் ஆவார். முன்னர் (1968-1979) பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்த அவர், கனடாவின் மக்கில் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.*

பணவீக்கம் பிரச்சினைக்குரியது என்பதில் சந்தேகமில்லை. "முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பதற்கான சிறந்த வழி நாணயத்தை சீரழியச் செய்வதாகும்" என லெனின் பிரகடனப்படுத்தியதாக கீன்ஸ் 1931 இல் குறிப்பிட்டிருந்தார். ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் பணவீக்கம் அரசியல் ரீதியான இழப்பினை ஏற்படுத்தும் என்பதனையே இது குறிப்பிடுகின்றது. தளம்பலுடைய பணவீக்கமானது விலைமுறையைத் திரிபடையச் செய்து, விருத்திமுறை வரி அமுலில் இருக்கும்போது வரி வீதங்களை உயர்த்துகின்றது; அத்துடன், நீண்ட காலத் திட்ட மிடலையும் சீர்குலையச் செய்கின்றது. மேலும், பொருளாதாரத்தின் ஆரோக்கிய நிலை மீதான மக்களின் நம்பிக்கையையும் பலவீனமடையச் செய்யுமளவிற்கு அது ஒரு அரசியல் இழப்பாக கருதப்படுகின்றது.

**பணவீக்கம் என்பதன் கருத்து**

கோட்பாட்டு அடிப்படையிலும் நடைமுறை அனுபவங்களின் அடிப்படையிலும் பொருளியலில் நன்கு ஆராயப்பட்டுள்ள முக்கியமான துறைகளில் ஒன்றாக பணவீக்கம் விளங்குகின்றது. பணவீக்கத்திற்கான காரணங்கள், பணவீக்கம் நிகழ்வுப் போக்கின் இயல்பு, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை விளக்கங்கள் என்பன தொடர்பாக கணிசமான அளவில் நூல்கள் வெளிவந்துள்ளன. பணவீக்கம் முழுப் பொருளாதாரத்தினதும் பொது விலை மட்டத்தில் நிலையான, கணிசமான ஓர் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது.

பணவீக்கம் என்பது குறுங்காலத்தில் விலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறிக்கவில்லை; அது தொடர்ச்சியாக ஒரு நீண்ட காலப் பகுதிக்கு விலை மட்டத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துகிறது. மேலும், அனைத்துப் பொருட்களினதும் விலைகள் கட்டாயமாக உயர்வடைய வேண்டுமென்றில்லை. பணவீக்கம் மிகவும் தீவிரமாக இடம் பெற்றுவரும் காலகட்டங்களிலும் கூட குறிப்பிட்ட சில விலைகள் சார்புரீதியில் நிலையாக இருந்துவர முடியும்; ஆனால், குறிப்பிட்ட ஒரு பொருளாதாரம் எந்த அளவுக்கு பணவீக்கத்தை அனுபவித்து வருகின்றது என்பதனை தனிப்பட்ட விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் நிர்ணயிப்பதில்லை; மாறாக, அனைத்துப் பொருட்களினதும் சேவைகளினதும் கூட்டு சராசரி விலைகளின் ஏறுமுகமான போக்கே பணவீக்கத்தின் அளவை நிர்ணயிக்கின்றது.

பணவீக்க வீதத்தினைக் குறைப்பதற்கான பதப் பிரயோகமாக பணவீக்க நீக்கம் (Disinflation) என்ற பதத்தைப் பொருளியலாளர்கள் பயன்படுத்துகின்றனர். பணவீக்க நீக்க காலங்களில் விலைமட்டம் தொடர்ந்து உயர்வடைவதுடன் பணவீக்கமும் நிலவுகின்றது. ஆனால், விலைமட்ட அதிகரிப்பு வீதம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே நிலவி வருகின்றது.


**பணவீக்கத்தை அளவிடல்**

பணவீக்கம் விலைச் சுட்டெண்கள் மூலம் அளவிடப் படுகின்றது. ஓர் அடிப்படை ஆண்டினை நிலையாகக் கொண்டு பணவீக்கத்தின் பெறுமதியை வெளிப்படுத்தும் முறையே சுட்டெண் கணிப்பீடாகும். உதாரணமாக, பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பிடப்படும் முறையை நோக்கின், அது 1989ஆம் ஆண்டு ஜனவரி - ஜூன் காலப் பிரிவை அடிப்படைக் காலமாகக் கொள்ளப் பட்டு, இக்காலப் பெறுமதி 100 புள்ளிகள் எனக் கருதப்படுகின்றது. 1993 இல் விலைச் சுட்டெண் ஏறத்தாழ 165 ஆகும். இதன் கருத்து 1989 ஜனவரி - ஜூன் வரையுள்ள காலப் பகுதியைக் காட்டிலும் 1993 இல் விலைகள் 65% உயர்வாக இருந்துள்ளன; அல்லது இன்னொரு வகையில் கூறின், குறிப்பிட்ட ஒரு தொகுதி பண்டங்களின் செலவு 1989 ஜனவரி - ஜூன் வரையான காலத்தில் 100 ரூபாவாக இருந்து, 1993 இல் 165 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என்பதாகும்.

பணவீக்க வீதம் என்பது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றவீதம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டின் விலைச் சுட்டெண்ணிலிருந்து கடந்த ஆண்டு சுட்டெண்ணைக் கழித்து, அவ் வித்தியாசத்தை கடந்த ஆண்டு சுட்டெண்ணால் பிரித்து, 100 ஆல் பெருக்குவதன் மூலம் ஓர் ஆண்டுக்கான பணவீக்க வீதத்தைக் கணிப்பிட முடியும். உதாரணமாக, 1992 இல் 152 ஆக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1993 இல் 164.8 ஆக உயர்வடைந்துள்ளது. 1993 இற்கான பணவீக்க வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படுகிறது :

$$\text{பணவீக்கம்} = \frac{164.8 - 152.0}{152.0} \times 100 = 8.42\ \%$$

விலைச் சுட்டெண், தனி விலைகளின் நிறையேற்றப்பட்ட சராசரி விலையாகும்; ஒவ்வொரு பண்டங்களின் விலை மீது ஏற்றப்படும் நிறை என்பது, அப்பண்டத்தின் பொருளாதார முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. விலைச் சுட்டெண், ஒரு குறிப்பிட்ட தொகுதிப் பண்டங்களின் நடப்பு ஆண்டின் செலவினை, அதே தொகுதி பண்டங்களின் ஒரு அடிப்படையாண்டின் செலவின் விகிதாசாரமாக குறிப்பிடுகின்றது

$$\text{விலைச்சுட்டெண்} = \frac{\text{நடப்பு ஆண்டின் சந்தை பண்டத் தொகுதியின் செலவு}}{\text{அடிப்படை ஆண்டின் சந்தை பண்டத் தொகுதியின் செலவு}} \times 100$$

தற்பொழுது பொதுவிலை மட்டத்தின் போக்கினை மதிப்பிடுவதற்கு பல விலைச் சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற சுட்டெண்களாவன : நுகர்வோர் விலைச் சுட்டெண், உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் அல்லது மொத்த விற்பனை விலைச் சுட்டெண், மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி அல்லது மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்க விலைச் சுருக்கி.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்(CPI)

பணவீக்கத்தினை அளவிடுவதற்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படும் அளவீடு நுகர்வோர் விலைச் சுட்டெண் (Consumer Price Index) ஆகும்; இது "வாழ்க்கைச் செலவு சுட்டெண்" எனவும் அழைக்கப்படுகின்றது. தொழிலாளருக்கும் நிர்வாகத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப சீராக்கல் செய்வது தொடர்பான ஷரத்துக்கள் பயன்படுத்தப்படுகின்ளன. நுகர்வோர் விலைச் சுட்டெண் குறிப்பிட்ட ஒரு தொகுதி பண்டங்களின், சேவைகளின் கொள்வனவுச் செலவில் ஏற்படும் மாற்றங்களை அளவீடு செய்கிறது. ஒரு அடிப்படை ஆண்டிற்கான நுகர்வுப் பொருட்கள், சேவைகளின் தொகுதியானது, சராசரி குடும்பங்களின் உண்மையான கொள்வனவினை ஆய்வு செய்வதிலிருந்து தீர்மானிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நுகர்வோர் கொள்வனவுத் தொகுதியின் விலை மட்டங்களை அளவிடும் பொருட்டு, இந்த அடிப்படை ஆண்டு பண்டத் தொகுதிக்கு விலை இடப்படுகின்றது. அடிப்படை ஆண்டிற்கான சுட்டெண் 100 ஆகத் தீர்மானிக்கப்பட்டு ஏனைய ஆண்டுகளுக்கான பண்டச் செலவு, அதன் விகிதாசாரமாக தீர்மானிக்கப்படுகிறது. பல்வேறு பண்டங்களின் மாறிவரும் முக்கியத்துவத்தை கவனத்திற் கொள்வதற்காக, புள்ளிவிவரவியலாளர்கள் ஒவ்வொரு விலை மாற்றத்திற்கும் நிறை அளிக்கிறார்கள். வேறுபட்ட விலைகளுக்கு எவ்வாறு நிறை அளிப்பது என்பதே அடிப்படைக் கேள்வி ஆகும். நுவிசு ஐப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு நிலையான நிறை வழங்கப்படுகிறது. இந்த நிலையான நிறை விகிதாசாரம் நுகர்வோர் வரவுசெலவுத்திட்டத்தில் அவற்றினது சார்புரீதியான முக்கியத்துவத்தைப் பொறுத்து தீர்மானிக்கப்படும். இவை வீட்டுத் துறையினரின் செலவு பற்றிய மதிப்பீடுகளிலிருந்து எடுக்கப்படுகின்றன.

## நுவிசு தொடர்பான பிரச்சினைகள்

விலைகளில் ஏற்படும் பரவலான போக்கினை அளவிடுவதே நுவிசு இன் நோக்கமாகும்; விரிவான தகவல்களை அளவிடுவதல்ல. அது தரும் தகவல்களுக்கு கவனமாக பொருள் விளக்கம் கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். வாழ்க்கைச் செலவு அளவீட்டு முறை என்ற வகையில் நுவிசு பல பாரபட்சங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மிக முக்கியமான பாரபட்சங்களில் ஒன்று, சந்தைப்பண்டத் தொகுதியில் உள்ளடக்கப்படும் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் சார்பு ரீதியான முக்கியத்துவத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் நிறையேற்றும் முறையாகும். சேவைகளுக்கான நிறை பிரதிநிதித்துவ குடும்பங்களின் அடிப்படை ஆண்டுக் கொள்வனவுத் தொகையின் அடிப்படையிலேயே தீர்மானிகப்படுகிறது. இந்த நிறையளித்தல் முறை ஒருபக்க சார்புடையதாக இருப்பதற்குக் காரணம், இம் முறையானது விலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக நுகர்வோரின் கொள்வனவு பண்டத் தொகுதிக்குள்ளேயே மாறுபட முடியும் என்பதை உணரத் தவறியுள்ளமையாகும். வழக்கமாக விலையில் ஏற்படும் மாற்றம் நுகர்வோரின் நுகர்வு நடத்தையை மாற்றும். விலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களால், சந்தைப் பண்டத் தொகுதியில் உள்ள பொருட்கள் சேவைகளுக்குள்ளேயே பதிலீடுகள் ஏற்படமுடியும். நீண்ட காலத்தில் ஒரு பொருளின் விலை அதிகரிக்க புதிய ஒரு பொருள் அதற்குப்பதிலிடப்பட பழைய பொருள் சந்தையிலிருந்து மறையலாம்.

அடுத்து, பொருட்கள், சேவைகளின் தரம் நீண்ட காலத்துக்கு நிலையாக உள்ளது என நுவிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகிறது. ஆனால், பொதுவாக இந்நிலைமை காணப்படுவதில்லை. உண்மையிலேயே தரம் தொடர்பான ஒரு பக்கச்சார்பு நிலை காணப்படுகிறது. புதிய பொருட்கள் கண்டு பிடிக்கப்படுவதுடன், ஏற்கனவே இருக்கும் பொருட்களில் விருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பு ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பொதுவாக அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடும்போது உயர்ந்த தரமுடையவையாகவே இருக்கும். ஒரு பண்டத்தின் விலை, தரம் என்பன உயர்வடைந்து செல்லும் பட்சத்தில், தற்போது பண்டங்களின் செலவு உயர்வானது என்று கூறுவது நியாயமானதா ? பொதுவாக பொருட்களின் தரம் கூடினால், நுவிசு குறிப்பிடுமளவிற்கு வாழ்க்கைச் செலவு உயர்வடைய மாட்டாது.

உண்மையான வாழ்க்கைச் செலவு மீது விலை உயர்வினால் ஏற்பட்ட முழுத் தாக்கத்தையும் நுவிசு ஆல் சில சமயங்களில் வெளிப்படுத்த முடியாமல் போகலாம். உதாரணமாக, உத்தியோகபூர்வ விலைக் கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்பட்டால் (அவற்றுடன் இணைந்து வரும் தட்டுப்பாடுகள் காரணமாக) நுகர்வோர் கறுப்புச் சந்தையில் உயர் விலையில் பொருட்களை வாங்க வேண்டி ஏற்படும். இந்நிலையில், நுவிசு காட்டும் உத்தியோக பூர்வ விலைகள் வாழ்க்கைச் செலவைக் குறைத்து மதிப்பிடுபவையாக இருக்கும். மேலும், இச்சந்தர்ப்பத்தில் பொருட்கள், சேவைகளின் தரமும் குறைவடையலாம்.

மேலும், முக்கியமான பொருட்கள் மற்றும் சேவைகளின் சார்பு ரீதியான விலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் போது, நுவிசு சனத்தொகையின் குறிப்பிட்ட தொகுதியினரின் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கத் தவறிவிடுகின்றது. விலைச் சுட்டெண்ணுக்கான நிறை, நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் சராசரித் தொகையைக் குறிப்பிடுகின்றது. இந்த சராசரி அனைத்துக் குடும்பங்களும் சமமானது எனக் கொள்ளப்படுகின்றது. ஆனால், செல்வந்தர் -வறியவர், முதியோர்-இளைஞர், நகர-கிராமம் என்ற வேறுபாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பங்களுக்கிடையிலும் வேறுபாடு காணப்படுகின்றது. உதாரணமாக, பெரிய குடும்பங்களும் (ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட) குறைந்த வருமானம் உடைய குடும்பங்களும் உணவு, மருத்துவ சேவைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக தமது வருமானத்தில் பெரும் பகுதியை ஒதுக்குவர். இந்நிலையில், இவ்வகை அத்தியாவசிய தேவைகளின் விலைகள் நுவிசு கருதுவதிலும் கூடுதலாக அதிகரிக்கும். அத்துடன், உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைகள், குறைந்த வருமானத்தவரின் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் அதிகரிப்பைக் குறைத்துக் காட்டுவதாக அமையும். இவ்வாறான குறைபாடுகள் இருந்த போதும், பொருளாதார கொள்கை உருவாக்கத்திலும், வருமான சீராக்கலிலும் நுவிசு இன்னமும் முக்கியமான செல்வாக்கினைக் கொண்டுள்ளது. பணவீக்கத்துக்கு சீராக்கம் செய்யக் கூடிய வகையில், சுட்டெண்ணில் ஏற்படும் அதிகரிப்புக்கேற்ப கூலிகள் உயர்த்தப்பட வேண்டும் என தொழில் ஒப்பந்தங்கள் அடிக்கடி வலியுறுத்துகின்றன.

அட்டவணை 1


தெரிவு செய்யப்பட்ட சில இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சராசரி வருடாந்த பணவீக்க விகிதம் (சதவீதம்)

| நாடு | *1970-80* | *1980-91* | *1985-93* |
|---|---|---|---|
| ஆர்ஜன்டீனா | 133.9 | 416.9 | 398.0 |
| பொலிவியா | 21.0 | 263.4 | 23.1 |
| பிரேசில் | 38.6 | 327.6 | 822.8 |
| சிலி | 188.1 | 20.5 | 18.9 |
| கொலம்பியா | 22.3 | 25.0 | 25.6 |
| ஈக்குவாடர் | 13.8 | 38.0 | 49.0 |
| மெக்சிக்கோ | 18.1 | 66.5 | 45.1 |
| நிக்காராகுவா | - | - | 1836.2 |
| பெரு | 30.1 | 287.3 | 615.6 |

(உலக அபிவிருத்தி அறிக்கை)

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (மொவிசு)

பொது விலை மட்டத்தில ஏற்படும் மாற்றத்தை மதிப்பிடுவதற்குப் பரவலாக பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டாவது சுட்டெண் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் அல்லது உற்பத்தியாளர் விலைச் சுட்டெண ஆகும். இச்சுட்டெண் நுகர்வோர் பொருட்கள், கைத்தொழில் உற்பத்திகள் ஆகிய இரண்டினதும்



விலை மட்டங்களை மொத்த விற்பனை மட்டத்தில் அல்லது உற்பத்தியாளர் மட்டத்தில் வைத்து மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சுட்டெண் தனியார் சேவைகளின் விலைகளை தவிர்த்து விடுகின்றது. இது காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யக்கூடியதாக அடிப்படை ஆண்டினை எடுத்து, அதனை 100 ற்குச் சமனாக நிர்ணயித்துக் கொள்கிறது. மொவிசு பரந்தளவில் வர்த்தக வட்டாரத்தினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், விரிவான தகவல்களையும் கொண்டுள்ளது. அந்த வகையில் இது முக்கியத்துவம் பெறுகிறது. நுவிசு இல் என்ன நிகழும் என்பதை எதிர்வு கூற மொவிசு பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, பருத்தியின் விலை ஆகஸ்ட் மாதத்தில் அதிகரிப்பின், அது டிசம்பர் மாதம் பருத்தி சேர்ட் விலை அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் என எதிர்வு கூறப்படுகிறது.

## மொத்தத் தேசிய உற்பத்தி உள்ளடக்க விலைச் சுருக்கி

பொருளியலாளர்களினால் மரபுரீதியாக விரும்பப்படுகின்ற மூன்றாவது வகை பணவீக்க சுட்டெண்ணாக மொதே உற்பத்திக்

கான உள்ளடக்க விலைச் சுருக்கியைக் கூறலாம். இது மொதே உற்பத்திக்கான விலைச் சுட்டெண் ஆகும். இச்சுட்டெண் பொருட்கள், சேவைகளின் பல்வேறு உபபிரிவுகளையும் சீர்செய்து, அடிப்படையாண்டின் அடிப்படையில் நிலையான ரூபாய் தொகைகளில் கணிப்பிடுகின்றது. மெய் ரீதியான மொதே உற்பத்தித் தரவுகளைச் சுருக்குவதற்காக இந்த உப பிரிவுகள் ஒன்றிணைக்கப் படுகின்றன. பெயரளவு மொத்தத் தேசிய உற்பத்தியை மெய் ரீதியான மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதாசாரமாக கணிப்பிடுவதே சுருக்கி ஆகும். இச்சுருக்கியை அனைத்தையும் உள்ளடக்கிய விலைச் சுட்டெண்ணாகக் கருதமுடியும்; இன்னொருவகையில் கூறின், அது நுகர்வு, முதலீடு, அரசாங்க கொள்வனவு, தேறிய ஏற்றுமதிகள் என்ற அனைத்து துறைகளினதும் விலைகளை உள்ளடக்கியுள்ளது. மொதே உற்பத்திச் சுருக்கியின் கணிப்பீட்டு முறை பின்வருமாறு : 1982 ஆம் ஆண்டினை அடிப்படையாண்டாகக் கொண்டால், இந்த ஆண்டுக்கான மொதே உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதியும் மெய்ப் பெறுமதியும் சமமானவை என எடுகோள் கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டின் உள்ளடக்க சுருக்கிக்கான சுட்டெண் 100 எனக் கொள்வோம். மேலும், தற்போது 1993 இல் நடைமுறை விலைகளின்படி மொதேஉ பெறுமதி ரூபா மில்லியன் 447, 335 எனவும், மாறா விலைகளின்படி (1982) மொதேஉ பெறுமதி ரூபா மில்லியன் 148,499 எனவும் கொள்வோம். மொதேஉ யின் பெயரளவு அல்லது நடைமுறைப் பெறுமதியை மெய் அல்லது நிலையான பெறுமதியினால் பிரித்து உள்ளடக்கச் சுருக்கியைக் கணிப்பிடலாம். வாய்ப்பாட்டின் அடிப்படையில் கூறுவதாயின் பின்வருமாறு:

$$\text{உள்ளடக்க சுருக்கி} = \frac{\text{1993 இன் நடைமுறை விலைகளில் மொதேஉ}}{\text{1993 இன் நிலையான விலைகளில் (1982) மொதேஉ}} \times 100$$

$$\text{மொதேஉ உள்ளடக்க சுருக்கி} = \frac{\text{447,335 மில். ரூபா}}{\text{148,499 மில். ரூபா}} \times 100$$

$$= 301.24$$

தொடராக ஒவ்வோர் ஆண்டுக்கும் மொதேஉ சுருக்கியைக் கணித்துவிட்டால், ஒவ்வொரு வருடங்களுக்குமிடையிலான விலை மட்டங்களை ஒப்பிடுவது சுலபமானதாகும். உதாரணமாக, 1982, 1993 ஆம் ஆண்டுகளுக்கான விலைச் சுட்டெண்கள் முறையே 100, 301 எனில், இவ்விரு ஆண்டுக்குமிடையிலான விலை மட்டம் 201 வீதத்தால் அதிகரித்துள்ளது எனக் கணிப்பிடலாம். இந்த பணவீக்க அளவீட்டின் அனுகூலம், இது பல்வேறு பொருட்கள் சேவைகளையும் கணிப்பீட்டுக்கு உட்படுத்துகின்ற அதே நேரம், பொருளாதாரத்தின் விலை அசைவுகளை முழுவதாக மதிப்பிடுவதாகும்.

பொது விலைமட்ட மாற்றங்கள் மிக மெதுவான வேகத்திலிருந்து, மிகத் தீவிர வேகம் வரையிலான வேறுபட்ட விகிதங்களில் ஏற்படுகின்றன. இவற்றை நான்கு வகையாக வகைப்படுத்தலாம்: தவழும் (மிதமான) பணவீக்கம், தாவும் பணவீக்கம், அதியுயர் பணவீக்கம், தொடர்ச்சியான பணவீக்கம். எவ்வாறெனினும், இப்பிரிவுகளைத் தெளிவாக வரையறை செய்ய முடியாது. ஆனால், இவற்றுக்கிடையிலான தர ரீதியான வேறுபாடுகளை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

### தவழும் பணவீக்கம் (மிதமான பணவீக்கம்)

தவழும் பணவீக்கம் (Creeping Inflation) என்பது ஓரளவு உறுதியானதும், மிதமானதுமான வேகத்தில் நீண்ட காலத்திற்குச் செயற்படும் பணவீக்க முறையைக் குறிக்கும். சாதாரணமாக வருடாந்தம் 5 வீதத்திற்கும் குறைவான நிலையில் பணவீக்கம் இடம்பெற்று வருமாயின் அதனை தவழும் பணவீக்கம் எனலாம். தவழும் பணவீக்க நிலைமைகளின் கீழ் ஏற்படும் விலை உயர்வானது




ஒப்பீட்டளவில் வட்டி வீதங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கும், எதிர்வு கூறுவதற்கும் இலகுவானதாகும். சார்பு ரீதியில் விலைகள் உறுதியானதாக இருக்கும் போது, நாணய முறைமையும் சிறப்பாகச் செயற்பட முடியும். இந்நிலையில், பணத்தின் பெறுமதி திடீரெனக் குறைவடைய மாட்டாது. ஆதலினால், மக்கள் பணத்தைப் பணமாகவே வைத்திருக்க விரும்புவர். எனவே, அவர்கள் தமது செல்வத்தை பணச் சொத்துக்களிலிருந்து மெய்ச் சொத்திற்கு மாற்ற விரும்பமாட்டார்கள்.

குறைந்த விகித பணவீக்கம் பொருளாதார விரிவாக்கத்தைத் தூண்ட முடியும் என சில பொருளியலாளர்கள் கருதுகின்றனர். மூலவளங்களின் விலைகளை விட உற்பத்திகளின் விலைகள் வேகமாக அதிகரிப்பதால் தொழில் முயற்சிகள் பெருமளவு இலாபத்தை உழைக்கக் கூடிய நிலை ஏற்படும். இது அனைத்து தொழில் நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தி, பொருளாதாரத்தை நிறைதொழில் மட்ட நிலைக்கு அண்மித்ததாகச் செயற்பட வைக்கும். எந்த அளவுக்கு சேமிப்புக்களுக்கான வட்டி வீதத்தைக் காட்டிலும் பணவீக்க வீதம் குறைவாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு மக்கள் சேமிப்பில் ஆர்வம் காட்டுவார்கள். இது மூலதனப் பொருட்களின் இருப்பினை அதிகரிக்கச் செய்யும். ஏனைய சில பொருளியலாளர்கள் தவழும் பணவீக்கம் தொடர்பாக அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. தவழும் பணவீக்கத்துக்கு இடமளிக்கும் பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக அவர்கள் முன்வைக்கும் வாதங்களில் ஒன்று, பொருளாதாரத்தில் இதன் விளைவாக திரண்ட தாக்கங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்பதாகும். அதாவது, வருடாந்தம் 3 வீத விலை மட்ட உயர்வு குறிப்பிடக் கூடியளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முக்கியத்துவம் இல்லாததாக இருக்கலாம்; ஆனால், 23 வருடங்களில் விலைகள் இரட்டிப்பாகலாம். அடுத்து, நீண்டகாலத்திற்கு இப்பணவீக்கத்தை தக்கவைத்துக் கொள்ள முடியாமலும் போகலாம். பொருளாதாரத்தில் அமுக்கம் இருப்பின் அது மெதுவான பணவீக்கத்தை, தன்னிச்சைப்படி, வேகமான பணவீக்கமாக இயங்கச் செய்யும். பொது விலைமட்ட உயர்விலும் பார்க்க வருமான அதிகரிப்பை உயர்த்துவதற்கான கொள்கைகளை பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவு செயற்படுத்தும் பொழுது அதன் அமுக்கம் காரணமாக மிதமான பணவீக்கம் தொடர்ந்தும் மிதமானதாக இருந்து வரும் என்று கூறமுடியாது.

### தாவிச் செல்லும் பணவீக்கம் (Galloping Inflation)

தாவிச் செல்லும் பணவீக்கம் பெரும்பாலும் குறுகிய காலத்தில் மட்டும் அவதானிக்கக் கூடியதாக (20, 100 அல்லது 200 வீதம் என்று) வருடமொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று இலக்கங்களைக் கொண்டதாக விதிவிலக்காக மிக உயர்ந்த வீதத்தில் அமையும். பொதுவாக தாவிச் செல்லும் பணவீக்கம் துரித வேகத்தில் செயற்படுவதால் பணவீக்க வீதமும் கடந்த மாதத்தை விட இந்த மாதம் உயர்வாக இருக்கும். உண்மையில் எந்தப் புள்ளியில் தவழும் பணவீக்கம் முடிவுற்றது, எந்தப் புள்ளியில் தாவிச் செல்லும் பணவீக்கம் ஆரம்பித்தது என்பதைத் தீர்மானிப்பது கடினமானது. தவழும், தாவும் பணவீக்கங்களுக்கிடையிலான வேறுபாடு அளவு ரீதியான ஒன்றாக இருக்கையில், இவற்றின் வரை விலக்கணத்துக்காக நாம் குறிப்பிட்ட இலக்கங்களை வழங்கி இவற்றை வேறுபடுத்திக் காட்டினால் அது தவறான கருத்தினையே வழங்க முடியும். பணவீக்க அளவு குறித்து பல்வேறு சமூகங்கள் பல்வேறு கால கட்டங்களில் வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும். விளக்கமாகக் கூறின் ஒவ்வொரு நாடும் வெவ்வேறுபட்ட அளவில் பணவீக்கத்தைக் கொண்டிருக்கும் போது, அவை வெவ்வேறு பதங்களை இவ்விரு பணவீக்க வகைகள் தொடர்பாகக் கையாளும். உதாரணமாக, இன்று ஐக்கிய அமெரிக்காவில் 25 – 30% வரையான பணவீக்கம் தாவிச் செல்லும் பணவீக்கம் என்று கருதப்படும் அதே வேளையில், 3 – 6% வரையான பணவீக்கம் தவழும் பணவீக்கம் எனக் கொள்ளப்படுகின்றது. எனினும், பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் 25 – 30% வரையான பணவீக்கம் தவழும் பணவீக்கம் எனக் கொள்ளப்படுகின்றது. மேலும், 1950 களில் அமெரிக்காவில் 6% பணவீக்கம் கூட தாவிச் செல்லும் பணவீக்கம் என்றே அடையாளம் காணப்பட்டிருந்தது. மிக அண்மைக் காலத்தில் பொலிவியா, பிரேசில், ஆர்ஜன்டீனா, நிக்கராகுவா என்பவற்றை உள்ளடக்கிய பல தென்னமெரிக்க நாடுகள் வருடாந்தம் 100 க்கும் கூடிய பணவீக்க வேகத்தைக் கொண்டிருந்தன (அட்டவணை 1).

பொருளாதாரத்தில் தாவிச் செல்லும் பணவீக்கம் வேரூன்றி விட்டால் அது மோசமான பொருளாதார திரிபுகளை உருவாக்கும். இந்நிலையில், பெரும்பாலான ஒப்பந்தங்கள் அமெரிக்க டொலர் போன்ற வெளிநாட்டு நாணயங்கள் அல்லது விலைச் சுட்டெண்ணுடன் தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படும். மிக விரைவாக பணம் அதன் பெறுமதியை இழப்பதால் மக்கள் கூடுதலான இழப்பு வரக்கூடிய எதனையும் வைத்திருக்க விரும்ப மாட்டார்கள். இந்நிலையில், பணத்தின் பெறுமதி வேகமாக வீழ்ச்சி அடைவதால் மக்கள் பணத்தை வைத்திருப்பதைக் காட்டிலும் பொருட்கள் சேவைகளை வைத்திருக்க விரும்புவர். மேலும், மெய்ச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதிலும் பொருட்களின் கையிருப்புக்களை அதிகரிப்பதிலும் நாட்டம் கொள்வார்கள். ஆனால், ஒரு போதும் குறைந்தளவான பெயரளவு வட்டி வீதத்தில் கடன் வழங்க மாட்டார்கள்.

கேள்வித் தூண்டல் பணவீக்கம்




வரைபடம் 1

### தொடர்ச்சியான (நாட்பட்ட) பணவீக்கம் (Chronic Inflation)

1940 களின் பிற்பகுதிகளில் பிரமிக்கத்தக்க, அதே நேரம் ஆபத்தான ஒருவகைப் பணவீக்கம் செயற்பட ஆரம்பித்தது. இதுவே நாட்பட்ட பணவீக்கம் ஆகும். சில வளர்முக நாடுகள் – குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகள் – 20% திற்கும் மேற்பட்ட நாட்பட்ட பணவீக்கத்தை தொடர்ச்சியாக அனுபவித்து வந்தன. ஆர்ஜன்டீனா, பிரேசில், உருகுவே போன்ற நாடுகளில் இவ்வகை பணவீக்கம் பல தசாப்தங்களுக்கு நீடித்தது. தொடர்ச்சியான பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள் பல்வேறு சுட்டெண் முறைகளைக் கையாள்வதன் மூலம் நாட்பட்ட பணவீக்கத்தை சமாளித்து வருகின்றன. எவ்வாறெனினும், பணவீக்கம் பொருளாதாரத்தில் சகித்துக் கொள்ளக்கூடியதாக மாற்ற மடைந்த பின்னர் பணவீக்கத்தை குறைப்பதற்கான அரசியல் விருப்பினை இச்சுட்டெண் பொறிமுறைகள குறைந்துவிட்டன. அத்துடன் உயர்பண வீக்கம் பொருளாதார தளத்தில் ஓர் அம்சமாகவும் இடம்பெற்றுள்ளது. நாட்பட்ட பணவீக்கத்தின் தனித்துவ குணாம்சங்கள் அதி உயர் பணவீக்கத்தின் குணாம்சங்களிலும் பார்க்க நேர்மாறாக உள்ளன. முதலாவதாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாட்பட்ட பணவீக்கத்தின் தாக்கங்கள் குறுங் காலத்தில் தீவிரமாக உணரப்படாதிருப்பதனால் சீர்திருத்தத்துக்கான ஆதரவைத் திரட்டுவது கடினமாகும். இரண்டாவதாக, பணவீக்கம் சுட்டெண்ணுக்கு உட்படுத்தப்படுவதன் மூலம் உயர்ந்தளவு பணவீக்கம் கூட பொருட்படுத்தப்படாத ஒரு நிலை தோன்றும். மூன்றாவதாக, உலக வரலாற்றில், விலை உறுதிப்படுத்தற் கொள்கைகள் தோல்வியில் முடிவுற்றதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு முயற்சியையும் பொது மக்கள் சந்தேகத்துடனேயே நோக்குகின்றனர்.

நாட்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்பது இலகுவான காரியமல்ல என்பதனை எண்ணற்ற உறுதிப்படுத்தற் கொள்கைகள் நிரூபித்துள்ளன. இப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நிபந்தனைகளில் ஒன்று, இறைக் கொள்கையைச் சீராக்கமாகும். ஆனால், அது மட்டும் போதுமானதல்ல. எவ்வாறெனினும், இதனை ஒரு சாத்தியமற்ற முயற்சி எனக் கூற முடியாது. சிலி, இஸ்ரேல், மெக்சிக்கோ என்பன 15% அல்லது அதற்கும் கீழ் பணவீக்கத்தைக் குறைப்பதில் வெற்றி கண்டுள்ளன.

### அமுக்கப்பட்ட பணவீக்கம்

தறிகெட்டுச் செல்வதற்கு இடமளிக்கப்படாத பணவீக்கமே அமுக்கப்பட்ட பணவீக்கமாகும்.

செலவுத் தூண்டல் பணவீக்கம்




வரைபடம் 2


பணவீக்கத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு, அரசாங்கம் பொருட்கள், சேவைகளுக்கான உச்சமட்ட விலைகளையும் ஊழியத்துக்கான உச்சமட்ட கூலியையும் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. இவ்வகையான கூலி மற்றும் விலைக் கட்டுப்பாடுகள் இரண்டாம் உலகப் போரின் போதும், கொரியப் போரின் போதும் பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கூடுதலாக பொருட்கள், சேவைகள் விற்பனை செய்யப்படும் போது "கறுப்புச் சந்தை" தோன்றும். அப்போது நேரடிக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாயாயின் கறுப்புச் சந்தை விலைகளே சுதந்திரச் சந்தை விலைகளைப் பிரதிபலிப்பவையாக இருக்கும். பணவீக்க அமுக்கச் செயற்பாடுகள் முழு அளவில் தாக்கமுடையதாக இருக்க வேண்டுமெனில், அரசாங்கம் கறுப்புச் சந்தைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது போல, கூலிகளையும் விலைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

### பணவீக்கத்திற்கான காரணங்கள்

வளர்ச்சி கண்ட பொருளாதாரங்களில் பணவீக்க செய்முறையை விளக்குவதற்குரிய கோட்பாடுகள், விலை அதிகரிப்பின் இரண்டு வகையான காரண காரியத் தொடர்களையும் அல்லது ஒரு தொடர்பையேனும் அடிப்படையாகக் கொள்கின்றன. பொருட்களின் வழங்கலிலும் பார்க்க மிதமிஞ்சிய கேள்வி நிலவுவது இதிலொன்றாகும். மிதமிஞ்சிய கூட்டுக் கேள்வி பொருட்கள், சேவைகள் என்பவற்றின் விலையை உயர்த்துகின்றது. இது கேள்வித் தூண்டல் அல்லது கேள்விப் பணவீக்கம் எனப்படுகிறது. அடுத்தது சந்தைச் சக்தி கொண்ட பொருளாதார குழுக்கள் காரணிச் செலவுகளை உயர்த்துவதன் காரணமாக ஏற்படும் பணவீக்கம் இரண்டாவது வகையாகும். இது செலவுத் தூண்டல் அல்லது நிரம்பல் பணவீக்கம் எனப்படுகிறது.

### கேள்வித் தூண்டல் பணவீக்கம்

இரண்டாம் உலகப் போர் முடிவு வரையான காலப் பகுதி



வரையில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பணவீக்கத்திற்கான காரணமாக கேள்விப் பணவீக்கக் கருதுகோளே கூறப்பட்டு வந்தது. பின்னர் கவனம் நிரம்பல் பணவீக்கத்தை நோக்கி நகர்ந்தது. பாரம்பரியமாக, விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றமே மிகைக் கேள்விக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. பொருளாதாரம் அதன் இயலளவுக்கு மேலாக உற்பத்திக்கு செலவு செய்ய முயற்சிக் கலாம். இந்த மிகைக் கேள்வியே நிலையான மெய் வெளியீட்டின் விலை மட்டத்தை உயர்த்தி, கேள்வித் தூண்டல் பணவீக்கத்திற்குக் காரணமாகின்றது. கேள்வித் தூண்டல் பணவீக்கத்தின் சாராம்சம், பின்வரும் சொற்றொடரினால் வெளிப்படுத்தப்படுகின்றது. மிகச் சிறு அளவு பொருட்களை பெருந்தொகைப் பணம் துரத்துகிறது. கேள்விப் பணவீக்க அணுகுமுறை இரண்டு வகையான விளக்கங்களைக் கொண்டுள்ளது. ஒன்று பணக் கணியக் கோட்பாடு; மற்றது கெயின்ஸிய கோட்பாடு.

### பணக் கணியக் கோட்பாடு

கெயின்ஸிற்கு முற்பட்ட பணக் கணியக் கோட்பாட்டாளர் என்ற வகையில், அமெரிக்க பொருளியலாளரான இர்விங் பிசர் என்பவரால் முன்வைக்கப்பட்ட பரிவர்த்தனைச் சமன்பாடு (MV = PY) பணவீக்கத்தை விளக்குவதற்கான சாதனமாகப் பயன்படுகின்றது. பழம் பொருளியலாளர்கள் 'V' (பணச் சுற்றோட்ட வேகம்) யும் 'Y' (வெளியீட்டு மட்டம்) யும் நிலையானவை என எடுகோள் கொள்கின்றனர். பணத்தைப் பணமாகவே வைத்திருப்பதற்கான மக்களின் எண்ணப் போக்கில் மாற்றம் ஏற்படுவதில்லை எனக் கருதுவதால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'V' நிலையானது என்கின்றனர். அத்துடன் 'Y'உம் நிறைதொழில் மட்ட நிலையில் நிலையாகவே இருக்கும் என எடுகோள் கொள்கின்றனர். இந்த எடுகோள்களின் அடிப்படையில் பணக் கணியக் கோட்பாடு முன்வைக்கப் பட்டுள்ளது. இக்கோட்பாடு பொருளிய லாளர்கள் பலரதும் கவனத்தை ஈர்த்ததுடன், உயர்ந்த செல்வாக் கையும் கொண்டிருந்தது. பணக் கணியக் கோட்பாடு எடுத்துக் கூறுவது என்னவெனில், பணத் தொகைக்கும், பொதுவிலை மட்டத்துக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு இருக்கின்றது என்பதாகும். இதன்படி பணத் தொகையில் ஏற்படும் மாற்றம் அதே விகிதாசாரத்தில் விலை மட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். உதாரண மாக, பணத்தொகை இரு மடங்காக அதிகரிப்பின், விலை மட்டமும் இரு மடங்காக அதிகரிக்கும்.

### பிலிப்ஸ் கோடு (Phillips Curve)

விலைமட்ட அதிகரிப்புக்களின் வருடாந்த விகிதம் (%)



வேலையின்மை விகிதம் (%)

வரைபடம் 3

நன்கு செப்பனிடப்படாத பணக் கணியக் கோட்பாடு, சர்ச்சைக் குரிய இரண்டு எடுகோள்களை அடிப் படையாகக் கொண்டுள்ளது. மெய் தேசிய உற்பத்தி (Y) நிறை தொழில் மட்டத்தில் நிலையாக இருக்கும் என்பது முதல் எடு கோளாகும். பணச் சுற்றோட்ட வேகம் ('V') நிலையாக உள்ளது என்பது இரண்டாவது எடுகோளாகும். சில வரையறைகளைக் கொண்டிருந்த போதிலும் பணக் கணியக் கோட்பாடு மிக முக்கியமான உண்மை ஒன்றையும் சுட்டிக் காட்டுகிறது. பண நிரம்பலில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கம் தனது செலவுகளுக்கு நிதியீட்டம் செய்யின், இதன் காரணமாகப் பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதே அதுவாகும். முதலாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் ஜெர்மனியில் ஏற்பட்ட மாதிரியான அதி உயர் பண வீக்கத்திற்கு இவ்வாறான செய் முறையே காரணமாக அமைந்தது. ஜேர்மன் அரசாங்கம் பெருந் தொகைப் பணத்தை வெளியிட்டு பொருளாதாரச் செலவுகளை சமாளித்ததால் அப்போது அதிஉயர் பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியது.

பொது விலை மட்டத்தின் நீண்ட கால போக்கினை எதிர்வு கூறலில் பணக் கணியக் கோட்பாடு பயனுள்ளதாக இருந்துள்ளது. உதாரணமாக, 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின் புதிய உலகத்திலிருந்து தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தபோது பண நிரம்பலில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், கணியக் கோட்பாடு எதிர்வு கூறிய மாதிரியே இக்காலத்தில் நாட்டின் பொது விலை மட்டமும் மிக உயர்வாக இருந்தது.

1960 களில் பணக்கணியக் கோட்பாடு, சிக்காக்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மில்டன் பிரீட்மன் என்பவரால் மேலதிகமான சில கருத்துக்களுடன் விளக்கப்படுகிறது. இவர் 1976 ஆம் ஆண்டில் பொருளியலுக்கான நோபல் பரிசினை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இக் கோட்பாட்டை விளக்கும் போது, பணத்துக்கான கேள்வித் தொழிற்பாடு உறுதியானது என்பதை எடுகோளாகக் கொள்கின்றார். இதனடிப்படையில் பெயரளவுப் பண இருப்பில் அதிகரிப்பு ஏற்படும் போது ஏனையவை மாறாதிருக்க, பொது விலை மட்டம் கட்டாயம் அதிகரிக்கும் என்கின்றார். ஏனெனில், மெய் நிலுவைக்கும் மெய் வருமானத்திற்கு மிடையிலான விகிதாசாரம் நிலையாக இருக்க வேண்டுமெனில், விலை உயர்வது தவிர்க்க முடியாத தாகின்றது. மேலும், பிரீட்மனின் கருத்துப்படி, "பணவீக்கம் எப்போதும் நாணயத் துறை சார்ந்த நிகழ்வாகும்". பிரீட்மன், தனது சகாவான பொருளியலாளரான அனா ஷவாட்ஸ் என்பவருடன் சேர்ந்து நாணய வரலாற்றை குறிப்பாக, கடந்த நூற்றாண்டில் பணத்தொகையில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அதன் பொருளாதார விளைவுகள்




என்பவற்றை உள்ளடக்கியதாக இரு ஆராய்ச்சிக் கட்டுரைகளை- எழுதி யுள்ளார். இக் கட்டுரைகளின் தரவுகள் பணவீக்கத்திற்கும், பண இருப்பு வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குகின்றன. உயர் பணத் தொகை வளர்ச்சியைக் கொண்ட தசாப்தங்கள் உயர் பண வீக்கங்களைக் காட்டி நின்ற அதே சமயம், குறைந்தளவு பணத்தொகை வளர்ச்சியைக் கொண்ட தசாப்தங்கள் குறைந்தளவு பணவீக்கங்களைக் கொண்டிருந்தன. நாணயவாதிகளின் பார்வையில் பணவீக்கம் அடிப் படையில் கேள்வித் தூண்டல் பணவீக்கமாகவே இருந்துள்ளது. பண இருப்பு, பணச் செலவு என்பவற்றின் மாற்றங்களுக்கும் பணவருமான மாற்றத்திற்கும் இடையிலான முழு அளவிலான செயற்பாடு காலம் தாழ்த்தி ஏற்பட்டாலும் கூட, இவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை இவர்கள் வலியுறுத்துகின்றனர். நாணயவாதிகள் பலரது கருத்துப்படி, அனைத்துப் பணவீக்கங்களுக்கும் மிகையான பண விரிவாக்கமே காரணமாகும். அத்துடன், பணவிரிவாக்கமின்றி பண வீக்கம் இடம்பெற முடியாது எனவும் அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

### கேள்விப் பணவீக்கம் பற்றிய கெயின்ஸிய கருத்து

கெயின்ஸினுடைய கேள்வித் தூண்டற் பணவீக்கம், வருமான நிர்ணயிப்பின் பயன்படு கேள்வி மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இக்கோட்பாடு செலவு-வருமானம்-செலவுத் தொடருடன் இணைக்கப்பட்டு விளக்கப்படுகிறது. 1939 நவம்பரில், பிரித்தானியா இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டதன் பின்னர், கெயின்ஸ் 'லண்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் "போருக்கு எப்படிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செலவு செய்வது" என்பது தொடர்பாக மூன்று கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் தனது பண வீக்கக் கோட்பாட்டை, பணக் கணியக் கொள்கையை ஒத்ததாக, பணவீக்கத்திற்குக் காரணமாக மொத்தக் கேள்வியில் ஏற்படும் மாற்றத்தைக் கூறுகின்றார். எனினும், பணவீக்கத்திற்கான அணுகுமுறையில் நாணய வாதிகளுக்கும் கெயின்ஸிற்குமிடையில் குறிப்பிடக்கூடிய வேறுபாடு உண்டு. கெயின்ஸ் பணவீக்கத்திற்காக முதன்மைப்படுத்துவது பண இருப்பை அல்ல; மாறாக, மொத்த செலவீட்டின் பாய்ச்சலையே. கெயின்ஸிய ஆய்வில் பண இருப்பு என்ற செயற்பாடு நீக்கப்படவில்லை. வட்டி வீதத்துடன் தொடர்புடைய செலவு நடவடிக்கைகள் மீதே பண இருப்பு செல்வாக்குச் செலுத்தும் என்பது கெயின்ஸிய வாதம். மேலும், இவரது கருத்துப்படி மறைமுகமான, பல்வேறு வகைகளில், பண நிரம்பல் மொத்தக் கேள்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பணவீக்க இடைவெளி ஏற்படுவதற்குக் காரணம், நிறை தொழில் மட்ட நிலையில் பொருளாதாரத்தின் வெளியீட்டு இயலளவிற்கு மேலாக நுகர்வு, முதலீடு, அரசாங்க செலவினம் [C + I + G] என்பவற்றுக்கான விரும்பப்படும் மெய்ச் செலவீட்டு மட்டம் அதிகரிப்பதாகும். இன்னொரு வகையிற் கூறின் நிறைதொழில்மட்ட வெளியீட்டு மட்டத்திற்கு மேலாக மொத்தச் செலவு அதிகரிப்பின் அலகு வீக்க இடைவெளி தோன்றும். இந்த வீக்க இடைவெளி பொருளாதாரத்தின் நிலையான உற்பத்திகளுக்கான விலையை உயர்த்தும். தொழில் நிறுவனங்கள் தமது மெய் வெளியீடுகளை அதிகரிப்பதன் மூலம் இவ்விலை உயர்வைச் சமாளிக்க முடியாது (ஏனெனில், நிறைதொழில் மட்ட நிலையில் வெளியீடு நிலையானது). இந்நிலையில் கேள்வித் தூண்டற் பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். மொத்தச் செலவு அதிகரிக்க, அதிகரிக்க, நிறை தொழில் மட்டநிலை அடையப்படும் வரை விலை உயர்வடைய ஆரம்பிக்கும். நிறைதொழில் மட்டத்தை அடைந்ததும், நிறுவனங்கள் குறைந்தளவு உற்பத்தித் திறனுடைய தொழிலாளரை வேலைக்கு அமர்த்த வேண்டியிருப்பதால், இது செலவு விலை உயர்விற்குக் காரணமாக அமைகின்றது. நிறை தொழில் மட்டத்தை அடைவதற்கு முன்னதாக ஏற்படும் இப்பண வீக்கத்தை "முதிர்வுக்கு முந்திய பணவீக்கம்" என்று அழைப்பர். வரைபடம் 1 இல் மொத்தக் கேள்வி, மொத்த நிரம்பலின்அடிப்படையில் கேள்வித் தூண்டல் பணவீக்க செய்முறை விளக்கப்படுகின்றது.

விலை உயர்விற்குக் காரணம் கேள்வித் தூண்டல் என்ற வகையில் கெயின்ஸ் செலவுப் பாய்ச்சல் மீது கூடிய கவனஞ் செலுத்திகிறார். இறுதியாக அவர் நாணயத்துறை சார்ந்த பணவீக்கத்தையே சமூகம் அனுபவிக்கும் என்ற முடிவினை எடுத்துக் கூறுகின்றார்; இவரின் கருத்தில் C + I + G என்பன உயர்ந்த மட்டத்தில் இருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகின்றது. எனினும், பணவீக்க வரலாறுகள், இக்கருத்துக்கு மாறான வகையில் நடந்தேறியுள்ளன. அதாவது, பணவீக்கம் பெரும்பாலும் பண இருப்புடன் இணைந்ததாகவே செயற்பட்டு வந்துள்ளதை அனுபவத்தில் அறியக்கூடியதாக உள்ளது. பண இருப்பு வளர்ச்சியின் பொதுவான போக்கிற்கு மேலாக பணம் நிரம்பல் செய்யப்படும் போதே பணவீக்க நிலை தோன்றியுள்ளது. கெயின்ஸிய ஆய்வில், இந்த மிகையான பண இருப்பு வளர்ச்சி முக்கியத்துவமற்றதாகக் கணிப்பிடப்படுகின்றது. ஏனெனில், மொத்தச் செலவீட்டு வகைகள் C+I+G வட்டி வீதத்துடன் தொடர்பற்றவை எனக் கெயின்ஸ் கருதுகிறார். எவ்வாறெனினும், பேரண்டப் பொருளியலாளர்களில் பெரும் பாலானோர் கேள்வித் தூண்டல் பணவீக்கம் என்ற கருத்தை இன்று நிராகரிக்கின்றனர். கெயின்ஸிய வாதிகள், நாணயவாதிகள், பழம் பொருளியல்வாதிகள் என்போர் வரையறுக்கப்பட்ட பொருட்களின் நிரம்பலுக்கு மேலாக கூடுதலான செலவு செய்வதால் கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஏற்படுகின்றது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

## செலவுத் தூண்டல் அல்லது நிரம்பல் பணவீக்கக் கோட்பாடு

காரணிகளுக்கான விலை உயர்வதால், ஓர் அலகுக்கான உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது. இதனையே செலவுத் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு எடுத்து விளக்குகின்றது. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் பணவீக்க செய்முறையை விளக்குவதற்கான, கெயின்ஸிய விளக்கத்திற்கான மேலதிக விளக்கமாக இக்கோட்பாடு அமைந்துள்ளது. கெயின்ஸியக் கோட்பாட்டில், பணக்கூலி ஒரு வெளிநிலையான மாறியாகக் கொள்ளப்பட்டு, வருமானம்-செலவு-வருமானம் என்ற தொடரின் அடிப்படையில் செலவுக் கோட்பாடு விளக்கப்படுகின்றது. கெயின்ஸியக் கோட்பாட்டில் பணக்கூலி நிர்ணயம் பற்றி விளக்காமையால் அவரைத் தொடர்ந்து வந்தவர்கள் கெயின்ஸியக் கோட்பாட்டில் கூலி நிர்ணயம் பற்றி வேறுபட்ட கோட்பாடுகளை முன் வைத்துள்ளனர். பொருளாதாரத்தின் பல்வேறு தொகுதியினருக்கிடையே தேசிய வருமானத்தைப் பங்கிடுவதில் ஏற்படுகின்ற சிக்கல்கள் காரணமாகவே விலை உயர்வு ஏற்படுகின்றது என்பதையே செலவுக் கோட்பாடு முன்வைக்கின்றது. இறக்குமதி விலைகளின் உயர்வு போன்ற வெளிநிலையான காரணிகள் மூலமும் உயர்செலவு ஏற்பட முடியுமாயினும், நிறுவனமயப்பட்ட தொழிலாளர், சிலருரிமை சார்ந்த நிறுவனங்கள் என்பன விலை உயர்வுக்கு முக்கிய காரணமெனக் கூறப்படுகின்றது.

1950 களின் பிற்பகுதியில் செலவுத் தூண்டற் பணவீக்கம் மீண்டும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, உயர்ந்தளவு வேலையின்மை வீதம் பணவீக்கத்துடன் தொடர்புடையதாகச் செயற்பட்டிருப்பதையும், அதேநேரம் மொத்தக் கேள்வி பணவீக்கத்துடன் ஒத்த வகையில் செயற்பட முடியாது இருந்தமையையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை ஏற்றுக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரண்டப் பொருளியல்வாதிகள், வேலையின்மை 6 அல்லது 7 வீதத்தை அண்மிக்கும் போது, சமூகம் ஒன்றில் உறுதியான விலையை அல்லது பணச் சுருக்கத்தை அனுபவிக்கும் எனக் கூறுகின்றனர். எனவே, செலவுத்-தூண்டற் கோட்பாடு இரண்டு வகையான சமூகத்தினரை இதற்குள் இணைத்துள்ளது. தொழிற்சங்கம், சிலருரிமைச் சந்தையில் ஈடுபட்டுள்ள பாரிய நிறுவனங்கள் ஆகிய இரு பகுதியினருமே செலவுத் தூண்டல் பணவீக்கத்திற்கான சூத்திரதாரிகள் என்பது இவர்களின் முடிவாகும். இவர்களின் கருத்துப்படி கூலி, விலை நிர்ணயங்கள் சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதிலும் பார்க்க, நிர்வாகச் செயற்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதே முக்கியமானது. யார் தவறு செய்கிறார்களோ அவர்களின் பக்கம் கூலி தூண்டலும், இலாபத் தூண்டலும் செயற்படும்.

தமது உற்பத்தித் திறனை விட கூலியை உயர்வாகக் கேட்கக்கூடிய தொழிலாளர்கள் மூலமாகவும் தொழிற்சங்கங்கள் மூலமாகவும் கூலித் தூண்டல் பணவீக்கம் ஏற்படு கின்றது. உழைப்பிற்கான வெளியீட்டு அதிகிரிப்பினை விட கூலி அதிகரிப்பு உயர்வாக இருப்பின், வேலை கொள்வோர் உற்பத்திச் செலவை அதிகரிப்பர். செலவு உயர்வில் ஏற்பட்ட தாக்கம் மொத்த நிரம்பல் கோட்டை மேல் நோக்கி நகர்த்தும் (பார்க்க வரைபடம் 2). இங்கு கேள்வி மாறவில்லை என எடுகோள் கொள்ளின், விலைமட்டம் உயர்வடையும். தமது உற்பத்திச் செலவு அதிகரிப்பினைவிட, பொருளுக்கான விலை அதிகரிப்பினை மேற்கொள்வதன் மூலம் இலாபத்தை அதிகரிக்க முடியும் என்று கருதுகின்ற நிரம்பலாளர் மூலமாக இலாபத் தூண்டல் வீக்கம் ஏற்படுகின்றது.

பல பொருளியலாளர்களின் கருத்துப்படி செலவுத் தூண்டல் பணவீக்க செய்முறை பின்வருமாறு விளக்கப்படுகின்றது: மொத்தத் தேசிய உற்பத்தி அதனது நிறைதொழில் மட்டநிலைக்குக் கீழ் இருக்கும் போது, தொழிற் சங்கங்கள் கூலியை உயர்த்துவதால் செலவு அதிகரிக்கின்றது. அத்துடன், நிறுவனங்கள் இலாப எல்லையை உயர்வாக வைத்திருப்பதற்காக, பொருட்களின் விலையை உயர்த்துகின்றன. இந்த விலை உயர்வுகள் ஏனைய நிறுவனங்களின் செலவையும், நுகர்வோரின் வாழ்க்கைச் செலவையும் உயர்த்துகின்றன. வாழ்க்கைச் செலவு உயர்வடைய, அதனை ஈடுசெய்வதற்காக தொழிலாளர் உயர்ந்த கூலிகளைக் கோருவதற்கு முன்வருவர். மீண்டும் நிறுவனங்கள் அதிகரித்த செலவை, பொருட்களின் விலையினை உயர்த்துவதன் மூலம் நுகர்வோரின் மீது சுமத்துகின்றன. இதுவே செலவுத் தூண்டல் பணவீக்கத்தில் 'கூலி-விலைச் சுழற்சி' என அழைக்கப் படுகின்றது.

செலவுத் தூண்டற் பண வீக்கத்தின் மற்றுமோர் முக்கிய அம்சம் "நிரம்பல் அதிர்ச்சி" என அழைக்கப்படுகின்றது. இது உற்பத்திச் செலவைக் கூட்டி, அதன் வழி உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்வடையச் செய்கின்றது. நிரம்பல் அதிர்ச்சி, மூலப்பொருட்களில் - முக்கியமாக வலு வளங்களில் - எதிர்பாராத அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது. 1970 களிலிருந்து எண்ணெய் விலை உயர்வினாலும், செலாவணி வீத அசைவுகளினாலும் செலவுத் தூண்டல் தாக்கங்கள் அடிக்கடி ஏற்பட்டு வந்துள்ளன. 1973-74 இலும் 1979/80 இலும் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் விலைகள் திடீரென உயர்வடைந்தமை சிறந்த உதாரணங்களாகும். இக்காலத்தில் எண்ணெய் விலை உயர்வடைந்ததால், எண்ணெய் இறக்குமதி நாடுகளின் அனைத்து உற்பத்திப் பொருட்களதும் உற்பத்திச் செலவும், போக்குவரத்துச் செலவும் அதிகரித்திருந்தன. இக்காலத்தில் வேகமான செலவுத் தூண்டற் பணவீக்கம் தொடர்ச்சியாக இடம் பெற்றது.

பொதுவாக, செலவுத் தூண்டல் பணவீக்கத்தை கேள்வித்தூண்டல் பணவீக்கத்தினின்றும் வேறுபடுத்துவது கடினமானதாகும். உதாரணமாக, மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு உழைப்புக்கான கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்த,அது தொழிலாளரின் கூலி உயர்வுக்கு வழிவகுக்கும். இச்செய்முறையில் மீண்டும் நிறுவனங்கள் தமது பொருட்களுக்கான விலையை உயர்த்துகின்றன. மேற்கூறிய உதாரணத்தில், மொத்தக்




கேள்வி அதிகரிப்பு இறுதிக் காரணமாக இருப்பதால் இதனைக் கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனலாம். ஆனால், இன்னொரு வகையில் பொருளின் விலை உயர்வு காரணமாக கூலியில் அதிகரிப்பு ஏற்படுவதால் செலவுத் தூண்டல் வீக்கம் எனவும் கூறலாம். எவ்வாறெனினும், சில கொள்கை அணுகுமுறைகளிலிருந்து இவ்விரண்டையும் வேறுபடுத்த முடியும். கேள்வித் தூண்டல் பணவீக்கத்தைப் பொறுத்தவரையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாணய இறைக் கொள்கைகளின் செயற்பாடு தாக்கம் நிறைந்ததாக இருக்கும். ஆனால், செலவுத் தூண்டல், பணவீக்கத்தைப் பொறுத்தவரையில் வருமானக் கொள்கை பயனுடையதாக அமையும். இது மொத்தக் கேள்வியைக் கட்டுப்படுத்துவதைவிடச் சிறந்ததாகும்.

**வேலையின்மைக்கும் பண வீக்கத்திற்கு மிடையிலான தொடர்பு: பிலிப்ஸ் கோடு**

மேலே கூறியுள்ளது போல, கூலி உயர்வினாலும், அதனடிப்படையில் சில நிறுவனங்கள் தமது செலவு அதிகரிப்பினை தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதன் மூலம் நுகர்வோர் மீது சுமத்துவதாலுமே பணவீக்கம் ஏற்படுவதாக சில பொருளியலாளர்கள் நம்புகின்றனர். இவ்வாறான கூலித் தூண்டல் பணவீக்க செய்முறையை 1958ஆம் ஆண்டு இங்கிலாந்து பொருளியலாளரான ஏ.டப். பிலிப்ஸ் என்பவர் விளக்கியுள்ளார். அவர் 1861 - 1957 இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்தின் வேலையின்மை, பணக் கூலி பற்றிய தரவுகளைக் கவனமாக ஆராய்ந்த பின்னர், இவ்விரண்டுக்குமிடையில் எதிர்க்கணிய தொடர்பு இருப்பதை அவதானித்துள்ளார். இவரின்

கருத்துப்படி குறைந்தளவு வேலையின்மை இருக்கும் காலங்களில் உழைப்புக்கான கேள்வி உயர்வாக இருந்துள்ளது. உழைப்புக்கான கேள்வி உயர்வாக இருப்பதால் கூலிகள் உயர்வடைய, அதன் தொடர்ச்சியாக உற்பத்திச் செலவு, விற்பனை விலை என்பனவும் அதிகரிக்கின்றன. மாறாக, வேலையின்மை உயர்வடைய, கூலி அதிகரிப்பிற்கு இடமிருக்க முடியாது. எனவே, உற்பத்திச் செலவு சார்பு ரீதியாக உறுதியாக இருக்கும். வரைபடம் 3 இல் பிலிப்ஸ் கோடு காட்டப்பட்டுள்ளது. வரைபடத்தில் கிடையச்சு வேலையின்மை வீதத்தையும், குத்தச்சு பணக்கூலி வீதத்தில் ஏற்படும் மாற்றத்தையும் காட்டுகின்றது. பிலிப்ஸைத் தொடர்ந்து வந்த கட்டுரைகளில் கூலி மாற்ற வீதம் என்பதற்குப் பதிலாக விலை மாற்ற வீதம் - அதாவது, பணவீக்க வீதம் - என்ற பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இரண்டு மாறிகளும் நெருங்கிய தொடர்புடையவையாக இருப்பதால், வளைகோட்டின் வடிவமும் வரைபடம் 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒரே மாதிரியாகவே உள்ளது. தற்போது கூட பொருளியலாளர்கள் பிலிப்ஸ் கோடு பற்றி எடுத்துக்கூறும் போது, பணவீக்கத்திற்கும், வேலையின்மைக்குமிடையிலான அதே தொடர்பை ஏற்றுக் கொண்ட நிலையிலேயே கருத்துக் களைத் தெரிவிக்கின்றனர்.

1960 களின் பிற்பகுதியிலும், 1970 களிலும் வேலையின்மைக்கும், பணவீக்கத்திற்குமிடையிலான குறுங்காலத் தொடர்பை ஆராய்வதற்கு பிலிப்ஸ் கோடே பெருமளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் கோடு இடதுபக்கம் நோக்கி நகர, வேலையின்மை குறைவடைந்து பணவீக்கம் அதிகரிக்கின்றது. கோட்டின் உயர்வடைந்து செல்லும் போக்கு இதனையே விளக்குகின்றது. அடுத்து பிலிப்ஸ் வளை கோட்டின் இன்னொரு முக்கிய அம்சம் வேலையின்மையும், பணவீக்கமும் ஒரே காலத்தில் நிலவ முடியும்; அவை இரு துருவங்களாகச் செயற்படுவதில்லை என்பதாகும். பிலிப்ஸ் கோடு பணவீக்கத்தின் "விட்டு விலகுதல்" கோட்பாட்டை விளக்குகின்றது. இக்கோட்பாட்டின்படி, ஒரு நாடு குறிப்பிட்டளவு பணவீக்கத்தை அனுமதிக்குமாயின், அதன் வேலையின்மை வீதத்தைக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும். மறுபுறத்தில், பொருளாதாரம் உறுதியான விலை மட்டத்தை வைத்திருக்க விரும்பினால் உயர்ந்தளவு வேலையின்மையை அனுபவிக்க வேண்டும். 1960 களில் பொருளியலாளர்கள், பிலிப்ஸ் கோடு உறுதியானது, எதிர்வுகூறக்கூடிய தொடர்புகளைக் கொண்டுள்ளது என்ற முடிவுக்கு வந்தனர். இக்கோட்பாடு இறைக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட கெயின்ஸியவாதிகள் மத்தியில் நன்கு பிரபல்யமாக இருந்தது. கொள்கைத் திட்டங்களுக்கு வழி காட்டியாக அமையக்கூடிய வகையில் இக்கோட்பாடு அமைந்துள்ளது.

1960 களில், அமெரிக்காவில் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் விரிவாக்கம் காரணமாக மிதமான பண வீக்கத்துடன் கூடியதாக வேலையின்மையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இக்காலத்தில் பிலிப்ஸ் வளைகோட்டின் மீது பொருளியலாளர்கள் வைத்திருந்த நம்பிக்கையும் மிக உயர்வாக இருந்தது. ஆனால், 1970 களில், அமெரிக்கா உட்படப் பல நாடுகளில் வேலையின்மையும் பணவீக்கமும் சமகாலத்தில் உயர்ந்தளவில் வளர்ச்சியடைந்து, தேக்க வீக்கம் (Stagflation) என்று சொல்லப்படுகின்ற நிலையை அடைந்திருந்தன. அப்போது பிலிப்ஸ் வளைகோடு மீதும், கெயின்ஸிய வாதத்தின் மீதும் பொருளியலாளர்கள் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கிவிட்டனர். 1970 களில் ஏற்பட்ட அனுபவங்கள் - வேலையின்மையும், பணவீக்கமும் உயர்வடைந்து சென்றமை - இதுவரை எடுத்துக்கூறிய பிலிப்ஸ் கோட்டின் நம்பிக்கைகளை சிதறடித்தன. அதாவது, இக்கால அனுபவங்கள் கோட்பாட்டுடன் முரண்படுவதாக உள்ளன. இதன் அடிப்படையில் பிலிப்ஸ் வளைகோடு உயர் பணவீக்கம், வேலையின்மை என்பவற்றுடன் கூடிய பொருளாதாரங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால், வலது பக்கம் நோக்கி நகருகின்றது எனப் பல பொருளியலாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்ட இறை, நாணயக்




கொள்கைகளின் விரிவாக்க முயற்சிகள் வேலையின்மை மீது தற்காலிகமாக மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. நீண்ட காலத்தில் இவை பணவீக்க உயர்விற்கு மட்டும் வழிவகுத்துள்ளன. மேலும், பிலிப்ஸ் கோட்டின் அடிப்படையிலான எதிர்வுகூறல்கள் உலக பொருளாதார அனுபவங்களுடன் ஒத்துப் போகக் கூடியதாக இல்லை என்பதால், பொருளியலாளர்கள் தற்போது இதனை மீள் பரிசீலனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், பணவீக்க - வேலையின்மை உறவில் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகள் பற்றியும் ஆராய முற்பட்டுள்ளனர்.

பிலிப்ஸ் கோட்டின் கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளை பரிசீலனை செய்தவர்களுள் முக்கியமானவர்கள் மில்டன் பிரீட்மனும், எட்மண்ட் பெல்ப்ஸும் ஆவர். இவர்களது முடிவின் படி, "பணவீக்க வீதத்தில் மாற்றம் ஏற்படும் என்பதை மக்கள் எதிர்பார்ப்பதில்லை" என்ற மறைமுக எடுகோளை பிலிப்ஸ் கோடு கொண்டுள்ளது எனக் கூறுகின்றனர். பிரீட்மன், பெல்ப்ஸ் ஆகியோரது கருத்துப்படி வேலையின்மைக்கும், பணவீக்கத்திற்குமிடையில் எதிர்க் கணியத் தொடர்பு இருப்பதற்குக் காரணம், மக்கள் பணவீக்கம் பற்றிய எதிர்பார்ப்பின்றிச் செயற்படுவதே யாகும். 1967 டிசம்பரில் அமெரிக்க பொருளியல் கழகத்தில் பேராசிரியர் மில்டன் பிரீட்மன் தலைமை உரை ஆற்றிய போது, "நாணயக் கொள்கைகளின் விரிவாக்கம் வேலையின்மை மீது தற்காலிகமாக மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும். அது நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்த முடியாது" என்று கூறியுள்ளார். மேலும், "இயற்கையான வேலையின்மை வீதம்" ஒன்று பொருளாதாரத்தில் எப்போதும் செயற்பட்டுக் கொண்டே இருக்கும் எனவும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரீட்மனின் கருத்துப்படி, இறை—நாணயக் கொள்கைகள் ஊடாக வேலையின்மை மீது அரசாங்கம் நிரந்தரமாக எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. இக்கொள்கைகள் பணவீக்கத்தில் மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தும். எனவே, நீண்டகாலத்தில் பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்குமிடையே விட்டு விலகுதல் செயற்பாடு இடம்பெற முடியாது. இயற்கை வேலையின்மை வீதக் கருதுகோள் எடுத்து விளக்குவது என்னவெனில், அனைத்து பணவீக்கங்களும் கட்டாயமாக கேள்வித் தூண்டல் வீக்கமாகவே இருக்க முடியும். ஏனெனில், பண நிரம்பல் அதிகரிப்பால் ஏற்படும் வீக்கமாகையால் இவ்வாறே இருக்க முடியும். செலவுத் தூண்டல் காரணிகள் பணவீக்கத்தின் விளைவால் ஏற்பட்டவையேயொழிய பணவீக்கத்திற்குக் காரணமாக இருக்க முடியாது.

**பணவீக்கம் பற்றிய அமைப்புவாதக் கோட்பாடு**

1960 களின் ஆரம்ப காலப் பகுதிவரை பணவீக்க செய்முறையை விளக்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோட்பாட்டு ரீதியான அணுகுமுறைகள், பிரதானமாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருந்தன. அப்போது அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் குறைவிருத்தி நாடுகளினதும் பணவீக்க செய்முறைகளுக்கிடையில் வேறுபாடுகள் குறித்துக் காட்டப்படவில்லை. 1960 களின் ஆரம்பத்தில் இலத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த சில பொருளியலாளர்கள், வளர்முக நாடுகளுக்கு, இந்த கேள்வித் தூண்டல், செலவுத் தூண்டல் பணவீக்கக் கோட்பாடுகளைப் பிரயோகிப்பது பற்றித் தமது ஆட்சேபணையைத் தெரிவிக்கத் தொடங்கினர். இந்த பொருளியலாளர்களே பின்னர் "அமைப்புவாதிகள்" (Structuralists) என அழைக்கப்பட்டனர். வளர்முக நாடுகள் தமது பணவீக்க செய்முறையில் சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளன என இவர்கள் கூறுகின்றனர். வளர்முக நாடுகளின் பணவீக்க செய்முறையை விளக்குவதில் பாரம்பரிய பகுப்பாய்வின் பொருத்தப்பாட்டினைப் பற்றி அமைப்பியல்வாத சித்தாந்தப் பள்ளியின் முன்னோடி எனக் கருதப்படக்கூடிய ஒஸ்வால் டோசங்கெல் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"வளர்முக நாடுகளின் பணவீக்கம் அடிப்படைப் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினைகளாலும் உற்பத்தி முறைமையின் அமைப்பு ரீதியான குணாம்சங்களினாலும் ஏற்படு கின்றது. மேலும், பழமை வாய்ந்த நாணயத் தரவுகளை உள்ளடக்கியுள்ள எமது நாடுகளின் பண வீக்கத்தை ஆய்வு செய்வதற்கும், அரசாங்கம், மத்திய வங்கி, தொழிற் சங்கம் ஆகியவற்றின் மீது சுமத்தப் படும் 'செலவு-சிக்கனம்', 'பலவீனம்', 'பொறுப்பின்மை' போன்ற குற்றச் சாட்டுக்களை ஆய்வு செய்வதற்கும் பாரம்பரிய குறுங்கால அணுகுமுறை போதுமானதாக இல்லாமையால் அதனை நீக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வகையான ஆய்வு பணவீக்கத்திற்கான காரணங்களையோ அல்லது அதன் தொடர்ச்சியான இயல்பினையோ ஒருபோதும் விளக்கவில்லை". (சஸ்கல், 1960)

வளர்முக நாடுகளின் பணவீக்கத்துக்கான காரணங்கள் மற்றும் பணவீக்கத்தைக் குறைப்பதற்கான கொள்கைகள் என்பன தொடர்பான சர்ச்சையில் இரண்டு எதிரெதிர் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. (1) அமைப்புவாத சித்தாந்தப் பள்ளியின் கருத்து; (2) நாணயவாத சித்தாந்தப் பள்ளியின் கருத்து. அமைப்புவாதிகளின் பிரதான வாதம் இந்நாடுகளில் அமைப்பு ரீதியான இடையூறுகளும் இசைவின்மைகளும் இருப்பதால், இவை பொருளாதார அபிவிருத்திச் செய்முறையில் பணவீக்க அமுக்கத்திற்கு வழிகோலுகின்றன. இந்நிலையில் பாரம்பரிய கோட்பாட்டு வாதிகளால் விதித்துரைக்கப்படும் நாணய, இறைக் கொள்கைகள் நிலையான வளர்ச்சியை எடுத்துவரும் அமைப்பு ரீதியான மாற்றங்களை தடுத்து நிறுத்துகின்றன.

நாணயவாதிகளின் நிலைப்பாடு எப்போதும் சர்வதேச நாணய நிதியின் கருத்துக்களை ஒத்ததாகவே உள்ளது.



இந்நிதியம், பணவீக்கம் நிலவும் போது வளர்முக நாடுகளை - அங்கத்துவ நாடுகளை - விலை உறுதிப்பாட்டிற்காக இறை, நாணயக் கொள்கைகளின் சுருக்கக் கொள்கையினைக் கடைப்பிடிக்குமாறு ஆலோசனை கூறுகின்றது. நாணயவாதிகளின் அணுகுமுறை கேள்வித் தூண்டல் பணவீக்கத்தின் அடிப்படையில் கூறப்படுகிறது. அத்துடன், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையில் பணவீக்க செய்முறையில் வேறுபாடுகள் இல்லை என்பதையும் வற்புறுத்துகின்றனர். வளர்முக நாடுகளின் பணவீக்கத்திற்கான அடிப்படைக் காரணம் நாணய, இறைக் கொள்கைகளின் விரிவாக்கமே என நாணயவாதிகள் கருதுகின்றனர். மேலும், அமைப்புவாதிகளின் ஆய்வில் முக்கிய பங்கினை வகிக்கின்ற அமைப்பு ரீதியான இடையூறுகள் என்பது பணவீக்க செய்முறையின் போது ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத ஒரு விளைவாகும் எனவும் வாதிடுகின்றனர்.

அமைப்புவாதிகளது கருத்துப்படி விலைகள் நெகிழ்ச்சித்தன்மை அற்றதாக இருக்கும் சந்தர்ப்பத்தில், நாணய-இறை உறுதிப்படுத்தற் கொள்கைகள், பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை என்பவற்றுக்குத் தடையாக அமைய முடியும். இக்கொள்கைகள் பணவீக்கத்தின் குணங்குறிகளை மட்டும் நீக்குமே ஒழிய பணவீக்கத்துக்கான மெய்க் காரணிகளை நீக்க முடியாது. வளர்முக நாடுகளில் பணவீக்கத்தைக் குறைப்பதற்கான சிறந்த வழி, பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்து, அவற்றினூடாக துறைகளுக்கிடையே நிலவும் இசைவின்மையைச் சீர் செய்வதாகும். எவ்வாறெனினும், அமைப்புவாதிகள் பண நிரம்பலுக்கும், பணவீக்கத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதை மறுக்கவில்லை. அதே

வேளையில், சில சுயமான காரணிகளும் பணவீக்கத்திற்குத் தூண்டுதலாக அமைகின்றன. இச்சுயமான காரணிகள் அமைப்பு ரீதியான சில தடைகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன. இக் காரணிகளே பொருளாதார அபிவிருத்திக்காக நாணய நிரம்பலை அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றன.

**பணவீக்கமும் திறந்த பொருளாதாரமும்**


ஒரு நாட்டின் பணவீக்கத்தில் வெளிநாட்டுக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும் என்பதை பாரம்பரிய பணவீக்கக் கோட்பாட்டாளர்கள் உணரத் தவறிவிட்டனர். பாரம்பரிய கோட்பாட்டில் சர்வதேசப் பார்வை இடம் பெறாமைக்குக் காரணம் அது மூடப்பட்ட பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையாகும். 1960 களின் பிற்பகுதியில் வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் பணவீக்கம் துரிதமாக இடம் பெறத் தொடங்கியதையடுத்து பணவீக்கக் கோட்பாட்டில் பல நவீன அபிவிருத்திகள் உருவாகியுள்ளன. இவற்றுள் முக்கியமானவை சென்மதி நிலுவைக்கான நாணய அணுகுமுறையும், அமைப்பு ரீதியான கருதுகோள் பற்றிய ஸ்கண்டிநேவிய நோக்குமாகும். இவை உள்நாட்டுப் பொருளாதாரத்தின் பணவீக்க அமுக்கத்தை உருவாக்குவதில் முக்கியமான காரணி என்ற வகையில் உலக பணவீக்கம் மீதும், சிறிய பொருளாதாரங்களின் சர்வதேச தங்கியிருத்தல் மீதும் முக்கியமாகக் கவனம் செலுத்துகின்றன.

சென்மதி நிலுவைக்கான நாணய ரீதியான அணுகுமுறையானது, ஒரு திறந்த பொருளாதாரத்தில் நாணய விரிவாக்க வீதம் உள்ளார்ந்த மாறியாக உள்ளது என்றும், இது உள்நாட்டுக் கடனாக்கத்தினாலும் சர்வதேச ஒதுக்குகளாலும் நிர்ணயிக்கப்படுகின்றது என்றும் கருதுகிறது. மேலும், ஒரு திறந்த பொருளாதாரத்தில், உள்நாட்டுக் கடன் கொள்கைகள் மூலம் பண நிரம்பலைச் சுதந்திரமாகக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில், அதன் ஒரு பகுதி அந்நாட்டின் சென்மதி நிலுவையினாலும் பாதிக்கப்படும். கட்டுப்பாடான கடன் கொள்கைகள், சென்மதி நிலுவையில் மிகை நிலையை ஏற்படுத்துவதன் மூலம், பணநிரம்பல் அதிகரிப்பிற்கே வழிவகுக்கும். மேலும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இது வெற்றியளிக்க முடியாமலும் போகலாம் (ஸ்வாபோடா, 1972).

அமைப்பு ரீதியான கருதுகோள் பற்றிய ஸ்கண்டிநேவியன் நோக்கில், உள்நாட்டுப் பணவீக்கமானது, உலகச் சந்தை விலைகள், ஏற்றுமதித் துறையின் உற்பத்தித் திறன் வளர்ச்சி வீதம், நிலையான நாணய மாற்று வீத முறை போன்ற வெளிநிலையான மாறிகளின் தொழிற்பாடாக உள்ளது (பிரான்சன், மிர்மான், 1976).

சென்மதிநிலுவை, பண நிரம்பல் என்பவற்றுக்கு ஊடாக பணவீக்கத்தில் மாற்றம் ஏற்படும் என்ற மறைமுகமான பொறிமுறை செயற்படும் சென்மதி நிலுவைக்கான நாணய அணுகுமுறைக் கருத்துக்கு மாறாக, உலக பணவீக்கம் நேரடியாக சர்வதேச விலை மட்டத்தின் ஊடாக உள்நாட்டுப் பணவீக்கத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இதனையே "இறக்குமதிப் பணவீக்கம்" என அழைப்பர். ஒரு சிறிய திறந்த பொருளாதாரம் உயர் விலைகளுடன் கூடிய இறக்குமதி, ஏற்றுமதிகளை மேற்கொள்வதன் மூலம் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து இறக்குமதிப் பணவீக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும். இலத்தீன் அமெரிக்க அமைப்புவாதக் கோட்பாட்டாளர்களும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர். வளர்முக நாடொன்றின் உள்நாட்டுப் பணவீக்கத்தில், வெளிநிலைக் காரணிகளான இறக்குமதி விலைகள், நாணயப் பெறுமதி இறக்கம் என்பன செல்வாக்குச் செலுத்த முடியும்.

பணவீக்கம் தொடர்பான சர்வதேசப் பார்வையில் விழிப்புணர்வு அதிகரித்ததுடன், பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான கழகம் (OECD) ஒரு திறந்த பொருளாதாரத்திலிருந்து நிலையான நாணய மாற்று வீதத்துடன் கூடிய இன்னொரு பொருளாதாரத்திற்கு எவ்வாறு பணவீக்க மாற்றச் செய்முறை நடைபெறுகின்றது என்பதை ஆய்வு செய்துள்ளது. (OECD) இந்த




ஆய்வின்படி பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன:

(1) விலைத்தாக்கம் : சர்வதேச ரீதியாக வர்த்தகம் செய்யக்கூடிய பொருட்களின் விலைகளின் வழியாக பணவீக்கம் நேரடியாக மாற்றப்படுகின்றது.

(2) கேள்வித் தாக்கம் : அதிகரித்த ஏற்றுமதிகளும், நடைமுறை நிலுவைகளின் சாதகமான போக்கும் பொருளாதாரத்தில் மிகைக் கேள்வியினைத் தோற்றுவிக்கும்.

(3) திரவத்தன்மைத் தாக்கம் : சென்மதி நிலுவையில் ஏற்படும் மாற்றம் பண நிரம்பலைப் பாதிக்கும்; பின்னர் பண வருமானம், விலைகள் என்பவற்றையும் பாதிக்கும்.

(4) சர்வதேச பணவீக்க எதிர்பார்க்கைகளுக்கும், அதன் நிரூபணங்களுக்குமிடையிலான தொடர்புத் தாக்கங்கள்.

எவ்வாறெனினும், சர்வதேச ரீதியான பணவீக்க சக்திகளால் திறந்த பொருளாதாரங்கள் விரைவில் பாதிக்கப்படும் என்பது இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இதன் விளைவுகள் நாட்டுக்கு நாடு மாறுபடுவதால், இக்காரணிகளின் சார்புரீதியான முக்கியத்துவமும் மாறுபட முடியும்.

**பணவீக்கத்தின் தாக்கங்கள்**

ஆதி காலத்திலிருந்தே பணவீக்கம் என்பது ஒரு தீங்கான விடயமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தீவிரமான பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பரந்த அளவில் கூலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைக் கட்டுப்பாடுகளை அமுல் படுத்தும் ஆலோசனைகளை ரோம சாம்ராச்சியம் வெளியிட்டது. பணவீக்கம் என்பது ஏன் பயப்பட வேண்டிய ஓர் அம்சமாக உள்ளது? இதன் தாக்கங்கள் என்ன? பணவீக்கம் வருமானப் பங்கீடு, செல்வப் பகிர்வு வெளியீட்டு மட்டம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அட்டவணை 2

ஒரு ரூபாவின் மெய் பெறுமதி 1970-1994

| வருடம் | ஒரு ரூபாவின் கொள்வனவுச் சக்தி (ரூ.) |
|---|---|
| 1970 | 1.00 |
| 1971 | 0.97 |
| 1972 | 0.92 |
| 1973 | 0.83 |
| 1974 | 0.74 |
| 1975 | 0.70 |
| 1976 | 0.69 |
| 1977 | 0.68 |
| 1978 | 0.61 |
| 1979 | 0.55 |
| 1980 | 0.43 |
| 1981 | 0.37 |
| 1982 | 0.33 |
| 1983 | 0.29 |
| 1984 | 0.25 |
| 1985 | 0.25 |
| 1986 | 0.23 |
| 1987 | 0.21 |
| 1988 | 0.18 |
| 1989 | 0.17 |
| 1990 | 0.14 |
| 1991 | 0.12 |
| 1992 | 0.11 |
| 1993 | 0.10 |
| 1994 | 0.09 |

### மீள்பகிர்வுத் தாக்கங்கள்

பணவீக்கத்தினால் ஏற்படக் கூடிய முக்கியமான விளைவுகளுள் ஒன்று வருமானம், செல்வம் என்பவற்றின் பகிர்வில் ஏற்படும் தாக்கமாகும். பணவீக்கத்தின் மீள் பகிர்வுத் தாக்கத்தினை அறிவதற்கு, பணவீக்க காலத்தில் பணத்தின் பெறுமதிக்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறிவது முக்கியமாகும். பணத்தின் மெய் பெறுமதி என்பது, அதன் கொள்வனவுச் சக்தியாகும்:

$$\text{ஒரு ரூபாயின் மெய் பெறுமதி} = \frac{\text{ஒரு ரூபாய்}}{\text{விலை மட்டம்}}$$


விலை மட்டம் உயர்வாக இருக்குமளவுக்கு ரூபாவின் மெய்ப் பெறுமதி குறைவடையும்; அதாவது, கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடையும். 1970-94 ற்கு இடைப்பட்ட காலத்தில் ரூபாவின் மெய்ப் பெறுமதி எவ்வாறு இருந்துள்ளது என்பதை அட்டவணை 2 எடுத்துக் காட்டுகின்றது. அண்மைய தசாப்தங்களில் விலைகள் உயர்வடைந்துள்ளன. அதன் விளைவாக, ரூபாவின் கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. உதாரணமாக, 1970 இல் கொள்வனவு செய்த பெறுமதியில் 1/10 ஐயே, 1993 இல் ஒரு ரூபாவால் கொள்வனவு செய்ய முடிகிறது.

சார்பு ரீதியில் நிலையான வருமானம் உழைப்பவர்கள், சேமிப்பவர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் ஆகிய மூன்று பகுதியினரையும் பொறுத்தவரையிலும் பணவீக்கத்தின் தாக்கம் முக்கியமான தொன்றாகும். இதனை விளங்கிக் கொள்வதற்கு பண வருமானத்திற்கும் மெய் வருமானத்திற்குமிடையிலான வேறுபாட்டை அறிவது அவசியமாகும். பண வருமானம் அல்லது பெயரளவு வருமானம் என்பது கூலிகள், வட்டி, வாடகை, இலாபம் என்ற பல்வேறு ரூபாய்ப் பெறுவனவுகளைக் குறிக்கின்றது. மெய் வருமானம் என்பது பண வருமானத்தினால் வாங்கக் கூடிய பொருட்கள், சேவைகளின் அளவைக் குறிப்பிடுகின்றது. விலை மட்டத்திலும் பார்க்க வேகமாக பண வருமானம் அதிகரிப்பின் மெய்வருமானம் உயர்வடையும். மாறாக, பண வருமானத்திலும் பார்க்க விலைமட்டம் உயர்வடையின் மெய் வருமானம் வீழ்ச்சியடையும். மெய் வருமானம் பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது:

$$\text{மெய்வருமானம்} = \frac{\text{பெயரளவு வருமானம்}}{\text{விலைச் சுட்டெண் (நூறுகளில்)}}$$

### நிலையான பெயரளவு வருமானம் பெறுவோர்

பணவீக்க காலத்தில், நிலையான பணவருமானத்தைப் பெறுவோர், தமது வாழ்க்கைத் தரம் குறைவதை உணருவார்கள். இக் காலத்தில் நிலையான வருமானம் பெறுவோர்களிடமிருந்து ஏனையோருக்கு வருமானம் மீள் பங்கீடு செய்யப் படுகின்றது. ஓய்வூதியம் பெறுவோர், வெள்ளை வேட்டித் தொழிலாளர், பொதுத் துறை ஊழியர்கள், சேமநலக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் ஆகியோர் நிலையான வருமானத்தைப் பெறுபவர்கள் ஆவர். நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய வருமானத்தைப் பெறுபவர்கள் பணவீக்கத்தின் போது பயனடைவார்கள். இவர்களுடைய பண வருமானம், விலை மட்டம் அல்லது வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப உயர்வடையும். எனவே, மெய் வருமானமும் அதிகரிக்கும். கைத்தொழில் விரிவாக்கத்தின் காரணமாக தொழிலாளர்கள் கூடுதலான வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்; பலமான தொழிற் சங்கங்களாக இருப்பின் பண வீக்கத்துடன் இணைந்ததாக பணக்கூலியும் உயர்வடையும்.



மறுபுறம், சில கூலித் தொழிலாளர் பணவீக்கத்தினால் பாதிக்கப்படவும் கூடும். முக்கியமான தொழில் துறைகள் வீழ்ச்சியடைந்து அல்லது அனுகூலங்கள் பலமாக இல்லாத நிலையில் இத்தொழிலாளர்களின் பணவருமானம் குறைய முடியும். தொழல்துறையில் மேல்நிலையில் உள்ளவர்களும், ஏனைய இலாபம் பெறுபவர்களும் பணவீக்கத்தினால் நன்மையடைய முடியும். வளங்களின் விலையைவிட உற்பத்திகளின் விலைகள் வேகமாக உயர்வடையின், தொழில் துறையினர் பெற்றுக் கொள்ளும் வருமானம், உற்பத்திச் செலவைவிட உயர்வான தாக இருக்கும். எனவே, சில வகையான இலாபங்கள் பணவீக்கப் போட்டியில் முந்திக் கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிப்பாளர்கள்

பணவீக்கம், சேமிப்பாளர் மீது அழிவுகரமான, ஏற்றத்தாழ்வான விளைவுகளை ஏற்படுத்தும். விலைகள் உயர்வடைய, சேமிப்பின் மெய்ப் பெறுமதி அல்லது கொள்வனவுச் சக்தி சீர்குலைகிறது. கடுமையாக உழைத்து எதிர்காலத்திற்கு சேமிப்பினை மேற்கொள்ளும் குடும்பங்கள், தமது சேமிப்பின் பெறுமதி எதிர்காலத்தில் குறைவான பெறுமதி உடையது என உணர்ந்தால், இறுதியில் சேமித்ததைக் காட்டிலும் கூடுதலாக செலவுகளை மேற்கொள்வர். மேலும், பணவீக்க காலத்தில் சேமிப்புக் கணக்கு, காப்புறுதி பாலிஸிகள், வருடாந்த பெறுவனவுகள், ஏனைய நிலையான பெறுமதியுடைய பத்திரங்கள் என்பவற்றின் மெய்ப் பெறுமதி வீழ்ச்சியடையும்.

கடன் கொடுப்போர், கடன் பெறுவோர்

பணவீக்கம், கடன் கொடுப்போர், பெறுவோருக்கிடையிலான உறவை மாற்றுவதன் மூலம் வருமான மீள் பகிர்வை மேற்கொள்கின்றது. பணவீக்கம் கடன் கொடுத்தவர்களின் செலவில், கடன்பெற்றவர்களுக்கு பயன் அளிக்கின்றது. உதாரணமாக, மூன்று வருடங்களில் திருப்பிச் செலுத்துகின்ற உடன்படிக்கையில் நீங்கள் 1000 ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக கொள்வோம். இக் காலப்பகுதிக்குள் விலை மட்டம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் எனில், நீங்கள் திருப்பிச் செலுத்தும் போது மூன்று வருடம் முன்னதாகப் பெற்ற 1000 ரூபா தற்போது அரைப் பங்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கே போதுமானதாக இருக்கும். வட்டி வீதத்தை கவனத்தில் எடுக்காவிடில் மேற்கூறிய கருத்து உண்மையானதாகும். பணவீக்கம் காரணமாக, முன்பு நீங்கள் கடனாகப் பெற்ற ரூ. 1000 தற்போது குறைந்தளவு பொருட்கள், சேவைகளையே கொள்வனவு செய்வதற்குப் போதுமானது. பணவீக்க காலத்தில், கடன் கொடுத்தவர் உரிய காலத்திற்கு முன்னதாகத் திரும்பிப் பெறமாட்டார். கடன் பெற்றவருக்கும் ஆரம்பத்தில் வாங்கும் போது இருந்த நன்மையை விடக் குறைந்தளவு நன்மையே ரூபாவினால் கிடைக்கும். இதே மாதிரி பணவீக்கம் பொதுப் படுகடனின் மெய்ரீதியான சுமையைக் குறைக்கும். இந்த வகையில் பணவீக்கம் அரசாங்கத்திற்கு நன்மை பயப்பதால், அரசாங்கம் ஆர்வத்துடனேயே பணவீக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என சமூகம் எதிர்பார்ப்பதாக சில பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் கடன் வழங்கியோர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழி உயர் வட்டி வீதங்களை அறவிடுவதாகும். இதேபோல கடன் பெறுவோரும் உயர்வட்டி கொடுக்க சம்மதிப்பார்கள். ஏனெனில், அவர்கள் திருப்பிச் செலுத்தும் போது குறைந்தளவு கொள்வனவுச் சக்தியுடனேயே அத்தொகை செலுத்தப்படும் என்பதை அறிந்திருப்பார்கள். பணவீக்க காலத்தில் இவ்விரு சாராரும் பெயரளவு வட்டி வீதமே மெய்வட்டி வீதமாக இருக்க வேண்டும் என்பதை விரும்புகின்றவர்கள். பெயரளவு வட்டி வீதம் என்பது கடனுக்கோ அல்லது சேமிப்புக்கோ குறிப்பிடப்படும் வட்டி வீதமாகும். மெய் வட்டி வீதம் என்பது கடன் அல்லது சேமிப்பின் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து பணவீக்கத்தைக் கழித்துப் பெறப்படும் மெய் விளைவுகளாகும். இன்னொரு வகையில் கூறின், பண வட்டி வீதத்திலிருந்து பணவீக்கத்தை கழித்துப் பெறுவதே மெய்வட்டி வீதமாகும். மெய்வட்டி விதம் = பெயரளவு வட்டி விதம் - பணவீக்க வீதம். உதாரணமாக, தேசிய சேமிப்பு வங்கி, நிலையான வைப்புக்காக 17 வீதம் வட்டி வழங்குகின்றது. எனவும், தற்போதைய பணவீக்கம் 12 வீதம் எனவும் கொண்டால் மெய்வட்டி வீதம் 5 வீதமாகும்.

எதிர்பார்க்கப்பட்ட, எதிர்பாக்கப் படாத பணவீக்கங்களின் விளைவுகள்

பணவீக்கததின் பங்கீட்டு (மீள் பகிர்வு)த் தாக்கங்கள், அது பற்றிய எதிர்பார்ப்பிலேயே தங்கியுள்ளது. ஒரு வருடத்தில் பணவீக்கம் 8 வீதம், அடுத்த வருடத்தில் 10 வீதம், அதற்கடுத்த வருடம் 9 வீதம் என மாற்றமடைந்து சென்றால் மக்கள் வருடாந்த பணவீக்கமாக 9 வீதத்தையே எதிர்பார்ப்பார்கள்.




ஏனெனில், இங்கு உண்மையான வட்டி வீதம் சராசரி வீதத்திலிருந்து பெருமளவுக்கு விலகவில்லை. மக்கள் ஒரு முறை பணவீக்கத்தை எதிர்பார்த்தால், தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் தமது வட்டி வீதத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பர். நிலையான பண ஒப்பந்தங்கள், பணப் பெறுமதியின் குறைவினைக் கவனத்திற் கொண்டு புதுப்பிக்கப்படும். கடன் கொடுத்தவர்கள், தாம் குறைந்த விலையில் ரூபாக்களைக் கொடுத்ததாக நினைத்து, அதனை ஈடுசெய்வதற்கு உயர்வட்டி வீதங்களை அறவிடுவார்கள்; கடன் பெற்றவர்களும், மலிந்த ரூபாக்களையே திருப்பிச் செலுத்துவதாக உணருவார்கள். இதனால் உயர்ந்த வட்டி வீதங்களை வழங்குவதற்குத் தயாராக உள்ளார்கள். இதேபோல நிலக்கிழார்கள் நீண்ட காலத்திற்கு உயர்ந்த வாடகையை அறவிடுவதற்கு, அல்லது மீண்டும் பேரம்பேசக் கூடியதாக குறுங்காலக் குத்தகைகளை வழங்குவதற்கு பணவீக்க அதிகரிப்பே காரணமாகும். அடுத்து தொழிலாளரும் உயர் கூலிகளை அல்லது குறுங்கால ஒப்பந்தங்களை செய்து கொள்வர்.

பொருளாதாரத்தில் ஒவ்வொருவரும் விலை பற்றிய எதிர்பார்ப்பை மிகச் சரியாக மேற்கொள்வார்களேயானால் செல்வப் பகிர்வில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கோ அல்லது தீர்மானங்களில் தவறுகள் ஏற்படுவதற்கோ இடமிருக்காது. பணவீக்க விளைவிலிருந்து பணக் கொடுப்பனவுகள் பெறுவோரைப் பாதுகாப்பதற்கு, ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படும். எதிர்பாராத பணவீக்கத்தின் தாக்கங்கள் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத் தாக்கங்களை விட குறைந்தளவு விளைவுகளைக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், மக்கள் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதங்களைக் கணிப்பீட்டுக்கு உட்படுத்தியுள்ளனர்.

1970 களின் நடுப்பகுதியில், அமெரிக்காவில் மிதமிஞ்சிய அளவில் பணவீக்கம் நிலவிய போது, மில்டன் பிரீட்மன் போன்ற பொருளியலாளர்கள் பணவீக்க தாக்கத்தைத் தணிப்பதற்கு "சுட்டெண்ணிடல்" (Indexation) முறை குறித்த யோசனையை முன்வைத்தனர். சுட்டெண்ணிடல் என்பது, விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றதிற்கேற்ப கூலி வீதங்கள், சேமிப்பு வரிகள், வட்டி வீதங்கள், பிணைப் பெறுமதிகள் மற்றும் ஏனைய ஒப்பந்தங்கள் யாவும் சீராக்கம் செய்யப்படுவதாகும். தொழிலாளர்-முகாமைத்துவ ஒப்பந்தங்கள் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப அடிக்கடி புதுப்பிக்கப் படுவதிலிருந்து, சுட்டெண்ணிடல் முறை பரந்த அபிமானம் பெற்றுள்ளது என்பதனை காண முடிகிறது. அவ்வாறு செய்வதற்கு சுட்டெண்ணிடல் முறை வழிவகுத்துள்ளது. இந்த ஒப்பந்தங்களில், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணவீக்க அளவீடாக நுகர்வோர் விலைச் சுட்டெண் உள்ளது. இது கூலியில் ஏற்படும் சுயமான மாற்றத்திற்கான அடிப்படையாகவும் விளங்குகிறது. இவ்வாறு சுட்டெண்ணிடல் செய்முறை பற்றி பொருளியலாளர்கள் கூறிய கருத்துக்கள் பொருளாதாரம் முழுமைக்கும் பரப்பப்பட வேண்டும். உதாரணமாக, விலை மட்ட மாற்றத்தின் தாக்கங்களை சீராக்கம் செய்த பின்னர், தனிநபர் வருமான வரியின் பொறுப்பு அவருடைய வருமானப் பெறுமதியை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன, பணவீக்கத்துடன் சேர்ந்ததாக வட்டி வீதமும் உயர்வடையும்.

சுட்டெண்ணாக்கல் முறையானது பணவீக்கத்தின் தீய விளைவுகளை ஓரளவுக்கேனும் குறைப்பதற்கு உதவும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சுட்டெண்ணாக்கல் தொடர்பான முக்கிய நன்மை என்னவெனில், ஓய்வூதியம் பெறுவோர், நிலையான வருடாந்த பெறுவனவுகளை உடையோர், சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் போன்றவர்களுக்குப் பணவீக்கத்திலிருந்தும் அது பாதுகாப்பு அளித்தமையாகும். இந்த வகுப்பினர் நீண்ட கால உடன்படிக்கைகளை அடிக்கடி மேற்கொள்வதால் அவர்கள் எதிர்பார்த்திராத பணவீக்கத்தினால் இலகுவில் பாதிக்கப்படுவர். எவ்வாறாயினும், அடிப்படைப் பிரச்சினை, நடைமுறையில் சுட்டெண்ணிடல் சிறந்த முறையில் தாக்கமுள்ளதொன்றாக இருக்க வேண்டும் என்பதாகும். நிஜமான பூரணமாக சுட்டெண்ணிடல் முறை எந்தவொரு மக்களையும் தவிர்ப்பதாக அமையக் கூடாது. மேலும், பக்க சார்பற்ற சுட்டெண்களை அறிந்து கொள்வதிலும் அவற்றை பொருளாதாரம் முழுவதற்கும் பிரயோகிப் பதிலுமே பிரச்சினை எழுகின்றது.

பணவீக்கம் வருமான மீள் பகிர்வு மீது மட்டுமன்றி வெளியீடு, பொருளாதார செயற்றிறன் என்பவற்றிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

### வெளியீட்டில் ஏற்படும் விளைவுகள்

பணவீக்கம் மெய் தேசிய வெளியீட்டை அதிகரிக்குமா அல்லது குறைக்குமா என்பது தொடர்பாக நிச்சயமின்மையும், உடன்பாடின்மையும் நிலவி வருகின்றது. எதிர்பார்க்கப்படும் பணவீக்கம், வளங்களை உற்பத்தி சார் நடவடிக்கைகளிலிருந்து உற்பத்தி சாரா நடவடிக்கைகளுக்கு மாற்றுகின்றது. முக்கியமாக மக்கள் பணவீக்க வரியிலிருந்து தப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். ஆனால், பணவீக்கம் நிறுவனங்களின் உற்பத்தியைக் கூட்டுவதன் மூலம் அல்லது குறைப்பதன் மூலமும், மக்களின் வேலை நேரத்தைக் கூட்டுவதன் மூலம் அல்லது குறைப்பதன் மூலமும் நேரடியாக வெளியீட்டிலும் வேலைவாய்ப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பணவீக்கத்திற்கும் வட்டி வீதத்திற்கு மிடையில் தொடர்பு உள்ளது; உயர்வட்டி வீதம் முதலீட்டிற்கான கடன் பெறுவனவைக் குறைக்கும். பணவீக்கம் இருக்கும் போது உயர் வருமான வரி செலுத்தவேண்டிய மக்கள் தொகை கூடும்; வரி வீதம் கூட மக்களின் மேலதிக வேலை நேரம் குறைவடையும். அதாவது, பணவீக்கம் காரணமாக பெயரளவு வருமானம் கூட, பெயரளவு வரிகூட,



உழைப்பாளரின் வேலை செய்யும் ஆர்வம் குறைவடையும்.

குறைந்தளவு பணவீக்க நிலையில் ஏற்படும் சிறு அளவு விலை உயர்வு வெளியீட்டைக் குறைக்க மாட்டாது. ஆனால், பாரிய பணவீக்கம் உற்பத்தி மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இது உற்பத்தியைக் காட்டிலும் ஊகத்தையே தூண்டும். அதாவது, உற்பத்தி சார்ந்த செயற்பாடுகளில் முதலிடுவதைக் காட்டிலும் தங்கம் வைரம் வெளிநாட்டு நாணயங்கள், மெய் ஆதனங்கள் என்பவற்றில் முதலீடு செய்வதால் அதிகளவு இலாபம் கிடைப்பதால் மக்கள் இவற்றின் மீதே முதலீடுகளை மேற்கொள்வர். எதிர்கால விலை எவ்வாறாக இருக்கும் என்பதை எதிர்வு கூறுவதில் உள்ள சிக்கல் காரணமாக, வணிக வட்டாரத்தினர் நீண்ட கால செயற்றிட்டங்களை ஆரம்பிக்க முன்வர மாட்டார்கள். எவ்வாறெனினும், பணவீக்கத்திற்கும் வெளியீட்டு மட்டத்திற்குமிடையில் அவசியம் தொடர்பு இருக்க வேண்டுமென்றில்லை என்பதே இன்றைய பேரண்ட பொருளியல் வாதிகளின் கருத்தாகும். மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு விலை, வெளியீட்டு மட்டம் என்பவற்றில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்; ஆனால், ஒரு நிரம்பல் தாக்கம் ஏற்படின், மொத்த நிரம்பல் கோடு மேல்நோக்கி நகரும்; விலை கூடும்; ஆனால், வெளியீடு குறையும்.

### பொருளாதார செயற்றிறன்

பணவீக்க கால கட்டங்களில் அனைத்து விலைகளும் கூலிகளும் ஒரே விகிதாசாரத்தில் நகருவதில்லை. அதாவது, சார்புரீதியான விலைகளில் மாற்றம் ஏற்படுகிறது. சார்பு ரீதியான விலைகளில் திரிபு ஏற்படின் பொருளாதார செயற்றிறன் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமான தாக்கம் தோன்றும். விலைத் திரிபு மூலம் செயற்றிறனின்மை ஏற்படின், அது கைமாற்றக்கூடிய சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவை உயர்த்தும். அதாவது, ஒரு சொத்திலிருந்து இன்னொரு சொத்துக்கு மாற்றும் போது ஏற்படும் செலவு உயரும். நாணயம் பணமாக இருக்கும் போது அதற்குரிய பெயரளவு வட்டிவீதம் பூச்சியமாகும். பணவீக்கம் பூச்சியத்திலிருந்து 10 ஆக உயர்வடையின், மெய்வட்டிவீதம் பூச்சியத்திலிருந்து 10 வீதமாக வீழ்ச்சியடையும். இதன் கருத்து மக்கள் பண நிலுவை மீதான செலவைக் குறைக்கும் பொருட்டு கொடுக்கல் வாங்கல் செலவுகளை மேற்கொள்வர் என்பதாகும். பணவீக்கம் உயர்வடையும் போது மக்கள் தமது பண இருப்பைக் குறைப்பதன் மூலம் மெய்ச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வர். அவர்கள் வங்கிக்கு அடிக்கடி சென்று பங்குகளைக் கொள்வனவு செய்வர்; சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட அரசாங்க பிணைகளைக் கொள்வனவு செய்வர்; ஆனால், வங்கியில் பணத்தை வைத்திருக்க விரும்ப மாட்டார்கள். பின்னர், தேவைப்படும் போது அவர்கள் பிணைகளை விற்பனை செய்வார்கள். இச் செலவுகளை "செருப்புத் தோல் செலவு" என அழைப்பர். ஏனெனனில், பல தடவைகள் வங்கிக்குச் செல்வதால் இச் செலவு உருவாகின்றது. இதனைவிட முக்கியமானது, இக்கொடுக்கல் வாங்கல்களுக்காகச் செலவழிக்கும் நேரமும், பிணைகளைக் கொள்வனவு, விற்பனவு செய்வதற்காக வழங்கும் கட்டணமும் ஆகும்.

பணவீக்கம் சரியாக எதிர்பார்க்கப்பட்டாலும் கூட நாளாந்த நடவடிக்கைகளில் நாணயத்தை உபயோகிக்க வேண்டியிருக்கும் நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும் பணவீக்க காலத்தில் நட்டம் ஏற்படுகின்றது. விலை மட்டம் உயரும் போது கொள்வனவுச் சக்தி குறைவதனால் இந்த நிலைமை ஏற்படுகின்றது. நாணயத்தின் பாவனையைக் குறைப்பதன் மூலம் பணவீக்க நேரத்தில் ஏற்படக்கூடிய நட்டத்தைக் குறைத்து, பொருளாதார செயற்றிறனை ஓரளவு பேண முடியும்.

அடுத்த கொடுக்கல் வாங்கல் செலவு, விலையை உயர்வாகக் குறித்துக் கொள்ளும் செய்முறையாகும். உதாரணமாக, நிறுவனங்கள் விலைப் பட்டியலை அடிக்கடி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்; அல்லது வெளியிடப்பட்ட விலைப் பட்டியல் இல்லையெனில் வேறு வகையில் விலைகளைத் தெரியப்படுத்த வேண்டும். இவ்வகைச் செலவுகள் "பட்டியல் செலவு" எனப்படுகின்றது. பணவீக்கத்தின் காரணமாக ஏற்படும் இவ்விலைப் பட்டியலை உணவு விடுதிகளே அச்சடித்து வெளியிடுகின்றன. பட்டியல் செலவிற்கான ஏனைய உதாரணங்களாக பட்டியலை மீள அச்சடித்தல், வாடகைக் கார்களின் கட்டணம் அச்சிடுதல், களஞ்சியங்களில் பொருட்களின் விலைப் பட்டியல் தயாரித்தல் என்பவற்றையும் கூறிக் கொள்ளலாம்.

பணவீக்கம் தறிகெட்டுச் செல்லும் காலத்தில் பொருளாதார செயற்றிறன் மீதான பணவீக்கத்தின் எதிர்மறைத் தாக்கம் மிகத் தீவிரமானதாக இருக்கும். தொழிலாளர்கள் பணக் கூலியை ஏற்றுக் கொள்வதற்குத் தயங்குவார்கள்; பெறப்பட்ட பணம் உடனடியாகச் செலவு செய்யப்பட்டு முடிவடைந்து விடும். நிலையான ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்குத் தொழிலதிபர்கள் தயங்குவர். சுருங்கக்கூறின், தறிகெட்ட பணவீக்கம் காரணமாக பொருளாதாரத்தின் செயற்றிறன் இழக்கப் படுகின்றது.

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தேச கொள்கைகள்.**

(அ) மொத்தக் கேள்வியின் மெதுவான வளர்ச்சி


(ஆ) மொத்த நிரம்பலில் வேகமான வளர்ச்சி

(இ) நேரடி அரசாங்கத் தலையீடு

(ஈ) செயல்திறன் மிக்க மூலவள ஒதுக்கீட்டுக்கு எதிரான இடையூறுகளை அகற்றுதல்.

**மொத்தக் கேள்வியின் மெதுவான வளர்ச்சி**


மொத்தக் கேள்வியை குறைந்த மட்டத்தில் வைத்திருக்க வேண்டும்



என்பதை வற்புறுத்துகின்றவர்கள், பண நிரம்பலில் ஏற்படும் மிகையான அதிகரிப்பே பணவீக்கத்திற்குக் காரணம் என நம்புகின்றனர். நாணயத்தின் முன்னணி ஆதரவாளரான மில்டன் பிரீட்மன் "பணவீக்கம் எப்போதும் நாணயத் துறை சார்ந்த நிகழ்வு" என வாதிடுகின்றார். நாணயத்தின் வளர்ச்சி இல்லையெனில் பணவீக்கம் தொடர்ந்து இருக்கமுடியாது என்பதே அவரது வாதமாகும். இவரது கருத்துப்படி, நிரம்பல் பக்க பணவீக்கம் ஒரு தற்காலிக நிகழ்வு; அது குறுங்காலத்திற்கு மட்டும் இருக்க முடியும்; பணவீக்கத்திற்கான பிரதான காரணம் கேள்வி தூண்டல் பக்கத்திலிருந்தே எழுகின்றது; கேள்வித் தூண்டல் மிகையான பண நிரம்பல் வளர்ச்சியால் ஏற்படுகின்றது. பணச் சுருக்க இடைவெளியை நெருங்கக் கூடியதாக நாணயக் கொள்கைகளை நெறிப்படுத்தலாம் என்பதில் நாணயவாதிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மொத்தக் கேள்வியின் அதிகரிப்பு உயர்வாக இருப்பின், அது இடைவெளியை (வீக்க /சுருக்க) அண்மிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும். இதுவே வீக்க இடைவெளிக்கும், விலைகள் கூலிகளின் நெகிழ்வற்ற தன்மைக்கும் காரணமாக அமைகின்றது. எனவே, ஒரு நாணய விதியானது "பொருளாதார நிலையைப் பற்றிக் கவனத்திற் கொள்ளாத உறுதியானதும், மெதுவானதுமான பணநிரம்பல் வளர்ச்சியாக இருக்கவேண்டும்". இதுவரையில் நீண்டகாலத்தில் மெய்த் தேசிய உற்பத்தி 3 வீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தால் நாணய விதியும் பண நிரம்பல் வளர்ச்சி வீதத்தை 3 வீதத்திற்குக் கட்டுப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மொத்த நிரம்பலின் வேகமான வளர்ச்சி

பரிவர்த்தனைச் சமன்பாடு, பணவீக்கம் குறைவாக இருக்க ஏனையவை மாறாத நிலையில், வெளியீட்டு வளர்ச்சி வீதம் உயர்வாக இருக்கும் என்பதை எடுத்து விளக்குகின்றது. மெய் வெளியீடுகளின் வளர்ச்சியை அதிகரிப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பதில் சிலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். 1980 கள் வரை, பெரும்பாலான பொருளியலாளர்கள், நாணய இறைக் கொள்கைகள் தொடர்பாக கெயின்ஸினால் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் மீது கவனம் செலுத்தியிருந்தனர். 1980 களில் நிரம்பல் பக்க பொருளியலாளர்கள் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை தொடர்பாக புதிய அணுகுமுறைகளை முன்வைத்துள்ளனர். இவர்கள் மொத்த நிரம்பலில் ஏற்படும் மாற்றம், வேலைவாய்ப்பையும் பணவீக்கத்தையும் நிர்ணயிப்பதில் முக்கிய சக்தியாகச் செயற்படும் என்பதை வற்புறுத்துகின்றனர். மொத்த நிரம்பலில் ஏற்படும் மாற்றம், மொத்த நிரம்பல் கோட்டினை நகர்த்தும். கெயின்ஸியவாதிகள் கேள்விப் பக்க காரணிகளை வலியுறுத்துவதன் மூலம், தேக்க வீக்கத்தை நீக்கக்கூடிய நிரம்பல்-பக்கக் கொள்கைகளை நிராகரிக்கின்றனர் என நிரம்பல் வாதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நிரம்பல் பக்க பொருளியல் சித்தாந்தப் பள்ளி பின்வரும் அம்சங்களை பொருளியலில் வற்புறுத்துகின்றது. வேலை செய்வதற்கும் சேமிப்பதற்கும் மக்களைத் தூண்ட வேண்டும் ; கேள்வி முகாமையின் பங்களிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை. மெதுவான பொருளாதார வளர்ச்சி, மெதுவான உற்பத்தித் திறன் வளர்ச்சி என்பவற்றை மாற்றியமைப்பதற்கு பாரிய வரி வெட்டுக்கள் செய்யப்படுதல் வேண்டும். ஆர்தர் லாபர், மார்ட்டின் பெல்ட்ஸரீன் போல் கிராக் ரொபெர்ட்ஸ் ஆகியோர் இக்கொள்கைகளின் முக்கிய ஆதரவாளர்களாவர். 1979-1990 க்கு இடைப்பட்ட காலத்தில், அமெரிக்காவில் ரீகனாலும் இங்கிலாந்தில் மார்கரட் தட்சராலும் நிரம்பல் பக்க பொருளாதாரம் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. நிரம்பல் பக்க பொருளியலாளர்கள், நிரம்பல் பக்க நடைமுறைகளுக் கூடாக வெளியீட்டு வளர்ச்சியில் வணிசமான அளவு அதிகரிப்பினைக் கொண்டு வர முடியும் என்பதில் அக்கறை கொண்டுள்ளனர். இவர்களது கருத்துப்படி விருத்திமுறை வரி, மக்களின் நாட்டத்தை வேலை செய்வதிலிருந்தும், முதலீடு செய்வதிலிருந்தும் குறைத்து விடுகின்றது. வரி வீதம் குறைக்கப்பட்டால், பொருளாதாரத்தில் தூண்டுதல்கள் இருப்பதால், கூடுதலான மெய் வெளியீடுகள் உற்பத்தி செய்யப்படும்; வரிக் குறைப்பால் அரசாங்கம் உயர்வரி வருவாயைப் பெற்றுக் கொள்ளும்; இறுதியாக, இவ்விரு செயற்பாடுகளும் சேர்ந்து பணவீக்கத்தைக் குறைப்பதற்கு உதவும். மெய் வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு பொருட்கள் சேவைகளின் நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தும்; வரி வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையைக் குறைக்கும். ஒழுங்குபடுத்தல் என்ற வகையில் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிட்டால், அது உற்பத்தித் திறன், செலவு என்பவற்றின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் நிரம்பல்வாதிகள் வலியுறுத்துகின்றனர். இவ்வாறான பாதகமான விளைவுகளை பொருளாதாரத்தில் ஏற்படவிடாது தடுப்பதற்கு நிரம்பல்வாதிகள் பின்வரும் சிபார்சுகளை முன்வைக்கின்றார்கள். ஒழுங்கு விதிகளைத் தளர்த்தல், அரசாங்க அதிகாரவர்க்க கெடுபிடியி லிருந்து உற்பத்தியாளரை விடுவித்தல், தனியார்-கூட்டு வருமான வரிகளைக் குறைத்தல் என்பனவாகும்.

## நேரடி அரசாங்க தலையீடு

பொருளியலாளர் அல்லாத பலருக்கு பணவீக்கததைக் குறைப்பதற்கான பரிகாரம் மிக எளிதானதாகும். கூலிகள், விலைகள் உயர்வடைந்து சென்றால், அவ்வாறு உயர்வடைவதிலிருந்து தடுப்பதற்கு சட்டத்தை அமுல்படுத்தினால் போதுமானது; ஆனால், பொருளியல் நடைமுறைகளின்படி இப்பரிகாரம் இலகுவானதல்ல. பல பொருளியலாளர்கள் கூலி-விலைக் கட்டுப்பாடு அல்லது வருமானக் கொள்கைக்கு ஆதரவு வழங்குவதில் தயக்கம் காட்டுகின்றனர். சில சமயங்களில், கட்டுப்பாடுகள் மிகக் கூர்மையானவையாகவும் இறுக்கமானவையாகவும் அமையலாம். குறிப்பாக, அனைத்துக் கூலிகளும் விலைகளும் உறைந்து போயுள்ள நிலையில், மாற்றத்திற்கு இடமளிக்காத நிலையில் இக்கட்டுப்பாடுகள் இறுக்கத் தன்மையுடையவையாக அமையலாம். ஏனைய நேரங்களில், விலை, கூலி மாற்றங்களுக்கான பிரேரணைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அல்லது நிராகரிக்கப்படுவதற்கு உததியோக ரீதியாக சில அதிகாரங்கள் வழங்கப் பட்டிருக்கலாம்.

கூலி, விலைக் கட்டுப்பாடுகள், திட்டமிட்ட பொருளாதாரத்தின் கீழ் ஒரு நிலையான அம்சத்தைப் பெறும். அதற்குக் காரணம் இப் பொருளாதாரங்களின் முதன்மைத் துறைகள் வழமையான கட்டுப்பாடுகளின் கீழ் செயற்பட்டு வருவதாகும். சந்தைப் பொருளாதாரங்களில் அரசாங்க செலவுகள் பாரியளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் - குறிப்பாக போர்க் காலங்களில் - கூலிகள், இலாபங்கள், விலைகள், வெளியீடுகள் என்பவற்றின் மீது அரசாங்கம் நேரடிக் கட்டுப்பாட்டை மேற்கொள்கின்றது. சமாதான காலத்தில் ஸ்கண்டிநேவியா, நெதர்லாந்து மற்றும் சில இடங்களில் கூலி - விலைக் கட்டுப்பாடுகள் அமுல் படுத்தப்பட்டுள்ளன. 1960 களிலும், 1970 களிலும் ஐ.அமெரிக்கா குடியரசுக் கட்சி நிர்வாகத்திலும் ஜனநாயகக் கட்சி நிர்வாகத்திலும் கூலி-விலை வழிகாட்டு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. 1971 இல் ஜனாதிபதி நிக்ஸன் மிக மோசமான சென்மதி நிலுவைப் பிரச்சினையையும், பணவீக்கப் பிரச்சினையையும் எதிர்நோக்கிய போது அனைத்து கூலிகள், விலைகள் மீதும் ஒரு 90 நாள் உறைந்த நிலையை செயற்படுத்தினார். இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னர், விலை மட்டம் மேல் நோக்கிப் பாய்ந்தது; கட்டுப்பாடுகள் பண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீக்கத்தை அமுக்கியதேயொழிய, அதனைத்தடுத்து நிறுத்தவில்லை என்ற முடிவினையே இதனை அவதானித்தவர்கள் தெரிவித்தனர்.- உண்மையில், இக்கட்டுப்பாடுகள் ஒரு போதும் பயன்படுத்தப்படாதிருந்தால், முன்னெப்போழுதும் இல்லாத அளவுக்கு விலைகள் உயர்வடைந்து, உற்பத்தி குறைவடைந்து, பொருளாதாரம் சீருகுலைந்திருக்கும் என்பதைப் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

திறமையான மூலவள ஒதுக்கீட்டிற்கான இடையூறுகளை நீக்க வேண்டும் என்பதில் அனைத்து பொருளியலாளரும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். சிறந்த மூலவள ஒதுக்கீட்டுக்கு வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் பல தடைகள் உள்ளன. குறைந்தபட்ச கூலிச் சட்டம், ஒழுங்குபடுத்தல் முகவர்கள் மூலம் விலையைத் தீர்மானித்தல், தீர்வைகள், கோட்டாக்கள், மானியங்கள் போன்ற வர்த்தகத் தடைகள் என்பன மிகவும் சர்ச்சைக்குரிய தடைகளாகும்.

## இலங்கையில் பணவீக்கம்

**இலங்கையின் பொது விலை மட்டத்திற்கான குறிகாட்டிகள்**

இலங்கையின் பொது விலை மட்ட மாற்றத்தின் போக்கையும் பரிமாணத்தையும் மூன்று குறிகாட்டிகளிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொநுவிசு), மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (மொவிசு) உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கச் சுருக்கி (மொஉஉசு). பொருளாதாரத்தின் விலை மாற்றத்தை மதிப்பிடுவதற்கான உத்தியோகபூர்வ சுட்டெண்ணாக கொநுவிசு பயன்படுத்தப்படுகின்றது. இது ஒரு சில்லறை விலைச் சுட்டெண்ணாக விபரிக்கப்படுகிறது. இது கொழும்பு நகரில் வாழும் உழைக்கும் வர்க்க குடும்பங்களில் 190 குடும்பங்களின் நுகர்வு மாதிரியை எடுத்து, அவற்றுக்கு ஒரு நிறையை வழங்கிக் கணிப்பிடப்படுகின்றது. இது 1949 - 50 ஆம் ஆண்டுக் காலத்தின் குடும்ப வரவு-செலவுத் திட்ட மாதிரியைப் பின்பற்றிக் கணிப்பிடப்படுகின்றது.

கொநுவிசு பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது; முக்கியமாக நுகர்வோர் விலைகளின் அசைவுகளை மதிப்பிடுவதில் பல குறைபாடுகளட உள்ளன. இச்சுட்டெண் நம்பகத்தன்மை உடையதாக விளங்க வேண்டுமானால் சுட்டெண் கணப்பீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற பொருட்களின் சட்டையில் தர ரீதியாகவும், தொகை ரீதியாகவும் ஏற்படும் மாற்றங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும், அடிப்படையாண்டிலிருந்து விலகிச் செல்லச் செல்ல சுட்டெண்ணின் யதார்த்தத் தன்மையும் குறைவடைகின்றது. 1950 ஆம் ஆண்டிலிருந்து மக்களின் நுகர்வுப் பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்பட்டு வருவதால், நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகளிலும் முக்கிய மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. காலாவதியாகிய நிறையூட்டலின் விளைவாக, தற்போதைய நுகர்வுச் செலவில் அதிகரிப்பினை ஏற்படுத்தக் கூடிய கல்வி, போக்குவரத்து என்பன சுட்டெண் கணிப்பீட்டில் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தையே பெறுகின்றன. மேலும், வாடகைப் பெறுமதியின் மாற்றத்தை மதிப்பிடுவதில் உள்ள சிக்கல்களினால், சுட்டெண்ணில் வீட்டு வசதி பற்றிய பிரிவு குறிப்பிட்ட காலத்திற்கு நிலையாகவே வைத்திருக்



அட்டவணை 3

இலங்கையில் பொது விலைமட்ட அளவீடுகள் 1960 - 1994

| ஆண்டு | கொநுவிசு சுட்டெண் | % | பாகொநுவிசு சுட்டெண் | % | மொவிசு சுட்டெண் | % | மொஉஉசு சுட்டெண் | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1960 | 103.5 | - | - | - | - | - | 17.1 | - |
| 1961 | 104.8 | 1.3 | - | - | - | - | 16.8 | -1.7 |
| 1962 | 106.3 | 1.4 | - | - | - | - | 16.6 | -1.4 |
| 1963 | 108.8 | 2.3 | - | - | - | - | 16.9 | 1.7 |
| 1964 | 112.2 | 3.1 | - | - | - | - | 16.9 | 0.5 |
| 1965 | 112.5 | 0.3 | - | - | - | - | 17.0 | 0.1 |
| 1966 | 112.3 | -0.2 | - | - | - | - | 16.8 | -0.8 |
| 1967 | 114.8 | 2.2 | - | - | - | - | 17.2 | 2.3 |
| 1968 | 121.5 | 5.8 | - | - | - | - | 18.9 | 10.1 |
| 1969 | 130.5 | 7.4 | - | - | - | - | 19.7 | 4.2 |
| 1970 | 138.2 | 5.9 | - | - | - | - | 20.4 | 3.5 |
| 1971 | 141.9 | 2.7 | - | - | - | - | 20.7 | 1.5 |
| 1972 | 150.8 | 6.3 | - | - | - | - | 21.5 | 3.7 |
| 1973 | 165.4 | 9.7 | - | - | - | - | 29.0 | 34.8 |
| 1974 | 185.8 | 12.3 | - | - | 100.0 | - | 36.7 | 26.4 |
| 1975 | 198.3 | 6.7 | - | - | 103.4 | 3.4 | 39.3 | 7.3 |
| 1976 | 200.7 | 1.2 | - | - | 111.9 | 8.2 | 41.7 | 5.9 |
| 1977 | 203.2 | 1.3 | - | - | 135.3 | 20.9 | 49.5 | 18.8 |
| 1978 | 227.8 | 12.1 | - | - | 156.7 | 15.8 | 53.2 | 7.5 |
| 1979 | 252.3 | 10.8 | - | - | 171.6 | 9.5 | 61.6 | 15.8 |
| 1980 | 318.2 | 26.1 | - | - | 229.5 | 33.7 | 72.0 | 16.9 |
| 1981 | 375.4 | 18.0 | - | - | 268.5 | 17.0 | 87.8 | 22.0 |
| 1982 | 416.1 | 10.9 | - | - | 283.3 | 5.5 | 100.0 | 13.9 |
| 1983 | 474.2 | 14.0 | - | - | 358.1 | 25.0 | 114.7 | 14.7 |
| 1984 | 553.1 | 16.6 | - | - | 444.7 | 25.6 | 134.7 | 17.5 |
| 1985 | 561.2 | 1.5 | - | - | 377.1 | -15.2 | 135.8 | 0.7 |
| 1986 | 606.0 | 8.0 | - | - | 366.0 | -2.9 | 143.3 | 5.5 |
| 1987 | 652.8 | 7.7 | - | - | 414.9 | 13.4 | 153.0 | 6.8 |
| 1988 | 744.1 | 14.0 | - | - | 488.7 | 17.8 | 170.6 | 11.5 |
| 1989 | 830.2 | 11.6 | 100 | - | 532.9 | 9.0 | 187.1 | 9.7 |
| 1990 | 1008.2 | 21.4 | 124.6 | 24.6 | 651.1 | 3.4 | 224.6 | 20.0 |
| 1991 | 1131.5 | 12.2 | 138.9 | 11.5 | 710.8 | 9.3 | 249.6 | 11.1 |
| 1992 | 1260.4 | 11.4 | 152.0 | 9.4 | 773.0 | 8.7 | 274.[illegible] | 10.0 |
| 1993 | 1408.4 | 11.7 | 164.8 | 8.4 | 831.8 | 7.6 | 301.2 | 9.7 |
| 1994 | 1527.4 | 8.4 | 172.6 | 4.7 | 873.4 | 5.0 | 328.6 | 9.1 |

கொநுவிசு = கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், 1952 = 100

பாகொநுவிசு = பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஜன.-ஜூன் 1989 = 100

மொவிசு = மொத்த விலைச்சுட்டெண், 1974 = 100

மொஉஉசு = மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கி (உள்ளடக்க விலைச் சுட்டெண்) 1982 = 100

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகின்றது. கொநுவி சுட்டெண்ணில் கோதுமை மா, பாண் என்பவற்றுக்கு உயர் நிறை வழங்கப் பட்டதன் காரணமாக, இவற்றின் விலைகளில் ஏற்படும் மாற்றத்தினால் இச்சுட்டெண் மிக விரைவில் தளம்ப லடைகின்றது. சில்லறை விலைகளில் அமைந்த இச்சுட்டெண்ணுக்கான விபரம் கொழும்பு நகரை மையமாகக் கொண்ட குடும்பங்களிலிருந்தே திரட்டப்படுகிறது. ஆனால், பெருமளவான மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கிறார்கள். அத்துடன் கூலித் தொழிலாளி என்ற வகைக்குள்ளும் அவர்கள் அடங்கவில்லை (நிக்கலஸ், 1990). எனவே, ஒரு திருப்திகரமான நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பது, பிரதிநிதித்துவம் செய்யும் குடும்பங் களின் வரவு செலவுத் திட்டத்திலும், நுகர்வுச் செலவுக்காக் கொடுக்கப் படுகின்ற சரியான நிறையிலும் ஒரு திருப்திகரமானதும், யதார்த்தமானது மான விலைத் தொகுப்பு முறையிலும் தங்கியுள்ளது.

பொது விலைமட்டத்தின் மிகவும் யதார்த்தமான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி 1974 ஆம் ஆண்டிலிருந்து மொவி சுட்டெண் முறையை நிர்வகித்து வருகின்றது. இச்சுட்டெண் சில்லறை விலை என்பதை விட, ஆரம்பச் சந்தை விலையையே அளவீடாகக் கொள் கின்றது. மொவிசு உள்ளடக்கும் பண்டங்கள் கொநுவி சுட்டெண் உள்ளடக்கும் பண்டங்களை விடக் கூடுதலானவை. அதாவது, நுகர்வுப் பொருட்களுக்கும் மேலாக நடுத்தர, முதலீட்டுப் பொருட்களையும் அது உள்ளடக்கியுள்ளது. சுட்டெண்களைத் தொகுப்பதற்கான நிறைகள், 1974ஆம் ஆண்டின் இறக்குமதியையும், உள் நாட்டு உற்பத்தியையும் கூட்டிய மொத்தப் பெறுமதியின் உற்பத்திப் பங்கின் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளன. சர்வதேச ரீதியாக வர்த்தகப் பொருட்கள் கொநுவி சுட்டெண்ணில் உள்ளதைக் காட்டிலும் மொவி சுட்டெண்ணில் உயர் நிறைகளைப் பெறுகின்றன.


1974 இலிருந்து உற்பத்தி வர்த்தக அமைப்புக்களில் மாற்றம் ஏற்பட்டுவந்த போதும், மொவிசு இவை தொடர்பாகக் கொண்டுள்ள நிறைகளை திருத்தியமைத்துக் கொள்ள வில்லை. இதனால் பணவீக்க அமுக்கத்தின் ஒரு குறிகாட்டி என்ற முறையில் இச்சுட்டெண்ணின் நம்பகத்தன்மை பலவீனமடைகின்றது. இருந்தபோதிலும், சுட்டெண் உள்ளடக்கும் பண்டங்களின் வகைகள், அது கணிப்பிடுகின்ற விலைகள் பல்வேறு பண்ட வகைகளுக்கு அது வழங்கும் நிறைகள் என்பவற்றின் அடிப்படையில் கொநுவி சுட்டெண் ணுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. இது கூடுதலான அளவிற்கு சரியானதாகவும் பணவீக்க காலத்தில் உடனடியாக அதனைப் பிரதிபலிக்கக் கூடியவகையிலான தன்மையைக் கொண்டுள்ளதாகவும் விளங்குகின்றது. பெரும்பாலும் உற்பத்திச் செலவுச் சுட்டெண் என்று சிறப்பாக விபரிக்கப் படுகின்றது.

அட்டவணை 4

தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளில் பணவீக்க விகிதங்கள்

| நாடு | 1990 | 1992 |
|---|---|---|
| அபிவிருத்தியடைந்த : | | |
| ஐ.இ. | 9.5 | 3.7 |
| ஐ.அ. | 5.4 | 3.0 |
| ஜப்பான் | 3.1 | 1.8 |
| ஜேர்மனி | 2.7 | 4.1 |
| 'NIC' நாடுகள் : | | |
| சிங்கப்பூர் | 3.5 | 2.3 |
| தாய்வான் | 4.1 | 4.5 |
| கொரியா | 8.6 | 6.2 |
| வளர்முக : | | |
| இலங்கை | 21.5 | 11.4 |
| மலேசியா | 2.6 | 4.4 |
| தாய்லாந்து | 6.0 | 4.1 |
| இந்தியா | 9.0 | 11.7 |
| பாகிஸ்தான் | 9.0 | 9.5 |
| பங்களாதேஷ் | 8.1 | 4.3 |
| பிரேஸில் | 2928.4 | 868.0 |
| ஆர்ஜன்டீனா | 2311.3 | 24.9 |
| மெக்சிக்கோ | 26.7 | 15.5 |

இந்த மூன்று சுட்டெண்களிலும் உயர் அளவில் பண்ட உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பது மொஉஉசு ஆகும். இது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்துப் பொருட்கள், சேவைகளையும் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதிக்கு அவை வழங்குகின்ற பங்களிப்பின் அடிப்படையில் நிறையளிக்கப்பட்டுக் கணிப்பிடப்படுகின்றது. எண்ணக் கரு என்ற அடிப்படையில் பார்க்கும் போது இது ஒரு சிறந்த சுட்டெண்ணாகும். இது இறக்குமதி விலைகளில் ஏற்படும் மாற்றங்களை நேரடியாகப் பிரதிபலிப்பதில்லை. கொநுவி சுட்டெண் குறைபாடுகளைக் கொண்டிருப்பதால், 1989 இல் குடித்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களம், அதற்கு மாற்றீடாக




பாரிய கொழும்பு விலைச்சுட்டெண் (பாகொவிசு) முறையை அறிமுகம் செய்துள்ளது. இச்சுட்டெண் மிகவும் யதார்த்தமான சுட்டெண்ணாகக் கணிப்பிடக்கூடிய வகையில், சில்லறை விலைகளின் அடிப்படையில் பொது விலைமட்டத்தை மதிப்பீடு செய்கின்ற சுட்டெண்ணாகவும் அதே நேரம் புதுப்பிக்கப்பட்ட நிறைகளின் அடிப்படையில் கணிப்பிடப் படுவதாகவும், புவியியல் அடிப் படையில் பரந்த அளவில் நுகர்வோரை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றது. இச்சுட்டெண் ணுக்கான நிறையிடல், சமூகத்தின் அடிமட்ட 40% தினரின் செலவு அமைப்பை அடிப்படையாகக் கொண் டுள்ளது. பாரிய கொழும்பு பிரதேசத்தில் செலவு மூலம் வரிசைப் படுத்தும் போது, 1985/ 86 இல் குடித்தொகை, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஊழியர் படை, சமூக பொருளாதார ஆய்வில் வெளிப்படுத்தியவாறு மேற்கொள்ளப்படுகின்றது. பாகொவிசு இன்னமும் கொநுவி சுட்டெண்ணுக் கான உத்தியோகபூர்வ பிரதியீடாக மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், தொடர்ந்து கணிப்பிடப்பட்டு, கொநுவி சுட்டெண்ணுடன் சேர்த்து வெளியிடப்படுகிறது.

### பணவீக்கப் போக்குகள்

அட்டவணை 3, 1960-94 காலப்பிரிவில் இலங்கையின் பொது விலைமட்டம் பற்றி கிடைக்கக் கூடிய அளவீடுகளை எடுத்து விளக்குகிறது. 1950 கள் முழுவதும் ஓரளவு உறுதியாக இருந்த பொது விலை மட்டம், 1960 களிலிருந்து அதிகரிக்க ஆரம்பித் துள்ளது. 1974 இல் மத்திய வங்கியால் மொவிசு தயாரிக்கப்படும் வரை, பொது விலை மட்டத்தை அளவிடுவதற்குக் கிடைத்த அளவீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களாக கொநுவி சுட்டெண்ணும், மொஉஉ சுட் டெண்ணுமே விளங்கின. 1950 களில் கொநுவி சுட்டெண்ணில் ஏற்பட்ட வருடாந்த அதிகரிப்பு 0.77% ஆகும். இது 1960-1966 காலப் பகுதியில் 0.95% ஆகவும், 1967/1978 காலப் பகுதியில் 6.56% ஆகவும் உயர்வடைந்துள்ளது. ஆனால், மொஉஉசு கணிப்பீட்டின்படி 1966 வரை பொது விலை மட்டம் ஓரளவு உறுதியாகவே இருந்து, 1967-1978 காலப் பகுதியில் 8.81 % உயர்ச்சியைக் கொண்டிருந்தது. மொவிசு 1974-1978 காலப் பகுதியில் 13.2% அதிகரித் திருந்தது.

1971-1977 காலப் பகுதிக்கான பணவீக்கம் பற்றிய தரவில் கொநுவி சுட்டெண்ணுக்கும் மொஉஉ சுருக்கிக் குமிடையில் குறிப்பிடக் கூடியளவு வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இக் காலப் பகுதியில் மொஉஉ சுருக்கியினதும் கொநுவி சுட்டெண்ணினதும் சராசரி வருடாந்த அதிகரிப்பு 11.9% ஆக இருந்துள்ளது. வேறுபட்ட தரவுகளைக் கொண்டிருப் பதற்குக் காரணம், கொநுவிசு பெருமளவில் மானியப் படுத்தப்பட்ட விலைகளையுடைய அல்லது கட்டுப் பாட்டு விலைகளை யுடைய பொருட்களுக்குக் கூடுதலான நிறை கொடுக்கப்பட் டமையாக இருக்கலாம். கொநுவிசு, மொஉஉசு பற்றிய 1978 ற்குப் பிற்பட்ட ஆய்வுகளின்படி, இவ்விரண்டும் நெருக்கமான இணைப்பினைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. மொவி சுட்டெண்ணும், இவ்விரண்டையும் போலவே ஒரே திசையில் சென்று கொண்டிருந்தது; ஆனால், அதிகளவு தளம்பிச் சென்றுள்ளது. கொநுவிசு, மொஉஉசு என்பவற்றில் 1978 ற்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இறக்குமதி விலைகளும் உள்நாட்டு நிர்வாக விலைகளும் காரணமாக இருக்க, மொவிசு மாற்றத்திற்கு இறக்குமதி, ஏற்றுமதி விலைகள் காரணமாக உள்ளன.

1977 ற்கு முன்னர் விலைக் கட்டுப்பாட்டினாலும், பங்கீட்டுக் கொள்கையினாலும் பணவீக்கம் அமுக்கப்பட்டிருந்த போது, விலை அதிகரிப்புக்களும் மிதமானவையாக இருந்தன. 1971 - 77 காலத்தில் 5.7% ஆக இருந்த பணவீக்க நிலையுடன் ஒப்பிடும் போது, 1978 ற்குப் பின்னர் இரண்டு இலக்கங்களில் பணவீக்கம் அதிகரிக்கலாயிற்று. 1978-84 வரையுள்ள ஏழு ஆண்டுக் காலப் பகுதியில் கொநுவி சுட்டெண்ணின் வருடாந்த வளர்ச்சி 15.5% ஆக இருந்ததுடன், 1980 இல் மட்டும் மிக உயர்ந்த 26.1% வளர்ச்சி ஏற்பட்டது. 1977 இல் 1.2% மாக இருந்த பணவீக்கம், அடுத்த ஆண்டில் 12.1% ஆக அதிகரித்தது. 1974ஆம் ஆண்டு நீங்கலாக, இதுவே இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு இலக்கத்தில் பணவீக்கம் அதிகரித்த காலமாக உள்ளது. 1985-87 காலத்தில் பணவீக்கம் 5.7% ஆகக் குறைவடைந்து, மீண்டும் 1988 இலிருந்து மேல்நோக்கி உயர்வடைந்து சென்றது. இதற்குக் காரணம் அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டங்களை இலங்கை நடைமுறைப் படுத்த முன் வந்தமையாகும். 1990 இல் மிகக் கூடிய பணவீக்கமாக 21.4% பதியப்பட்டுள்ளது. இந்த விலை யுயர்வுக்கான காரணங்களில் ஒன்று நிர்வாக விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். 1990 ஜனவரியில் உர மானியம் நீக்கப்பட்டமை, ஆண்டு பிற்பகுதியில் வளைகுடா யுத்தம் காரணமாக எண்ணெய் விலைகள் அதிகரித்தமை என்பன நாட்டின் பொது விலை மட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, கொநுவிசு உயர்விற்கு வழிவகுத்துள்ளன. ஆனால், 1990 ற்குப் பின்னர் மீண்டும் பணவீக்க வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு, 1994 இல் கொநுவிசு 8.4% ஆக குறைவடைந் துள்ளது. எனினும், இலங்கையின் பண வீக்கம் சர்வதேச மட்டத்திலும், ஆசிய மட்டத்திலும் கூட இன்னமும் உயர்ந்த தாகவே உள்ளது (அட்டவணை 4 ஐப் பார்க்க).

அட்டவணை 5

ரூபாவின் வெளிநாட்டு பெறுமதி

1978 - 1994

| காலம் | அ.டொலர் விகிதம் ரூபாவில் | பெதாசெவிசு 1978 = 100 |
|---|---|---|
| இறுதி 1977 | 15.56 | - |
| இறுதி 1978 | 15.50 | 95.64 |
| இறுதி 1979 | 15.44 | 97.44 |
| இறுதி 1980 | 18.00 | 81.89 |
| இறுதி 1981 | 20.55 | 80.03 |
| இறுதி 1982 | 21.32 | 87.43 |
| இறுதி 1983 | 25.00 | 77.19 |
| இறுதி 1984 | 26.28 | 80.92 |
| இறுதி 1985 | 27.40 | 68.58 |
| இறுதி 1986 | 28.52 | 60.03 |
| இறுதி 1987 | 30.76 | 49.74 |
| இறுதி 1988 | 33.03 | 46.07 |
| இறுதி 1989 | 40.00 | 44.89 |
| இறுதி 1990 | 40.24 | 36.73 |
| இறுதி 1991 | 42.58 | n.a. |
| இறுதி 1992 | 46.00 | n.a. |
| இறுதி 1993 | 49.56 | n.a. |
| இறுதி 1994 | 49.98 | n.a. |

பெதாசெவிசு = பெயரளவு தாக்கமான செலாவணி விகித சுட்டெண் ஒவ்வொரு வருடத்தினதும் கடைசிக் காலாண்டுக்கான பெறுமதிகளை காட்டுகிறது.

1978 ற்கு முன்னைய கால குறைந்த வீத பணவீக்கத்துக்கு உள்நாட்டு விலைக் கட்டுப்பாடுகள், ரப்பு ரீதியில் உறுதியாக இருந்த செலாவணி விகிதம் மற்றும் உற்பத்தி, நுகர்வு என்பவற்றின் மீதான மானியங்கள் என்பன காரணமாகக் கூறப்பட்டு வந்தன. 1970 களின் முற்பகுதியில், கட்டுப்பாடுகளுடன் கூடிய உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கையை இலங்கை கடைப் பிடித்தது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்த அதே வேளையில், ஏனைய பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு அமுலில் இருந்தது. இக்காலத்தில் நிர்வாக ரீதியான விலைகளில் பணவீக்கம் குறைவாக இருந்த போதும், சில வகைப் பண்டங்களுக்கு நிரம்பல் குறைவாக இருந்தமையால், அவ்வகைப் பண்டங்கள் தொடர்பாக கறுப்புச் சந்தை தோன்றலாயிற்று. 1977 இன் பிற்பகுதியில் ஒருமைப்படுத்தப்பட்ட, பெறுமதி இறக்கம் செய்யப்பட்ட செலாவணி விகிதம், விலைக் கட்டுப்பாட்டு நீக்கம், இறக்குமதி தாராளமயம், வட்டிவீத சீர்திருத்தம், வரவு செலவுத்திட்ட சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கியதாக பொருளாதார சீர்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டதும், அது வெளிவாரி காரணிகளால் இலகுவில் ஊறுபடத்தக்கதாக மாற்றமடைந்தது. கட்டுப்பாடுகளும், மானியங்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6

அரசாங்க நிதிச் செயற்பாடுகள் 1978-1994 (மொ.உ.உ யின் விகிதமாக)

| வருடம் | வசெதி பற்றாக்குறை | வசெதி ஐ நிதிப்படுத்தல்: வெளிநாட்டு கொடைகள் | வெளிநாட்டு கடன்கள் | உள்நாட்டு கடன: வங்கித் துறை | வங்கியல்லாத துறை |
|---|---|---|---|---|---|
| 1978 | 16.8 | 1.5 | 7.7 | 0.4 | 4.4 |
| 1979 | 16.8 | 2.6 | 5.4 | 1.2 | 6.7 |
| 1980 | 24.5 | 3.9 | 6.2 | 10.7 | 3.7 |
| 1981 | 17.3 | 3.2 | 6.4 | 4.5 | 3.2 |
| 1982 | 17.4 | 3.4 | 4.8 | 3.7 | 5.6 |
| 1983 | 13.4 | 2.9 | 5.2 | 0.4 | 5.0 |
| 1984 | 9.0 | 2.1 | 4.2 | -1.4 | 4.0 |
| 1985 | 11.7 | 2.0 | 4.4 | 2.9 | 8.2 |
| 1986 | 12.2 | 2.1 | 5.1 | 1.7 | 6.8 |
| 1987 | 11.1 | 2.4 | 2.9 | 1.8 | 7.6 |
| 1988 | 15.7 | 3.0 | 3.2 | 4.6 | 4.9 |
| 1989 | 11.2 | 2.5 | 2.4 | -1.6 | 7.6 |
| 1990 | 9.9 | 2.1 | 3.6 | 0.1 | 4.1 |
| 1991 | 11.6 | 2.1 | 5.2 | - | 4.3 |
| 1992 | 7.3 | 1.9 | 1.7 | -0.5 | 4.2 |
| 1993 | 8.4 | 1.6 | 2.0 | -1.2 | 6.0 |
| 1994 | 10.0 | 1.4 | 2.0 | 0.2 | 6.4 |

*ஆதாரம் : மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்.*



*படிப்படியாகக் குறைக்கப்பட்டன. 1978 ற்கும் 1980 ற்கும் இடைப்பட்ட காலத்தில் பணவீக்க அளவீடுகளான அனைத்து முதன்மை விலைச் சுட்டெண்களும் தீவிரமாக அதிகரித்திருந்தன.*

### இலங்கையில் பணவீக்க காரணிகள்

*1978 ற்குப் பின்னர் இலங்கையின் பணவீக்க செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்த காரணிகளை (1) நிரம்பல் பக்க காரணிகள்; (2) கேள்விப் பக்க காரணிகள் என இரண்டாக வகுக்கலாம்.*

### நிரம்பற் காரணிகள்

*"1978 ற்குப் பிந்திய பணவீக்கத்திற்கான முதன்மை உந்து சக்திகளாக நிரம்பல் பக்க காரணிகளைக் கூறலாம். ஓரளவுக்கு ரூபாய் பெறுமதியிறக்கத்தின் வெளிவாரி விலையுயர்வுகள், குறிப்பிட்ட சில முக்கிய நிர்வகிக்கப்பட்ட விலைகளின் சீராக்கம் மற்றும் தாராளமயமாக்கம் என்பன இக்காரணிகளாகும்". இக் காலத்தில் நுகர்வோர் விலைச் சுட்டிகள் இரண்டு முக்கிய காரணிகளால் பாதிக்கப்பட்டிருந்தன: முதலாவது, இச்சுட்டிகள் நிர்வகிக்கப்பட்ட விலைகளில் கணிசமான அளவிலான அதிகரிப்பை பிரதிபலிக்கின்றன. நுகர்வோர் விலை மானியங்களை நீக்கி விடும் நோக்கிலேயே இந்த*

அதிகரிப்புக்கள் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டன. அதே வேளையில், பின்னர் ஏற்பட்ட சர்வதேச விலையதிகரிப்புக்களையும், செலாவணி விகித பெறுமதியிறக்கத்தையும் அடுத்து மேலும் அசைவுகள் ஏற்படுத்தின. இரண்டாவதாக, இலங்கையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வகையில் சர்வதேச விலைகள் அதிகரித்துள்ளன. விலைச் சுட்டெண்ணின் அரைப்பங்கு பொருட்கள் வர்த்தகப் பொருட்களாக உள்ளதால் சர்வதேச விலைகளிலும், செலாவணி வீதத்திலும் ஏற்படும் மாற்றங்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாதபடி தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொருளாதார சீர்திருத்தம் 1977 இல் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து அரசாங்கம் மானியங்களை பரந்தளவில் குறைக்க ஆரம்பித்ததுடன், நிர்வகிக்கப்பட்ட விலைகளிலிருந்து விலகி, சந்தை விலைகளின் அடிப்படையில் பொருளாதாரம் இயங்குவதற்கும் அனுமதித்தது. வருமான வரி செலுத்துகின்ற ஒரு சிறு பகுதியினரைத் தவிர சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வழங்கப்பட்டு வந்த இலவச பங்கீட்டரிசி வழங்கும் திட்டம், உணவு மானியம் என்பன மீளமைக்கப்பட்டன. இதன் விளைவாக, குறிப்பிட்ட ஒரு வருமான மட்டத்திற்குக் கீழ் உள்ளவர்களுக்கு

அட்டவணை 7

இலங்கையில் நாணயத் துறை வளர்ச்சி (காலப் பிரிவு முடிவில் - ஆண்டொன்றுக்கு சதவீதம்)

| வருடம் | குறுகிய பணம் $(M_1)$ | விரிந்த பணம் $(M_2)$ | வருடம் | குறுகிய பணம் $(M_1)$ | விரிந்த பணம் $(M_2)$ |
|---|---|---|---|---|---|
| 1960 | 2.6 | 13.2 | 1978 | 10.6 | 25.0 |
| 1961 | 6.5 | 4.1 | 1979 | 29.2 | 38.2 |
| 1962 | 4.3 | 0.3 | 1980 | 22.9 | 31.9 |
| 1963 | 12.1 | 12.9 | 1981 | 6.3 | 23.1 |
| 1964 | 7.7 | 8.5 | 1982 | 17.3 | 24.8 |
| 1965 | 5.7 | 6.5 | 1983 | 25.4 | 22.1 |
| 1966 | -3.3 | -1.7 | 1984 | 14.1 | 16.6 |
| 1967 | 9.0 | 11.2 | 1985 | 11.5 | 11.5 |
| 1968 | 5.8 | 9.2 | 1986 | 12.9 | 5.1 |
| 1969 | -1,6 | 4.7 | 1987 | 18.4 | 14.7 |
| 1970 | 4.5 | 9.2 | 1988 | 29.1 | 16.5 |
| 1971 | 9.3 | 10.3 | 1989 | 9.1 | 12.5 |
| 1972 | 15.4 | 15.7 | 1990 | 12.8 | 19.1 |
| 1973 | 12.0 | 4.9 | 1991 | 18.0 | 23.2 |
| 1974 | 6.0 | 10.0 | 1992 | 7.3 | 16.6 |
| 1975 | 4.9 | 4.1 | 1993 | 19.0 | 23.5 |
| 1976 | 34.9 | 32.9 | 1994 | 19.0 | 19.6 |
| 1977 | 28.8 | 37.9 | | | |

*ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுமே உணவு மானியம் வரையறுக்கப்பட்டதால் பயன்பெறுநரின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைவடைந்தது. அதன் பின்னர், நிலையான பணப் பெறுமதியுடன் கூடிய உணவு முத்திரைத் திட்டமாக அது மாற்றப்பட்டது. வேறும் பல மானியங்கள் – குறிப்பாக போக்குவரத்து, உரம், பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றின் மீதான மானியங்கள் – நீக்கப்பட்டன; அல்லது தீவிரமாகச் சீராக்கம் செய்யப்பட்டன. அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை மா, பாண், சீனி என்பவற்றின் மானியக் கொள்கையில் மாற்றம் ரூபாய் பெறுமதிக் குறைப்புடன் இணைந்து செய்யப்பட்டது. தொகுத்து நோக்கின், அனைத்துப் பண்டங்களுக்குமான உயர்விலைகளுக்குக் காரணம் பண்டங்களின் முழுச் செலவின் அடிப்படையில் விலைக் கொள்கையைக் கடைப்பிடித்தமையேயாகும்.

உள்நாட்டுப் பணவீக்கச் சக்திகள் செயற்படாதிருந்த நிலையிலும் கூட, சிறிய திறந்த பொருளாதாரங்கள் ஏனைய நாடுகளில் நிலவி வரும் பணவீக்கத்தினால் எளிதில் பாதிப்படையக் கூடியவையாக உள்ளன. சர்வதேச பணவீக்க அமுக்கங்கள் இறக்குமதி, ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பின் மூலம் நேரடியாக திறந்த பொருளாதாரத்திற்குள் ஊடுருவக் கூடியவையாகும். இலங்கை தனது நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்களின் தேவையை சமாளிப்பதற்காக இறக்குமதியில் தங்கியுள்ளது. மொத்த தேசிய செலவில் இறக்குமதி மீதான செலவினம் 1970 இல் 29% ஆகவும், 1978 இல் 40% ஆகவும், 1980 இல் 55% ஆகவும் அதிகரித்து வந்துள்ளது. 1994 இல் இது 46% ஆக இருந்தது. பொருளாதாரத்தில் உணவு, தயாரிப்பு, நிர்மாணத் துறைகளே கூடுதலான அளவு இறக்குமதிகளை உள்ளடக்கியுள்ளன. மேலும், இவற்றில் பல போட்டியற்ற பொருட்களாக (கோதுமை, மா, உரம், பெற்றோலியம், இயந்திரங்கள், உபகரணங்கள்) உள்ளதனால், விலை தொடர்பாக கேள்வி நெகிழ்ச்சியற்றதாக உள்ளது. இந்நிலைமையில் உள்ளூர் விலை மட்டங்களில், இறக்குமதி நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பு என்ற வகையில் நேரடி யாகவோ அல்லது தயாரிப்புப் பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பு என்ற வகையில் மறைமுகமாகவோ இது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. உண்மையில் பணவீக்கம் கூடுதலாக இருந்தது 1980 இலும் 1990 இலுமாகும். இக் காலத்தில் இது முறையே 26.1%, 21.4% ஆக இருந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் பெற்றோலிய விலைகள் – இறக்குமதிப் பொருளின் விலை – அதிகரித்திருந்தமையேயாகும்.

அட்டவணை 8

பணநிரம்பலை பாதிக்கும் காரணிகள் 1978–1994 (ரூ.100 கோடி)

| வருடம் | வெளி வங்கிச் சொத்துக்கள் (தேறியது) | மொத்த உள்நாட்டுக் கடன் | அரசாங்கத்துக்கு கடன் (தேறியது) |
|---|---|---|---|
| 1978 | 5.6 | 10.7 | 1.9 |
| 1979 | 6.8 | 14.9 | 2.9 |
| 1980 | 3.6 | 25.8 | 8.9 |
| 1981 | 2.9 | 33.9 | 12.7 |
| 1982 | 2.4 | 42.3 | 17.1 |
| 1983 | 3.1 | 49.2 | 17.5 |
| 1984 | 9.9 | 49.9 | 14.5 |
| 1985 | 9.1 | 59.2 | 20.3 |
| 1986 | 9.1 | 64.1 | 22.5 |
| 1987 | 9.2 | 75.5 | 27.0 |
| 1988 | 7.0 | 96.8 | 36.0 |
| 1989 | 4.7 | 102.3 | 36.1 |
| 1990 | 10.2 | 119.8 | 39.1 |
| 1991 | 17.4 | 134.2 | 41.7 |
| 1992 | 24.1 | 153.3 | 42.3 |
| 1993 | 45.4 | 158.7 | 35.0 |
| 1994 | 62.5 | 182.0 | 36.3 |

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கைகள்

உலகச் சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு தவிர, ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியின் வீழ்ச்சியும் இறக்குமதிச் செலவு உயர்வுக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக இருந்துள்ளது. 1977 ற்கு முன்னர் இலங்கையின் செலாவணி வீதம் நிலையானதாக இருந்துள்ளது. 1977 நவம்பர் மாதம் தொடக்கம் செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதில் சந்தைச் சக்திகளுக்கு இடமளிக்கும் வகையில் மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீத முறையை இலங்கை கடைப்பிடித்து வருகின்றது. அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா பெறுமதியிறக்கம் செய்யப்பட்டு வருவதை அட்டவணை 5 விளக்குகின்றது. 1977 இல் 16 ரூபாவாக இருந்த ஒரு டொலரின் பெறுமதி 1994 இல் ரூ.49.98 ஆக அதிகரித்துள்ளது. (இந் நாணய மாற்று வீதம் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர் நாடுகளின் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப் படுகிறது). பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதச் சுட்டெண் 1978 இல் 97.6 ஆக இருந்து 1990 இல் 36.7 ஆகக் குறைவடைந் துள்ளது.

கேள்விப் பக்க காரணிகள்

1978 ற்குப் பின்னர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, பண நிரம்பல் போன்ற கேள்விப் பக்க காரணிகள் பணவீக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கி விட்டன. இறைக் கொள்கையின் சமமின்மைகள் இக் காலப் பகுதியின் நிதி நிலை ஸ்திரமின்மைக்கு முக்கிய காரணமாக, இருந்து வந்துள்ளது. 1978-82 காலத்தில் பொதுச் செலவீட்டில ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக அரசாங்கம் பாரிய வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகளை எதிர்நோக்கியது. பற்றாக்குறையின் அளவு மொ.உ. உற்பத்தியில் 24.5%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். அடுத்து துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் முன்னணித் திட்டமாகக் கருதப்பட்டு, சலுகையுடனான வெளிநாட்டுக் கடன்கள், நன்கொடைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இது அதிகரித்த பண வருமானத்திற்கு வழிவகுத்தது. அதாவது, இத்திட்டத்திற்குப் பல்வேறு சேவைகளையும் வழங்கியவர்களுக்குப் பெருமளவில் பண வருமானம் கிடைத்தது. இந்த மாதிரியான பாரிய முதலீட்டுத் திட்டங்களில் கருக்கட்டும் காலம் (அதாவது, உற்பத்தி இடம் பெறாத காலம்) உள்ளடங்கியிருப்பதால், உடனடியாக அவை அதிகரித்த பண வருமானத்தை அளிப்பதில்லை; எனவே, இந்நிலையில் பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளவாறு, தாராளமயமாக்கத்தின் முதல் ஐந்து வருடங்களில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ. உற்பத்தியில் 18.5% ஆக இருந்து வந்துள்ளது. இது 1983-89 இல் 12% ஆகவும், 1990 இல் 9.4% ஆகவும் காணப்பட்டது. வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறைக்குப் பல மூலகங்களிலிருந்து நிதியீட்டம் செய்யப்படலாம். உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறைகள், உள்நாட்டுக் கடன்களின் தேவையை வற்புறுத்துகின்றன. தாராளமய மாக்கலின் பின்பு இறைச் செயற்பாடுகள், வங்கி, வங்கியல்லாத நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற உள்நாட்டுக் கடன்களிலும், அதேபோல வெளிநாட்டு நிதியீட்டத்திலும் தங்கியிருந்தன.

வரவு செலவுத்திட்ட பற்றாக் குறை மத்திய வங்கி போன்ற வங்கிசார் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியீட்டம் செய்யப்படும் போது, அது பண நிரம்பல் அதிகரிப்புக்கு வழிவகுக்கும். பொருட்கள், சேவைகளின் கிடைப்புத் தன்மை வரையறுக்கப்பட்ட நிலையில் இம்மாதிரியான பண நிரம்பல் அதிகரிப்பு, உயர் விலைகளுக்கு வழிகோலி, பணவீக்கத்தை ஏற்படுத்தும். 1978 ற்குப் பிற்பட்ட காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில், வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறைக்கான நிதியீட்டத்திற்கான ஆதாரம் என்ற வகையில், அரசாங்கம், பணத்தை அச்சிடும் முறையையே பின்பற்றியது. உதாரணமாக, 1980 இல் பற்றாக்குறைக்கான நிதியீட்டத்திற்கென வங்கித் துறையிடமிருந்து அரசாங்கம் 710 கோடி ரூபாவைத் திரட்டியிருந்தது. இது மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 10.7% ஆகும். 1988 இல் மொ.உ. உற்பத்தியில் கூட்டுமொத்த வ.செ.திட்டப் பற்றாக் குறையின் அளவு 15.7% ஆக இருந்தது. இது 1982 ற்குப் பிற்பட்ட காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய தொகையாகும். 1988 இல் வங்கித் துறையிலிருந்து பெற்ற கடன் மொ.உ. உற்பத்தியில் 4.6% அல்லது 110 கோடி ரூபாவாகும். அடுத்து வந்த இரு வருடங்களிலும் பணவீக்கம் மிக உயர்ந்த மட்டங்களில் தீவிரமாக அதிகரித்துச் சென்றது.

1988-91 காலத்தில் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களுக்காக "நடுத்தர கால பொருளாதாரக் கொள்கைத் திட்டங்கள்" இலங்கைப் பொருளாதாரத்தில் அமுல்படுத்தப்பட்ட போது பொருளாதாரத்தில் சாதக மான போக்கு தென்பட்டது. இக் கொள்கைகள் உறுதியானதும் வேக மானதுமான பொருளாதார வளர்ச்சிக் கான அத்திவாரத்தை வழங்கின எனக் கூறலாம். இக்கொள்கைத் திட்டங்கள் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை என்பவற்றிலும் பணவீக்கத்திலும் குறைப்பினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 1992 இல் மொ.உ. உற்பத்தியின் 7.3% ஆகக் குறைக்கப்பட்டது (இது 1988 இல் 15.7% ஆக இருந்தது). பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைவு, அரசாங்கத்தினால் பெறப்படும் உள்நாட்டுக் கடனின் அளவைக் குறைத்தது. அத்துடன், வங்கித்துறையிலிருந்து நிதியீட்டம் செய்யப்படும் முறையையும் பெருமளவுக்கு அகற்றியது. எவ்வாறெனினும், சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதில் நாட்டின் நிச்சயமற்ற அரசியல் பொருளாதார சூழ்நிலை காரணமாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. மீண்டும் மொத்த முழுப் பற்றாக்குறை அதிரிக்க ஆரம்பித்தது. 1994 இல்



இது மொ.உ.உற்பத்தியில் 10% ஆக இருந்தது. இவ்வாண்டில் இறைச் செயற்பாட்டில் ஏற்பட்ட இடைவெளி காரணமாக அரசாங்கம் நிதியீட்டத்திற்காக வங்கி முறையை நாடியது.

இலங்கையில் பணவீக்க அமுக்கம் காரணமாகவே நாணய விரிவாக்கம் ஏற்பட்டு வந்துள்ளது. அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளவாறு, குறுகிய பணநிரம்பல் $M_1$ (தாள், குத்தி நாணயங்களையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது) 1978 ஆம் ஆண்டிற்குப் பின், (1981, 1989, 1992 தவிர்ந்த ஏனைய ஆண்டுகளில்) இரட்டை இலக்கங்களில் வருடாந்தம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதே வேளையில், விரிந்த பண நிரம்பல் ($M_2$) இதே காலப் பகுதியில் $M_1$ ஐயும் விட வேகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இறுதியாக, மொத்தப் பணநிரம்பலின் வளர்ச்சியானது உள்நாட்டுக் கடன் விரிவாக்கம், வங்கி முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் ஆகிய இரண்டு காரணிகளுடனும் தொடர்பு பட்டுள்ளது.

1980 ற்குப் பின்னர் ஸ்திரமற்ற நிலைக்கான பிரதான காரணிகளில ஒன்று, அரசாங்கம் மத்திய வங்கியிடமிருந்து பெருமளவான கடன்களைப் பெற்று வந்தமையாகும். வங்கி முறை மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த தேறிய கடனின் அளவு 1980 இல் 600 கோடி ரூபாவிலிருந்து, 1988 இல் 900 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது (அட்டவணை 8 ஐப் பார்க்க). உள்நாட்டுக் கடன் தொடர்பாக அரசாங்கத்தின் கடன் பெறுவனவுகள் அதிகரித்திருந்த போதும், இக்காலம் முழுவதும் உள் நாட்டுக் கடன் விரிவாக்கத்திற்கான முதன்மைக் காரணம் தனியார் துறையின் கடன்

( 27 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுட்டெண்களை கணித்தல்

ஒரு கால கட்டத்தில் அவதானிக்கப்பட்ட பெறுமதிகளை மற்றொரு கால கட்டத்தில் அவதானிக்கப்பட்ட பெறுமதிகளோடு ஒப்பிடுவதற்குச் சுட்டெண்கள் பயன்படுகின்றன. காலத்தோடு மாற்றமடையும் எந்தவொரு மாறியையும் சுட்டெண் வடிவில் காட்ட முடியும். நாம் ஒரு மாறியின் காலத் தொடரை நோக்கும் போது, அக்காலப் பிரிவின் ஒப்பீட்டு ரீதியான அசைவுகள் பற்றி தெளிவான ஒரு கருத்தினைக் கொள்வதற்கு சில வேளை முடியாமல் போகலாம். இங்கு நாம் கவனத்தில் எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் மாறியின் பெறுமதியை குறிப்பிட்டதொரு அடிப்படை வருடத்தின் பெறுமதியின் நூற்றுவீதமாகக் காட்டுவதே தேவையாகும். இங்கு முதலாவதாக நாம் ஓர் அடிப்படைக் காலப்பகுதியைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அடிப்படைக் காலப் பகுதியில் மாறியின் பெறுமதி ஏனைய காலம் முழுவதிலும் அம்மாறியின் மாற்றம் பற்றி அளக்கும் அளவுகோலாகின்றது. அடிப்படைக் காலப் பகுதியில் சுட்டெண் 100 க்கு சமமானதாகும். அடிப்படைக் காலப் பகுதியோடு ஒப்பிடுவதற்கு எமக்குத் தேவைப் படுவது குறிப்பு வருடமாகும் (Reference year). நாம் அக்காலப் பகுதியைப் பற்றியே அக்கறை கொள்கின்றோம். அடிப்படைக் காலப் பகுதியின் பெறுமதிக்கு ஒப்பீடாக குறிப்பு காலப் பகுதியில் மாறியின் பெறுமதியைத் தெரிந்து கொள்வது நமக்கு அவசியமாகும். குறிப்பு காலப் பகுதிக்காக சுட்டெண்களைப் பெற்றுக் கொள்வதற்கு இக்காலப் பகுதியின் பெறுமதியை அடிப்படைக் காலப் பகுதியின் பெறுமதியால் வகுத்து அம்முடிவினை சதவீதமாகத் தெரிவிப்பதற்காக நூறால் பெருக்குவோம். அடிப்படை சுட்டெண்ணான நூற்றுக்கு ஒப்பீடாக இரு காலப் பகுதிகளின் பெற்றோல் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை சுட்டெண்களால் காட்ட வேண்டும் என வைத்துக் கொள்வோம். 1990 இல் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 25 ரூபாவாக இருந்து 1995 இல் லீற்றரின் விலை 30 ரூபாவாக உயர்ந்தால், 1990 க்கு ஒப்பீடாக 1995 வருடத்தின் பெற்றோலுக்கான எளிமையான விலைச் சுட்டெண் பின்வருமாறு அமைகின்றது:

$$\text{சுட்டெண்} = \frac{30}{25}(100) = 120$$

இது 1990 இன் விலைக்கு ஒப்பீடாக 1995 இன் பெற்றோல் விலையைத் தெரிவிக்கும் (வசதியான) இலகுவான முறையாகும். 120 சுட்டெண் மூலம் தெரிய வருவதாவது, 1990-1995 க்கு இடைப்பட்ட ஐந்து வருட காலத்தில் விலை 20% ஆல் அதிகரித்துள்ளது என்பதாகும்.

நுகர்வோர் விலைகள் அல்லது மொத்த விலைகள் என்பவற்றைக் கொண்ட ஒரு பொது விலைச் சுட்டெண் ஒன்றின் மூலம் இருவேறுபட்ட காலங்களுக்கிடையில் பொது விலைகளின் வேறுபாடுகளை அளவிடுவதற்கு முயற்சி எடுக்கப் படுகின்றது. அவ்வாறான ஒரு சுட்டெண் இரு காலப் பிரிவுகளுக் கிடையில் வேறு விலைகள் எந்தளவுக்கு மாற்றமடைந்துள்ளன என்பதனை தெளிவாக எடுத்துக்காட்டும். சந்தையில் எண்ணற்ற பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப் படுகின்றன. காலப் போக்கில் அவற்றின் விலைகள் உயர்கின்றன; குறைகின்றன; அல்லது நிலையாக நிற்கின்றன. இவ்வாறான எல்லா விலை அசைவுகளையும் எப்பொழுதும் மேற்பார்வை செய்யவும் அளவிடவும் முடியாது. எனவே, பிரதநிதித்துவப் பண்டத் தொகுதி யொன்றைத் தெரிவு செய்வதே ஏற்கப் படும் வழிமுறையாகும். பொது விலைச் சுட்டெண்ணில் சேரும் இவை முடிந்தளவில் மக்களால் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள், சேவைகள் என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இப்பண்டத் தொகுதிகளைத் தெரிவு செய்யும் ஒரு முறை குடும்ப வரவு செலவு மதிப்பீடாகும். அவ்வாறானதொரு மதிப்பீட்டின் மூலம் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் ஒரு சராசரி குடும்பத்தால் கொள்வனவு செய்யப் படும் பொருட்கள், சேவைகள் பற்றியும் அவற்றின் தொகைகள் பற்றியும்



பிரதிநிதித்துவ கூடையொன்றைத் தயாரித்துக் கொள்ளலாம். அடிப்படை காலப்பகுதியில் இக்கூடைக்கு உரித்தான பண்டங்களின் மெய் சந்தை விலைகள் பதிவு செய்யப்படுகின்றன. அதன் பின்னர் விரும்பியவாறு வாராந்தம், மாதாந்தம் அல்லது வருடாந்தம் என்ற இடைவெளிகளில் விலைகள் பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு மிகப் -பெரிய அளவிலான விலைத் தொகுதிகள் சேகரிக்கப் படுகின்ள. ஒரு தொகுதியை மற்றொரு தொகுதியுடன் ஒப்பிடுவது சிரமமானது. எனவே, தொடக்கத்தில், பிரதிநிதித்துவப் பண்டங்கள், சேவைகளின் செலவு 100 க்கு சமனாக்கப்படுகின்றது. (அப்பொழுது அது அடிப்படைக் காலப் பகுதியின் பெறுமதியாகக் கருதப்படுகின்றது). பின்னர் அந்த பொருட்கள், சேவைகளின் கூடையின் செலவு அடிப்படைக் காலப் பிரிவின் சதவீதமாகக் காட்டப்படுகின்றது. எடுத்துக் காட்டாக, பண்டங்கள், சேவைகள் கூடையின் அடிப்படைச் செலவு ரூ.1000 எனவும், ஒரு மாதத்தின் பின்னர் அது 1200 ஆகியது எனவும் கருதுவோம். இப்பொழுது 1000 ரூபாவை 100 க்குச் சமப்படுத்துவதாக இருந்தால் ஒரு மாதத்தின் பின்னர் பெறுமதியானது விகிதாசார ரீதியில் 120 எனக் காட்டலாம். நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் இவ்வாறான விலைச் சுட்டெண் தொடர் ஒன்று அமைக்கப் படுகினறது. இங்கு முடிந்தளவில் ஒரே பண்டங்கள், சேவைகளின் கூடையாளப் படுவதோடு பண்டங்கள், சேஸவைகள் என்பவற்றுக்கு அளவில் நிறை அளிக்கப்படுகிறது. இரு கால கட்டங்களுக்கிடையில் பொது விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டத்தில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றத்தின் பரிமாணம் குறித்து ஒரு பயனுள்ள குறிகாட்டியாக இது அமைகிறது.

இலங்கையில் மிகவும் பிலபல்ய மான இரண்டு விலைச் சுட்டெண்கள், குடித்தொகைக் கணிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் கணிக்கப் படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும், இலங்கை மத்திய வங்கி மூலம் கணிக்கப்படும் மொத்த விலைச் சுட்டெண்ணும் ஆகும். இவை இரண்டும் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகளிலும் அதன் மாதாந்த செய்தி விவரணங்களிலும் தொடர்ச் சியாக வெளியிடப் படுகின்றன.

**இலங்கையின் நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் வரலாறு**

இலங்கையின் நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் பற்றிய வரலாறு இரண்டாம் உலக மகா யுத்தத்தின் தொடக்க வருடங்கள் வரை நீண்டு செல்கின்றது. 1940 இல் இருந்து 1952 இறுதிப் பகுதி வரையில் இரண்டு வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்கள் கணிக்கப் பட்டன. அவற்றில் ஒன்று, கொழும்பு நகரத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் மற்றையது தோட்டத் தொழிலாளர்களுக்கும் உரியவை யாகும். 1949 வரையில் அவற்றுள் முதலாவது சுட்டெண் வர்த்தக, தொழில் திணைக்களத்தின் மூலம் கணிக்கப்பட்டது. பின்னர் அப்பொறுப்பு குடித்தொகை, புள்ளிவிவரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1952 இன் பின்னர் 2ம் சுட்டெண் மறைந்து விட்டது.

கொழும்பு தொழிலாளி வர்க்கத்தின் சுட்டெண் கணிப்புக்கு 1938 நவம்பரில் இருந்து 1939 ஏப்ரல் வரையிலான காலப் பகுதியில் கொழும்பு நகரத்தில் வாழ்ந்த 350 குடும்பங்களின் வரவு செலவு பற்றிய ஆய்வே அடிப்படையாகியது. உணவு எரிபொருள், வெளிச்சம், ஆடை அணிகள், வீட்டு வாடகை என்பனவும் மற்றும் நானாவித பொருட்களுக்கு மான பிரதான சுட்டெண்களின் ஐந்து பிரிவுசார் சுட்டெண்கள் கணிக்கப்பட்டு 1940 செப்டம்பர் மாதம் தொடக்கம் 'சிலோன் ட்ரேட் ஜர்னல்' என்ற பிரசுரத்தில் வெளியிடப்பட்டது. 1942 இன் இறுதியில், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் அரசின் யுத்தக் கடன் முறிகள் என்பவற்றை கணிக்கும் அடிப்படையை கண்டறி வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு நுகர்வோர் செலவுப் பரவல் பற்றி புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் இச்சுட்டெண்களைக் கணிப்பதற்காக நிறைகளை திருத்தியமைத்தல் வேண்டுமெனச் சிபாரிசு செய்திருந்தது. 1942 நவம்பரில் இருந்து 1952 இறுதிப் பகுதிவரை கணிக்கப்பட்ட விலைச் சுட்டெண்கள் (ஒரு சில சிறு மாற்றங்கள் நீங்கலாக) இம் மதிப்பீடுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. தோட்டத் தொழிலாளரின் சுட்டெண் 1939 ஜூலை தொடக்கம் செப்டம்பர் வரையிலான காலத்தில் தோட்டத் தொழிலாளர் தொடர்பாகச் செய்யப் பட்ட வரவு செலவு ஆய்வின் முடிவுகளைப் பயன்படுத்திக் கணிக்கப் பட்டது. சுட்டெண் கணிப்புக்கான நுகர்வோர் செலவு பற்றிய புதிய மதிப்பீடுகளின் படி இதுவும் 1942 இல் திருத்தியமைக்கப்பட்டது.

1952 இன் இறுதிப் பகுதி வரை கொழும்பு நகரத்தின் தொழிலாளர் வர்க்கத்தின் சுட்டெண் அரச ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படியைத் தீர்மானிப்பதற்கும், சம்பளக் குழுக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட கைத்தொழிற்றுறைகளில் பணிபுரிந்த ஊழியர்களின் (பெருந்தோட்டத் தொழில்துறை நீங்கலாக) சம்பளத்தைத் தீர்மானிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

1949-50 காலப் பகுதியில் குடித் தொகை, புள்ளிவிபரத் ,திணைக் களத்தின் மூலம் கொழும்பு நகர எல்லைக்குள் 450 தொழிலாளர் வர்க்கக் குடும்பங்கள் பற்றிய வரவு ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வு மூலம் பெறப்பட்ட செலவுத் தரவுகள் 1952 இல் மீளமதிப்பீடு செய்யப்பட்டன. 1953 ஆரம்பத்தில் இருந்து தோற்றம் பெற்ற புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நிறையைத் தீர் மானிப்பதற்காகவே அது கணிக்கப் பட்டது. சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்ட தோட்டங்கள் உட்பட தொழில் துறைகளில் வேலை செய்யும் ஊழியர்களின் சம்பளத்தைத் தீர்மானிப்பது தொடர்பாக இச் சுட்டெண் 1953 தொடக்கம் பயன் படுத்தப்படுகின்றது.

( 25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவனவுகளில் ஏற்பட்டுவந்த விரிவாக்கம் ஆகும். 1980 இல் மொத்த உள்நாட்டுக் கடன்களில் அரசாங்கத்தின் பங்கு 35% ஆக இருந்தது. இது 1994 இல் 20% ஆகக் குறைவடைந்துள்ளது. உயர்ந்த உள்நாட்டுக் கடன்கள் வட்டிவீத உயர்விற்கு வழிவகுக்கும். சந்தையில் கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட வளங்களுக்காக தனியார் துறையும் அரசாங்கமும் போட்டியிடுவதாலும் வட்டி வீதம் உயர்வடையும்.

1976 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக் களில் நடந்தேறிய மாற்றங்கள் நாணய விரிவாக்கத்தில் முக்கிய பங்கினை வகிக்கவில்லை. பொதுவாகக் கூறின், அவை ஒரு சிறு எதிர்மறையான தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தி யிருந்தன. எனினும், 1976 இன் ஆரம்பத்தில் சாதகமான வர்த்தக மாற்று வீதம் காரணமாக வெளிநாட்டுச் சொத்துக்களில் வேகமான அதிகரிப்பு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கொழும்பு நகரத்தின் சில்லறை விலைகளில் மாற்றங்களை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சுட்டெண்ணை அமைப்பதற்காக 1949-50 காலத்துள் குடும்ப வரவு செலவு மதிப்பீட்டிலிருந்து பொருட்கள், சேவைகளின் ஒரு கூடை தெரிவு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இக்கூடையில் பண்டங்கள், சேவைகளின் 217 வகைகள்- உட்படுத்தப்பட்டிருந்தபோதிலும் இன்று அது 187 ஆகக்குறைந்துள்ளது. இக்கூடைக்கு உட்பட்ட பண்டங்கள் முக்கிய 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அப்பிரிவுகளுக்கு 1949-50 காலப் பகுதியில் நிலவிய மொத்த சராசரிச் செலவாகிய ரூ.202.24 நிறைகள் அளிக்கப்பட்டுள்ளன. அரிசி, மா, சீனி, மரக்கறி, மீன், இறைச்சி,சமையல் எண்ணெய், சில்லறைச் சாமான்கள் முதலிய உணவுப் பொருட்களுக்கு 61.9% நிறையும், ஆடை ஆபரணங்களுக்கு 9.4% நிறையும், மண்ணெண்ணெய், விறகு, மின்சாரம் முதலிய எரிபொருட்களுக்கும் வெளிச்சத்துக்கும் 4.3% நிறையும், வீட்டு வாடகைக்கு 5.7% நிறையும் கல்வி, போக்குவரத்து, பொழுதுபோக்குகள், எழுதுபொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கு 18.7% நிறையும் அளிக்கப்பட்டுள்ளன. பண்டங்கள் உள்நாட்டுப் பண்டங்கள், இறக்குமதிப் பண்டங்கள், ஏற்றுமதிப் பண்டங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொன்றினதும் தற்போதைய நிறை முறையே 60%, 35%, 5% என உள்ளது.

ஒவ்வொரு மாத்திலும் ஒரே விற்பனை நிலையங்களில் இப் பொருட்களின் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில், பொருட்களும் சேவைகளும் குடித்தொகை, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர ஆய்வாளர்கள் மூலம் உண்மையாகக் கொள்வனவு செய்து அறிக்கையிடப் படுகின்றன. அவர்கள் கொழும்பில் உள்ள பலவித 7 விற்பனை நிலையங்களில் இப் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். புளறக்கோட்டை, வெள்ளவத்தை, கிருலப்பனை, பொரலை, மருதானை, தெமட்டகொட, கிராண்ட்பாஸ் என்பன இந்த விற்பனை நிலையங்களாகும். புறக்கோட்டைச் சந்தையில் விலைகள் வாராந்தம் சேகரிக்கப்படுகின்றன. பல்வேறு நிலையங்களில் இருந்து சேர்க்கப்பட்ட விலைகளின் சராசரி பெறுமதிகள் ஒவ்வொரு மாதத்திலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. கொநுவிசு அடிப்படையாண்டின் அளவு நிறைகளை பயன்படுத்துகிறது. இது 'லஸ்பெயர்ஸ்' சுட்டெண் தொகை எனப்படுகின்றது. நிலையான பொருட்கள், சேவைகள் கூடையின் இருகாலகட்டங்களின் செலவினை ஒப்பிட்டு, விலைச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது. 'லஸ்பெயர்ஸ்' விலைச் சுட்டெண் என்பது :

$$\text{சுட்டெண்} = \frac{P_1 Q_0}{P_0 Q_1} (100)$$

இங்கு $P_1$ என்பது கருத்தில் கொள்ளப்பட்ட காலப் பகுதியின் விை ; $P_0$ என்பது அடிப்படைக் காலப்பகுதியின் விலை; $Q_0$ என்பது அடிப்படைக் காலப் பகுதியில் நிலவிய (நிறை) அளவாகும். கணிப்பீட்டுக்கான அந்தந்தப் பண்டத்திற்கான அடிப்படையாண்டுக் கால கட்டத்தின் பெறுமதி விலைச் சார்பினால் பெருக்கப்படும்; பின்னர் இவற்றைச் சமப்படுத்தி, அடியாண்டுக் காலப்பகுதியின் பெறுமதியால் வகுத்து பெறப்படும் தொகை சுட்டெண்ணைத் தீர்மானிப்பதற்காக 100 ஆல் பெருக்கப்படும். கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் இப்பொழுது நாட்டின் உத்தியோக விலைச் சுட்டெண் ஆகவும், அரச, தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் வழியாட்டியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

### பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு குடித்தொகை, புள்ளிவிவரத் திணைக்களம் 1989 இல் பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் என்ற பெயரில் புதியதொரு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அறிமுகம் செய்து வைத்தது. 1950 கள் தொடக்கம் கேள்விப் பக்கத்தில் நுகர்வோர் பழக்க வழக்கங்கள், குடும்ப வருமான மட்டம் என்பவற்றிலும், வழங்கல் பக்கத்தில் பண்டங்கள், சேவைகளின் வீச்சிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவ்வாறு தொழில்நுட்ப மாற்றங்களாலும் நுகர்வோர் வருமான மட்டம், வாழ்க்கைத் தரம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களாலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்ட சில பொருட்கள், சேவைகள் என்பவற்றின் முக்கியத்துவம் காலப்போக்கில் வீழ்ச்சியடைந்துள்ளது; மறுபுறத்தில், தற்பொழுது சந்தையில் உள்ள பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. எனவே, சில்லறை விலைகளின் பொது மட்டத்தினை யதார்த்தமாக வெளியிடும் ஒன்றாக சுட்டெண்ணை ஆக்குவதற்காக நுகர்வோர் செலவு முறைகளில் மாற்றங்களைக் கிரகித்துக் கொள்ளும் வகையில் நிறைத்திருத்தம் அல்லது குறிப்பிட்ட காலத்துக்கிடையில் சுட்டெண்ணின் அடியாண்டைத் திருத்துவது அவசியமாகும். குடித்தொகை, புள்ளிவபரத் திணைக்களம் பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை மேற் குறிப்பிட்ட நோக்கிலேயே கணிக்கின்றது.

பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நிறைக்கான அடிப்படை 1985/86 காலத்தில் குடித்தொகை, புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஊழியர் படை, சமூக பொருளாதார ஆய்வாகும்; அதாவது, பாரிய கொழும்புப் பிரதேசக் குடும்பங்களின் செலவுகளுக்கு ஏற்ப வரிசைப்படுத்தப்பட்ட கீழ்மட்ட குடும்பங்கள் 40% இன் செலவு முறைகளாகும். 1989 ஜனவரி - ஜூன் = 100 என அடிப்படையாகக் கொண்டு இச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது. 1989 ஜனவரி - ஜூன் விலைகளைப் பயன்படுத்தி 1985/86 அளவுகளை நிறையேற்றி மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. (1989 ஜனவரி - ஜூன் விலைகளில்) மொத்த பொருட்கள், சேவைகள் கூடையின் பெறுமதி ரூ.2,347.71 ஆகும். பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைக் கணிப்பதற்காக 'லஸ்பெயர்ஸ்' சூத்திரம் பிரயோகிக்கப்படுகின்றது.

பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் வீச்சும் உள்ளடக்கமும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட விரிவானதாகும். கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உள்ளடக்கும் புவியியல் பிரதேசம் கொழும்பு நகரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் இங்கு பாரிய கொழும்புப் பிரதேசம் உள்ளடக்கப்படும் வகையில் அது விரிவாக்கப்பட்டுள்ளது. பாரிய கொழும்பு விலைச் சுட்டெண்ணைக் கணிப்பதற்காக கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் அமைந்துள்ள 14 சில்லறை வர்த்தக நிலையங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்படுகின்றன :

1. கொழும்பு மாநகரசபை
2. தெகிவலை - கல்கிஸ்ஸை மாநகரசபை
3. கொலன்னாவ நகரசபை
4. கோட்டே நகரசபை
5. வத்தளை-மாபோல நகரசபை
6. பேலியகொட நகரசபை

பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் பொருட்கள், சேவைகளின் அளவு 304 ஆகும். எனினும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் இது 187 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள், வெற்றிலை பாக்கு விலைகள் மாதத்துக்கு இருமுறை சேகரிக்கப் படுகின்றன. ஆடை ஆணிகள், எரிபொருள், வெளிச்சம், மதுசாரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலையும், வீட்டுத் தளபாடங்கள், தனிப்பட்ட பராமரிப்பு, எழுது பொருட்கள் தொடர்பான விலைகள் மாதாந்தம் சேகரிக்கப்படுகின்றன. ஏனைய பொருட்கள் தொரடர்பான விலை ஏற்ற இறக்கங்கள் நித்தம் நடைபெறாமையால் அவை பற்றிய தரவுகள் நித்தம் சேகரிக்கப் படுவதில்லை.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட் டெண்ணில் உள்ளடக்கப்படும் பொருட்கள் 5 உப பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன: (1) உணவும் பான வகைகளும்; (2) ஆடைகளும் பாதணிகளும் ; (2) எரிபொருளும் வெளிச்சமும்; (4) வீட்டு வசதி ; (5) நானாவித பொருட்கள். குடியிருப்பாளர்களின் தற்போதைய செலவு மாதிரியின் அடிப்படையில் முக்கியத்துவம் பெறும் பண்டங்க்ளும் சேவைகளும் உட்படும் வகையில் பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் மேலதிகமான மூன்று உப பிரிவுகள் இனங் காணப்பட்டுள்ளன. பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட் டெண்ணில் உட்படும் உப பிரிவுகளும் அவற்றின் நிறைகளும் பின்வரும் பட்டியலில் காட்டப்படுகின்றன:

பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பண்ட வகைகளும் நிறைகளும்

| பிரிவு | நிறை |
|---|---|
| 1. உணவிம் பானங்களும் | 19.3 |
| 2. உடை | 2.8 |
| 3. எரிபொருளும் வெளிச்சமும் | 5.4 |
| 4. வீடமைப்பு | 8.9 |
| 5. மதுசாரம், புகையிலை, வெற்றிலை பாக்கு | 3.8 |
| 6. வீட்டுத் தளபாடங்களும் சேவைகளும் தனிப்பட்ட பராமரிப்பும் சுகாதாரமும் | 4.9 |
| 7. போக்குவரத்து, தொலைத் தொடர்பு | 2.8 |
| 8. நானாவிதமானவை | 2.1 |
| மொத்தம் | 100.0 |

பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் கணிப்பதற்காக 4 வகைப்படுத்தல் மட்டங்கள் பயன்படுத்தப் படுகின்றன. முதல் மட்டத்தில் முக்கிய பண்டங்களின் எட்டுப் பிரிவுகளுக்குமான உப சுட்டெண்கள் கணிக்கப்படுகின்றன. இரண்டாம் மட்டத்தில், இந்த தொகுதிகள் மேலும் 42 உப தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. தானியம், இறைச்சி, மரக்கறி ஆகிய பண்ட வகைகள் இதற்குள் உட்படுகின்றன. அந்தந்த உப தொகுதிகளுக்கு செலவு நிறைகள் ஏற்றப்படுகின்றன. மூன்றாவது மட்டத்தில் பண்டங்களையும் சேவைகளையும் அறிந்து கொள்வதற்காக கூறப்பட்ட உப தொகுதிகள் மேலும் பிரிக்கப்படுகின்றன. இவற்றில் அரிசி, பால்மா ஆகிய பொருட்கள் சேர்கின்றன. குறித்துரைக்கும் மட்டமாகிய நான்காவது மட்டத்தில் விலைதனைச் சேகரிப்பதற்காக பொருட்கள் அறியப்படுகின்றன. இதன்படி, விலையாக்கத்திற்காக 304 பொருட்களும் சேவைகளும் அறியப்படுகின்றன.

## மொத்த விலைச் சுட்டெண்

மூன்று தசாப்தங்கள் முழுவதிலும் இலங்கையில நிலவிய ஒரே விலை அசைவு அளவுகோல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாக இருந்ததால், அதற்குப் பதிலாக, பொருளாதாரத்தின் பொது விலை மட்டத்தினை மிக யதார்த்தமாகக் காட்டும ஒரு சுட்டெண் இருக்க வேண்டும் என 1977 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியால் தீர்மானிக்கப்பட்டது. எனவே, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை விட விரிவான உள்ளடக்கத்தைக் கொண்டதும் மிகச் சரியாக விலை மாதிரிகளைக் காட்டுவதுமான விலைச் சுட்டெண் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் படி, இலங்கை மத்திய வங்கி 1977 அக்டோபர் மாதத்தில் இருந்து மொத்த விலைச் சுட்டெண்ணைக் கணித்து, தனது மாதாந்த செய்தி விவரணத்திலும் வருடாந்த அறிக்கையிலும் வெளியிட்டு வருகின்றது.

மொத்த விலைச்சுட்டெண் பொதுவாக ஆரம்ப சந்தை மட்டத்தில் விலைகளைப் பிரதிபலிக்கின்றது. அதாவது, பொருளை உற்பத்தி செய்தவேளையில் அதன் முதலாவது பரிமாற்ற சந்தர்ப்பத்தில் உள்ள விலையாகும். உதாரணமாக, நெல் உற்பத்தி செய்யும் ஒரு விவசாயி தனது உற்பத்தியை ஒரு வியாபாரிக்கு விற்பதாக எண்ணுவோம். இங்க விவசாயி பெற்றுக் கொள்ளும் விலை ஆரம்பச் சந்தை விலையாகும்: அல்லது முதலாவது பரிமாற்றத்தில் விவசாயிக்குக் கொடுக்கப்படும் விலையாகும். ஓர் உற்பத்திக்குரிய ஆரம்பச் சந்தை ஒரு பொருளின் விற்பனை நடவடிக்கையில் முக்கிய வாணிகக்கொடுக்கல் வாங்கல் நடைபெறும் இடமாகக் கருதப் படும். பொதுவாக, மொத்த விலை என்பது மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கும் விலையாகும். எனவே, இது சொல்லில் காட்டப்படுமாறு மொத்த விலைச் சுட்டெண் அல்ல. எனவே, இங்கு மொத்த விலை என்பதால் கருதப்படுவது, பெருமளவுக்குத் தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியாளரின் விலையும் இறக்குமதிப் பொருட்களின் விலையுமாகும்.

இச்சுட்டெண்ணும் 13 உப தொகுதிகள் சார்ந்த பண்டங்களை உள்ளடக்குகின்றது. பொருட்களின் உற்பத்தி இடத்தினை அடிப்படையாகக் கொண்டு, உள்நாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வகைகள் மற்றும் நுகர்வு, நடுத்தர, முதலீட்டுப் பொருட்கள் என பிரிவுசார் உப சுட்டெண்கள் அமைக்கப்படுகின்றன. 1974 இனை அடிப்படையாண்டாகக் கொண்டு 'லஸ்பெயர்ஸ்' சூத்திரத்தைப் பிரயோகித்து மாதாந்தம் இச்சுட்டெண் கணிக்கப் படுகின்றது. உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் என்பவற்றின் குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் பங்கினை அடிப்படையாகக் கொண்டு நிறைகள் அளிக்கப்படுகின்றன.

அளிக்கப்பட்டிருக்கும் நிறைகள் வருமாறு: சீனி, தேயிலை, மா, மரக்கறி, மீன், இறைச்சி ஆகிய உணவுப்பொருட்கள் 67.8%, மதுசாரம் (பியர், காராயம், கள்) 2.9%, பிடவை, நூல், தோல், பாதணிகள் 4%, பலகை, அச்சு-எழுத்துத் தாள்கள் 1.4%, இரசாயனப் பொருட்கள், உரம் 0.2%, கனிப்பொருள், எண்ணெய் உற்பத்திகள் 6.4%. உலோகமல்லாத உற்பத்திகளாக வகைப்படுத்தப்படும் பீங்கான் மட்பாண்டங்கள், கண்ணாடித் தகடுகள் கட்டிடப் பொருட்களுக்கான நிறை 1.8% ஆகவும் உருக்கு உலோகப் பொருட்களின் நிறை .09% ஆகவும் உள்ளது. போக்குவரத்து உபகரணங்கள் (சைக்கிள், டயர் போன்றன) மின்சார உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் முறையே .08%, 1%, 1.3% என எல்லை நிறையை வகிப்பதுடன், எஞ்சிய நிறை உரிபொருள், வெளிச்சம் (மின், விறகு, மெழுகுவர்த்தி) ஆகியவற்றுக்காக 1.8% ஆகவும் புகையிலை, இறப்பர், கொக்கோ, பலகைப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களுக்காக 4.8% ஆகவும் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது.

பொதுவாக இச்சுட்டெண்கள் மூலம் பிறப்பிக்கப்படுவது உற்பத்தியாளரின் விலைகளாகும். தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான கழிவுகள், இறக்குமதிப் பொருட்களுக்கான விலை, காப்புறுதி உட்பட சுங்க வரி என்பன இவ் விலைகளில் சேர்வதில்லை. எவ்வாறாயினும், நடைமுறை நோக்கங்களுக்காக கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் பிற்பட்ட கட்டங்களில் விலைகளும் சில உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. தர மாற்றங்கள் காரணமாக எழும் பெறுமதி மாற்றங்களை சுட்டெண்ணில் இருந்து நீக்கிவிடுவதற்காக அவற்றின் தொழில்நுட்ப விபரங்களும் அவற்றுடன் காட்டப்படுகின்றன. தற்பொழுது பெற்றுக்கொள்ள முடியாத உற்பத்திகளுக்குப் பதிலாக புதிய உற்பத்திகளை உட்படுத்துவதற்கு கணிப்பு முறைமூலம் வழி பிறக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியின் இன்றைய கட்டத்தில் ஓரளவு பணவீக்கம் தவிர்க்க முடியாதது



**நேர்முகம்**

**ஹார்வர்ட நிக்கலஸ்**

*பிரிட்டிஷ் பிரஜையான ஹார்வர்ட் நிக்கலஸ் எகொன்ஸலஸ்ட் பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் தலைவரும் இணை ஸ்தாபகரும் ஆவார். இலங்கையில் பிறந்த அவர் தமது வாழ்க்கையின் முற்பகுதியை இந்நாட்டில் கழித்தார். கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தை ஸ்தாபித்த கருத்திட்டமொன்றின் நெதர்லாந்து இணைப்பாளராக அவர் 1987 இல் இலங்கைக்கு மீண்டும் வந்தார். பொருளியலில் பட்டப் பின்படிப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு உதவி வருகிறார். அத்துடன் ஹேக்கில் அமைந்துள்ள சமூக ஆய்வுகள் நிறுவனத்தில் மூத்த பொருளியல் விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.*

*இலங்கை பணவீக்கப் பிரச்சினையைக் கொண்டுள்ளது என நீங்கள் கருதுகின்றீர்களா ?*

உண்மையில் இல்லை. இலங்கையின் பணவீக்க விகிதம் தென்னாசியாவின் சராசரி விகிதத்திலும் பார்க்க அவ்வளவு உயர்வாக இருக்கவில்லை. மேலும் , துரித வளர்ச்சி இடம் பெற்றுவரும் ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் அது அப்படியொன்றும் உயர்ந்த விகிதமல்ல. இலங்கையின் பணவீக்க விகிதம், கிழக்காசிய, தென்கிழக்காசிய நாடுகளில் துரித அபிவிருத்தி இடம்பெற்ற காலகட்டங்களில் அந்நாடுகளில் நிலவிவந்த பணவீக்க விகிதத்தை விடச் சிறந்ததாகும். இலத்தீன் அமெரிக்கா, பிரேசில், மெக்ஸிக்கோ போன்ற துரித வளர்ச்சி பொருளாதாரங்களுடம் ஒப்பிடும் போதும் அது சாதகமானதாகவே உள்ளது.

*அவ்வாறாயின், அரசாங்கம் பணவீக்கத்தை ஓர் இலக்காகக் கொள்வது ஏன்?*

வணிக முயற்சிகள் பணவீக்கம் இல்லாத ஒரு சூழ்நிலையில் மட்டுமே செழித்தோங்கக் கூடியதாக இருப்பதால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் விடயத்திற்கு உயர் முன்னுரிமை கொடுத்து வருவதாக அரசு கூறுகின்றது. வணிக முயற்சிக் கணணோட்டத்தில் நோக்குமிடத்து, பணவீக்கம் தொடர்பாக நிலவும் பிரச்சினை, அது விலைச் சமிக்ஞைகளை திரிபுபடுத்தி நிதிச் சொத்துகளின் பெறுமதியினை அரித்து விடுவதாகவும் தர்க்கிக்கப்படுகின்றது. பணவீக்கமானது, நிலையான வருமானங்களை ஈட்டுவோருக்கெதிரான பகிர்வுத் தாக்கங்களுக்கு வழிகோலுகின்றது.

எனினும், சில வேளை அரசாங்கத்தின் கொள்கைக்கு முக்கிய காரணமாக அமைவது, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் அண்மித்த எதிர்காலத்தில் ஒரு தேர்தலை எதிர்நோக்க வேண்டி ஏற்படின் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக மிகக் கட்டாயமானது என அரசாங்கம் கருதுவதாகும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பதன் பின்விளைவு பொருளாதார அபிவிருத்தி தடைப்படுவதாகும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை தனது முதல் முன்னுரிமையாகக் கொள்ளும் அரசாங்கம் பணச்சுருக்க கொள்கை நிலைப்பாட்டை ஒத்த ஒரு நிலைப்பாட்டை பின்பற்றி வந்துள்ளது. அந்நிலைப்பாடு திரவத் தன்மைத் தட்டுப்பாட்டுக்கும் வட்டி விகிதங்களின் உயர்மட்டங்களுக்கும் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட செலாவணி விகிதத்திற்கும் காரணமாகியுள்ளது. இதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சி குறைந்துள்ளது. துரித வளர்ச்சி பொருளாதாரங்களின் அண்மைக்கால வரலாறுகளில் இருந்து நன்கு தெரிய வந்துள்ள உண்மை, குறைந்த பணவீக்க விகிதம் துரித பொருளாதார வளர்ச்சிக்காக அவசியமான அல்லது போதுமானதொரு நிபந்தனையாக இருக்கவில்லை என்பதாகும்.

*பணவீக்கமானது நிதிச் சொத்துக்களின் பெறுமதியை அரித்து விடுகின்றது என்றும், நிரந்தர வருமானத்தைச் சம்பாதிப்பதற்கு எதிராக பகிர்ந்தளிப்பு பற்றிய மாற்றங்களுக்குக் காரணமாகின்றது என்றும் நீங்கள் கூறியுள்ளீர்கள். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதனை அரசாங்கம் தனது முன்னுரிமை நோக்கமாகக் கொள்வதற்கு இவை போதுமான காரணங்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா ?*

இலங்கை, அபிவிருத்தியிலும் தேசிய செல்வத்தின் அளவினைப் பெருக்குவதிலும் கவனம் செலுத்தாமையால், முழுச் சமூகத்துக்கும் விளையும் நட்டம், பணவீக்கத்தை அமுக்கி வைப்பதால் குறுங்காலத்தில் கிட்டும் இலாபத்தை விட மிக உயர்வானது என நான் நினைக்கின்றேன். இலங்கையின் இன்றைய அபிவிருத்திக் கட்டத்தில் குறிப்பிட்ட அளவிற்கு பணவீக்கத்துக்கு இடமளிப்பதால் ஏற்படும் வருமானப் பகிர்வு விளைவுகள் தவிர்க்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாகும். அவை செயற்படுவதானது, பணவீக்கத்தினால் உணர்த்தப் படுவதற்கிணங்க வருமானப் பகிர்வானது சேமிப்போரிலிருந்தும் நுகர்வோரிலிருந்தும் உற்பத்தியாளர்களுக்கு இடம் பெயர்கின்றது என்பதை காட்டுகிறது. பணவீக்கத்தை அமுக்குவதும், வட்டி வீதங்களுக்கு அதனால் ஏற்படும் விளைவுகளும் உணரப்படுத்துவது யாதெனில், வருமானம் உற்பத்தியாளர்களிலிருந்து நிதிச் சொத்துக்களை வைத்திருப் போரையும் நுகர்வோரையும் நோக்கி மீள் பகிர்வு செய்யப்படுகின்றது என்பதையேயாகும்.

பணவீக்கம் காரணமாக ஏற்படும் நட்டத்திற்கு நட்டஈடு கொடுப்பதற்கு அரசு விரும்பினால், அதைச் செய்யத்தக்க குறைந்தளவில் தீமை விளையக்கூடிய வழிமுறை நேரடி மற்றும் மறைமுக மாற்றங்களை மேற்கொள்வதாகும்.

**இலங்கையில் பணவீக்கத்தின் மூலம் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள் ?**

எந்த பணவீக்கம் குறித்து நாம் பேசுகிறோம், இப்பணவீக்கம் எப்படி அளவிடப்படுகின்றது என்பதனை முதலில் நீங்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த வகையில் பணவீக்கம் என்பது, வாழ்க்கைச் செலவு அல்லது உற்பத்திச் செலவு அல்லது விலைகளின் சராசரி மட்டம் எனப் பல்வேறு விதங்களில் பொருள் கூறலாம். அவற்றுள் முதலாவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் அளவிடப்படுகின்றது. இரண்டாவது மொத்த விலைச் சுட்டெண் மூலமும், மூன்றாவது மொத்த தேசிய உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி மூலமும் அளவிடப்படுகின்றன. பொதுவாக, பொருளியலாளர்கள் உற்பத்திச் செலவு பற்றியும் விலைகளின் பொது மட்டம் பற்றியுமே அக்கறை கொள்கின்றனர். ஒட்டு மொத்தமாக இவ்விலை மட்டங்கள் ஒரே திசையில் ஒரே அளவில் ஒன்றாகவே நகர்கின்றன. எனினும், முக்கிய வேறுபாடுகளும் உண்டு.

விலைகளின் பொது மட்டத்தில் பணவீக்கத்துக்கான முதன்மை மூலம் செலவுகளின்-குறிப்பாக இறக்குமதி செய்யப்பட்ட செலவுகளின்-நெருக்குதல்களாகும். உண்மையில் மிக நீண்ட காலமாக இலங்கையின் பணவீக்க விகிதம், உலகப் பணவீக்க விகிதத்தை நெருக்கமாகப் பின்பற்றிச் சென்றுள்ளதனைக் காணலாம். இலங்கையின் பரப்பளவு, மொத்த அடிப்படையில் பொருளாதாரம் சார் வர்த்தகத்தின் முக்கியத்துவம் என்பனவற்றை நோக்கினால் இது எதிர்பார்க்கப் படாத ஒர நிலைமை அல்ல.

பணவீக்கத்துக்கான ஏனைய முக்கிய மூலங்கள்: காலநிலைக் காரணிகள், நிரம்பல் நெகிழ்ச்சியற்ற தன்மைகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற ஏனைய நிரம்பல் பக்க காரணிகள். வரவு செலவுத்திட்ட மற்றும் கடன் விரிவாக்கம் போன்ற கேள்விப் பக்க காரணிகள் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே குறிப்பிடத்தக்க பாதிப்பினை செலுத்தியுள்ளன. உதாரணமாக, 1980 களில் அரசாங்கம் மிகப் பெரிய அரச முதலீட்டு வேலைத் திட்டமொன்றை மேற்கொண்டு பிரமாண்டமான அளவிலான செலவுகளை பொருளாதாரத்துக்குள் செலுத்தியபோது, கேள்வித் தூண்டல், பணவீக்க நெருக்குதல்களுக்கு பங்களிப்புச் செய்த காரணியாக இருந்து வந்தது.

**அவ்வாறாயின், இன்று இலங்கையில் நிலவும் சார்பு ரீதியில் குறைவான பணவீக்க மட்டத்துக்கான காரணங்கள் யாவை?**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி அளவிடப்படும் வாழ்க்கைச் செலவு பற்றி நாம் நோக்குகையில், அண்மைக் காலத்தில் அச்சுட்டெண் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணம், அடிப்படை உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும், அடிப்படைச் சேவைகளின் விலை அதிகரிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பொதுசன முன்னணி அரசாங்கம் எடுத்த முயற்சியாகும் எனக் கூற விரும்புகிறேன். இவ்வகையில், மிக முக்கிய விடயம், மாவிற்குக் கொடுக்கும் மானியம் மூலம் பாணின் விலையைக் குறைத்தமையாகும். பாணின் விலைக் குறைப்பு அரிசியின் விலையிலும் ஓரளவுக்கு செல்வாக்குச் செலுத்தி



யுள்ளது. பாணும் அரிசியும் கொழும்பு நுவர்வோர் விலைச் சுட்டெண்களின் இரு மிக முக்கிய பொருட்களாகும்.

கடந்த சில வருடங்களில் மொத்த விலைச் சுட்டெண், தேசிய உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி ஆகியவற்றின் வீழ்ச்சியை நோக்கின், அதற்கு முக்கிய காரணம், ரூபாவுக்கு ஒப்பீட்டு ரீதியில் தேவைக்கு அதிகமாக பெறுமதியிடப்பட்டிருப்பதோடு இணைந்து உலகச் சந்தையில் விலைகள் வீழ்ச்சியடைந்து வந்தமையாகும் என நான் கருதுகிறேன்.

**இலங்கையின் பணவீக்கத்திற்கு நாணய ரீதியான விளக்கத்தை ஏன் நீங்கள் மறுக்கிறீர்கள் ?**

பணவீக்கம் பற்றிய நாணய ரீதியான விளக்கம் என்பதால் அறியப் படுவது ஒட்டுமொத்த விலை மட்ட மாற்றம் அதற்குச் சமாந்தரமாக பண ஒதுக்கீட்டில் ஏற்படும் மாற்றத்தின் விளைவு என்பதாகும். இப்பொழுது நாணய அதிகாரிகள் தமது கவனத்தை $M_2$ மீது செலுத்துகின்றனர். $M_2$ இல் ஏற்படும் மாற்றங்கள் (சற்றே தாமதித்து) அதற்குச் சமாந்தரமாக பொது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங் களுக்குக் காரணமாகும் என வாதிக்கப்படுகிறது. $M_2$ இன் மாற்றங் களின் மூலாதாரம் அதிசக்தி வாய்ந்த பணத்தின் மாற்றங்கள் என வாதிக்கப் படுகின்றது. இது அரசாங்கம் தனது வரவு செலவு இடைவெளியை ஈடுசெய்வதற்கு பணம் அச்சிடுவதாக அத்துடன் / அல்லது வெளிநாட்டுச் செலாவணி இருப்பை கட்டியெழுப்பிக் கொள்வதன் விளைவாகும். இந்த அணுகுமுறையின் முதற் பிரச்சினை பண நிரம்பலுக்கு ஐயத்திற்கிட மில்லாமல் ஒரு வரைவிலக்கணம் வழங்குவதாகும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக

பண நிரம்பல் பற்றி சந்தேசத்திற்கிடமின்றி வரைவிலக்கணம் கூற முடியாது என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

வரைவிலக்கணம் பற்றிய பிரச்சினையை பொருட்படுத்தாது விடலாம். எனினும், இங்குள்ள இரண்டாவது பிரச்சினை பணவீக்கம் சந்தேகமற்ற முறையில் $M_2$வின் வளர்ச்சியால் உருவாக்கப்படுகிறது என்பதனை அது தீர்க்கமாகக் காட்டுவதாகும். அவ்வாறு செய்வதற்கு, $M_2$வின் சுழற்சி வேகம் நிலையானது எனக் காட்ட வேண்டும். சுழற்சி வேகம் நிலையாக இல்லாமையே இங்குள்ள பிரச்சினையாகும். உண்மையில், ஆகக் குறைந்தது குறுங்காலத்திலாவது அது பெருமளவுக்கு மாறக்கூடியது என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பண நிரம்பல் மாற்றங்களில் ஏற்படும் தாக்கத்தை முன்கூட்டியே எதிர்வுகூறல் செய்வது சாத்தியமற்றதாகும்.

இறுதியாக, பணநிரம்பலை உண்மையில் கட்டுப்படுத்துவது பற்றிய பிரச்சினை உள்ளது. திரவத் தன்மையின் பால் செல்வாக்குச் செலுத்துவதற்கு அரசுக்கு இயலுமாயினும், இருப்பில் உள்ள பண இருப்பின் வளர்ச்சியை முன்னுணரக் கூடிய விதத்தில் அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாது என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். மேலும், பணத்தின் விலையையன்றி அதன் அளவினைக் கட்டுப்படுத்த எடுக்கும் முயற்சி, வட்டி விகிதங்கள் தாங்க முடியாதளவுக்கு உயர்ந்து செல்வதுடன் இணைந்த விதத்தில் கடுமையான நிதி நெருக்கடிக்கு வழிகோலுகின்றது.

**அரசாங்கத்தால் பண நிரம்பலைக் கட்டுப்படுத்த முடியாது என நீங்கள் நினைப்பதற்குக் காரணம் கூற இயலுமா ?**


இலங்கையின் பணவீக்க விகிதம் தென்னாசியாவின் சராசரி விகிதத்தை விட அதிகம் உயர்ந்தது அல்ல; அத்துடன், துரித அபிவிருத்தி நிகழும் ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் அது மிக அதிகமும் அல்ல.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு இயலாது போகக் காரணம், மேற்கூறப்பட்டவாறு முன்கூட்டியே சொல்லத்தக்க வகையில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியாத பல சக்திகளை உள்ளிட்ட பல்வேறு சக்திகளை பண நிரம்பல் கொண்டிருப்பதாகும். உதாரணமாக, $M_2$வின் அமைப்பினைப் பாருங்கள். $M_2$வின் அதிகப் பகுதி சேமிப்புக்களையும் வைப்புகளையும் கொண்டதாகும். பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளின் பலனாக, வட்டி விகிதங்கள் உயரும் போது சேமிப்புகளும் நிலையான வைப்புகளும் பொதுவாக அதிகரிக்கின்றன. இதன் விளைவு என்னவெனில், பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளின் விளைவாக $M_2$ விரிந்து செல்வதாகும்.

இறுதியாக, மொத்த பொருளாதார நடவடிக்கைகளைக் குறைப்பதன் மூலம் மட்டுமே அரசு $M_2$இன் வளர்ச்சியை கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு செய்யுமிடத்து, கம்பெனிகள் வங்குரோத்து அடைகின்றன; தொழில் இழப்புக்கள் ஏற்படுகின்ளன. இதன் விளைவு வட்டி விகிதம் எந்தளவு உயர்ந்தாலும் வங்கிகளில் வைப்புகள் குறைவதாகும்.

**அவ்வாறாயின், திரவத்தன்மை பற்றிய தற்போதைய பிரச்சினை, பண நிரம்பலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சியோடு தொடர்புடையதா ?**

ஆம். ப்ண நிரம்பலின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிக்குக் காரணமாகக் கூடிய திரவத்தன்மைப் பிரச்சினை வெளிநாட்டுச் செலாவணிச் சொத்துக்களின் உருவாக்கத்தால் தவிர்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன் திரவத்தன்மையை அளிக்காது விடும் அரசின் கொள்கையில் தீய விளைவுகள் தென்படத் தொடங்கியுள்ளன. மேலதிகத் திரவத்தன்மைக்காக இவ்வமைப்பு முறையின் கேள்வியை ஈடுசெய்வதற்கு முடியுமான வெற்றிகரமான பொறிமுறையொன்று இல்லாததால் திரவத்தன்மை தொடர்பான நெருக்கடி தோன்றியுள்ளது. இந்



நெருக்கடி நிலைமையின் மிகத் தெளிவான வெளிப்பாடுகளாக இருப்பது உயர்ந்த நிலையற்ற அழைப்புப் பணச்சந்தை விகிதங்களாகும். அரசு பின்வரும் விடயங்களில் ஒன்றை அல்லது இரண்டையும நிறைவேற்றினால் தற்போதைய திரவத்தன்மைப் பிரச்சினையை இலகுவாகத் தீர்க்கலாம்:

❑ திரும்ப கொள்வனவு செய்யும் உடன்படிக்கைகளை அறிமுகப் படுத்துதல்;

❑ அதிகரித்து வரும் திறைசேரி உண்டியல் வட்டி விகிதங்களின் மத்தியில் திறைசேரி உண்டியல் இருப்பை கட்டியெழுப்பிக் கொள்ளுதல்.

அபிவிருத்தியும் தேசிய நிதியின் வளர்ச்சியும் கவனத்தில் கொள்ளப்படாது குறுங்கால ரீதியில் கிடைக்கும் நலன்களைக் கருத்தில் கொண்டு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்படும் நட்டம் மிக அதிகமாகும்.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அளவினைக் கட்டுப்படுததுவதற்கு அரசு தவறியமையால் பணவீக்கம் தோன்றியுள்ளது என நீங்கள் கருதுகிறீர்களா ?**

அது பணவீக்கத்தின் மீது குறிப்பிட்டதொரு பாதிப்பினைச் செலுத்தியதாகலாம்; ஆனால், தற்போதைய சிந்தனைப்போக்கு குறித்துக் காட்டும் அளவுக்கு அது இடம் பெறவில்லை. தற்போதைய பொதுவான கருத்துப்படி, வ.செ.திட்டப் பற்றாக்குறையை நிதிப்படுத்துவதற்கு பணத்தை அச்சிட்டால் மட்டுமே அது பண

( 36 ஆம் பக்கம் பார்க்க)

# பணவீக்கம் மற்றும் உலக நெருக்கடி என்பன குறித்த சில குறிப்புக்கள்



கலாநிதி என்.எம்.பெரேரா

*உலக உணவு உற்பத்தியை அதிகரித்தல் ஆபத்தானது*

*உலகின் பிரதான தானிய வகைகளின் அதிகரித்த உற்பத்தி யானது சனப் பெருக்கத்தினை எதிர்கொள்ள முடிந்தபோதும், விரயமிக்க அபரிமித உற்பத்தியை ஏற்படுத்தி, சர்வதேச வர்த்தகத்தை நலிவடையச் செய்துவிடும். நியூயோர்க் டைமஸ், 14 ஏப்ரல், 1969*

*இராணுவமயமும் பணவீக்கமும் சியாமிய இரட்டையர்*

*இன்றைய சகாப்தத்தில் தேசிய சர்வதேசிய முரண்பாடுகள், ஒருபோதும் இல்லாத அளவுக்கு ஆயுத உற்பத்தியை பெருக்கி யுள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அபிவிருத்தி யடைந்த, அபிவிருத்தி யடைந்துவரும் முதலாளித்துவ நாடுகள் கெய்ன்சிய பணவீக்க கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப் பட்டுள்ளன. இராணுவமயமும் பணவீக்கமும் இணைந்த இரட்டைக் குழந்தைகள்; ஒன்றில் அவை ஒருமித்து வளர்ச்சியடைய வேண்டும்; இல்லையேல் இணைந்து மடிதல் வேண்டும். மன்த்லி ரிவியூ செப். 1973*

பணவீக்கம் என்ற பதத்தின் பொருளினை தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகும். ஏதாவது ஒரு பண்டத்தின் விலை அதிகரிப்பு பணவீக்கத்தின் தாக்கம் என பொதுவாகக் கொள்ளப்படுகிறது. ஐ.தே.க. ஆட்சியில் பணவீக்கம் தோன்றவில்லையா என்ற வினா ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினரான ஆர்.பிரேமதாஸாவால் அண்மையில் நாடாளுமன்றத்தில் ஏழுப்பட்டது. அவர் குறிப்பால் உணர்த்திய விடயம் பணவீக்கம் உலகிற்கு எவ்விதத்திலும் புதயதொன்றல்ல; அது ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலும் (1965-70) நிலை கொண்டிருந்தது என்பதாகும். பணவீக்கம் என்பது இந்த அரசால் மட்டும் எதிர்நோக்கப்படும் ஒரு பிரச்சினையல்ல என்பதனை எடுத்துரைப்பதே அவரது நோக்க மாகும்.

பணவீக்கம் என்று குறிப்பிடும் போது அது ஓரிரு அல்லது சில பண்டங்களின் விலை உயர்வினைக் குறிப்பதல்ல; ஆனால், அனைத்துப் பண்டங்களினதும் சந்தை விலையில் ஏற்படும் அதிகரிப்பை காட்டுவதாகும். அரசு பணத் தாள்களை அச்சிடுவதன் மூலம் பணவீக்கத்தை ஏற்படுத்த முடியும். இது பல நாடுகளிலும் நிகழ்ந்ததொன்று. அரசு கட்டுப் பாடற்ற நிலையில் பணத்தை அச்சிட்டமையால் 1925 ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஏற்பட்ட பணவீக்க நிலை விலைவாசிகளை வானளாவ உயர்த்தியமை அண்மைக் கால குறிப்பிடத்தக்க இரண்டு உதாரணங்களுள் ஒன்றாகும். ஒரு பாணின் விலை மில்லியன் கணக்கான மார்க்குகளையும் இறைச்சியின் விலையும் அதே அளவிலான அதிகரிப்பினையும் எட்டிப் பிடித்தது. இதன் விளைவு ஜேர்மனியர் கொள்வனவிற்காக சந்தைக்குச் செல்கையில் பணத்தினை வண்டிகளில் ஏற்றிச் செல்லும் நிலை ஏற்பட்டமை யாகும். இதே நிலை இந்தோனேஷியா விலும் ஏற்பட்டது. எனினும், ஜேர்மனியில் ஏற்பட்ட அளவு மோசமான நிலை இந்தோனேஷியாவில் ஏற்படவில்லை. பணத் தாள்களை அச்சிட்டதன் மூலம் இந்தோனேஷிய ருப்பியாவின் பெறுமதி கீழ் மட்டத் திற்குத் தாழ்ந்தது.

பொதுப்படையாக நோக்கின் இருவகையான பண வீக்க முறைகளை இன்று அடையாளம் காண முடியும். முதலில், கேள்வித் தூண்டல் பண வீக்கம்; கேள்வி, நிரம்பலிலும் பார்க்க அதிகரிக்கும் வேளையில், இவ்வித பணவீக்கம் இயல்பாக ஏற்படும். பல்வேறு காரணிகளால் பண்டங்களின் நிரம்பல் கணிசமான அளவு வீழ்ச்சி யடையும் போது, சம்பள அதிகரிப்பில் வீழ்ச்சியேற்படாதவிடத்து பொது விலை மட்டம உயர்வடையும். உலக தானிய உற்பத்தி வீழ்ச்சியடையும் வேளையில் சகல உணவுப் பொருட்களும் சடுதியான விலை உயர்வுக்குட்படும். இது காரணமாக ஏனைய பொருட்களின் விலை மட்டமும் உயர்வடையும். இன்று இத்தகைய நிலை உலகம் பூராவும் எதிர்கொள்ளப் படுகிறது.

மோசமான விளைச்சல் காரண மாக சகல விவசாய உற்பத்திகளினதும் -குறிப்பாக, தானிய வகைகளின்-விலை மட்டம் உச்ச கட்டத்தை அடைந் துள்ளது. இத் தாக்கம் ஆபிரிக்க ஆசியக் கண்டங்களில் மட்டுமல்லாது ஐரோப்பாவிலும் கூடவே ஏற்பட் டுள்ளது. இந்நிலைமை பணவீக்க அமுக்கத்தை தோற்றுவிக்கிறது. அத்தி யாவசிய உணவுப் பண்டங்களின் விலை உயர்விற்கேற்ப, தொழிலாளர் களின் சம்பாதிக்கும் திறன் உயர்வடைதல் வேண்டும். இது மேலும் விலைமட்டத் தினை உயர்வடையச் செய்யும். மறுபுறம், விவசாயிகள் ஏற்கனவே நிரம்பல் குறைவாக இருக்கும் தமது உற்பத்திகளுக்கான விலையை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர். விவசாயிகளின் அதிகரித்த கொள்வனவு சக்தியானது ஏனைய பொருட்களின் விலையை மேலும் உயர்வடையச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொது விலை மட்டத்தின் அதிகரிப்பானது, சங்கிலித் தொடர் போன்று ஒன்றின் விலை உயர்வு ஏனையவற்றின் விலையையும் உயர்வடையச் செய்யும் என்பது பணவீக்கத்தின் வெளிப்படையானதோர் அம்சமாகும்.

இரண்டாவது வகையான பணவீக்கம் செலவுத் தூண்டல் பணவீக்கம் எனப்படும். காரணிச் செலவு அதிகரிப்பு, விலைகளில் ஏறுமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தும். எனினும், இருவகையான பண வீக்கங்களும் ஒரே விதமான விளைவுகளையும், எதிர் விளைவுகளையுமே ஏற்படுத்துகின்றன. விவசாய மூலப்பொருட்களை உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பின் விளைவாக உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பும் செலவுத் தூண்டல் பணவீக்க நிலைமைக்கு காரணியாக அமையலாம். இதன் இறுதியான விளைவு பொது விலை மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பாகும்.

நிஜ வாழ்வில் இவ்விரண்டிற்குமான வேறுபாடு தெளிவாகத் தோற்றமளிப்பதில்லை. எனினும், இவை பகுப்பாய்விற்கு பயன்தரும் தகவல்களாகும். இருந்தபோதும் இவ்வேறுபாடுகள் வெளிப்படுத்தும் யதார்த்தத்திலிருந்து உலகளாவிய நெருக்கடியினை நாம் அவதானிக்கத் தவறலாகாது. அர்த்தமற்ற வியட்நாமிய யுத்தத்திற்காக கோடிக் கணக்கான டொலர்கள் அழிவின் நிமிர்த்தம் விரயமாக்கப்பட்டமை பாரிய அளவு கேள்வியை ஏற்படுத்தியது. இக்கேள்வியை எதிர்கொள்ள எத்தகைய பண்ட உற்பத்திகளும் இடம்பெற வில்லை. இராணுவத்தை வாபஸ் பெற்றதன் மூலம், அமெரிக்கா இதுவரை யுத்த தளபாட ஏற்றுமதி மூலம் அனுபவித்து வந்த உபரி வியாபார நிலுவையை இழக்க நேரிட்டது. ஆயுத ஏற்றுமதி வீழ்ச்சிகண்டு, வர்த்தக நிலுவை பாதகமான நிலையை எட்டியது. அமெரிக்கா கடைப்பிடித்த தூரதரிசன மற்றதும், விவேகமற்றதுமான கொள்கை காரணமாக சர்வதேச மூலதனச் சந்தையில் பாரிய அளவில் டொலர் ஒதுக்குகள் கட்டியெழுப்பப் பட்டன. இந்த மேலதிக டொலர்கள் உரிய உரிமையாளர்களைச் சென்றடையவில்லை. பதிலுக்கு ஒரு நிதி நிலையத்திலிருந்து மற்றொன்றிற்கு ஊக அடிப்படையில் நகர்வதன் மூலம் அதிக வட்டியினை சம்பாதிக்க முடிந்தது. ஐரோப்பாவில் பெருமளவு டொலர்கள் நிலைகொண்டிருத்தல் மேற்கத்திய உலகையே பாதிப்பதாகும். இம் மூலதன நகர்வை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு உலகப் பெரும் முதலாளி வகுப்பினர் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

ஊக மூலதனம் குறிப்பாக ஐரோப்பாவிற்குள் நகர்த்தப்பட்டமை பிரித்தானியா, பிரான்ஸ், மே.ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் சென்மதி நிலுவையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. நாணயப் பெறுமதிக் குறைப்பு போன்ற தற்காலிக நடவடிக்கைகள் எவ்வித பொருளாதார நிவாரணத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்நாடுகள் தொடர்ச்சியாக இடர்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது மத்திய கிழக்கு யுத்த நிலைமையும் அதன் தொடர்பான தொடர்ச்சியான எண்ணெய் விலை அதிகரிப்பும் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது. எரிபொருள் விலையேற்றம், அரிசி, கோதுமை, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துடன் இணைந்து உலகளாவிய பணவீக்க நிலையைத் தோற்றுவித்துள்ளது.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ நாடுகளில் வாழும் வறிய மக்களுக்கு சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்தியுள்ளது. வளர்முக நாடுகளில் வாழும் வறிய மக்களுக்கு இந்த உலக நெருக்கடி எடுத்து வந்துள்ள தாக்கம் மிக மோசமானதாக உள்ளது. மோசமான விளைச்சலும் பணவீக்க நிலையும் பெரும்பாலான மத்திய ஆபிரிக்க நாடுகளின் உற்பத்தித் துறையில் அழிவை ஏற்படுத்தியுள்ளன. இந் நாட்டு மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளனர். இந்தியாவிலும் பங்களா தேஷிலும் இடம்பெறும் பட்டினிச் சாவுகளை நாம் புறக்கணித்து விடமுடியாது. இலங்கையர்களாகிய நாம் சற்று



அதிர்ஷ்டமுடையவர்கள்; இந்தப் பொருளாதார நெருக்கடியினை தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் உள்ளோம். உரிய நேரத்தில் மேற் கொள்ளப்பட்ட உணவு உற்பத்தி ஊக்குவிப்பிற்கு நாம் நன்றிக் கடன் உடையவர்களாவோம்.

இருந்தபோதிலும், பலர் தட்டுப்பாடுகள் காரணமாக் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. இத்தகைய நிலைமையை தாங்கிக் கொள்ளும் சக்தியை மக்கள் வரவர இழந்து வருவது கண்கூடு. பட்டினிச் சாவுகள் தவிர்க்கப்படல் சாத்திய மாகவே உள்ளது. பணவீக்க நிலையினை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய சோஷலிச நாடுகளின் ஆற்றல் குறிப்பிடத்தக்கதாகும். இருந்த போதிலும், பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து அவர்களால் முழுமையாகத் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இத்தகைய நாடுகளிலும் விலையேற்றம் ஏற்பட்டது. இதன் தாக்கம் அதிகரிக்காமல் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. சிறு அளவிலான சென்மதி நிலுவைப் பாதிப்பே ஏற்பட்டது. இவை திட்டமிட்ட உற்பத்தியினதும் சிறந்த பொருளியல் முகாமைத்துவத்தினதும் விளைவாகும். இந்நாடுகள் தமது நாட்டுப் பாட்டாளிகளின் வாழ்க்கைத் தரம் மோசமாக நலிவடைவதை தடுக்க முடிந்தது. சோஷலிச பொருளாதார அமைப்பில் நம்பிக்கை அற்றவர்களுக்கு இது நல்லதோர் படிப்பினையாகும். சகல பொருளியல் திரிபுவாதிகளும் தாம் சில தனி நபர்களின் சுயநல இலாபத்திற்காக துணைபோவதை அறிந்து கொள்ள முடியும்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ பொருளியலாளர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தகையவர்

( 43 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதார கொள்கை சீர்திருத்தங்களின் பின்விளைவாக பணவீக்கம்

டப்.ஜீ.எஸ். வைத்தியநாத

"பொருளாதாரத்தில் பொது விலை மட்டங்கள் அதிகரிப்பதே பணவீக்கமாகும்" என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, ஊழியச் செலவு உட்பட உற்பத்திச் செலவுக்குச் சமாந்தரமாக விலை மட்டம் உயரும் பொழுது பணவீக்கம் தீங்கான ஒன்றாக இருப்பதில்லை. எவ்வாறாயினும், பொருட்கள், சேவைகளின் விலை மட்டங்கள் உயரும் நிலையில் ஊழியத்திற்கான வேதனம் மாறாமல் இருக்கும் பொழுது அல்லது விலை அதிகரிப்போடு ஒப்பிடுகையில் அவை மிகக் குறைந்த அளவில் உயரும் பொழுது சிக்கல் ஏற்படுகின்றது.

முக்கிய இரண்டு காரணங்களை யிட்டு பணவீக்கம் தோன்றலாம்:

(அ) விற்பனைக்கான பண்டங்கள், சேவைகளின் நிரம்பலுடன் சார்பு ரீதியில் மொத்தச் செலவு உயர்தல். இதன் பொருள், பண்டங்கள், சேவைகள் என்பவற்றின் தொகையை பெருமளவில் பணம் துரத்திச் செல்வதாகும். இப் பணவீக்கம் ஒன்றில் மிகை பண நிரம்பலினால் அல்லது பொருளாதாரத்தின் மிகைக் கேள்வியினால் ஏற்படுகின்றது. இவ்வாறு தோன்றும் பணவீக்கம் கேள்வித் தூண்டல் அல்லது கேள்விப் பக்க பணவீக்கம் என அழைக்கப்படுகின்றது.

(ஆ) வெளிவாரியான காரணிகளால் விலை மட்டங்கள் உயர்தல்; உதாரணமாக, உலகச் சந்தை விலை மட்டங்கள் உயர்தல்; அல்லது சர்வதேச பணத்துக்கு எதிராக பரிமாற்ற செலாவணி விகிதங்கள் பெறுமதியிறக்கம் அடைதல். இது நிரம்பல் துறைப் பணவீக்கம் எனப்படும்.

காரணம் எதுவாயினும் பணவீக்கத்தின் மொத்த விளைவு, பணத்தினதும் கொள்வனவுச் சக்தியினதும் பெறுமதிக் குறைப்பாகும். அவ்வாறே கேள்வித் தூண்டல் பணவீக்கம் அல்லது கேள்விப் பக்க பணவீக்கம் பிரதானமாக இரண்டு காரணங்களினால் ஏற்பட முடியும் என வாதிடப்படுகின்றது :

1. விரிவடைந்து வரும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை

2, கடன் நிதிப் பரவல்

எனவே, இலங்கையில் ஏற்பட்ட உயர் பணவீக்க தாக்கத்துக்கு எக்காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன என்பதை அறிந்து கொள்வது இங்கு முக்கியமாகும். இங்கு 1977 க்குப் பிற்பட்ட காலப் பகுதியே பிரதானமாக நோக்கப்படுகின்றது. அதற்குக் காரணம், புதிய பொருளாதாரக் கொள்கைச் சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் பணவீக்கத்தின் தாக்கம் இக்காலப் பகுதியிலேயே மிகவும் பாரதூரமாக உணரப்பட்டமையாகும்.

திறந்த பொருளாதாரக் கொள்கை உபாயங்களின் அடிப்படையிலான கொள்கைக் குறிக்கோள்களை விவேகபூர்வமானவையாக் மாற்றுவதற்கும், நிலைநிறுத்துவதற்குமென 1977 இல் இருந்து அரச இறைக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் செலவுகள் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு உயர்ந்தன, மூலதனவாக்கம், சேமிப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் முயற்சியாக அரசாங்கம் பாரிய முதலீட்டு நிவாரணங்களையும், கழிவுகளையும் மூலதனக் கொடுப்பனவு களையும் முதலீட்டாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. கைத்தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க நிவாரணங்கள் வழங்கப்பட்டதுடன், உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் உற்பத்திக்கும் முதலீட்டுக்குமென வரிச் சலுகைகளும் அளிக்கப்பட்டன. அதன்படி, 1977 இல் 8813 மில்லியன் ரூபாவில் இருந்து, 1978 இல் 18,853 மில்லியன் ரூபாய் வரை அரசின் செலவு உடனடியாக 114% ஆல் அதிகரித்தது. அது 1982 இல் 40,479 மில்லியன் ரூபாய் வரை அதிகரித்ததோடு, 1977 இன் புள்ளிவிபரங்களோடு ஒப்பிடும் போது அது 359% அதிகரிப்பாக இருந்தது. 1990, 1993 வருடங்களில் இது முறையே 114,909 மில். ரூபாவாகவும், 196,785 மில். ரூபாவாகவும் மேலும் விரிவடைந்தது.

அவ்வாறே வரவு செலவுப் பற்றாக்குறை 1977 இல் 2127 மில். ரூபாவில் இருந்து 1978 இல் 7165 மில். ரூபாய் வரையும், 1982 இல் 21,160 மில். ரூபா வரையும் அதிகரித்தது. இது முறையே 236.9%, 894.8% அதிகரிப்பாகும். 1990, 1993 வருடங்களில் அறிக்கையிடப்பட்ட மேற்கண்ட செலவின் காரணமாக அவ்வாண்டுகளில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது, முறையே 44,060 மில். ரூபாவாகவும், 90,465 மில். ரூபாவாகவும் இருந்தது.

அதிகரித்து வரும் செலவுக்கு ஏற்றபடி வருமானம் அதிகரிக்காமையால் பாரிய வரவு செலவுத்திட்ட இடைவெளி தோன்றியது. இப்பற்றாக் குறையை நிரப்புவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

வசெநி நோக்கங்களுக்காக உள்நாட்டுச் சந்தை கடன்படல்கள்

| வருடம் | வங்கியல்லாத மூலங்களிலிருந்து கடன்படல் (ரூ.ப.இ.) | வங்கி மூலங்க; ளிலிருந்து கடன்படல் (ரூ.ப.இ.) | வசெநி பற்றாக்குறை (ரூ.ப.இ.) |
|---|---|---|---|
| 1979 | 3,902 | 680 | 8,719 |
| 1980 | 2,485 | 7,126 | 16,274 |
| 1981 | 2,779 | 3,917 | 14,866 |
| 1982 | 7,606 | 4,006 | 20,091 |
| 1983 | 7,761 | 927 | 21,329 |
| 1984 | 5,685 | 2,644 | 15,861 |
| 1985 | 10,520 | 7,451 | 25,675 |
| 1986 | 9,838 | 2,299 | 28,070 |
| 1987 | 7,283 | 3,306 | 27,342 |
| 1988 | 12,227 | 11,289 | 43,242 |
| 1989 | 17,601 | 1,132 | 37,723 |
| 1990 | 20,351 | 3,549 | 44,060 |
| 1991 | 28,259 | 3,464 | 62,889 |
| 1992 | 31,670 | - | 66,980 |
| 1993 | 57,415 | 1,500 | 90,465 |
| 1994 | 27,734 | | 65,845 |

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி

அரசாங்கம் கடன் பெற வேண்டி இருந்தது. இம் மொத்தக் கடனில் ஒரு பகுதி சந்தை அல்லாத மூலங்களிலிருந்து சந்தைக் கடன்களாகவும் உள்நாட்டு மூலங்களில் இருந்து பெறப்பட்டது. அரச வரவு செலவுப் பற்றாக்குறையை ஈடுசெய் வதற்கு உள்நாட்டு நிதிச் சந்தை, வங்கித் துறை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட சந்தைக் கடன்கள் பணவீக்கத்துக்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணியாக இருந்தது.

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் என்பன மூலம் வழங்கப்பட்ட வங்கிக் கடன்களின் வளர்ச்சியினை அட்டவணை 1 இல் கண்டு கொள்ளலாம்.

எவ்வாறாயினும், கீழ்வரும் வழிமுறைகளைப் பின்பற்றியதன் மூலம் குறிப்பிட்டளவிலானதொரு கட்டுப் பாட்டினை வைத்துக் கொள்ள முடிந்தது:

(அ) செலவாணி விகித பெறுமதி யிறக்கத்தின் தீய பாதிப்புகளில் இருந்து நமது வெளிநாட்டுச் சொத்துக்களை முடிந்தளவுக்குப் பாதுகாத்துக் கொள்ளல்.

(ஆ) பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்காக அரசாங்க நிதிக் கொள்கைகளை அமைத்தல்.

அவ்வாறே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புத் தேவைகளுக்காகப் பணம் திரட்டும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வரியும், அரசின் அவசர நிதித் தேவை

அட்டவணை 2

| | இறக்குமதி விலை | கொநுவிசு (1952=100) |
|---|---|---|
| 1985 | 100.0 | 561.2 |
| 1986 | 100.2 | 606.0 |
| 1987 | 111.9 | 652.8 |
| 1988 | 137.5 | 744.1 |
| 1989 | 164.8 | 830.2 |
| 1990 | 209.4 | 1,008.6 |
| 1991 | 217.5 | 1,131.5 |
| 1992 | 237.8 | 1,260.4 |

களை ஈடு செய்துகொள்ளும் தற்காலிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட மின்சார பற்றுச் சீட்டுக்கள் மீதான மிகை அறவீடும் உள்வாரியான நடவடிக்கைகள் சிலவாகும். இவை முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட நீண்ட காலம் செயற்படுத்தப்பட்டு வந்தன.

இறக்குமதித் தீர்வையும் நேர்வரிக் குறைப்பு, நுகர்வுப் பொருட்கள் மீதான நேரில்வரி, நாட்டின் வரி அமைப்பினை விரிவாக்குவதன் மூலம் நுகர்வுப் பொருள் உற்பத்தி மீது புதிய உற்பத்தி வரியை அறிமுகப்படுத்தல் என்ற நடவடிக்கைகளின் பலனாக விலை மட்டம் மேலும் அதிகரித்தது. மேலும், பல்வேறு நடுவர்கள், வர்த்தகர்கள் மூலம் வைத்துக் கொள்ளப்பட்ட உயாநத இலாப எல்லைகளை, விலை மட்டங்களை உயர் மட்டத்தில் வைத்துக் கொள்வதற்குக் காரணமாகிய மற்றொரு காரணியாகக் குறிப்பிடலாம்.

அட்டவணை 3

சராசரி வருடாந்த பணவீக்க விகிதம் 1980-1990 (ஆசிய நாடுகள்)

| | |
|---|---|
| இலங்கை | 11.2 |
| நேபாளம் | 9.1 |
| பங்களாதேஷ் | 9.3 |
| இந்தியா | 8.2 |
| பாகிஸ்தான் | 7.0 |
| இந்தோனேஷியா | 8.5 |

ஆதாரம் : மத்திய வங்கி ஆண்டறிக்கை.

பணவீக்கத்தைக் குறைப்பதற்கு அரசினால் எடுக்கப்படும் நடவடிக்கை, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு பணவீக்க இயல்பு வாய்ந்த கடன்களைப் பெறுவதைக் குறைப்பதும், திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி விகிதங்களைக் குறைப்பதுமாகும். இது பணவீக்கம் உயர்வதற்கு அடிப்படைக் காரணமாகியதால் வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு வங்கித் துறையைப் பலவந்தப்படுத்துகின்றது. இவ்வாறான எல்லா முயற்சிகளின் மத்தியிலும் அண்டைய ஆசிய நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கை இன்னும் உயர் பணவீக்க விகிதத்தைக் கொண்ட ஒரு நாடு என்பது நன்கு தெளிவாகும்.

( 32 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீக்கத்தை தோற்றுவிக்கிறது. பொது மக்களிடம் கடன் வாங்குவதன் மூலம் அப்பற்றாக்குறை நிரப்பப்பட்டால் அதன் ஒரே விளைவு தனியார் துறையில் ஏற்படும் பாதிப்பாகும். அதன் மூலம் அபிவிருத்திக்குத் தீங்கு நேரிட அதிகளவுக்கு வாய்ப்புண்டு. கடந்த வருடத்தில் அல்லது இந்த வருடத்தில் பணம் அச்சிடப்படாமையால் (ஏற்கப்பட்ட கருத்துக்கு அமைய) வ.செ.இடைவெளி காரணமாக பணவீக்க விளைவுகள் ஏற்பட இடமிருக்கவில்லை.

எவ்வாறாயினும், வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது பொதுக் கேள்வி நெருக்குதல்களை –

( 41 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்கத்துக்கூடாக மூலதனவாக்கம் : பணவீக்க வரியின் அவசியம்

டப். ஏ. விஜேவர்தன



டப்.ஏ. விஜேவர்தன இலங்கை மத்திய வங்கியின் கிராமியக் கடன் பிரிவின் பணிப்பாளரும் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய பல்கலைக் கழகங்களின் வெளிவாரி விரிவுரையாளரும் ஆவார்

உயர் வளர்ச்சி வேகத்தை தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான முதலீட்டு அளவோடு ஒப்பிடும் பொழுது, உள்நாட்டுச் சேமிப்புகளின் போதாக்குறை வளரும் நாடுகள் எதிர் நோக்கும் ஒரு முக்கிய அபிவிருத்தி சார் பிரச்சினையாகும். அதன் விளைவான இந்நாடுகளின் சேமிப்பு-முதலீடு இடையிலான இடைவெளி பல்வேறு கொள்கைகளுக்கூடாக நிதிப்படுத்தப் படுகிறது. அரச கட்டுப்பாட்டின் மூலம் உள்நாட்டுச் சேமிப்புக்களை அதிகரித்தல், பணவீக்கத்தின் மூலம் பலவந்தமாகச் சேமிப்பினைத் தோற்று வித்தல், வெளிநாட்டுக் கடன் வரவுகளை அதிகரித்து, வெளிநாட்டுச் சேமிப்புகளை நேரடி முதலீடுகளுக்கும் மூலதனச் சந்தைகளுக்கும் கவர்ந்து கொள்ளல் என்பன இதிலடங்குகின்றன. 1978-1984 காலப் பகுதியில் தேசிய உற்பத்தியில் 6.5% ஆன சேமிப்பு-முதலீட்டு இடைவெளியை அனுபவித்த இலங்கை, அநேகமாக மேற்கூறப்பட்ட உபாய வழிமுறைகள் அனைத்தையும் செயற்படுத்தியது. அவற்றுள் பணவீக்கத்தின் மூலம் பலவந்தமாகச் செய்யப்படும் சேமிப்பு அல்லது பணவீக்க வரிப் பிரயோகம் விசேடமாக 1978 இன் பின்னர் நாட்டின் கொள்கை உபாய வழிமுறைகளில் முக்கிய இடத்தை வகித்தது. இக்கட்டுரையின் நோக்கம், பணவீக்க வரியின் தேவையை மதிப்பிடுதல், அண்மித்த கடந்த காலத்தில் அது இலங்கையில் பிரயோகிக்கப்பட்ட அளவினை ஆய்வு செய்தல், பணவீக்க வரியைத் தொடர்ந்தும் விதிப்பதால் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தீய விளைவுகளை வலியுறுத்திக் காட்டல் என்பனவாகும்.

## பணவீக்க வரியின் தேவை

வளர்ந்துவரும் நாடுகளின் துரித வளர்ச்சிக்கு பாதைகள், நீர்ப்பாசன அமைப்புகள், அடிப்படைக் கைத்தொழில்கள், கல்வி வசதிகள் என்பன முக்கிய தேவைகளாக உள்ளன. எவ்வாறாயினும், இம் முதலீடுகளின் இயல்பு காரணமாக மேற்படி வசதிகளுக்காகச் செய்யப்படும் அதிக செலவுகளின் பயன்களைப் பெற நீண்ட காலம் எடுப்பதாகும். இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தனியார் துறையினர் முற்படுவது மிக அரிதாகும். எனவே, வளர்முக நாடுகளில் இவ்வசதிகளை உருவாக்கிக் கொடுக்கும் சுமை தனியார் துறையை விட அரசாங்கத் துறை மீதே ஏற்றப்படுகின்றது. அரசாங்கம் இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நடைமுறைக் கணக்குகளின் மிகையினை ஏற்படுத்துவதன் மூலம் வரவு செலவில் போதிய சேமிப்பை ஏற்படுத்துவதே அடிப்படைத் தேவையாக அமைகின்றது. எவ்வாறாயினும், பல இடையூறுகள் காரணமாக நடைமுறைக் கணக்கில் அத்தகையதொரு மிகையை ஏற்படுத்துவதும், அதன் மூலம் தேவையான மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்காக அதனைப் பிரயோகிப்பதும் வளர்முக நாடுகளின் அரசாங்கங்களுக்குக் கிரமமாக உள்ளது. நடைமுறைச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் சாத்தியம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், அரசு தனது வரி வருமானங்களை பெருக்கி சேமிப்பைத் தோற்றுவிப்பதே அதற்குள்ள மாற்று வழியாகும்.

எனவே, வளர்முக நாட்டு அரசாங்கங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக வரி வருமான விகிதத்தை ஏற்றுக்கொள்ளத் தக்க ஒரு மட்டத்திற்கு உயர்த்துவது அவசியமாகும். பல வளர்முக நாடுகளில் இப்போதுள்ள வரி விகிதம் 20% க்கும் குறைவாகும். இவ்வகையில் இலங்கையும் ஒரு விதிவிலக்கல்ல. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையின் வரி விகிதம் 18% க்கும் குறைந்த மட்டத்தில் இருந்துள்ளது. அரசாங்கத்தால் செய்யப்படும் வரி ஆக்கத்தின் அளவு போதாது என்பதையே அது காட்டுகின்றது.

அட்டவணை 1

இலங்கை : சராசரி வரி - மொ.உ.உ விகிதம்

| காலம் | வரி / மொ.உ.உ விகிதம் (%) |
|---|---|
| 1970 - 77 | 15.8 |
| 1978 - 88 | 18.4 |
| 1989 - 94 | 18.3 |

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி

பெறத்தக்க வரி வருமானங்களைச் சேகரிப்பதற்கு வளர்முக நாட்டு அரசாங்கங்கட்கு முடியாமற் போவதற்கான காரணங்கள் பல்வேறுபட்டவை:

(1) முன்னணி பணப் பொருளாதாரமொன்று இல்லாமையும், அதனால் பிழைப்பூதிய விவசாயம் செய்யும் விவசாயிகளை வரி அறவீட்டு அதிகாரிகள் அணுக முடியாமல் இருப்பதும்.

(2) பிழைப்பூதிய விவசாயிகளிடையில் நிலவிவரும் குறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளவு எழுத்தறிவு; அதன் விளைவாக, நேரடியாக வரி அறவிடும் முறைகள் மூலம் அவர்களை அணுகுவதற்கு வரி அறவீட்டாளர்கட்கு கஷ்டமாக இருத்தல்.

(3) நேர்மை, நம்பகத்தன்மையுடன் கூடிய கணக்குப் பதிவுகள் இல்லாமை.

(4) தேசிய வருமானத்தின் ஏற்றத் தாழ்வான பங்கீடு.

(5) வரி ஏய்ப்பு பரவலாக நிலவுதல்.

(6) குறைந்த தலா வருமானம் காரணமாக பல ஆட்கள் வரியில் இருந்து விடுவிக்கப்படல்

மேற்கூறப்பட்ட காரணங்களால் உண்மையான வரி வருமானத்தை அது இருக்க வேண்டிய மட்டத்தில் வைத்துக் கொள்வது கஷ்டமாக உள்ளது. இதன் ஒரு விளைவாக, பல அரசாங்கங்கள் தனியார் துறையில் இருந்து அரசுத் துறைக்கு கட்டாயமாகவே வளங்களை மாற்றும் வழிமுறையாக பணவீக்கத்தைப் பயன்படுத்தியுள்ளன.

பணவீக்கத்துக்கூடான பலவந்தமான சேமிப்புப் பொறிமுறை பின்வரும் வடிவத்தைப் பெறுகின்றது. அரசாங்கம் மத்திய வங்கி மூலம் பணத்தை அச்சிட்டு, மூலதனச் செலவுகளுக்கு நிதியீட்டம் செய்தால் பொருளாதாரத்தில் மேலதிக பண வருமானம் உருவாக்கப்படுகின்றது. மத்திய வங்கி மூலம் அவ்வாறு பணம் உருவாக்கம் செய்யப்படுவது ஒதுக்குப் பண உற்பத்தி எனப்படுகின்றது. அது பின்னர் கடனாகவும் வைப்புகளாகவும் பெருக்கப்படுவதற்கான ஓர் உள்ளீடாக அமைந்து விடுகிறது. பணத்தை அச்சிடுவதற்காக அரசினால் அச்சேற்றச் செலவு மட்டுமே ஏற்கப்படுகின்றது. இது அரசினால் அச்சிடப்படும் பணத்தின் பெயரளவுப் பெறுமதியின் ஒரு சிறு பகுதி மட்டுமேயாகும். எவ்வாறாயினும், அரசாங்கம் பொருளாதாரத்திடமிருந்து பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்யும் பொழுது பொருளாதாரம் மூலம் செய்யப்படும் தியாகமானது, அரசாங்கத்தால் செலவிடப்படும் பணத்தின் பெயரளவுப் பெறுமதிக்குச் சமமான உண்மைத் தியாகமாகும். எனவே, அற்பமான ஒரு தொகையை மட்டும் செலவு செய்து தனியார் துறையில் இருந்து பெருமளவு வளங்களைத் திரட்டிக் கொள்வதற்கு அரசாங்கங்களுக்கு வாய்ப்புக் கிட்டுகின்றது. இவ்வடிப்படையில் உயர்ந்த பெயரளவுப் பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் மிகச் சிறிதளவிலான மெய்ப் பெறுமதியைக் கொண்டிருக்கும் ஒரு காகிதத்திற்கு தமது மனித, பொருள்சார் வளங்களை மாற்றிக் கொடுப்பதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இக் காகிதத் துண்டின் பெயரளவுப் பெறுமதியானது பொருளாதாரத்தின் உண்மைப் பொருள்களையும் சேவைகளையும் துரத்தி வருவதால், அப்பண உருவாக்கத்தின் தவிர்க்க முடியாத விளைவு, பொருளாதாரத்தில் உள்ள ஒதுக்குப் பணத்தின் மெய்ப் பெறுமதி வீழ்ச்சி கண்டு, பணவீக்க வேகம் துரிதப்படுத்தப் படுவதாகும். அவ்வாறு குறையும் அளவினை பணவீக்க வரி எனக் குறிப்பிடலாம். எனவே, பணவீக்கத்தை இவ்வாறு பயன்படுத்தக் காரணம், தனியார் துறையில் இருந்து அரசாங்கத் துறைக்கு வளங்களைக் கட்டாயமாக மாற்றுவதற்காகும். இச் செயற்பாட்டின் இறுதி விளைவு, வேறு வகையான வரிகளிலிருந்து அவ்வளவு வேறுபட்டதாக இருந்து வரவில்லை; எனவே, இவ்வுபாய வழிமுறையை தனியார் துறையில் இருந்து அரசுத்



துறைக்கு வளங்களைத் திரட்டிக் கொள்வதற்கான பணவீக்க வரி விதிப்பு என அறிமுகப்படுத்தலாம்.

இந்நடிவடிக்கைக்காக பணவீக்க வரி உபயோகப்படுத்தப்படுவதனை பின்வரும் காரணங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தலாம். முதலாவதாக, அதனைத் திரட்டுவதற்கு ஒரு நிறுவன அமைப்பு தேவைப்படுவதில்லை. அந்த வகையில் அது ஏனைய வரிகளிலும் பார்க்க வினைத்திறன் கொண்டதாக உள்ளது. வரி செலுத்துவோர் வரி அறிக்கைகளை நிரப்புதல் அல்லது அதிகாரிகள் அவற்றைச் செவ்வை பார்த்தல் அவசியமற்றது. வளக் கைமாற்றம் பற்றிய மொத்தச் செயற்பாடும் எந்தவொரு அதிகாரியினதும் தலையீடு இன்றி சந்தைப் பொறிமுறை செயற்படும் 'மறைந்த கரம்' போன்ற ஒன்றினால் இயக்கப்படுகிறது. இரண்டாவதாக, அவ்வாறு உருவாக்கப்படும் பணவீக்கம் தன்னழிவுத் தன்மை கொண்டது என வாதிக்கப்படுகின்றது. ஏனெனில், அரசாங்கத்தால் செய்யப்

அட்டவணை 2

இலங்கை : மத்திய வங்கி மீள்நிதியும் மத்திய வங்கியிலிருந்து அரசாங்கதின் தேறிய கடன்படல்களும் - ஒதுக்குப் பணத்தில் மாற்றம்

| காலம் | ஒதுக்குப் பணத்தில் மாற்றம் (ரூ.ப.இ.) | மத்திய வங்கியிலிருந்து* அரசாங்கத்தின் தேறிய கடன்படலில் மாற்றம் (ரூ.ப.இ.) | மத்திய வங்கி மீள்நிதியில் தேறிய அதிகரிப்பு (ரூ.ப.இ.) | தேறிய மீள்நிதி கடன்படலில் அரசாங்கத்தின் பங்கு ஒதுக்குப் பணத்தில் மாற்றம் (%) | வருடாந்த சராசரி பணவீக்க விகிதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1970-77 | +2,476 | +893 | +735 | 66 | 5.8 |
| 1978-87 | +15,284 | +21,677 | +2,611 | 159 | 12.5 |
| 1988-91 | +20,839 | +12,340 | +2,713 | 72 | 14.8 |
| 1992-93 | +16,466 | -21,864 | +1,482 | – | 11.5 |
| 1978-93 | +52,589 | +12,153 | +7,541 | 37 | 12.9 |

(-). ஒரு வீழ்ச்சியை காட்டுகிறது

*ஆதாரம் : மத்திய வங்கி அறிக்கைகளிலிருந்து கட்டுரையாளரால் கணிக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படும் புதிய மூலதனச் செலவு, இறுதியில், உற்பத்தியும் (அதன் மூலம்) மொத்த நிரம்பலும் அதிகரிக்கக் காரணமாகின்றது. எனவே, ஆரம்ப கால கட்டத்தில் பணவீக்கம் தோன்றினும், இறுதியில் அந்த பணவீக்கத்தின் பாதிப்புக்கள், பொருளாதாரத்தின் உற்பத்தி அதிகரிப்பு மூலம் படிப்படியாக நீக்கப்படுகின்றன. மூன்றாவதாக, பணவீக்க வரி விதிக்கப்படும் பொழுது, வேறும் பாரம்பரிய வரிகள் தொடர்பாக நிகழ்வது போல தேவை யான வருமானத்தித திரட்டுதலில் எந்தவொரு தாமதமும் ஏற்படுவ தில்லை. இதற்குக் காரணம், மத்திய வங்கியிடம் பணம் கடன் பெறுவதை புத்தகப் பதிவு செய்ய முடியும். தேவையான வருமானத்தைப் பெற்றுக் கொள்வ தற்கு முடிவு எடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக அதைச் செயற்படுத்து வதும் சாத்தியமாகும்.

எனினும், ஓர் அரசாங்கம் பாரம்பரிய வரிகளைத் தெரிவு செய்தால், வரிச் சட்டங்களை விதிப்பதற்கும் அதிகாரிகளால் வரி அறவிடுவதற்கும் இடையில் குறிப்பிடத் தக்க கால இடைவெளி காணப் படுகிறது. நான்காவதாக, தாம் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகிறோம் என்பதனை மக்கள் உணராதிருப் பதனால் பணவீக்க வரிக்கு மக்கள் எதிர்ப்பு இருப்பதில்லை. அரசாங்கத்தி லிருந்து கிடைத்த பணத்தை, சந்தையில் உள்ள பொருட்களையும் சேவைகளையும கொள்வனவு செய்வதற்காக உபயோகிக்க முற்படும் பொழுதே அவர்கள் அதை உணர்வார்கள். அது வரையில், மூலதனச் செலவுகளை நிதியீட்டம் செய்வதற்கு பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, அரசாங் கங்கள், தனியார் துறையில் இருந்து அரசுத் துறைக்கு வெற்றிகரமாக வளங்களை மாற்றிக் கொள்ள முடியும். ஐந்தாவதாக, பணவீக்கம் நாட்டின், அபிவிருத்திக்குச் சாதகமானவை எனக் கருதப்படும் சில நல்ல விளைவுகளை நீண்ட காலத்தில் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. பணவீக்கம் செல்வந்தருக்குப் பயனளிக்கும் வகையில் வருமான மீள் பகிர் வொன்றினை எடுத்து வருகின்றது. மிக உயர்ந்த வருமான மட்டங்களை உடைய செல்வந்தர்கள் வறியவர்களை விட அதிகமாக சேமிக்கின்றனர். எனவே, பணவீக்கத்தின் விளைவாக மிக அவசியமான தனியார் துறைச் சேமிப்புகள் ஒன்று குவிவதுடன், பொருளாதாரத்தில் மீள் முதலீடு செய்வதற்கு அவை கிடைக்கின்றன.

இதன் பயனாக, அரசுச் செலவு வேலைத் திட்டத்தின் காரணமாக ஏற்படும் பொருளாதா விழிப்பு தனியார் துறைமூலம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அரசாங்கத்தினால் பொருளாதார, சமூக-பொதுச் சேவை வசதிகள் அளிக்கப்படுவதால் பொருளா தாரத்தில் புதிய முதலீடுகளுக்கான இடையூறுகள் நீக்கப்படுவதால் இது மேலும் வலுவடைகின்றது என வாதிக்கப்படுகின்றது. வளர்முக நாடுகளின் பல அரசாங்கங்கள் மேற்கூறப்பட்ட வாதங்களின் அடிப்படையில், மத்திய வங்கியிடம் கடன் பெறுவதன் மூலம் தமது வரவுசெலவுப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு நிதியீட்டம் செய்து கொண்டுள்ளன.

அட்டவணை 3

இலங்கையில் பணவீக்க வரி

| காலம் | (பணவீக்க வரி) ஒதுக்குப் பணத்தின் மெய் பெறுமதியில் குறைவு (ரூ.ப.இ.) | மொஉஉ யின் விகிதமாக |
|---|---|---|
| 1971-77 | 794.3 | 0.56 |
| 1978-88 | 12,842.0 | 1.05 |
| 1989-94 | 22,581.0 | 1.20 |
| 1978-94 | 35,423.0 | 1.12 |

## இலங்கை பணவீக்க வரியினைப் பிரயோகிக்கும் அளவு

வரவு செலவுத்திட்ட இடை வெளியை நிரப்புவதற்காக பணத்தை வழங்குமாறு வற்புறுத்துவதன் மூலமும், அரசின் சார்பில் முன்னுரிமைத் துறைகளுக்கு மீள்நிதி வழங்குவதாலும் ஒதுக்குப் பணத்தை உருவாக்குவதற்கு அரசாங்கங்கள் பொதுவாக மத்திய வங்கியைப் பயன்படுத்துகின்றன. இலங்கை அரசாங்கத்தின் மூலம் கடந்த இரு தசாப்தங்களில் இவ்விரு வழி முறைகளும பயன்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணை 2 இல் காட்டப்பட் டுள்ளவாறு, 1978-1993 காலப் பகுதியில் மத்திய வங்கியால் உருவாக்கப்பட்ட மொத்த ஒதுக்குப் பணத்தில் 37% ஐ மத்திய வங்கியின் தேறிய கடன் வழங்கல் மூலம் அரசு பெற்றுக் கொண்டது. இக்கால கட்டத்தில அரசின் மூலமும், அரசு சார்பிலும் உருவாக்கப்பட்ட ஒதுக்குப் பணம் 1978-1987 காலத்திலேயே மிகத் தெளிவாகப் பயன்படுத்தப்பட்டது. அக் காலகட்டத்தில் இத்தலைப்புகளின் கீழ் மத்திய வங்கி கடன் வழங்கலானது அக்கால கட்டத்தில உருவாக்கப்பட்ட மொத்த ஒதுக்குப் பணத்தில் 159% அளவு அதிகரித்தது. இது ஒப்பீட்டு ரீதியில், 1970-1977 காலத்தில் 66% ஆக இருந்ததோடு, 1988-1991 கால கட்டத்தில் 72% ஆக இருந்தது.

எவ்வாறாயினும், 1992 இல் தீவிரமான திறந்த சந்தைச் செயற் பாட்டு கொள்கையைப் பின்பற்றி இம்முறை மூலம் மத்திய வங்கியால் உயர் அளவில் பண ஆக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதை கணிப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை யடுத்து, அரசுக்கான மத்திய வங்கியின் தேறிய கடனளிப்பு 2200 கோடி ரூபாவினால் குறைவடைந்ததுடன், மத்திய வங்கியிள் மீள்நிதியில் ரூ.1500 கோடி தேறிய அதிகரிப்பு ஏற்பட்டது. இதன்படி, இவ்விரு வருடங்களின் போதும் ஒதுக்குப் பண உருவாக்க வேகத்தில் ஒரு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.


வரவு செலவுத் திட்டத்தை நிதிப்படுத்தவும் முன்னுரிமைத் துறைகளுக்கு நிதியளிப்புச் செய்வதற்கும் அரசு மத்திய வங்கிப் பணத்தை 'அதிகமாகப் பயன் படுத்தியதன் விளைவாக, பொருளா தாரத்திற்கு விதிக்கப்பட்ட பணவீக்க வரியானது 1970-1977 காலத்தில் மொஉஉ யின் 0.56% சராசரி மட்டத்தில் இருந்து, 1978-1994 காலத்தில் 1.11% வரையில் உயர்ந்து சென்றது. இவ்விரு காலப்பகுதி களிலும் சராசரி வரி விகிதம் மொஉஉ யின் 18% ஆக இருந்தது. அரசாங்கம் பொருளாதாரத்துக்குள் படிப்படியாக பணவீக்கத்தை செலுத்துவதன் மூலம் உயர் அளவிலான மூலதனச் செலவு வேலைத் திட்டமொன்றினை பேணி வருவதற்கு முயன்று வந்துள்ளது என்பதனைக் காண முடிகிறது. இதன் விளைவாக, இக் காலப் பகுதி முழு வதிலும் பணவீக்கமானது 10%க்கு கிட்டிய மட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வந்தது. நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கு இந்த விகிதம் உகந்தது எனக் கருதப்படுவதில்லை. 1992 இன் பின்னர் செயற்படுத்தப்பட்ட தீவிரமான திறந்த சந்தைக் கொள்கையை அடுத்து பணவீக்க விகிதம் ஒற்றை இலக்க மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்து 1994 இல் 8.7% ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட இந்த வகையைச் சேர்ந்த நிதியீட்ட முறைக்கு இடமளிக்குமாறு அரசாங்கம் மத்திய வங்கி மீது நிர்ப்பந்தம் செலுத்துவது, விலைகளின் எதிர்கால ஸ்திரத்தன்மை அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது என்பதனையே காட்டுகிறது.

### பணவீக்க வரிக்கு எதிரான விமர்சனங்கள்

அரசின் மூலதனச் செலவுகளை நிதிப்படுத்தும் ஒரு வழிமுறையாக பணவீக்க வரியினைப் பயன்படுத்துவது பற்றி பல விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, அரசாங்கம் வரவுசெலவுத் திட்ட இடைவெளியை நிதிப்படுத்தும் மிக எளிதான ஒரு வழிமுறையாக இதை பின்பற்றுமிடத்து, அரசாங்கத்தின் செலவுகளுக்கு நிதியளிப்புச் செய்யும் ஒரு வழிமுறையாக வரி வருமானத் தையும் சேமிப்பமையும் அதிகரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அது அலட்சியம் செய்யும் ஒரு போக்கு நிலவுவதாக கூறப்படுகின்றது. இதன் விளைவாக, அண்மைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ளது போல், வரி விகிதம் தேசிய வருமானத்தின் வளர்ச்சி வேகத்தைவிட வீழ்ச்சி யடைகின்றது. இரண்டாவதாக, அரசாங்கத்தால் நிதிப்படுத்தப்படும் வேறும் முறைகளை விட பண வீக்கத்தின் தாக்கம் மிகவும் உயர்வான தாகும். இதனைப் பல கோணங் களிலும் எடுத்துரைக்கலாம்:

(1) சந்தை அமைப்பு, பணவீக்க நிலைமையொன்றில் முற்றாகத் தோல்வியடைகின்றது. சந்தை அமைப்பு பல்வேறு மாற்று உபயோகங்களுக்கிடையில் வளங்களை ஒதுக்கிக் கொடுப் பதற்கு பொருளாதாரத்தின் சார்பு ரீதியான விலைகள் மாற்றமடைய வேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருளின் விலை மற்றொரு பொருளின் விலை சார்ந்து மாற்றமடையும் பொழுது, வர்த்தகர்கள் அந்த சமிக்ஞையின் படி வளங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். எனினும், ஒரு பணவீக்கச் சூழ்நிலையில், பொது விலை மட்டம் மாற்றமடைகின்றது; வர்த்தகர்கள் வளங்களை ஒதுக்கும் முறை தொடர்பாக குழப்ப நிலையை எதிர்கொள்கின்றனர். வேறுவார்த்தைகளில் கூறினால், பணவீக்கமானது, வினைத்திற னுடன் வளங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்குத் தேவையான சமிக்ஞைகளை வழங்காது. எனவே, பணவீக்க சூழ்நிலையில் தனியார் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் ஒடுங்கிப் போகும் போக்கு காணப்படுகின்றது.

(2) பணவீக்கமானது ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் மீது



மோசமான தாக்கத்தை எடுத்து வருகிறது. விலை உயர்வின் பின் இறக்குமதிகளின் விலைகள் சார்பு ரீதியில் குறைவானவை என்பதையும் உள்நாட்டுப் பொருட்களினதும் ஏற்றுமதி களினதும் விலைகள் முன்னைவிட அதிகமானது என்பதையும் மக்கள் உணரக்கூடும். எனவே, இந்நிலை மைக்கான மக்களின் முதல் பதில் நடவடிக்கை, இறக்குமதிகளை அதிகரிப்பதாகும். பின்னர், உள்நாட்டுச் சந்தை கவர்ச்சி கரமாக இருப்பதால் ஏற்றுமதிகள் உள்நாட்டுச் சந்தைக்கு திசை திருப்பப்பட முடியும். அதன் மூலம் ஏற்றுமதி அளவும் வருமானமும் குறைவதற்கும் இடமுண்டு. இந்நிலைமை பல வருடங்களுக்கு தொடர்ச்சியாக நிலவிவரும் போது செலாவணி விகிதத்தை மேலும் இறங்கு முகமாக சீராக்கம் செய்யும் வகையில் அரசாங்கத் தலையீடு இடம் பெறலாம். இது ஏற்கனவே பொருளாதாரத்தில் நிலவும் பணவீக்கப் போக்குகளுக்கு மேலும் தூண்டுதல் அளிக்கும். எனவே, தொடர்ச்சியான பணவீக்கம் ஏற்றுமதிகள் மீதான ஒரு வரியாகச் செயற்படுவதுடன் இறக்குமதிகளுக்கு அது மானியம் வழங்குகிறது.

(3) பணவீக்க வரியால் உருவாக்கப் படும் பணவீக்கம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளக் கூடியது என வாதிக்கப்பட்டாலும் கூட அது அவ்வாறே ஆக வேண்டும் என்பது கட்டாயமல்ல. முதலா வதாக, பலன்களைப் பெற நீண்ட காலம் எடுக்கும் கருத்திட்டங் களிலும், குறைந்த முன்னுரிமை கொண்ட வீடமைப்பு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேலைகளிலும் முதலீடு செய்து நிரம்பலை அதிகரிப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவாக இருந்தால் அப்பொழுது பண வீக்கத்தின் மோசமான தாக்கம் உணரப்படும். இந்நிலையில், பண வீக்கம் தானாகவே வீழ்ச்சி யடையும் வரை காத்திருப்பதற்கு அரசாங்கத்துக்கு இயலாமல் இருக்கலாம். எனவே, இறுக்கமான கடன் கட்டுப்பாடுகள் மற்றும் உயர்வட்டி வீதங்கள் போன்ற நிதிக் கொள்கை வழிமுறைகள் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, தனியார் துறையின் செலவுகள் அதிகரிப் பதுடன் அதன் விளைவாக அத் துறையின் முதலீடுகள் வீழ்ச்சி யடைகின்றன. எனவே, அரசாங்கச் செலவின வேலைத் திட்டம் காரணமாக, தனியார் துறை முதலீடுகள் குறைவதால் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் கட்டுப்படுத்தப் படுகின்றது.

(4) பணவீக்கமானது பல்வேறு மக்கள் பிரிவினர் மீதும் மோசமாக பாதிப்பினை எடுத்து வருகின்றது. பணவீக்கத்தின்போது இலாபமும் சொத்து வருமானமும் அதிகரிப்ப துடன் சம்பளமும் வேதனங்களும் பின்னடைகின்றன. பணவீக்கத் தினால் மாணவர்கள், வயோதி பர்கள், குடும்பப் பெண்கள், சம்பளம் பெறுவோர் எனப்படு வோர் மிகவும் மோசமாக பாதிக் கப்படுகின்றனர். தமது வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி யடைந்துள்ளது என்பதையும், புதிய அபிவிருத்தியின் பெறுபேறுகள் தமக்குக் கிடையாது என்பதையும் அவர்கள் கண்டுகொள்வர். இது இறுதியில் அரசியல் ஸ்திர மின்மையை ஏற்படுத்தலாம்.

(5) மேற்கூறப்பட்ட வாதங்களை மேலும் விரிவுபடுத்தி, பணவீக்க வரியானது, மக்கள் தொகையில் மிகவும் வறிய பிரிவினரிடம் அதிக தியாகத்தை வேண்டி நிற்கும் பிற்போக்குத் தன்மை வாய்ந்த ஒரு வரி எனக் கூறமுடியும். வரி அதிகரிப்புடன் இணைந்து வறியவர்களின் வருமானம் குறைவடைவதுடன் செல்வந்தர்கள் வரிச் சுமையில் இருந்து தப்புவதற் குரிய நிலையில் இருக்கின்றனர். (ஏனெனில், அவர்களது வாழ்க் கைத்தரம் வீழ்ச்சியடைவதில்லை) அதன் சுமைகளை மிக வறிய மக்கள் மீது ஏற்றுவதற்கு அவர்களுக்கு முடியும். (ஏனெனில், வறிய மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந் துள்ளது). இதன் விளைவாக, வரிச் சுமையை உண்மையில் தாங்குவோர் வறிய மக்கள் பிரிவினராகவே உள்ளனர்.

(6) பண வீக்கத்தின் போது, மக்களின் நம்பிக்கை நிதிச் சொத்துக்களில் இருந்து மெய் சொத்துக்களை நோக்கி நகரும். இதற்குக் காரணம், பணவீக்கத்தில் கடன் வழங்குவோரின் செலவில் கடன் பெறுவோர் பயனடைவதும் அதனால் மேலதிக பணம் படைத்தோர் பணத்தை சேமிப் பதற்குப் பின்வாங்குவதுமாகும். இக் காரணத்தால் பொருளாதாரத்தில் மொத்தச் சேமிப்புக் குறைகின்றது. இதுவும் முதலீட்டின் மீது மோசமாகப் பாதிப்புச் செலுத்துகின்றது. மேலும், மெய் சொத்துக்களுக்கான புதிய கேள்வியின் விளைவாக பல்வேறு வகையான சொத்துக்களினதும் (உதாரணம் தங்கம்) விலை அதிகரிப்பதுடன், மெய் சொத்து வகைகளில் மிக உயர்ந்த பண வீக்கம் பதிவு செய்யப்படும்.

(7) பணவீக்கம் (செலவுகள் அதிக ரிப்பதால்) அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் மீது மேலும் நெருக்குதல்களை ஏற்படுத்தும். வருமானக் கொள்கைகளிலும், சம்பளம் பெறுவோருக்கு நிவாரணமளிப்பதற்கு வழங்கப் படும் சம்பள அதிகரிப்புகளினதும் விளைவாக அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுகள் அதி கரிக்கும். செலவு அதிகரிப்பு காரணமாக செய்திட்ட செலவு மதிப்பீடுகளை அடிக்கடி ஏறுமுக மாக திருத்தியமைக்க வேண்டி யிருப்பதால் மூலதனச் செலவு உயர்ந்து செல்லும். எனினும்,



இத்தகைய செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு குறைந்த வாய்ப்புக்களே உள்ளன. எனவே, இந்நிலைமையில் இருந்து மீட்சியடைவதற்காக மேலும் பணத்தை உருவாக்கும் நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படுகின்றது. அதன் விளைவாக, தன்னால் இலகுவாக விடுபட முடியாத விஷச் சுழல் ஒன்றில் அகப்பட்டிருப்பதை அரசாங்கம் விரைவில் உணர்ந்து கொள்ளும்.

எனவே, பணவீக்க வரியானது, அரசின் மூலதனச் செலவுகளை ஈடு செய்து கொள்வதற்கான ஒரு சிறந்த அல்லது புத்திபூர்வமான வழிமுறை எனக் கணிக்கப்படுவதில்லை. குறுங்கால ரீதியில் அதன் மூலம் நல்ல பெறுபேறுகள் கிடைப்பினும் நீண்டகால ரீதியில் ஏற்படும் தீய விளைவுகள் குறுங்கால நன்மைகளை அடித்துச் சென்று விடுகின்றன.

( 36 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, மேலதிகச் செலவு, உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பின் மூலம் – எடுத்து வந்தால் பற்றாக்குறையை நிதிப்படுத்துவதற்கு பணம் அச்சிடப் படாவிடினும் பணவீக்கம் தோன்ற முடியும் என ஒருவர் வாதிக்கலாம். மேலும், வ.செ. திட்ட பற்றாக்குறை நிதிப்படுத்தலானது வட்டி வீத உயர்வுக்கு வழிகோலினால், அது செலவுத்தூண்டல் பணவீக்கத்தை எடுத்து வரும் என்றும் வாதிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த சூழ்நிலை நிலவும் நாடுகளில் பணவீக்கம்


அதிகரித்த பணவீக்கமும் பொருளாதார வளர்ச்சியும் உறுதியான பொருளாதாரங்களில் நேர்ப் பண்புகளாக நின்று ஒன்றுக்கொன்று குறைநிரப்புச் செய்து வருகின்றன என்பதனை சான்றுகளின் அடிப் படையில் அறிய முடிகிறது. எனவே, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற் காகப் பின்பற்றப்படும் தீவிரமான அரச நிதியியல் செயற்பாடுகள் அவற்றின் சாதகமான வளர்ச்சியை சீர் குலைத்து விட முடியும். இந்நிலைமை யானது நெருக்கடிகளால் பாதிக்கப் பட்ட பொருளாதாரங்களுக்குப் பொருத்தமற்றதாகும்.

வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்குண்டுள்ள மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரங்கள் பலவற்றில் காணப்படும் யுத்த அழிவுகள், அரசியல் கொந்தளிப்புக்கள் என்பன காரணமாக அந்நாடுகளில் பயனுள்ள முதலீடுகளுக்கென மிகக் குறைவான வளங்களே எஞ்சியுள்ளன. பாதுகாப்புச் செலவு, அது தொடர்பான அகதிகள் நிவாரணம், புனருத்தாரண நடவடிக்கைகள் என்பனவற்றிற்காக, அரசாங்கம் செய்ய வேண்டிய கட்டாயச் செல வினங்கள் காரணமாக உருவாகும் அதிகரித்த விலை மட்டங்களால் பணவீக்கப் பாதிப்பு ஏற்படுகின்றது. முதலீடுகளில் செய்யப்படும் இவ் வெட்டுக்கள் பொருளாதார வளர்ச்சியை மந்தப்படுத்துகின்றன. சமாதானம் நிலவும் கால கட்டங்களில் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதற்காகப் பொதுவாகப் பின்பற்றப்படும் வர்த்தகத் தாராள மயமாக்கல், ஒழுங்குவிதித் தளர்ப்பு மற்றும் நாணயப் பெறுமதியிறக்கம் போன்ற நடவடிக்கைகள் நெருக்கடி நிலவும் கால கட்டங்களில் பொருளா தார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு போதுமானவையல்ல.

இந்நாடுகளில் நிலவி வரும் நெருக்கடிகளின் பொருளாதாரத் தாக்கம் அந்நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் இயல்பு, பரிமாணம் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்த அந்நாடுகளுக்கு இருக்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது. அரசியல் எழுச்சி களினால் பாதிக்கப்பட்ட பொருளா தாரங்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தலைக்குரிய வளர்ச்சி வீதங்களையும், பணவீக்க வீதங்களையும் இங்கு தரப்பட்டுள்ள வரைபடம் காட்டுகிறது.

ரஷ்யா - தோல்வி கண்ட அபிவிருத்தி உத்தி முறையில் இருந்து செயற்படத்தக்க உத்தியொன்றை நோக்கி நிலைமாறிச் சென்ற ஒரு பொருளாதார அமைப்பாக ரஷ்ய பொருளாதார அமைப்பைக் குறிப்பிட லாம். தீவிரமான நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் (இவ்வருடத்தில் 6% எதிர்க்கணிய வளர்ச்சியையும் குறித்துக் காட்டிய) மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் பாரிய வீழ்ச்சிகளையும் இந்நிலைமாற்றம் கோடிட்டுக் காட்டியது. அபிவிருத்தித் தேக்கத்தைத் தவிர்ப்பதற்காக ரஷ்யா பொருளாதார அமைப்பைத் திறந்து விட்டமையால் அதிகாரப் பன்முகப் படுத்தல் நிகழ்ந்ததோடு, அது அரசியல் சிக்கலையும் தோற்று வித்தது. இதன் விளைவாக, இவ் வருடத்தில் பணவீக்கம் 206% ஆல் அதிகரித்தது. ரூபிள் நாணயத்தின் வருட வருமானம் 100% ஆவதற்கு ஏற்ற வகையில் மாதாந்தம் பணவீக்க விகிதம் மே மாதத்தில் இருந்து 7.9% இல் இருந்து 4.5% வரை வீழ்ச்சியடைந்த போதிலும், சர்வதேச தர நிர்ணயங் களில் பணவீக்கமானது தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு உயர்மட்டத்தில் நிலவி வருகின்றது. இந்நிலைமையில் இருந்து விடுபடுவதற்கு ரஷ்யாவின் ஒரு வருட கால செச்னிய யுத்தம் உதவவில்லை. யுத்த வீரர்களைக் கூலிக்கு அமர்த்துவதற்கான மாதாந்தச் செலவு மதிப்பீடு காட்டுவது போல செச்னிய யுத்தம் செலவு கூடியதாக இருந்து வருகின்றது. ஜனநாயகம் வேரூன்றுவதற்கு இன்னமும் போராடிவரும் இப் பொருளாதாரத் தின் எதிர்காலம் நம்பிக்கையூட்டக் கூடியதாக உள்ளது. ஒரு அமெ.டொலருக்கு 4300 ரூபிள்களில் இருந்து 4900 ரூபிள்கள் வரை செலாவணி விகிதத்தினை நிலை நிறுத்துவதற்கு அரசாங்கம் வெற்றி கரமாக நடவடிக்கை எடுத்தமை மேற்கூறப்பட்ட நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

துருக்கி - அடக்கு முறை இராணுவ ஆட்சிக்கு ஆளாகியுள்ள துருக்கி, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலையான ஜனநாயகம் இன்னமும் அடையப்பட வேண்டிய ஓர் இலக்காக உள்ளது. துருக்கியானது, ஒப்பீட்டு ரீதியில் நிலையானதும், மேற் கத்தியச் சார்பானதுமான சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருப்பினும், அப் பொருளாதார முறையைச் செயலிழக்கச் செய்யும் அச்சுறுத்தலை முன்வைத்த நிதி நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு அது போராட வேண்டி இருந்தது. அத்துடன், பிரதம மந்திரி தான்சு சீலரின் 'சத்திய வழி' அரசாங்கம் அண்மையில் வீழ்ச்சியடைந்த போது, ஐரோப்பிய யூனியனோடு முன்மொழியப்பட்ட சுங்க இணைப்பு பற்றிய எதிர்பார்ப்புகள் அந்நாட்டில் தோன்றின. இத்துயரங்களோடு தலைதூக்கிய மற்றுமொரு நெருக்கடி நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் நிலவும் குர்திஷ் கெரில்லா போராகும். இந்த எல்லாப் பாதிப்புகளினதும் ஒட்டு மொத்த விளைவாக, பணவீக்கம் 86.5% ஆகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 1.5% ஆகவும் காணப்படுகின்றது. 1993 இல் பாதுகாப்புச் செலவானது அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 8.9% ஆகக் காணப்பட்டது.

அப்கானிஸ்தான் - நான்கு வருடகால உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி புர்ஹானுத்தீன் ரப்பானியின் தாஜிக் ஆதிக்கம் உள்ள அரசாங்கத்திற்கு எதிரான கெரில்லா யுத்தம், ஒரு நிரந்தர சமாதானத் தீர்வை நோக்கிய அறிகுறிகளைக் காட்டவில்லை. ஜனாதிபதி நஜிபுல்லாவின் கம்யூனிச சார்புள்ள அரசாங்கத்தை முஜாஹிதீன் கெரில்லாக்கள் வீழ்த்தி விட்ட போது காபுல் நகரத்தைச் சுற்றி கோஷ்டி மோதல்கள் தலைதூக்கின. காபுல் நகரத்துக்கு மேற்குப் புறத்திலும் பார்பன் பிரதேச ஆட்சியை மொன்கல் சியா ஹசாராக்களிடம் இருந்து மீட்பதற்கான போராட்டங்கள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. அப்கானிஸ்தானில் நிலவும் இப் போராட்ட நிலைமை காரணமாக பொருளாதார வளர்ச்சி மிகக் குறைந்த 2% அளவில் நிலவுவதுடன், அங்கு பணவீக்கம் 56.7% ஆகக் காணப்படுகின்றது.

நைஜீரியா - 1960 களில் நைஜீரியா பெற்ற சுதந்திரமானது அந்நாட்டின் கோத்திர முறையிலான அரசியல் சூழலை மாற்றியமைத்ததுடன், இன்று அந்நாடு சர்வாதிகாரத் தலைவர் ஜெனரல் சானி சுபாவாவின் கீழ் இராணுவ அடக்கு முறை அரசாங்கமொன்றுக்குள் இட்டுச் செல்லப்பட்டுள்ளது. இவ்வாட்சியின் சிறப்பியல்புகளாக இறுக்கமான நிருவாகம், அரசியல் அடாவடித்தனங்கள், தன்னிச்சையான மனிதக் கொலைகள் என்பன காணப்படுகின்றன. வர்த்தகப்பொருட்களின் விலையேற்றம் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இவ்வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.2% ஆகவும், பணவீக்கம் 49.9% ஆகவும் காணப்படுகின்றன.

மியான்மார் - பர்மிய மியன்மார் அரசின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சபையானது, இன்று வரை ஜனநாயக உலகின் சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பெறவில்லை. 1988 இல் ஓர் இரத்தப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய மியன்மாரின் இராணுவ ஜூண்டா அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதிலிருந்தும் தான்தோன்றித்தனமான ஆட்கொலைகளில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. ஒப்பீட்டு ரீதியில் 6.4% ஆன திருப்தி தரும் வளர்ச்சி வேகமும் 30.3% ஆன பணவீக்கமும் அந்நாட்டில் நிலவுகின்றன. 1993 இல் யுத்தச் செலவானது அரசாங்கத்தின் மொத்தச் செலவில் 32.7% ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

கம்போடியா - பிரசித்தி பெற்ற கெமர் ரூஜ் ஆட்சியின் தீய பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ள கம்போடியாவில் இன்னும் ஜனநாயகத்தின் நிழல் படரவில்லை. ஊழல் மிகு இராணுவ ஆட்சியின் கெடுபிடிகளால் பாதிப்படைந்து இருக்கும் அந்நாட்டின் பணவீக்கம் 18% ஆகவும், வளர்ச்சி 4.9% ஆகவும் காணப்படுகின்றன.

இலங்கை - உள்நாட்டு யுத்தம் காரணமாக பொருளாதாரம் எதிர்நோக்கும் இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட, மேலே விபரிக்கப்பட்ட நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையின் பணவீக்க வீதம் மிகக் குறைந்ததாகும். அது 8.5% ஆன ஒற்றை இலக்கம் நோக்கிக் குறைந்துள்ள துடன், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஒப்பீட்டு ரீதியில் உயர்வான 5.7% மட்டத்தில் காணப்படுகின்றது. 1980 இல் யுத்தச் செலவு 11.4% ஆக அதிகரித்தது. சென்ற ஆண்டில் யுத்தச் செலவானது 2700 கோடி ரூபாவாகக் காணப்பட்டதோடு, பயங்கரவாதத்தைக் கருவறுப்பதற்காகப் பொதுசன முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுள்ள துரித வேலைத் திட்டத்தினால் இவ்வருடத்தில் அச்செலவானது 3000 கோடி ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

( 34 ஆம் பக்கத் தொடர்ச்சி)


களில் மிக்க பரிதாபத்திற்குரியவர் அமெரிக்க ஜனாதிபதி போர்ட ஆவார். அவர் மிக்க உற்சாகத்துடன் தனது 32 சிறந்த நிபுணர்களை தூதனுப்பி, இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஐக்கிய அமெரிக்கா தலைமைப் பங்கினை வகிக்கிற தென்பதை உலகிற்கு பறைசாற்றும் முயற்சியில் முனைந்தார். உடனடித்தீர் வல்ல, எவ்விதத் தீர்வினையும் அவரால் மேற்கொள்ள முடியாது போய்விட்டது. பணவீக்கம் மேலும் தடுக்கப்பட வேண்டுமானால் பொருளாதார வீழ்ச்சி தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றும், அதனால் பொருளாதார சுருக்கத்தை வரவேற்பதே உகந்தது என்றும் அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. இது முதலாளித்துவ பொருளியலின் மிகச் சிறந்த பரிகார முறையாகும். முதலாளித்துவ பொருளாதாரம் ஒருபோதும் பொருளியல் சுற்றோட்டத்தை நிராகரிக்கவில்லை. இக் கொள்கை பெருகும் வேலையில்லாத் திண்டாட்டம், பொது மக்களின் வாழ்க்கைத் தர சீரழிவு என்பவற்றையும், முதலாளித்துவ வகுப்பினரின் ஆடம்பர வாழ்வினையும் நியாயப்படுத்தும் ஒரு சித்தாந்தமாகும். 19ஆம் நூற்றாண்டில் நிலவி வந்த கட்டற்ற வர்த்தகத்தின் பின்னணியில் தோன்றிய ஒரு கோட்பாடாகும். 19ஆம் நூற்றாண்டில் கைக்கொள்ளப்பட்ட இக்கொள்கைத் தீர்வானது 20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் கால் பகுதிக்கு முழுமையாகப் பொருத்தமற்றதாகும்.

(இது 1975 இல் 'ரஜய' என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையின் மீள் பிரசுரமாகும். இலங்கையின் கீர்த்திமிகு பொருளியலாளர்களில் ஒருவராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா கூட்டரசாங்கத்தில் 1970-1976 காலப் பிரிவில் நிதிஅமைச்சராக பதவி வகித்து வந்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணவீக்க நிச்சயமற்ற நிலை பணவீக்கத்தை அதிகரிக்கிறதா ?




ஜோன் ஈ. கொலப்

*(ஜோன் ஈ. கொலப் கன்ஸாஸ் சிட்டி பெடரல் ரிசர்வ் வங்கியில் பொருளியலாளராக பணியாற்றி வருகிறார்)*

பணவீக்க தாக்கங்களில் முக்கிய மானதொன்று நிச்சயமின்மையாகும்; அதாவது, எதிர்காலப் பணவீக்கம் பற்றிய சந்தேகங்களை அது எழுப்புகின்றது. நிச்சயமின்மை நுகர்வோரதும், வர்த்தகர்களதும் முடிவு எடுத்தலில் தெளிவற்ற நிலையை ஏற்படுத்துகின்றது; அத்துடன், பொருளாதார நலன்களையும் குறைவுறச் செய்கின்றது. நிச்சயமின்மை இல்லாதிருப்பின், நுகர்வோரும், வர்த்தகர்களும் எதிர்காலம் பற்றி சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள முடியும்.

ஆய்வாளர்கள் பலரது கருத்துப்படி, பணவீக்கம் உயர்வடைய எதிர்காலப் பணவீக்கம் பற்றிய நிச்சயமின்மையும் உயர்வடையும். இதனால், பணவீக்கத்தைக் குறைப்பதன் மூலம் பணவீக்க நிச்சயமின்மையைக் குறைக்க முடியும் என இவர்கள் வாதிடுகின்றனர். ஏனைய ஆய்வாளர்களின் கருத்துப்படி, உயர்ந்தளவு பணவீக்கம் பணவீக்க நிச்சயமின்மையைப் பெருமளவுக்குத் தோற்றுவிக்காது; பணவீக்கம் குறைவாக இருக்கின்ற காலத்தில் நிலவும் நிச்சயமின்மையை விடக் குறைந்தளவு நிச்சயமின்மையே உயர்ந்த பணவீக்க காலத்தில் நிலவும். இதன் காரணமாக, உயர் பணவீக்கம் முடிவு எடுத்தலிலோ அல்லது பொருளாதார நலன்களைக் குறைப்பதிலோ கட்டாயமாக செயற்பட வேண்டுமென்றில்லை என இவ்வாய்வாளர்கள் கூறுகின்றனர்.



பெரும்பாலான முன்னைய ஆய்வுகள் பணவீக்கத்திற்கும் நிச்சயமின்மைக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு உள்ளது எனக் கூறியுள்ள அதே வேளையில், மிகக் குறைந்தளவு ஆய்வுகளே நேர்க்கணியத் தொடர்பு இல்லை எனத் தெரிவித்துள்ளன. முன்னைய ஆய்வுகள் கடந்த காலங்களில் நடந்தேறிய பணவீக்க நிச்சயமற்ற தன்மை இறங்குமுகமான போக்கினைக் கவனத்திற் கொள்ளாமையினால் குறைபாடு உடையனவாக இருக்கலாம். இறங்குமுகமான சரிவிற்கான காரணங்கள் நன்கு விளங்கிக் கொள்ளப்படவில்லை. கீழ் நோக்கிய சரிவுக்கு பணவீக்கம் சாரா மாறியாகச் செயற்படுவதே காரணம் என்பது இவர்களது வாதம். பணவீக்கத்திற்கும் பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையிலான உண்மைத் தொடர்பை விளக்குவதில் கீழ்நோக்கிய சரிவு முக்கியம் பெறுகின்றது.

இக் கட்டுரை பணவீக்கத்தின் நிச்சயமின்மைக்கான காரணங்களை முன்வைக்கின்றது. கட்டுரையின் முடிவுரை, பணவீக்கம் உயர, நிச்சயமின்மையும் உயர்வடையும் என்பதாகும். இக்கட்டுரையின் முதலாவது பகுதி பணவீக்கத்தின் நிச்சயமின்மையால் ஏற்படக் கூடிய விளைவுகளையும், பணவீக்கத்திற்கும் அதன் நிச்சயமின்மைக்குமிடையிலான நேர்க்கணியத் தொடர்பிற்கான காரணங்களையும் எடுத்து விளக்குகின்றது. இரண்டாவது பகுதி, முன்னைய ஆய்வுகளின் முடிவுகளையும், முரண்பாடுகளையும் விளக்குகின்றது. மூன்றாவது பகுதி முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அனுபவரீதியான சான்றுகளை முன்வைத்து, இவ்விரு மாறிகளுக்குமிடையில் ஒரு பரிமாண நேர்க்கணியத் தொடர்பு இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

பொருளாதார தீர்மானம் எடுத்தலில், எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் எப்போதாவது காரணியாக இருந்தால் நிச்சயமின்மையும் ஒரு காரணியாக இருக்கும். உதாரணமாக, எதிர்கால பணவீக்கம் பற்றிய நிச்சயமின்மையானது முதலீட்டுத் தீர்மானங்களையும் சேமிப்புத் தீர்மானங்களையும் பாதிக்கக்கூடிய தாகும். இவ்வகையான பணவீக்க நிச்சயமின்மை பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்[1].

**பணவீக்க நிச்சயமின்மையின் விளைவுகள்**

பணவீக்க நிச்சயமின்மை இரண்டு பொருளாதார விளைவுகளைக் கொண்டுள்ளது. முதலாவது, தீர்மானம் எடுப்பதற்கு நிச்சயமின்மை காரணமாக அமைவது. அதாவது, நுகர்வோர், வர்த்தகர்கள் ஆகியோர் நிச்சயமற்ற சூழலில் எடுக்கும் தீர்மானங்கள், நிச்சயமான சூழலில் எடுக்கும் தீர்மானத்திலிருந்து வேறுபட்டவையாகும். இதனை ஆய்வாளர்கள் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் எனக் குறிப்பிடுகின்றனர். ஏனெனில், தீர்மானங்கள் எதிர்கால பணவீக்கத்தினை எதிர்பார்த்தே மேற்கொள்ளப்பட உள்ளன. இரண்டாவது வகையான விளைவு, தீர்மானம் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டதன் பின்னர் இடம் பெறுகின்றது. அதாவது, எதிர்பார்க்கப் பட்டதிலிருந்து பணவீக்க செயற் பாடுகள் வேறுபடும் போது இவ் விளைவுகள் ஏற்படும். இவை எதிர் பார்க்கப்படாத பணவீக்க விளைவுக ளாகும்.

பணவீக்கம் பற்றிய நிச்சய மின்மை மூன்று வழிகளூடாக பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்ய முடியும். முதலாவது, நீண்ட கால வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலம் நிதிச் சந்தையில் பாதிப்பை ஏற்படுத்தும். இரண்டாவது, பொருளாதார தீர்மானம் எடுத்தலில் முக்கிய மாறிகளாகச் செயற்படக்கூடிய ஏனைய மாறிகளிலும் நிச்சயமின்மை ஏற்படுவதற்கு வழிவகுக்கும். மூன்றாவது, நிச்சயமின்மையானது, முதலீட்டாளர்களை ஆபத்து நிறைந்த முதலீட்களில் முதலிடுவதைத் தடுத்து, ஏனைய வளங்கள் மீது முதலிடத் தூண்டுகின்றது.

முதலாவது செயற்பாடு நீண்ட கால வட்டி வீதத்தை அதிகரிப்பதன் மூலம், பொருளாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் நீண்டகால வட்டி வீதத்தைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி, முதலீட்டின் விளைவு வீதம் ஆகும். பணவீக்கம் நிச்சயமற்றதாக இருப்பின், நீண்டகாலக் கடன்கள் (பணக் கடன்கள்) மீதான விளைவு வீதமும் ஆபத்து நிறைந்ததாகவே இருக்கும். இதன் காரணமாக, உயர் வட்டி வீதங்களைப் பிரதிபலிக்கும் வகையில், முதலீட்டாளர்களும், உயர் விளைவு வீதங்களை எதிர்பார்ப்பர். மறுபுறம், உயர் வட்டி வீதம் நிலவும் போது, இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் மீதான, முதலீட்டாளர் களின் முதலீடு குறைவடையும்; நுகர்வோரும் வீட்டுவசதி மற்றும் நீண்டகால பாவனைப்பொருள் மீதான முதலீட்டினைக் குறைப்பர்.

1980 களிலும், 1990 களிலும் நிலவிய உயர் நீண்டகால வட்டி வீதுங்களுக்கு பணவீக்க நிச்சயமின்மை ஒரு முக்கிய காரணியாகச் செயற் பட்டுள்ளது என்பதைச் சில பொருளியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். உயர்வட்டி பணவீக்கம் நிலவிய 1970 களுக்கு முன்னர், குறுங்கால-நீண்டகால வட்டி வீதங்களுக்கிடையிலான இடைவெளி, அண்மைக் கால அளவிலும் பார்க்க குறைவாகவே இருந்துள்ளது.

இரண்டாவது ஊடகம், வட்டி வீதம் மற்றும் ஏனைய பொருளாதார மாறிகள் என்பவற்றின் மீது நிச்சயமின்மையை ஏற்படுத்து வதன் மூலம் பொருளாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்துவதாகும். ஒப்பந்தத்தில் உள்ள கொடுப்பனவுகள் பணவீக்கத்திற்கு ஏற்ப சுட்டெண்ணாக் கப்படாதவிடத்து, எதிர்காலக் கொடுப்பனவுகளின் மெய்ப் பெறுமதியும் நிச்சயமற்றதாக இருக்கும். உதாரணமாக, பணவீக்கம் பற்றிய நிச்சயமின்மையானது எதிர்கால கூலி குறித்து வேலை கொள்வோர்-வேலை செய்வோர் என்போரிற் கிடையிலும் எதிர்கால வாடகை குறித்து நிலக்கிழார் -குடியிருப்பாளர் என்போருக் கிடையிலும் நிச்சய மின்மையை ஏற்படுத்துகின்றது. அடுத்து, பணவீக்கத்திற்கேற்ப வரி வீதங்கள் சுட்டெண்ணாக்கப்பட வில்லையெனில், பணவீக்க நிச்சய மின்மை வரிவீதத்திலும் நிச்சய மின்மையை ஏற்படுத்தும். உதாரணமாக, மூலதன ஆதாயங்கள் மீதான வரி சுட்டெண்ணாக்கப்படா விடில் அதன் மீது தொழில் முயற்சியாளர் நிச்சயமற்று இருப்பார்கள். அத்துடன், தேய்மானப் பெறுமதிக் குறைப்பும் நிச்சயமற்று இருப்பதுடன், அது இலாபம் கணிப்பிடப்படும் முறையையும் வரியறவீட்டையும் பாதிப்படையச் செய்யும். எனவே, ஏனைய பொருளாதார மாறிகளுக்கான நிச்சயமின்மை நுகர்வோர் முதலீட்டாளர்கள் என்பவர்களின் தீர்மானம் எடுத்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வட்டி வீதம் ஏனைய பொருளாதார மாறிகள் என்பன தொடர்பான நிச்சயமின்மைகள் பொருளாதார செயற்பாட்டைக் குறைக்கும். முதலீட்டாளர்கள் வட்டி வீதம், கூலி, வரி, இலாபங்கள் என்பன தொடர்பாக நிச்சயமற்ற நிலையில் இருக்கும் போது, உற்பத்தி, உற்பத்திக் காரணிகளை வாடகைக்கு அமர்த்தல் ஏனைய முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றை நிச்சயமின்மைப் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில் தாமதிப்பர்.




பணவீக்கம் உயரும் போது முதலிடுவது அதி உயர் செலவாக இருப்பதனால், நிச்சய மின்மை குறித்து முதலீடு எளிதில் பாதிக்கப்படத்தக்க காரணியாக உள்ளது.

வட்டி வீதம் குறித்த நிச்சய மின்மை இருக்கும் போது, குறுங்கால வட்டிவீத அதிகரிப்பினால் ஏற்படும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற் காக, வர்த்தகர்களும் நுகர்வோரும் நிலையான வட்டி வீதத்துடன் கூடிய நீண்டகாலக் கடன்களில் முதலிடு வார்கள். ஆனால், குறுங்கால வட்டி வீதங்களைவிட நீண்டகால நிலையான வட்டி வீதங்கள் உயர்வாக இருப்பத னால், நீண்ட காலக் கடன்களைப் பயன்படுத்துவது நிதியீட்டற் செலவைக் கூட்டும்; இது முதலீட்டைக் குறைக்கும். மேற்கூறிய விளைவுக்கான உதாரண மாக வீடு அடமானக் கொள்வனவைக் குறிப்பிடலாம். எதிர்காலப் பணவீக்கம் பற்றி நிச்சயமற்ற நிலையில் உள்ள ஒரு நுகர்வோன் எதிர்கால வட்டிவீதம் பற்றியும் நிச்சயமற்றிருப்பான். வட்டி வீதம் எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்ற ஆபத்தினை எதிர் நோக்குபவர், அதனை நீக்குவதற்கு நிலையான வீதத்தில் உள்ள அடமானங்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால், நுகர்வோர் எப்போதும் - குறுங்கால அடமானங் களையே தெரிவு செய்வர். ஏனெனில், நிலையான வீத அடமானங்களின் முதல் வருடத்திற்கான வட்டி வீதம் எப்போதும் உயர்வாக இருப்பதே யாகும். எனவே, பணவீக்க நிச்சய மின்மை நுகர்வோர் கொள்வனவு செய்கின்ற வீட்டின் அளவையும், அடமானத்தின்அளவையும் வரையறை செய்ய முடியும்.

பணவீக்க நிச்சயமின்மை பொரு ளாதாரத்தின் மீது தாக்கத்தை எடுத்து வரும் மூன்றாவது ஊடகம் வளங்கள் மீதான முதலீட்டைத் திசைதிருப்புவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாகும். உதாரணமாக, பணவீக்க நிச்சயமின்மை உயர்வாக இருக்கும் போது, முதலீட்டாளர்கள், தமது பணவீக்க எதிர்வு கூறல்களை முன்னேற்றுவதற்காக அதிகளவு வளங்களைச் செலவிடலாம். மேலும், சில வர்த்தகர்கள், எதிர்பார்க்கப்படாத பணவீக்கத்தினால் நட்டம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு சிறப்பு நிதிக் கருவிகளைப் பயன்படுத்துவர். இந்த உபாயங்கள் எதிர்பார்க்கப்படாத பணவீக்கத்தினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைக் குறைக்குமேயொழிய அவற்றை நீக்கமாட்டா. மேலும், எதிர்வு கூறலோ அல்லது நட்டங்கள் ஏற்படாத வகையிலான பாதுகாப்பு முறைகளோ சிறு வர்த்தகர்கள், நுகர்வோர்களுக்கான நடைமுறைகள் அல்ல என்பதையும் கவனத்தற் கொள்ள வேண்டும்.

எதிர்பார்க்கப்பட்டதிலிருந்து பணவீக்க விளைவுகள் வேறுபடுமாயின் அதனை எதிர்பார்க்கப்படாத விளைவுகள் என்பர். எப்பொழுதாவது ஒப்பந்தத்தின்படி கொடுப்பனவுகள் பெயரளவு நாணயங்களில் குறிப்பிடப்பட்டிருப்பின், எதிர்பார்க்கப்படாத பணவீக்கம் சொத்துக்களின் மாற்றத்துக்கு வழிவகுக்கும். எதிர்பார்த்ததை விட பணவீக்கம் உயர்வாக இருக்கும் போது, பெயரளவுக் கொடுப்பனவுகளின் மெய்ப் பெறுமதி எதிர்பார்த்ததையும் விடக் குறைவாக இருக்கும். எதிர்பார்க்கப்படாத பணவீக்கம் என்பது, கடன் கொடுப்போரிடமிருந்து கடன்பெறுநருக்கு செல்வம் மாற்றப்படுகின்றது என்பதைக் குறிக்கின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக நிலையான வீதத்திலான அடமானக் கொடுப்பனவு முறையைக் கருதலாம். பணவீக்கம் எதிர்பாரா வகையில் உயர்வாக இருப்பின், அடமானக் கொடுப்பனவுக்கான மெய்ப் பெறுமதி எதிர்பார்க்கப்பட்டதையும் விடக்குறைவாக இருக்கும். இதில், கடன் கொடுத்தவருக்கு மெய்ப் பெறுமதி குறைவடையும். இதே போன்ற விளைவுகள் கூலி, வாடகை ஒப்பந்தங்களிலும் ஏற்படுகின்றது. கூலிகள், வாடகைகள் பெயரளவு நாணயங்களில் நிலையாக இருக்கும் போது, பணவீக்கத்தில் ஏற்படும் எதிர்பாரா அதிகரிப்பினால் வேலை செய்வோரும், நிலக்கிழாரும் பாதிப்படைவார்கள்.

செல்வ மாற்றத்தில் சிலர் தோற்பார்கள்; சிலர் வெற்றி பெறுவார்கள்; இந்நிலை இருப்பதன் காரணமாக மொத்த எதிர்பார்க்கப்படா விளைவுகளை அளவிடுவது கடினமானது. ஆனால், எதிர்பார்க்கப்படாத பணவீக்கம் மிக உயர்வாக இருப்பின, அதன் விளைவுகள் பொருளாதாரம் முழுவதற்கும் பரவும். சேமிப்பு-கடன்வழங்கல் தொழிற்பாட்டில் ஏற்படும் நெருக்கடி ஒரு பண வீக்கத் தூண்டுதல் செல்வ மாற்றத்தினை ஏற்படுத்தும். இத் தொழிலில், சேமிப்பு-கடன் வழங்கல்கள் குறுங்கால வைப்புக்களைப் பயன்படுத்தி, நீண்டகால கடன் வழங்களை மேற்கொள்கின்றன. 1970களின் பிற்பகுதியில் எதிர்பாரா வகையில் பணவீக்கம் உயர்வடைந்த போது, நிலையான வீத அடமானம் மீதான கொடுப்பனவுகளின் மெய்ப் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. அதே வேளையில், பணவீக்கத்துடன் இணைந்ததாக குறுங்காலப் பெயரளவு வட்டி வீதங்கள் அதிகரிக்க, சேமிப்பு-கடன் வழங்கல் தொழிலில் அவர்களுடைய வைப்பாளர்களுக்குக் கூடிய வட்டி வீதத்தை வழங்கவேண்டியுள்ளது. தாம் வழங்கிய கடன்களுக்காகப் பெறுகின்ற வட்டி வீதத்தைவிட வைப்புக்கான வட்டி வீதத்தை உயர்வாக வழங்குவதன் மூலம் பல சேமிப்பு-கடன் வழங்கல் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வங்குறோத்து நிலையை அடைந்தன. இதன்படி 1970களின் எதிர்பார்க்கப்படாத பணவீக்கம், சேமிப்பு-கடன் வழங்கல் தொழிற் துறையிலிருந்து பெருமளவு செல்வம் வெளியே செல்வதற்குக் காரணமாக இருந்தது.

**பணவீக்க நிச்சயமின்மை ஏன் பணவீக்கத்துடன் அதிகரிக்க வேண்டும் ?**

பணவீக்க நிச்சயமின்மையின் செலவுகளை இனங்காண்பது ஒப்பீட்டு ரீதியில் இலகுவானதாகும். அதே வேளையில், இது ஏன் பணவீக்கத்துடன் அதிகரித்துச் செல்ல வேண்டும் என்பதை விளக்குவது மிகவும் கடினமானது. இதற்கான விளக்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் நாணயக் கொள்கையின் செயலாற்றம் எவ்வாறு இருந்துள்ளது என்பதுடன் தொடர்புபட்டதாகும்.[3] பணவீக்கம்



குறைவாக உள்ளபோது நாணயக் கொள்கை வகுப்போரும் அதனைக் குறைவாகவே வைத்திருக்க விரும்புவர். குறிப்பிட்டளவுக்கு அவர்களால் பணவீக்கத்தைக் குறைவாக, உறுதியாக வைத்திருக்க முடியும். எனினும், பணவீக்கம் உயர்வாக இருக்கும் போது, நாணயக் கொள்கை வகுப்போர் பணச் சுருக்கக் கொள்கைகளையே அமுல்படுத்த முயற்சிப்பர். இக் கொள்கைகளால், பணவீக்கத்தைக் குறைப்பதன் மூலம் பணவீக்க வேறுபாடுகள் அதிகரிக்கின்றன. மேலும், பணவீக்கம் மீதான குறுங்காலக் கொள்கைகளும் காலமும் நிச்சயமற்றவையாக இருப்பதால், நாணயக் கொள்கைகளே பணவீக்க நிச்சயமின்மையை உருவாக்கும்.

பணச் சுருக்கக் கொள்கை நடவடிக்கைகளுக்கான காலமும் கூட நிச்சயமற்றது. ஏனெனில், நாணயக் கொள்கை நோக்கங்களுக்கிடையில் குறுங்கால விட்டுவிலகல் செயற்பாடு உள்ளது. நாணயக் கொள்கையின் நீண்டகால நோக்கு பணவீக்கத்தை நீக்குவதாக இருந்தபோதும், பெடரல் ரிசர்வ் அமைப்பு குறுங் காலத்தில் பொருளாதாரத்தை மிதமான நிலையில் வைத்திருக்கவே விரும்பியது. பணவீக்கம் உயர்வாக இருந்தபோது, பொருளாதாரம் மந்த நிலையிலிருந்தது. இந்த நேரம் எந்த நோக்கிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பதில் தெளிவில்லை. இந்நேரம் பணவீக்கத்தைக் குறைப்பதற்கான கொள்கைச் செயற்பாடுகளின் காலம் பற்றி நிச்சயமின்மை தோன்றும்.

பணவீக்கம் மீதான நாணயக் கொள்கையின் விளைவுகளும் நிச்சயமற்றவையாகும். குறிப்பாக, கொள்கைகளின் தாக்கம், வங்கி முறையூடாக அமுல்படுத்துவதிலும், மெய்ப் பொருளாதாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தைக் கொண்டு வருவதிலும், இறுதியாக பணவீக்கத்தை நெறிப்படுத்துவதிலும் ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும். நாணயக் கொள்கைச் செயற்பாடுகள் பணவீக்கத்திற்குள் சென்றடையும வேகம், இது காலம் வரை வேறுபட்டு வந்துள்ளது. எனவே, எவ்வளவு , எவ்வாறு விலைகள் நாணயக் கொள்கைகளுக்கேற்ப மாற்ற மடையும் என்ற எதிர்வு கூறல்களில் உள்ள சிக்கல்களே பணவீக்க நிச்சய மின்மையை ஏற்படுத்தும். நாணயக் கொள்கையின் நிலைப்பாடு நிச்சயமாகத் தெரிந்திருந்தாலும் கூட பணவீக்க நிச்சயமின்மைகள் ஏற்பட்டே தீரும்.[4]

## முன்னைய ஆய்வுகள்


பணவீக்க நிச்சயமின்மை குறித்த ஆய்வுகள் 20 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவது ஆய்வில் உயர் பண வீக்கத்தையுடைய நாடுகள், பணவீக்க வேறுபாடுகளை பெருமளவில் கொண்டுள்ளன என்ற முடிவு ஒகுன் என்பவரால் கண்டறியப்பட்டது. நிச்சயமின்மையின் குறிகாட்டியாக பாரிய பணவீக்க வேறுபாடுகள் உள்ளன என இவர் விளங்கப் படுத்துகின்றார். ஒகுனின் ஆரம்ப ஆய்வுகளைத் தொடர்ந்து பணவீக்க நிச்சயமின்மை தொடர்பாக 20 க்கும் மேற்பட்ட அனுபவ ஆய்வுகள் வெளியிடப்பட்டுள்ளன. கைத்தொழில் நாடுகளில் உயர் பணவீக்கம் ஏற்பட்டு ஒரு தசாப்தத்தின் பின், 1980 களின் ஆரம்பத்தில் ஒரு பாரிய குழப்ப நிலை தோன்றியது.

இந்த விடயம் தொடர்பான 21 ஆய்வுகளில் 17 ஆய்வுகள் உயர் பண வீக்கம், பணவீக்க நிச்சயமின்மைக்கு வழி வகுக்கும் என்ற முடிவினை வற்புறுத்துகின்றன. மீதி 4 ஆய்வுகள் இந்த முடிவினை வலியுறுத்தவில்லை. பணவீக்க நிச்சயமின்மை செலாவணி விகித கட்டுப்பாட்டுக் கூடாக பரிசீலனை செய்யப்படும் பொழுது, பணவீக்கத் துடன் நிச்சயமின்மை தோன்று வதில்லை என்பதனை சான்றுகள் காட்டுகின்றன.

அண்மைக்கால ஆய்வில், பணவீக்க நிச்சயமின்மையை மதிப்பிடுவதற்கு இரு வேறுபட்ட உபாயங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.[5] முதலாவது உபாயம் மதிப்பீட்டு ஆய்வினை உபயோகிக்க, இரண்டாவது உபாயம் எதிர்வு கூறல் மாதிரிகளை உபயோகிக்கின்றது. நிச்சயமின்மை பற்றிய வேறுபட்ட மதிப்பீடுகள் வேறுபட்ட முடிவுகளுக்கு வழிவகுக்குமாகையால், இப்பகுதி இரு உபாயங்களையும் பயன்படுத்துகிறது. நிச்சயமின்மைக்கான ஆய்வு மதிப்பீடுகளைப் பயன்படுத்திய ஆய்வாளர்கள் பணவீக்கத்திற்கும் பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு இருப்பதை வெளிப்படுத்தியுள்ளனர். எதிர்வுகூறல் மாதிரிகளைப் பயன்படுத்திய ஆய்வாளர்கள், வேறுபட்ட மாதிரிகள் வேறுபட்ட பெறுபேறுகளை வெளிப் படுத்தியதால் இம் முடிவினைப் பெற்றுக் கொள்ளவில்லை.

## ஆய்வு உபாய வழிமுறைகள்


பணவீக்க நிச்சயமின்மையை மதிப்பிடுவதற்கான முதலாவது உபாயம், பொருளியலாளர்கள், நுகர்வோர் என்போரின் ஆய்வுகளைப் பயன்படுத்துகின்றது. ஆய்வாளர்கள் இரு வேறுபட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, தாம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் பணவீக்க நிச்சய மின்மையை மதிப்பிடுகின்றார்கள். ஒரு அணுகுமுறை பணவீக்கம் வீழ்ச்சி யடையக்கூடிய சந்தர்ப்பத்தில், இதற் கென சில பெறுமதி எல்லைகளை



வழங்க, மக்களின் செயற்பாடு எவ்வாறு இருக்கும் என்று வினாவுவதன் மூலம் மதிப்பீடு செய்யப் படுகின்றது.[6] உதாரணமாக இதற்குப் பதிலளிப்பவர்களில் ஒருவர், பணவீக்கம் 3-4 வீதத்திற்குள் இருக்கமுடியும் என எதிர்பார்க்கலாம்; இன்னொருவர் 2-5 வீதத்திற்குள் எதிர் பார்க்கலாம். இங்கு இரண்டாவது நபர் அளித்த பதில் வீச்செல்லை கூடியதாக இருப்பதால், இவர் எதிர்காலப் பணவீக்கம், கூடுதலான அளவுக்கு நிச்சயமற்றதன்மையைக் கொண்டுள்ளது என முன்கூட்டியே தீர்மானித்துள்ளார்.

இரண்டாவது அணுகுமுறை, பணவீக்க எதிர்பார்க்கைகளின் வேறுபாடுகளை அல்லது பரவல்களை அடிப்படையாகக் கொண்டு பணவீக்க நிச்சயமின்மையை மதிப்பீடு செய்கின்றது. இதற்கான ஆய்வு முதலாவது ஆய்வில் பங்குபற்றியவர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாவது ஆய்வினைப் போலன்றி, ஒரு தனிநபருடன் மட்டும் மதிப்பிட

வரைபடம் 1






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது; ஆய்விற் பங்குபற்றிய பலரது உதவியும், நிச்சயமின்மையின் வேறுபாடுகளை மதிப்பிடுவதற்குத் தேவைப்படுகின்றது. ஆய்வில் பங்குபற்றியவர்கள் எதிர்காலப் பணவீக்கம் பற்றிய நிச்சயமின்மையை ஒரே மாதிரியாகக் கொண்டிருக்கும் போது, நிச்சயமின்மையும் குறைவாக இருக்குமென ஊகிக்கப்படுகின்றது. ஆனால், பணவீக்கம் பற்றி இவர்கள் உடன்பாடற்றவர்களாக இருப்பின், நிச்சயமின்மையும் உயர்வாக இருக்கும். உதாரணமாக, பங்குபற்றியவர்களின் பணவீக்க எதிர்வுகூறல்களின் இடையத்தில் 90 வீதம் 3-4 வீத பணவீக்க எல்லைக்குள் இருக்குமாயின், 60 வீதமான எ்திர்வு கூறல்கள் இந்த

உயர்ந்தளவு நிச்சயமின்மையைப் பிரதிபலிக்கும் அதே நேரம் குறைந்தளவு தவறுகள் இருப்பின் குறைந்தளவு நிச்சயமின்மையையும் பிரதிபலிக்கும். ஆய்வு மூலம் கிடைத்த பெறுபேறுகளைவிட, எதிர்வு கூறல் மூலம் கிடைத்த பெறுபேறுகள் கூடுதலான முரண்பாட்டுத் தன்மைகளைக் கொண்டிருந்தன. கூடுதலான ஆய்வாளர்கள், உயர் பணவீக்கம் உள்ள காலங்களில், எதிர்வுகூறல் தவறுகள் உயர்வாக இருந்துள்ளதை அவதானித்துள்ளனர். சிலர் அவ்வாறான முடிவைப் பெறவில்லை. இந்த முரண்பாட்டிற்கு ஒரு காரணம், பணவீக்க எதிர்வு கூறலுக்கான சிறந்த மாதிரியைத்தெரிவு

அட்டவணை 1

லிவிங்ஸ்டன் மதிப்பீட்டை பயன்படுத்துவதால் கிடைக்கும் பெறுபேறுகள் 1954-93

| சார்ந்த மாறி | நிலையானது | காலப் போக்கு | முடிவற்ற நிச்சயமின்மை | எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் |
|---|---|---|---|---|
| பணவீக்க நிச்சயமின்மை (6 மாத அளவு) | .443** (.096) | -.011** (.003) | .432** (.098) | .137** (.025) |
| பணவீக்க நிச்சயமின்மை (12 மாத அளவு) | .479** (.133) | -.011** (.004) | .395** (1.46) | .110** (.027) |

குறிப்பு : | லிவிங்ஸ்டன் மதிப்பீட்டிலிருந்து பணவீக்க எதிர்கூறல்கள் நியம விலகலாக மதிப்பிடப்பட்டுள்ளது.


** 0.01 இல் முக்கியத்துவத்தை காட்டுகிறது.

எல்லைக்குள் இருக்கின்றபோது நிலவுகின்ற நிச்சயமின்மையை விட, 90% மான எதிர்வு கூறல்களுடன் இருக்கின்ற மேற்கூறிய நிச்சயமின்மை குறைவானது.

ஆய்வுகளிலிருந்து மதிப்பிடப் பட்டதன்படி, பணவீக்கம் அதிகரிக்க, பணவீக்க நிச்சயமின்மையும் அதிகரிக்கும் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர். நான்கு ஆய்வுகளிலிருந்து பயன்படுத்திய தரவுகளின் மூலம், எட்டு ஆய்வுகள் மேற்கூறிய முடிவினை ஏற்றுக் கொண்டுள்ளன.

பணவீக்க நிச்சயமின்மையை மதிப்பிடுவதற்கான இரண்டாவது உபாயம் பொருளாதார எதிர்வு கூறல் மாதிரிகளைப் பயன்படுத்தியதாகும். இந்த அணுகுமுறையில் ஆய்வாளர்கள், பணவீக்கத்தை எதிர்வு கூறுவதற்கு அளவீட்டு முறையில் மாதிரிகளைப் (Econometric Models) பயன்படுத்துகின்றனர். மாதிரியில் கூடிய எதிர்வு கூறல் தவறுகள் இருப்பின், இது

செய்வதில் இவர்களிடையே ஒரு உடன்பாடு காணப்படாமை ஆகும். கூலிப் பணவீக்கம், பண வளர்ச்சி, வேலையின்மை, இறக்குமதி விலையில் மாற்றங்கள் என்ற பொருளாதார மாறிகளின் முன்னைய காலப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இந்த மாறிகளின் உதவியுடன் பணவீக்க மாதிரியை அமைப்பதற்குப் பல வழிகள் உள்ளன. அத்துடன்



ஒவ்வொரு மாதிரியினதும் செயலாற்றம், ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் படுகின்ற காலத்தைப் பொறுத்து வேறுபடும். உதாரணமாக, எதிர்வு கூறலுக்காக $M_1$ இன் வளர்ச்சி பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் 1980 களின் ஆரம்பத்தில் $M_1$ இன் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டபோது, எதிர்வுகூறல் மாதிரியின் செயலாற்றத்தில் இது திரிபினை ஏற்படுத்துவதற்குக் காலாக இருந்தது. எவ்வாறு பணவீக்கத்தை எதிர்வு கூறுவது என்பது தொடர்பாக பொருளியலாளர்களிடையே முரண்பாடு காணப்படுவதால், அவர்கள் பணவீக்க நிச்சயமின்மைக் கான எதிர்வு கூறல்களுக்கும் வெவ் வேறு விளக்கங்களை அளிப்பர்.

இங்கு இரண்டு வகையான ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டபோதும், இவ்விரண்டும் பணவீக்கத்திற்கும் பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையில் நேர்க்கணிய தொடர்பு இருக்கின்றது என்பதை அவதானிக்கத் தவறியுள்ளன. முதலாவது ஆய்வில் பணவீக்கத்திற்கும், பணவீக்க நிச்சயமின்மைக்கு மிடையிலான இணைப்பை ஆய்வு செய்வதற்கு, மிகவும் கட்டுப்பாடான மாதிரி அமைப்பு பயன்படுத்தப் படுகின்றது. இரண்டாவது ஆய்வில்,

அட்டவணை 2

நுகர்வோர் விலைச் சுட்டெண்களுக்கான எதிர்வுகூறல் மாதிரிகள் தொடர்பான பெறுபேறுகள்
(மாதிரிகள் 1957-93 காலாண்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன)

| சார்ந்த மாறி | நிலையானது | காலப் போக்கு | முடிவற்ற பணவீக்கம் |
|---|---|---|---|
| அடிப்படை விசு இல் நிச்சயமின்மை | .092 (.053) | -.0012* (.0006) | 28** (.035) |
| மொத்த நுவிசு பணவீக்கத்தில் நிச்சயமின்மை | .266** (.057) | -.0002 (.0006) | .127** (.033) |

குறிப்பு :எதிர்வுகூறல் தவறுகளிலிருந்து நிச்சயமின்மை மதிப்பிடப்படுகிறது. தவறுகள் அடைப்புக்குள்

* 0.05 இல் முக்கியத்துவத்தை காட்டுகிறது.

** 0.01 இல் முக்கியத்துவத்தை காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செலாவணி வீதத்துடன் இணைத்து பணவீக்க நிச்சயமின்மை நோக்கப் படுகின்றது.

பணவீக்கம் பற்றிய நூலின் 4 கட்டுரைகளில் 3 கட்டுரைகள் நிச்சயமின்மைய "கட்டுப்பாடான நிலையிலிருந்து" விளக்குவதால், இக்கட்டுரைகள் பணவீக்கத்திற்கும், நிச்சயமின்மைக்குமான தொடர்பை நேர்க்கணிய ரீதியில் எடுத்து விளக்க வில்லை.[8] நீண்ட காலத்தில் ஸ்திரமற்ற தன்மை செயற்படும்போது, நிதித் தரவுகளை ஆய்வதற்காக இந்த "கட்டுப்பாடான-நிச்சயமின்மை மாதிரிகள்" ஆரம்பத்தில் விருத்தி செய்யப்பட்டன. ஆனால், பின்னர் பணவீக்கமும் தளம்பலடைந்து சென்றமையால், பணவீக்கத்தை ஆய்வு செய்வதற்காக ஆராய்ச்சியாளர்கள் இந்த மாதிரியைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். கட்டுப்பாடான-நிச்சய மின்மை மாதிரிகள் பணவீக்க நிச்சய மின்மை மெதுவாகவே ஏற்படும் என வரையறை செய்கின்றது. ஆராய்ச்சியாளர்கள் நிதியியல் தரவுகள் பற்றி ஆய்வு செய்வதற்குரிய மாதிரியாக கட்டுப்பாடான நிச்சயமின்மை மாதிரியைக் கொண்டுள்ள போதும், எடுகோள்கள் நிச்சயமின்மைக்கு பொருத்தமற்றவையாக அமையலாம். சிறப்பாக பணவீக்க நிச்சயமின்மையில் ஏற்படும் திடீர் மாற்றம், இந்த மாதிரி ஆய்விற்குப் பயன்படுத்தப்படுகின்ற வரையறைகளுடன் முரண்பட முடியும். உதாரணமாக, 1990 இல் ஈராக் மீதான குவைத்தின் படை யெடுப்பின் பின் எண்ணெய் விலைகள் உயர்வாக இருந்தது. ஆனால், வளை குடாப்போருக்கு விரைவில் தீர்வு காணப்பட்டதும், எண்ணெய் விலையும், பணவீக்க நிச்சயமின்மையும் வேகமாகக் குறைவடைந்தன. எனவே, கட்டுப்பாடான நிச்சயமின்மை மாதிரியின் எடுகோள்களுடன் நிச்சயமின்மையில் ஏற்பட்ட வீழ்ச்சி முரண்பட்டிருக்க முடியும். எந்தளவுக்கு இந்த மாதிரியின் எடுகோள்கள் பொருத்தமற்றவையாக இருக்கின்றனவோ, அந்தளவுக்கு மாதிரி யின் பெறுபேறுகளும் சந்தேகத்திற் கிடமானவையாக இருக்கும்.

பணவீக்க நிச்சயமின்மையும், அந்நியச் செலாவணியும்

கட்டுப்பாடான நிச்சயமின்மை மாதிரியிலிருந்து பெறப்பட்ட, பணவீக்கத்திற்கும், பணவீக்க நிச்சய மின்மைக்குமிடையிலான தொடர்புக்கு எதிராக ஒரு ஆதாரம் மட்டும் இருப்பின் ஆய்வாளர்கள் அதனைப் புறக்கணித்து இருப்பர். ஆனால், அந்நியச் செலாவணி மீதான ஆராய்ச்சியும், பணவீக்கம் அதிகரிக்க, பணவீக்க நிச்சயமின்மை அதனுடன் இணைந்து அதிகரிக்காது என்பதையே வெளிப்படுத்தியது. உ-ம் உலகப்போர் முடிவிலிருந்து அமெரிக்கா இரு வேறுபட்ட நாணய முறைமையில் இருந்து வந்துள்ளது. பிரட்டன்வூட்ஸ் காலத்திலிருந்து 1973ஆம் ஆண்டு வரை செயற்பட்ட நிலையான நாணய மாற்றுவீதமுறை ஒன்று. அடுத்தது பிரட்டன்வூட்ஸ் முறைமை முறிவடைந் ததிலிருந்து இன்று வரையுள்ள மிதக்க விடப்பட்ட நாணய முறைமை.

பணவீக்க நிச்சயமின்மையை செலாவணிவீத முறைமைகளுடன்



இருக்கவேண்டும். மெல்ட்சரும் றொபின்சனும் (1985, 1986, 1988) சேர்ந்து பணவீக்க நிச்சயமின்மை பற்றி செலாவணி வீதத்துடன் இணைந்து ஆய்வு செய்து வருகின்றனர்.[9] உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணுக்கு வருடாந்த தரவுகளையும், மொஉஉ சுருக்கிக்கு காலாண்டுத் தரவுகளையும் உபயோகித்து, எதிர்வுகூறல்களைச் செய்துள்ளனர். இந்த அனைத்துக்

அட்டவணை 3

மொஉஉ சுருக்கிக்கான எதிர்வுகூறல் மாதிரிகள் (மாதிரிகள் 1954-93 காலாண்டுத் தரவுகளை அடிப்படையாக கொண்டுள்ளன)

| சார்ந்த மாறி | நிலையானது | காலப் போக்கு | முடிவற்ற: பணவீக்கம் |
|---|---|---|---|
| போல் மற்றும் செச்செட்டி மாதிரி | | | |
| பணவீக்க நிச்சயமின்மை | .325* | -.0062* | .094* |
| | (.044) | (.0014) | (.039) |
| பொலஸ்வேவ் வரையறுக்கப்பட்ட மாதிரி | | | |
| பணவீக்க நிச்சயமின்மை | .219** | -.0008* | .920* |
| | (.038) | (.0003) | (.415) |
| பணவீக்க நிச்சயமின்மை | .135** | | .75 |
| | (.026) | | (.42) |

* 0.05 இல் முக்கியத்துவத்தை காட்டுகிறது.
** 0.01 இல் முக்கியத்துவத்தை காட்டுகிறது.

பாிசீலனை செய்வதன் மூலம், ஆய்வாளர்கள் பணவீக்கத்திற்கும், அதன் நிச்சயமின்மைக்குமிடையில் தொடர்பு இருப்பதை மறைமுகமாக நிரூபிக்கின்றார்கள். மிதக்கவிடப்பட்ட நாணய மாற்றுவீத முறை உள்ள சராசரி பணவீக்க மட்டம் உயர்வாக இருந்துள்ளதால், மேற்கூறிய கருத்துக்கு வேண்டிய மறைமுகமான ஆதாரம் இதில் உள்ளது எனலாம். பணவீக்க நிச்சயமின்மை பணவீக்கத் துடன் இணைந்து அதிகரித்துச் செல்லுமாயின் மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீதமுறை உள்ளபோது, நிச்சயமின்மையும் உயர்வாகவே

கட்டுரைகளிலும் 1973 ற்குப்பிற்பட்ட கால மிதக்கவிடப்பட்ட நாணய மாற்று வீத முறையில் இருந்தது போலவே, நிலையான நாணய மாற்றுவீத முறையிலும் பணவீக்க நிச்சயமின்மை பணவீக்கத்திற்குச் சமமாக அல்லது அதிலும் சற்று உயர்வாக இருந்துள்ள தாக விளக்கப்படுகின்றது. மேலும், மிதக்கவிடப்பட்ட நாணய மாற்றுவீத முறைக் காலம் போலவே, நிலையான நாணய மாற்று வீத காலத்திலும் பணவீக்கம் அரைவாசியாக மட்டும் உயர்வடைந்திருந்தது. இம்முடிவுகள் பணவீக்க நிச்சயமின்மை பணவீக்கத் துடன் சேர்ந்து அதிகரிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலாம் என்பதையே தெளிவுபடுத்துகின்றன்.

சுருங்கக்கூறின், மாதிரி ஆய்வுகளிலிருந்து கணிப்பிட்ட ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள் பணவீக்கத்திற்கும் அதன் நிச்சயமின்மைக்குமிடையிலான நேர்க் கணியத் தொடர்பு உண்டு என்பதை ஏற்கின்றன. ஆனால், எதிர்வுகூறல் மாதிரியிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் இதற்கு மாறானவை. அடுத்து கட்டுப்பாடான- நிச்சயமின்மை மாதிரியிலிருந்து பெறப்பட்ட முடிவுகள், இரண்டும் கலந்த முடிவுகளாக உள்ளன. செலாவணி வீதத்துடன் தொடர்புடைய ஆய்வின் பெறுபேறுகள், பணவீக்கத்திற்கும், பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை என்ற முடிவைத் தருகின்றன. மேற்கூறப்பட்ட உடன்பாடின்மைகளில் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு அடுத்து வரும் பகுதிகள் வேறு ஓர் நோக்கில் ஆராயப்படுகின்றது.

## அனுபவ அடிப்படையிலான ஆதாரங்கள்

பணவீக்கத்திற்கும் பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு இருப்பதற்கான ஆதாரத்தை இப்பகுதி தெளிவாக விளக்குகின்றது. பணவீக்கம் தானாக இயங்கும் மாறியாக இருப்பின், பணவீக்க நிச்சயமின்மை வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் கொண்டிருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த கீழ்நோக்கிச் செல்லும் போக்கு,[9] கட்டுப்பாடான- நிச்சயமின்மை மாதிரி, செலாவணி வீத ஆய்வு முறை ஆகிய இரண்டினதும் முடிவுகளுடன் முரண்படுவதாக உள்ளது.

இக்கட்டுரையில் 1954-1993 காலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணவீக்க நிச்சயமின்மை மீதான ஆராய்ச்சி தொடங்கிய ஆண்டு 1954 ஆம் ஆண்டாகும்.[10] ஆரம்ப காலத் தரவுகள் கிடைக்கக்கூடியதாக இருந்தபோதும், 2ஆம் உலக யுத்தம், கொரிய யுத்தம், 1950களின் ஆரம்பத்தில் விலைக் கட்டுப்பாட்டுக் காலம், பணச்சுருக்க காலம் போன்ற ஆய்விற்குச் சிக்கலை உண்டாக்கக் கூடிய சம்பவங்களை நீக்குவது சிறந்தது. தனிப்பட்ட அளவீட்டு நுட்பங்களுக்கு எதிரான கண்டனங்களைத் தோற்கடிப்பதற்கும், முடிவுகளைத் திடமாக்குவதற்கும் இந்த ஆய்வானது, மாதிரி ஆய்விலிருந்தும், எதிர்வுகூறல் மாதிரிகளிலிருந்தும் ஆதாரங்களைத் திரட்டி அவற்றையே ஆய்விற்குப் பயன்படுத்துகின்றது.

## ஆய்வு ஆதாரம்

லிவிங்ஸ்ரன் ஆய்வு முறையைப் பயன்படுத்தி, நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்க நிச்சயமின்மை மதிப்பிடப்படுகின்றது. 1954ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வு இது மட்டும் தான்.[11] லிவிங்ஸ்ரன் ஆய்வில் ஏறக்குறைய 50 பொருளிய லாளர்கள் வருடம் இருமுறை- ஜூனிலும் டிசம்பரிலுமாக இருமுறை -ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றனர்.[12] ஆய்வில், பங்குபற்றுபவர்களின் பணவீக்க எதிர்பார்க்கைகளின் நிமய விலகல்களே பணவீக்க நிச்சயமின்மை யாக மதிப்பிடப்படுகின்றது.

12 மாத லிவிங்ஸ்ரன் எதிர்வுகூறல் வரைபு பணவீக்கத்திற்கும், அதன் நிச்சயமின்மைக்குமிடையில் ஒரு நேர்க்கணியத் தொடர்புண்டு என்பதையே வெளிப்படுத்துகின்றது. (வரைபடம் 1)[13] 1980 இல் இவ்விரு மாறிகளும் உயர்வாக இருந்துள்ளன. அப்போது பணவீக்கம் 10 வீதத்திற்கும் மேலாகவும், பணவீக்க எதிர்பார்க்கைகளின் நியமவிலகல்கள் 2 வீதத்திற்கு மேலாகவும் இருந்துள்ளன.[14]

இவ்விரண்டுக்குமிடையிலான நேர்க்கணியத் தொடர்பு என்பதற்கும் மேலாக, இவ்வரைவு நிச்சயமின்மையில் ஒரு மிதமான கீழ்நோக்கிய போக்கு இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக ஆரம்ப காலங்களில், பணவீக்க நிச்சயமின்மை மதிப்பீடுகள், பணவீக்க மதிப்பீடுகளுக்கும் மேலாக இருந்துள்ளன. ஆனால், பிற்காலங்களில் இது பணவீக்கத்திற்கும் கீழாக இருந்துள்ளன.[15]

நுகர்வோர் விலைச்சுட்டெண் பணவீக்கத்திற்கும், நுகர்வோர் விலைச்சுட்டெண் நிச்சயமின்மைக்கு




மிடையிலான தொடர்பின் புள்ளிவிபர ஆய்வை வரைபடம் 1 இன் மூலம் உறுபதிப்படுத்த முடிகின்றது. எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம், காலம், கடந்த காலப் பணவீக்க நிச்சயமின்மை (சார்ந்த மாறி)க்கான பிற்செலவு கணிப்பிடப்பட்டுள்ளது. அதனை அட்டவணை 1 விளக்குகின்றது. 6 மாதம் 12 மாதங்களுக்கான லிவிங்ஸ்ரன் எதிர்வுகூறல்களில் பணவீக்கம் மீதான நிச்சயமின்மைக்கான குணகம் நேர்க்கணியப் பெறுமதியுடையது. இதன் கருத்து பணவீக்கம் கூடக் கூட பணவீக்க நிச்சயமின்மையும் அதிகரித்துச் செல்லும் என்பதாகும். காலத்துடன் தொடர்புடைய நிச்சயமின்மைக்கான குணகம், எதிர்க்கணியப் பெறுமதியைக் கொண்டிருக்கின்றது. அதாவது காலம் கூடிச் செல்ல, நிச்சயமின்மை குறைவடையும் என்பதாகும்.[16] இந்த பணவீக்க நிச்சயமின்மை கால அடிப்படையில் குறைவடைந்து செல்வது - பணவீக்கத்திற்கும் அதன் நிச்சயமின்மைக்குமிடையிலான தொடர்பிற்குச் சாராத வகையில்- தானாகவே செயற்படுவதொன்றாகும்.[17]

அட்டவணை 1 இன் முடிவுகள், ஏனைய ஆராய்ச்சியாளர்களால் ஆய்வுத்தரவுகளைப் பயன்படுத்திப் பெறப்பட்ட முடிவை அதாவது பணவீக்கத்திற்கும் அதன் நிச்சயமின்மைக்குமான நேர்க்கணியத் தொடர்பை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், முன்னைய ஆய்வில் அவதானிக்கப்படாத நிச்சயமின்மையின் கீழான போக்கு என்ற அம்சம் இவ்வாய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. இங்கு பெறப்பட்ட நேர்க்கணியத் தொடர்பு (பணவீக்கத்திற்கும், நிச்சயமின்மைக்குமிடையில்) என்பது ஆச்சரியப்படுவதற்குரிய தொன்றல்ல. ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிச்சயமின்மையின் கீழான போக்கு என்பது முக்கியமான விடயமாகும். ஏனெனில், எதிர்வு கூறல் மாதிரியின் மூலம் பெறப்படும் முடிவுகளின் முரண்பாடுகளை இக்கீழான போக்கு தீர்த்துக் கொள்ளுமா என்பதனாலாகும்.

### எதிர்வுகூறல் மாதிரியின் ஆதாரங்கள்

எதிர்வுகூறல் மாதிரியில் பணவீக்க நிச்சயமின்மை, மொஉஉ சுருக்கியிலும், இரு வகையான நுவி சுட்டெண்களிலும் மதிப்பிடப் படுகின்றது. இரு வகையான நுவி சுட்டெண்ணில் ஒன்று மொத்த நுவி சுட்டெண் – இது நகர்சார் நுகர்வோரால் செலுத்தப்படுகின்ற விலையைப் பிரதிபலிக்கின்றது. இரண்டாவது மைய நுவி சுட்டெண் – இது உணவு, எரிபொருள் விலைகளை நீக்கியதாகும். இவற்றுள் மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதில் முக்கியமானதாக உள்ளது. ஏனெனில், மொத்த நுகர்வோர் விலைச் சுட்டெண், உணவு, எரிபொருட்களின் விலை மாற்றத்தினால் குறுங்காலத்தில் திரிபு படக்கூடும். நிச்சயமின்மையின் கீழ்நோக்கிய போக்கினால் உணவு, எரிபொருட்களின் விலைத் தளம்பல்களைக் குறைக்க முடியுமாயின், அதனைப் பார்ப்பதற்கு ஆய்வாளர்கள், இவ்விரு சுட்டெண்களையும் பயன் படுத்துவர்.[18]

### நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் நிச்சயமின்மை

நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் நிச்சயமின்மையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எதிர்வு கூறல் மாதிரி, ஸ்ரொக்ரன், கிளாஸ்மன் என்பவர்களால் பயன்படுத்தப்பட்ட மாதிரியை ஒத்தது. இது பணவீக்கம் தொடர்பான தரவுகளுக்குக் காலாண்டுத் தரவினைப் பயன் படுத்துகின்றது. அடுத்து வரும் காலாண்டுப் பணவீக்கம் கடந்த நான்கு காலாண்டுப் பணவீக்கத்திலும் தங்கியுள்ளது என இம் மாதிரி எடுகோள் கொள்கின்றது.[19] இந்த எளிய மாதிரிகளின் செயலாற்றம், மிகச் சிக்கலான மாதிரிகளின் செயலாற்றத்துடன் ஒப்பிடக்கூடியது என்பதை ஸ்ரொக்ரன், கிளாஸ்மன் என்போர் எடுத்துக் காட்டுகின்றனர்.



மைய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் நிச்சயமின்மைக்கான, எதிர்வு கூறல் மாதிரியிலிருந்து பெறப்பட்ட முடிவுகள், ஆய்வு அணுகுமுறையிலிருந்து பெறப்பட்ட முடிவுகளை ஒத்தவையாக உள்ளன (அட்டவணை 2). பணவீக்கம் கூடக்கூட நிச்சயமின்மையும் கூடும். ஆனால், நீண்ட காலத்தில், குறைவடையும்.[20] மேலும், பணவீக்கம் ஒரு வீதத்தால் அதிகரிப்பின் நிச்சயமின்மை 0.28 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என பிற்செலவு ஆய்வு கூறுகின்றது (இங்கு நிச்சயமின்மை எதிர்வு கூறல் தவறுகளால் அளவிடப்பட்டுள்ளது).

மொத்த நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான எதிர்வு கூறல் மாதிரிகள், மைய நுகர்வோர் விலைச்சுட்டெண் மாதிரியிலிருந்து வேறுபடுகின்றது (அட்டவணை 2). மொத்த நுவி சுட்டெண் அதிகரிக்க நிச்சயமின்மையும் அதிகரிக்கின்ற அதே நேரம் காலப்போக்கு மீதான நிச்சயமின்மைக்கான குணகம் முக்கியத்துவம் (-0.0002) உடையதாக இல்லை. முக்கியத்துவமற்ற குணகம் நிச்சயமின்மையானது மொத்த நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் கீழான போக்கைக் கொண்டிருக்க மாட்டாது என்பதையே காட்டுகின்றது. உணவு, எரிபொருள் விலைத் தளம்பலின் ஆதிக்கம் மொநுவி சுட்டெண்ணில் இருப்பதால் அதன் குணகம் இவ்வாறு முக்கியத்துவமற்றதாகவே இருக்கும். உணவு, எரிபொருள் தளம்பல்கள் நீண்ட காலத்தில் குறைவடைந்ததாக இல்லை. இந்த உயர்ந்த தளம்பல், மொநுவி சுட்டெண் உணவு, எரிபொருள் போன்ற ஆதாரப் பொருட்களில் நிச்சயமின்மையைக் குறைப்பது சந்தேகமானதே.[21]

### மொஉஉ சுருக்கியில் நிச்சயமின்மை

மொஉஉ சுருக்கியின் நிச்சயமின்மையை மதிப்பீடு செய்வதற்கு இரு வகையான எதிர்வு கூறல் மாதிரி பயன்படுத்தப்படுகிறது. முதலாவது மாதிரியை பால், செச்சட்டி என்போர் சேர்ந்து உருவாக்கியுள்ளனர். இம் மாதிரியானது, கடந்த கால பணவீக்கப் பெறுமதிகளையும், கடந்த கால எதிர்வு கூறல் தவறுகளையும் பயன்படுத்தி பணவீக்கத்தை எதிர்வு கூறியுள்ளது. இரண்டாவது மாதிரியை பொல்லஸ்லேவ் என்பவர் வரைந்துள்ளார். இது கட்டுப்பாடான – நிச்சயமின்மை மாதிரியைப் பயன்படுத்தி, மொஉஉ சுருக்கிக்கான நிச்சயமின்மையை மதிப்பிடுகின்றது.[22] பணவீக்கம் கடந்த காலப் பணவீக்கத்திலேயே இன்னமும் தங்கியுள்ளது. ஆனால், நீண்ட காலத்தில் நிச்சயமின்மை எவ்வாறு விரைவாக மாறமுடியும் என்பதை இந்த மாதிரி கட்டுப்படுத்துகிறது.

மேற்கூறிய இரண்டு மொஉஉ சுருக்கி எதிர்வுகூறல் மூலம் பெறப்பட்ட முடிவுகள், மைய நுகர்வு விலைச்சுட்டெண்ணுக்கான நிச்சயமின்மை பற்றிய ஆய்வின் முடிவுகளை ஒத்தவையாக உள்ளன. முதலாவது மாதிரியில் (அட்டவணை 3) பணவீக்கம் உயர்வாக இருக்கும் போது நிச்சயமின்மையும் உயர்வாக இருக்கும் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், நீண்ட காலத்தில் நிச்சயமின்மை குறைவடையும். இதே முடிவே கட்டுப்பாடான – நிச்சயமின்மை மாதிரியிலிருந்தும் பெறப்பட்டுள்ளது.[23] கட்டுப்பாடான – நிச்சயமின்மையுடன் கூடிய பிற்செலவு முடிவினை அட்டவணை 3 காட்டுகின்றது. பிற்செலவுக் கணிப்பிலிருந்து காலத்தை நீக்கிய பின், கடந்த காலப் பணவீக்கம் மீதான குணகம் முக்கியத்துவம் உடையதாக இல்லை. ஆய்விலிருந்து, காலத்தை விலக்கின் கணிப்பீட்டின் விளக்கம் எவ்வாறு மாற்றமடையும் என்பதையே இது விளக்குகின்றது.[24]

நிச்சயமின்மையின் கீழான போக்கு கடந்த கால சில ஆய்வுகளில் பணவீக்கத்திற்கும் நிச்சயமின்மைக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படாமைக்குரிய காரணத்தை விளக்குகின்றது. கடந்த ஆய்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமின்மையின் கீழான போக்கை அறிவதில் தவறு ஏற்பட்டமைக்கு அவர்களின் கணிப்பீட்டு முடிவுகளில் உள்ள ஒரு பக்கச் சார்புத்தன்மை காரணமாக இருக்கலாம். இரண்டாவது அரைக்கால மாதிரியின் உயர் பணவீக்கம், நிச்சயமின்மைய உயர்த்திய அதே நேரம், கீழான போக்கு மற்றத்திசையில் செயற்படுத்தியது. நிச்சயமின்மை மீதான இரண்டு விளைவுகளும், ஒன்றுக்கொன்று எதிர்த் தாக்கம் உடையவையாக நோக்கப்பட்டுள்ளதால் பணவீக்கத்திற்கும் நிச்சய மின்மைக்குமிடையிலான தொடர்பினை அறிவதில் முன்னைய ஆய்வுகள் தோல்வி கண்டுள்ளன.

அந்நியச் செலாவணியுடன் தொடர்பான ஆய்வின் மூலமும் நிச்சயமின்மையின் கீழான போக்கு விளக்கப்படுகின்றது. இருப்பினும், அதனுடன் தொடர்புடையதாக நிச்சயமின்மை அதிகரிக்கவில்லை. இந்நிலையில், பணவீக்கம், காலம் ஆகிய இரண்டும் இணைந்த தாக்கங்கள், ஒன்றையொன்று நடுநிலையாக்கும். எனவே, நிலையான மிதக்க விடப்பட்ட நாணய மாற்றுவீத முறை உள்ள காலங்களில் நிச்சயமின்மையில் சிறு மாற்றமே ஏற்பட்டது.

நீண்ட காலத்தில் பணவீக்க நிச்சயமின்மை கீழான போக்கில் இருக்கும் என்பதை அறிதல், பணவீக்கத்துடன் நிச்சயமின்மையும் அதிகரிக்கும் என்பதற்கான ஆதாரத்தைப் பலமாக்கும். இந்த முடிவுடன் சில ஆய்வுகள் முரண்பட்டபோதும், பல ஆய்வுகள் இன்னமும் கட்டுப்பாடான - நிச்சயமின்மை அல்லது செலாவணிவீத - நிச்சயமின்மை மாதிரிகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

பணவீக்க நிச்சயமின்மையின் கீழான போக்கினை இந்த ஆய்வுகள் மீள்பரிசீலனை செய்தபோது, உயர் நிச்சயமின்மையுடன் கூடிய உயர் பணவீக்கம் என்பது ஒரு வகையில் வலிந்து பெறப்பட்ட முடிவாகவே உள்ளது.

## தொகுப்புரை

பணவீக்க நிச்சயமின்மை மீதான பெரும்பாலான ஆய்வுகள், உயர் பணவீக்கம் இருந்த காலத்தில் உயர் நிச்சயமின்மையும் இருந்துள்ளது என்ற முடிவை முன்வைக்கின்றன. ஆனால், இந்த முடிவுகள் ஏகமனதான தல்ல; கட்டுப்பாடான - நிச்சயமின்மை மாதிரியும், செலாவணி வீத மாதிரியும் இதற்கு மாறான ஆதாரங்களையே முன்வைத்துள்ளன. இக்கட்டுரை பணவீக்கத்திற்கும், பணவீக்க நிச்சயமின்மைக்குமிடையிலான நேர்க்கணியத் தொடர்பை மீள உறுதிப்படுத்தி, முன்னைய ஆய்வுகளின் முரண்பாடான முடிவுகளுக்கு விளக்கமளிக்கின்றது.

மேலும், இக்கட்டுரை பணவீக்க நிச்சயமின்மையின் கீழான போக்கிற்கு ஆதாரத்தை வழங்கி, பணவீக்க நிச்சயமின்மைக்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான நேர்க்கணியத் தொடர்பை இந்த கீழான போக்கு எவ்வாறு மறைமுகமாகக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. நிச்சயமின்மைக்கான எதிர்வுகூறல் மாதிரியும், ஆய்வு மாதிரியும் கீழான போக்கை உறுதிப்படுத்துகின்றன. பணவீக்க நிச்சயமின்மை ஆய்வு, இந்தக் கீழ்போக்கான தன்மையை மீள்பரிசீலனை செய்கின்றபோது, பணவீக்கத்துடன் அதன் நிச்சய மின்மையும் அதிகரித்துச் செல்லும் என்ற வெளிப்படையான முடிவைப் பெறுகின்றது.

இக்கட்டுரையின் முடிவுகள் நாணயக் கொள்கைக்கான தெளிவான கருத்தினைக் கொண்டுள்ளன. பணவீக்க நிச்சயமின்மையினால் பொருளாதார தீர்மானம் எடுத்தலுக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைப்பதற்கு, சமஷ்டி அரசாங்கம் தொடர்ந்தும் விலை உறுதிப்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## அடிக்குறிப்பு

1. பணவீக்க நிச்சயமின்மை பொருளாதார செயற்பாடுகள் மீது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளது என பல ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். ஹொலண்ட் (1930), கொலப் என்போர் இந்த ஆய்வின் சுருக்கத்தினை இங்கு தருகிறார்கள்.



2. நிதிக் கருவிகளுடன் கூடிய பாதுகாப்பு உபாயங்களைப் பின்பற்றுகின்ற மிகக் குறைந்த தளவு கம்பனிகளே பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. எதிர்த் தாக்கங்களுக்கான திருப் பத்தில் கடைப்பிடிக்கப்படும் உபாயங்களும் மிக உயர் ஆபத்துடையனவாகவே இருக்கும். உபாயங்கள் இரு பிரச்சினைகளால் எளிதில் பாதிப்படையக் கூடும். முதலாவது, உபாயங்கள் சிக்கல் நிறைந்தவையெனில், சாத்தியமான அனைத்து நிச்சய மின்மைகளையும் எதிர்வுகூறுவது சிக்கலானதாகும். இரண்டாவது, உபாயங்களில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு நிதிக் கருவிகளுக்கும் ஏற்றவகையில் சந்தைகள் அசைவுறும்போது, வேகமாக இயங்கும் வர்த்தக முறை தேவையாக உள்ளது. துர் அதிர்ஷ்டவசமாக 1994 இன் முற்பகுதியில் நீண்டகால வட்டி வீதங்கள் தளம்பலடைந்தன. அப்போது வெளிநாட்டுப் பணக்கருவிகளின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டோர் இவற்றின் விலை உறுதிப்பாட்டினை நிலைநிறுத்த முடியாதபோது, இச்சந்தைகள் மூடப்பட்டன. இது மூடப்பட்ட சந்தையில் தங்கியிருக்கும் பாதுகாப்பு உபாயங்கள் தோல்வியடைவதற்குக் காரணமாகின்றன.

3. பால் என்பவரால் உருவாக்கப்பட்ட பொருளாதார மாதிரியை ஒத்ததாக இந்த விளக்கம் உள்ளது. பாலின் மாதிரியில், பணவீக்கம் தொடர்பாக கொள்கை வகுப்போர் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டுள்ளனர். சிலர் பணவீக்க நீக்கத்தை செய்ய சிலர் அவ்வாறு செய்யவில்லை. எதிர்காலத்தில் பணவீக்கக் கொள்கைகளை யார் கட்டுப்படுத்த உள்ளனர் என்பதில் பொதுமக்களுக்கு நிச்சயமின்மை உள்ளதால், உயர் பணவீக்கமும் குறைக்கப்படும் என்பதில் பொது மக்களுக்கு நிச்சயமின்மை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4. நாணயக் கொள்கை மீதான நிச்சயமின்மை, குறுங்காலத்திலேனும பணவீக்க நிச்சயமின்மைக்கு இட்டுச் செல்லும். இந்த நிச்சயமின்மைகள், பண வீக்கம் மீதான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு 6-12 மாதங்கள் வரை எடுக்கும். இதன் விளைவாக இன்று நாணயக் கொள்கையில் ஏற்படும் மாற்றம், அடுத்து வரும் 6-12 மாதங்கள் வரையான பண வீக்கத்துக்கான எதிர்வுகூறல் மீது வரையறுக்கப்பட்ட தாக்கத்தை மட்டுமே கொண்டு வர முடியும்.

5. பணவீக்க மாறுதல்கள் நிச்சயமின்மையை அளவிடு வதற்கான ஒரு சிறந்த அளவீடாக ஆரம்பகால ஆய்வாளர்கள் எடுகோள் கொண்டனர். ஆனால், இதில் உள்ள வரையறைகள் விரைவில் அறியப்பட்டன (வொஸ்டர்). பண வீக்கத்தில் மாறுதல்கள் எதிர்வு கூறப் பட முடியும் என்ற அடிப்படைக் குறைபாட்டினால், இம் மாறுதல்கள் எப்போதும் நிச்சயமின்மையைப் பிரதிபலிக்கு மென்றில்லை. இதனாலேயே கடந்த தசாப்தத்தில் இம் மாறுதல் அணுகுமுறை பயன்படுத்தப்பட வில்லை.

6. உயர் தகைமையுடைய எதிர்வு கூறுபவர்களின் ஆய்வு மட்டுமே தனிப்பட பதிலளிப்பவர்களின் நிச்சயமின்மையை மதிப்பீடு செய்கின்றது. பணவீக்கத்திற் கான வெவ்வேறுபட்ட வீச்சுக்கான நிகழ்வுகளைக் குறிப்பிடும்படி ஆய்வுக்குட்படுத்தப் படுபவர்கள் கேட்கப்படுகின்றனர். உதாரணமாக, ஆய்வுக்குட்படுபவர் 0.5 நிகழ்தகவு இருக்கக்கூடியதாக 2-3 எல்லையையும், 0.5 நிகழ்தகவு இருக்கக்கூடியதாக 3-4 எல்லையையும் குறிப்பிட முடியும். இந்த ஆய்வு முதன் முதல் அமெரிக்க புள்ளிவிபர கழகத்தினாலும், பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய பணியகத்தினாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. தற்போது பிலடெல்பியா ரிசர்வ் வங்கியாலும் நடாத்தப் படுகின்றது.

7. இந்த ஆராய்ச்சிகளிற் பெரும் பகுதியும் அமெரிக்க தரவைப் பயன்படுத்தி மேற் கொள்ளப் பட்டனவாகும். ஆனால், அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் மோர்கன் போல் மாதியைப் பயன்படுத்தி இதே முடிவுகளைப் பெற்றுள்ளனர்.

8. இந்த மாதிரிக்கான புள்ளிவிபரவியல் நுட்ப விளக்கம், "நிபந்தனையுடனான வேறுபட்ட மாறல்களாகும்". இது கடந்த கால பிற்செலவுத் தரவுகளுடனான நிபந்தனையுடன் கூடிய வேறுபட்ட மாறல்களாலும் (ARCH) பொதுமைப்படுத்தப் பட்ட கடந்த கால பிற்செலவுத் தரவுகளுடனான நிபந்தனை யுடன் கூடிய வேறுபட்ட மாறல்களாலும் குறிப் பிடப் படுகின்றது.

9. உ-ம் உலகப் போரிலிருந்து அமெரிக்காவில் பணவீக்க நிச்சயமின்மை செலாவணி வீதத்துடன் தொடர்புபட்ட நிச்சயமின்மை மீதான ஆராய்ச்சியின் ஒரு அம்சமாகவே இருந்துள்ளது. இது ஏனைய பொருளாதார மாறிகள், ஏனைய நாடுகள் 1800 கள் வரைக்கும் காலப் பின்னடைவு என்பவற்றையும் கருத்திற் கொள்கின்றது. இந்த ஆராய்ச்சி யின் பொதுவான முடிவு என்னவெனில், அமெரிக்க தங்க நாணயத் திட்டத்தில் இருந்த காலத்தில் பொருளாதார நிச்சயமின்மைகள் உயர்வாக இருந்துள்ளன என்பதாகும். பெயரளவு மொஉஉ, மெய் மொஉஉ, பணவீக்கம், பணம் என்பவற்றின் மீதான நிச்சயமின்மை உயர்வாக இருந்தது. ஏனைய நாடுகளிலும் இதே மாதிரியான முடிவே பெறப் பட்டது.

10. 1954 ற்கு முன் பணவீக்கம் அதிகளவு தளம்பலுடையதாக இருந்துள்ளது என்பதை பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட் டுள்ளனர். (கொசிமனோ, ஜன்சன்). இக்கட்டுரையில் பெரும்பாலான முடிவுகள், ஆய்வின் ஆரம்ப-முடிவுக் காலம் குறித்து இறுக்கமாக உள்ளது.

11. 1946 இல் யோசப் லிவிங்ஸ்ரன் என்பவரால் முதலில் இவ் வாய்வு தொடங்கப்பட்டதால் அவர் இறந்த பின்பும் அவரின் பெயரால் இவ்வாய்வு குறிப் பிடப்படுகின்றது. அவர் 'பிலடேல்பியா இஸ்குவாரர்' என்ற பத்திரிகையில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தபோதே இவ் வாய்வினைச் செய்தார். பிலடெல்வியா ரிசர்வ் வங்கி தற்போது இவ்வாய்வினை நடாத்தி தரவுகளை வெளியிட்டு வருகின்றது. உயர் தகைமையுடையோரின் எதிர்பார்ப்பு ஆய்வு நுகர்வோர் விலைச் சுட்டெண், மொஉஉ சுருக்கி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகக் கணிப்பிடப்படுகிறது. ஆனால், இந்த ஆய்வு 1968 வரை மேற்கொள்ளப்படவில்லை. மிச்சிக்கன் பல்கலைக் கழக ஆய்வும் 1966 வரை நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்க மதிப்பீடுகள் கேட்கப்படும் வரை மேற்கொள்ளப்படவில்லை. ஆய்வுக்குட்படுபவர்கள், விலைகள் கூடுமா அல்லது குறையுமா என்பதைப் பற்றி மட்டும் முன்னர் கேட்கப் பட்டார்கள்.

12. ஜூனிலும் டிசம்பரிலுமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது ஏப்ரிலிலும் ஒக்டோபரிலும் மட்டுமே உத்தியோக பூர்வ தரவுகள் கிடைக்கக் கூடியதாக இருந்தன. இதனாலேயே 8 மாத, 14 மாத காலங்கள் என எதிர்வு கூறல்களை கார்ல்சன் மாற்றியமைத்தார். லிவிங்ஸ்ரன் தரவுகளின் பல ஆய்வுகள் கார்ல்சன் சீராக்கத்தை ஏற்றுள்ளன.

13. ஆய்வுக்குட்பட்டவர்களது பண வீக்க எதிர்பார்க்கைகளின் சராசரியே பணவீக்கம் ஆகும்; எதிர்பார்க்கப்படாத வீக்கம், ஆய்விலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்திற்குப் பிரதியீடு செய்யப்படும்போது ஆய்வின் பெறுபேறுகளும் ஒரே மாதிரியாகவே இருக்கும். பணவீக்க ஆய்வுக் கணிப்பீடுகளைப் பயன் படுத்துவதன் மூலம் லிவிங்ஸ்ரன் ஆய்விலிருந்த கால முரண்பாட்டை நீக்கிக் கொள்ளலாம்.

14. எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கத்திலும் பார்க்க பணவீக்க நிச்சயமின்மை கூடுதலான அளவுக்கு வேறுபாடுகளைக் கொண்டுள்ளது என்பதை வரைபடம் 1 விளக்குகிறது. உதாரணமாக, எதிர்பார்க்கப்பட்ட பண வீக்கம் 1976 லும், 1977 லும் முறையே 6 வீதமாக இருந்தது. அதே நேரம் நிச்சயமின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பகுதியில் 1.7 லிருந்து 1. வீக ... க் குறைவடைந்துள்ளது.

திரி ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பத்தில் நிச்சயமின்மை மிக உயர்வாக இருந்தது. ஆனால், அளவீட்டு முறையியல் ஆய்வின்படி 1954-60 காலம் விலக்கப்பட்டிருந்தமையால் இக்காலத்தில் நிச்சயமின்மையில் கீழான போக்கு தென்படுகின்றது.

பிற்செலவுகள் அவற்றின் எச்சத்தில் தொடர்ச்சியான இணைப்புக்காகச் சரிசெய்யப்பட்டன. இச் சீராக் ...த்திற்கு உயர்ந்த பட்ச ...ருங்கிணையக் கூடிய அணுகு ...றை பயன்படுத்தப்படுகின்றது ...னால், TSP பாவனையாளர் ...ழிகாட்டி) பிற்செலவிற்குரிய ...னைய சிறப்பு அம்சங்களும் ...ண்டறியப்பட்டன. ஆனால், காலம் ...பின்னிடைவுடன் கூடிய எதிர் பார்க்கப்பட்ட பணவீக்கத்திற்கான குணகங்களும் முக்கியத்துவம் உடையனவாக இல்லை. மிகக் கூடிய காலப் பின்னிடைவைக் கொண்ட குணகங்களும் கூட நிச்சய மின்மை மீது முக்கியத்துவம் உடையனவாக இல்லை. இயலுமானவரை பணவீக்கத்தில் உறுதியான தன்மையைப் (சீரான ஒரே போக்கு) பேணுவதற்காக மாற்றம் செய்யப்பட்ட தரவின் அடிப்படையில் பிற்செலவு கணிப்பிடப்பட்டது. இந்த பிற்செலவில், பணவீக்கத்துடன் பணவீக்க நிச்சய மின்மையும் அதிகரிக்கின்றது. அத்துடன், எதிர்மறையான மாறாக் குணகம் நிச்சயமின்மை கீழ்நோக்கியதாகவே இருக்கும் என்பதைக் காட்டுகின்றது. ஆனால், நிலையான குணகம் புள்ளிவிபரவியல் அடிப்படையில் முக்கியத்துவமுடையதாக இல்லை.

17. பணவீக்க நிச்சயமின்மையில் கீழ் நோக்கிய சரிவிற்கு ஆதாரம் இருப்பது போல, அதற்குக் காரணங்கள் உடனடியாக விளக்கப்படவில்லை. குறைந் தளவு நிச்சயமின்மை பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான மாற்றத்தில் பிரதிபலிக்கும் அல்லது எதிர்வு கூறியவர்கள் மிக அறிவுடையவர்கள் என்பது கருத்தாகும். நுகர்வோர் தமது வருமானத்தை எவ்வாறு செலவு செய்கின்றார்கள் என்பதை மாற்றுவதே பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான மாற்றமாக இருக்க முடியும். உதாரணமாக 40 வருடங்கட்கு முந்திய செலவுகளுடன் ஒப்பிடும்போது, வரவு செலவுத் திட்டத்தின் பெரும்பகுதி சுகாதார சேவைகளிலும், சிறு பகுதி நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் மீதும் செலவிடப் படுகின்றது. சுகாதார சேவைகளின் விலைகள் நீண்ட காலப் பாவனைப் பொருட்களின் விலைகளைவிடக் குறைவாக இருப்பின் சுகாதார சேவைகளின் நிறையை (சுட்டெண்ணில்) அதிகரிப்பதன் மூலம், முழுப் பணவீக்கத்தையும் குறைந்தளவில் அதிகளவுக்கு எதிர்வு கூறக்கூடியதாக வைத்திருக்க முடியும். நிச்சய மின்மையை குறைவாக வைத்திருப்பதற்கு சிறந்த எதிர்வு கூறலும் ஒரு காரணமாகும். பொருளாதாரத்தில் சிறந்த மாதிரிகளை உருவாக்குவதற்காக புள்ளி விபரவியலாளர்கள் தொலைத்தொடர்பு நுட்பங்களையும் கணணி வசதிகளையும் பயன்படுத்த முடியும். எவ்வாறெனினும் பணவீக்க நிச்சயமின்மையின் கீழான போக்கிற்கான உண்மையான காரணம் இன்னமும் கண்டறிவதற்கான சாத்தியங்கள் இல்லை.

18. மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் 1957 லிருந்து கிடைத்திருப்பதால், இந்த ஆய்வும் இக்கட்டுரையில் உள்ள ஏனைய ஆய்வுகளிலும் பார்க்க 3 வருடங்கள் பின்னதாக ஆரம்பிக்கப்பட்டது.

19. ஸ்ரொக்ரன், கிளாஸ்மன் மாதிரியில் பணவீக்கம் நான்கு பின்னடைவுப் பெறுமதிகளில் தங்கியுள்ளது. சிறந்த மாதிரித் தெரிவிற்கான தகுதிவிதியின் படி இது ஒரு சிறந்த மாதிரி என எடுத்துக் கூறப்படுகின்றது. மைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு மூன்று பின்னடைவுப் பெறுமதி சிறந்தது எனப்படுகிறது.

20. காலாண்டுத் தரவில் உள்ள குறுங்காலத் தனம்பல்களை நீக்குவதற்காக கடைசி 6 மாத கால சராசரியே கடந்தகால பணவீக்கமாக கணிக்கப் படுகின்றது. இந்த அணுகு முறை அனைத்து எதிர்வுகூறல் மாதிரிகளிலும், கடந்தகாலப் பணவீக்கம் மீதான நிச்சய மின்மையைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

21. மைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட மொத்த நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் நிச்சயமின்மை உயர்வாக இருக்கும் என்பதற்கான ஆதாரங்களையே அட்டவணை 2 இல் உள்ள பிற்செலவுகள் விளக்குகின்றது. மாறாக் குணகம் மைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைக் காட்டிலும் 3 மடங்கு கூடியதாக மொத்த நுகர்வுச் சுட்டெண்ணில் உள்ளது.

22. பொல்லஸ்லேவ் மாதிரியில், பணவீக்கம் கடந்த 4 காலாண்டுப் பணவீக்கத்தில் தங்கியுள்ளது. நிபந்தனையுடனான வேறுபட்ட மாறல்கள் (நிச்சயமின்மை), பொதுமைப் படுத்தப்பட்ட கடந்த காலப் பிற்செலவுத் தரவுகளுடனான நிபந்தனையுடன் கூடிய மாதிரியைப் பின்பற்றும் என எடுகோள் கொள்ளப்படுகின்றது.

23. அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ள சார்ந்த மாறிகள் கட்டுப்பாடான – நிச்சயமின்மை மாதிரியிலிருந்து பெறப்பட்ட நிபந்தனையுடன் கூடிய மாறலாகும். இவை மிகக் குறைவாக இருப்பதனால், மொஉஉ சுருக்கியில் காலாண்டு வீதாசார மாற்றத்தை இது எதிர்வு கூறுகின்றது. அட்டவணை 3 ல் காட்டப்பட்டுள்ள அனைத்துக் குணகங்களும் உண்மைப் பெறுமதியை 10000 மடங்கால் காட்டுகின்றன. எச்சங்களின் தொடர்ச்சியான இணைப்புக்காக, உயர்ந்த பட்ச ஒருங்கிணைப்பு நுட்பத்தினைப் பயன்படுத்தி பிற்செலவுகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையில் உள்ள ஏனைய முடிவுகள் போல இந்த பிற்செலவு திடமானதாக இல்லை. ஏனைய மாதிரிகள் காலத்தை மாற்றுவது குறித்தும், நீக்குவது குறித்தும் (குறிப்பாக 1973–81 எண்ணெய் விலை உயர்ந்த போது) மிக இறுக்கமாக இருந்தன. ஆனால் இந்த மாதிரியானது சீராக்கத் திற்கு ஏற்றதாக மிகவும் நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

24. பணவீக்க நிச்சயமின்மை ஆய்வின் முரண்பாடான முடிவுகளுக்கு, ஆய்வாளர்கள் மாற்று விளக்கங்களை முன்வைக்கின்றார்கள். பணவீக்கத்திற்கும் பணவீக்க நிச்சயமின்மைக்கு மிடையிலான தொடர்பைக் கண்டறிவதில் பொதுமைப் படுத்தப்பட்ட கடந்த கால பிற்செலவுத் தரவுகளுடனான நிபந்தனை யுடன் கூடிய வேறுபட்ட மாறல்கள் தோல்வியடைந் தமைக்கு சீரான தன்மை காணப்படாமை முக்கிய காரணம் என புறுானர் ஹெஸ் போன்றோர் கூறுகின்றனர்.

நன்றி : *Economic Review,* Federal Reserve Bank, Kanss city.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய தொழில் பெண்மயப்படுத்தல்

பேராசிரியை யோகா இராசநாயகம்
(கொழும்பு பல்கலைக்கழகம்)

## புகுமுகம்

சர்வதேச உழைப்புச் சந்தையில் பெண் உழைப்பாளிகளின் பங்கு கொள்ளலை பல செயல்முறைகள் அதிகரித்திருப்பதைப் பற்றி அல்லது இன்னுமொரு வகையிற் கூறினால் உலகளாவிய ரீதியில் உழைப்பு பெண்மயப்படுத்தப்படுத்தலைப் பற்றிய ஒட்டுமொத்தமான பொது நோக்குப் பார்வை ஒன்றினை இக்கட்டுரை வழங்குகின்றது. மாற்றமடையும் இந்தப் பாங்கு, உலகளாவிய முறையில் நாடுகள் ஒன்றில்ஒன்று தங்கியிருத்தலினாலும் புதிய முதலீடுகளுக்கு இடமளிக்கும் நாடுகளின் எதிர்விளைவுகளினாலும் உழைப்பில் எழுந்த புதிய சர்வதேசப் பிரிவுகளோடு தொடர்புடையதாயுளது. இதனால் முதலீடுகளுக்கு இடமளிக்கும் மூன்றாம் மண்டல நாடுகளில் மலிந்த உழைப்பை நயப்படுத்தலை இலகுவாக்குவதற்காக, உழைப்பு ஒழுங்கமைதி விதிகள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தளர்த்தப்படலாயின. முறையான ஒழுங்கு விதிகள் அரிபடுதலினாலும், சட்டவாக்க முறைகளினாற் கைவிடப்படுவதனாலும் வெளிப்படையாகத் தளர்த்தப்பட்டன. அவற்றைப் போதியளவு செயலுறுதியாகச் செயற்படுத்தாதலினால் அவை மறைமுகமாகத் தளர்வாயின, உழைப்புப் பெண்மயமாதல் எனும் மாற்றச் செயன்முறையின் நேர்வு ஆய்வாக இலங்கையின் அனுபவம் / அடைவு இங்கு ஆராயப்படுகின்றது.

உலகப் பொருளாதாரத்தின் பொருளாதார, புவிசார் அரசியற் பரிமாணங்கள் இரண்டாம் உலகப் போரின் பின் நிலைமாறி வந்துள்ளன. குடியேற்றவாத காலப் பொருளாதார முறையை படிப்படியே பன்னாட்டுக் கம்பெனிகளின் நேரடி முதலீடுகள் ஒதுக்கத் தொடங்கின. குடியேற்றுவாத முறை உருக்குலைய, புதிய அரசுகள் தோன்றின. இவை கைத்தொழில் மயமாக்கலை[illegible] ருளாக அபிவிருத்தியின் மூலவழியாகக் கொள்ள முற்பட்டன. ஆரம்பத்தில் வளர்முக நாடுகளில் இருந்த கைத்தொழில் உற்பத்தி, இறக்குமதிப் பிரதியீடாகவே இருந்தது. இருந்தாலும் 1960 களிலிருந்து, நீண்டகாலம் வளர்முக நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டிருந்த பன்னாட்டுக் கம்பெனிகள் 'உலகளாவிய வள நாட்டத்தில்' கவனஞ்செலுத்தத் தொடங்கின. இதனால் சில உற்பத்தித் தொழிற்பாடுகளை வளர்முக நாடுகளில் உகந்த இடங்களுக்குப் பரப்பி, உற்பத்திப் பொருட்கள்/கூறுகள் ஆகியவற்றைக் கைத்தொழில் மயப்பட்ட உலகப் பகுதிகளுக்கு மீள ஏற்றுமதி செய்ய முற்பட்டனர்.

பன்னாட்டுக் கம்பெனிகள், வியாபாரப் பல்கூட்டிணைப்புகள் ஆகியன தமது வியாபாரச் சூழ்திறன்களை மாற்றி அமைக்கத் தொடங்கின. கைத்துதொழில் மயப்பட்ட நாடுகளில் இருந்த உயர் கூலி / உயர் நுகர்வு முறையான உற்பத்தி முறைகளை விட்டு, இடஞ்சார்ந்த பரவலாக்கப்பட்ட உற்பத்தி முறைகளை நாடின. இந்த முறையின் சில கட்டங்களில் குறைந்தளவு கூலிபெறும் ஆளணி முக்கியமாய் இருந்தன. சில குறைவிருத்தி நாடுகளில் உற்பத்தித் தொழில்களின் விசாலிப்பைத் தூண்டுவதில் இந்த உலகளாவிய நேர்வு / நிலைமை அடிப்படையான முக்கியத்துவம் கொண்டு வந்துள்ளது. கைத்தொழி லுற்பத்தியில் புதிய சர்வதேச தொழிற் பிரிப்பும் அல்லது உழைப்புப் பகிர்வும், அதனோடு தொடர்புபட்ட பல உற்பத்தி சார் நடவடிக்கைகளின் இடரீதியான பரவலாக்கமும் கைத்தொழில் மயப்பட்ட நாடுகளில் உள்ள 'மூலதனத் திரட்சி நெருக்கடி' யோடு தொடர்புபட்டவையா யமைந்தன.

மூன்றாம் மண்டல நாடுகளின் [illegible] நலிவடைந்தது. இக்காலப் பகுதிய பொருளாதாரப் பரப்பில் இருந்த முக்கியமானதொரு போக்காக இருந்தது. கடந்த இரண்டரைத் தசாப்தங்களாக விளைந்த சர்வதேசப் பொருளாதார உறவுப் பாங்குகள் வளர்முக நாடுகளின் 'தம்மில் தாமே தங்கியிருக்கும்' ஆற்றலைப் பலப்படுத்தவில்லை. அவற்றிற் பெரும்பாலானவை கடனாளிகளாகவும் தளம்புப உலக விலைகளில் கனிப்பொருட்களை கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளிற்கு விற்பனை செய்வதில் தங்கியிருப்பவையாயும் இருந்தன.

ஆரம்பத்தில் இந்நாடுகள் எடுத்து மேற்கொண்ட அபிவிருத்தி மாதிரிகள் தோல்வி கண்டன. இதனால் இந்த வளர்முக நாடுகள் பிரமாண்டமான கடன் பழுக்களினால் நெரிந்து தள்ளாடவும், அன்னிய நாட்டு நாணய மாற்றியை உண்டாக்கிக் கடுஞ் செலவான பொதுநல, வேலை வாய்ப்புத் திட்டங்களைக் குறைக்கும்படி கேட்கும் கடன்காரர்களின் வலியுறுத்தல்களையும் தாங்க நேர்ந்தது. வேறுவழியின்றி இந்த நாடுகள் 'அமைப்புச் சீராக்கம்' என்ற பெயரைப் பெற்றுள்ள பொருளாதாரக் கொள்கைச் சிப்பத்துக்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கின. இச் சிப்பத்தின் முக்கிய கூறுகளாயமைந்தவை; தனியார் மயமாக்கல், உற்பத்திவளங் குன்றிய கைததொழில் களுக்கான உதவிப் பணம் வழங்கலை அகற்றுதல், நாணய மதிப்பிறக்கம் செய்தல், ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் ஆகியனவாகும். இத்தகைய சிப்பம் சில நாடுகளில் சமூக, அரசியல் குமுறல்களை தோற்றுவித்தமையால் அப்பொருளாதாரங்களில் திடநிலைக்கேடு விளைவாயிற்று.

வளர்முக நாடுகளிலும் கைத்தொழில்மயமாக்கப்பட்ட பொருளாதாரங்களிலும் அமைப்பியற் சீராக்கமும் தொழில் நெகிழ்ச்சியும் வலியுறுத்தப்பட்டமையினால் வேலை

வாய்ப்பு நிலைமைகள் துரிதமாக மாறின, மேலும் தொழில் நுட்பவியற் புதுமுறைகளும் சில உற்பத்தி முறைகளை வழக்குக்கு ஒவ்வாதன ஆக்கின. அதனோடு சில கைத்தொழில் உற்பத்திமுறைகள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உலகெங்கும் பரவலாயுள்ள இடங்களிற்கு அனுப்பப்பட்டன. கடும் போட்டியால் ஊக்குவிக்கப்பட்ட தொழில் வழங்குனர் புதிய தொழில்நுட்ப முறைகளில் உள்ளார்ந் திருக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் வேலைகளை மீளமைப்புச் செய்தனர்.

## உலகளாவிய பெண்மயப்படுத்தல்

கடந்த இருபதாண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கூலி வேலை வாய்ப்பு பெண்களுக்கு கிடைப்பதில் விளைவாக்கம் கொண்ட அடிப்படை வேலை வாய்ப்புப் போக்குகளில் குழப்பம் தெரிகின்றது. சில பயிர்ச்செய்கைத் துறைகளில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்திருந்தாலும், இலத்திரனியல், உணர்வு தொடர்பான கைத்தொழில்கள், ஆடை தயாரிப்புத்தொழில், சுற்றுலாப் பயணித்தொழில் போன்ற விரைவாக வளரும் சேவைக் கைத்தொழில்களில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகளில் தேறிய பெருக்கம் நிகழ்ந்துள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது பெண்கள் வேலைக்கமர்ந்தமை அதிகரித்திருந்தாலும் வேலைக் கமர் பாங்கு எளிமையற்றதொன்றாக உளது. ஆண்களுக்குப் பதிலாகப் பெண்கள் பல துறைகளில் வேலைக் கமர்த்தப்படுகின்றனர்; பலவகையான வேலைகள் பெண்களுக்கு ஏற்றவையாக நிலை மாறுகின்றன. கைத் தொழில்களுள் வினைத்திறமை கூறுபட்டு ஒன்றுதிரளுதல் அல்லது துருவப்படுதல், உழைப்புச் சந்தையின் குறிப்பிட்ட துறைகளிற் பெண்மயப் படுதலை உந்திவிடுத்துள்ளன. ஒரு சில பால் அடிப்படையான தொழில்களுக்குள் பெண்கள் நெருக்கப்படுவது பற்றிய ‘மிகை நெருக்க’(over crowding) எண்ணக்கரு விளக்குவது போல, பல வளர்முக நாடுகளில், தயாரிப்புத் தொழில், உற்பத்தித் தொழில்கள் உட்பட்ட பல தொழில்களில் ஆண்களுக்காகப் பெண்கள் பதிலீடு ஆகின்றனர்.

குறைந்த கூலியுடன் பாதுகாப்பு நிலையற்ற வேலைகளில் அமர்வதற்குப் பெண்கள் இணங்குவது அதிகரித்து வருதல் மிக நெருக்கமான உழைப்புச் சந்தையின் விளைவுகளில் ஒன்றாகும். இதனோடு உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் சேர்ந்து ஆண்கள் மரபு வழைமையாகச் செய்து வந்த வேலைகிளில் பெண்களை அமர்த்தும் போக்கினை உந்துவனவாயின.

1970 களுக்கும் 1980 களுக்கும் இடையில் பெண்களின் தொழிலணிப் பங்கு கொள்ளலில் உலகெங்கும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. 1970 களில் பெண்களின் தொழிலின்மை விகிதம், ஆண்கள் தொழிலின்மை விகிதங்களோடு ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தது. ஆனால், 1980 களில் கைத்தொழில் மயப்பட்ட நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் பெண்களுடைய (வெளிப் படையான) தொழிலின்மை விகிதங்கள் ஆண் தொழிலின்மை விகிதங்களை விடக் குறைந்து சென்றுள. ஆண்களுக்கு விருப்பம் இல்லாத, கூலி உயர்வுக்கோ தொழிலுயர்வுக்கோ வாய்ப்பு இல்லாத, குறைந்த வினைத் திறமை போதுமாயுள வேலைகளைப் பெண்கள் ஏற்கின்றனர் என்பதற்கு இலங்கை உட்பட பலநாடுகளிலும் சான்று உண்டு. இந்த மாற்றந்தான் ‘பெண்மயப்படுத்தல்’ எனும் செயல் முறையாகும்.

இந்த மாற்றங்கள், உழைப்பாளர் தொகுதியில், குறிப்பாக முறை சார்ந்த துறையில், பெண்கள் பங்கு கொள்ளலை ஆராய்ந்தறிவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. இவ்வாய்வினை, கூலி உழைப்புக்கான வாய்ப்புக்கும், வேலை கிடைத்ததும் பெண்கள் எதிர் கொள்ளும் வேலை நிலவரங்கள் அல்லது வசதிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை பிரித்தெடுத்து ஆரம்பிக்க வேண்டும். சில தொழிற்பிரிவுகள் பெண்மயப்படுத்தப் பட்டதனால் பெண்களின் கூலி உழைப்புக்கான வாய்ப்பு சில சந்தர்ப்பங்களில் சீராகலாம். ஆனால், வேலை கிடைத்ததும் பெண்கள் எதிர் கொள்ளும் வேலை நிலவரங்கள் பல சந்தர்ப்பங்களில் சீரழிந்து செல்லும் நிலை தோன்றுகின்றது. மேற்கூறிய இரண்டு நிலைமைகளும் உலகத் தொழிலாளர் சந்தையில் ஒன்றோடொன்று தொடர்புடையனவாயுள்ளன.

வளர்முக நாடுகளில் நவீன துறையின் வளர்ச்சி, பெண்களை உழைப்பாளர் என்ற வகையில் ஓரப் படுத்த உதவியுள்ளது என்று போஸ்றப் (1970) தனது முக்கியமான நூலில் வாதிட்டாலும், புதிய சர்வதேச உழைப்புப் பகிர்வும், தொழிற் சந்தையின் இசைவுத் தன்மையும், பல வளர்முக நாடுகளில் அமைப்பியல் இணக்க நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டமையும், உலகெங்கிலும் பெண் உழைப்பைப் பயன்படுத்தல், மரபு முறையாக ஆண்களால் ஆதிக்கம் செலுத்திய பல பணித்துறைகள் ‘பெண் மயப்படுத்தல்’ ஆகியவற்றில் தனிமுதலான வளர்ச்சியை உண்டாக்கியுள்ளது. 1980 களுக்கான ஆண்/பெண் முயற்சி விகிதங்கள் பற்றிய சர்வதேச தரவுகள் இதனைக் தெளிவாகக் காட்டுகின்றன (Standing, 1989).

தேசிய அரசாங்கங்களுக்கு விதிக்கப்படும் இணக்கங்களின் சூழமைவில், அரசுகள் பெண்களுக்கான வேலைகளின் தன்மை பற்றிய பிரச்சினைகளை விடுத்து, பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே கவனஞ் செலுத்தத் தொடங்கியுள்ளன. மேலும், பல வளர்முக நாடுகள் தொழிலாளரைப் பாதுகாக்கப் புதிய சட்டங்களை ஆக்குதலுக்குப் பதிலாக, உள்ள சட்டங்களையே அழிக்க முற்படுகின்றன. புதிய வேலை வாய்ப்புகளை உண்டாக்கக் கூடிய கைத்தொழில் முதலீட்டாளரைக் கவருவதற்காகவே அவை இவ்வாறு செய்கின்றன. குறிப்பாக, கூலியின் கீழெல்லை சார் சட்டங்கள், தொழில் ஊழிய உரிமை, அனுமதிக்கக் கூடிய இரவு நேர வேலை ஆகியன பற்றிய சட்டவாக்கம் அண்மைக்கால ஆண்டுகளில் ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பின்னோக்கிச் செல்லும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. இத்தகைய கொள்கை அடிப்படையான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையில், தொழிலாளரைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் எதிர்மறைத் தொனியுள்ளனவாய்த் தெரிவதால் கொள்கை உருவாக்குவோர் அவற்றை வேலைவாய்ப்பு ஆக்கத்துக்குத் தடைகளாகக் காண்கின்றனர்.

நாடுகளுக்குள் வேலை வாய்ப்புகளை உண்டாக்குதல் பல வழிகளில் அரசாங்கங்களின் கொள்கைகளினால் தாக்கம் உறுகின்றன. இந்தவழியில் மேற்கொள்ளப்படும் பிரதான சூழ்திறன் முறைகளாவன: தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பு அளித்தல், வேலை வாய்ப்புத் துறையில் பொதுத் துறை முதலீடு செய்தல், தொழில் பற்றிய சட்டவாக்கம் ஆகியனவாகும். இவற்றில் முதல் இரண்டும் வேலைகள் உண்டாக்குதலில், குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தலில் தாக்கம் கொண்டனவாகும். தொழில் பற்றிய சட்டவாக்கம வேலையின் தரத்தையும் வேலை செய்யும் நிலவர வசதிகளையும் நிர்ணயிப்பனவாகும்.

முதலீட்டாளருக்கு ஊக்குவிப்புகள் அளிக்கும் ஏற்றுமதி முகப்பட்ட கைத்தொழில் மயமாக்கற் செய்முறைகள் வளர்முக நாடுகளில் பெண்கள் தொழிலமர்வை ஆழமாகத் தாக்கியுள்ளது. அமைப்பியல் இணக்க நிகழ்ச்சித்திட்டக் கூறாக விதந்துரைக்கப்பட்ட இந்தச் சூழ்திறன் முறையை மேற்கொண்ட நாடுகளில், பெண் தொழிலாளர் படை பங்கு கொள்ளும் விகிதங்கள் கூடியதோடு பயிர்ச்செய்கை சாராத துறைகளில் பெண்கள் வேலைக்கமரும் பங்கும் பெருத்துள்ளது. இந்த நிலைமை போஸ்றப்பின் கோட்பாட்டிற்கு (1970) ஆதரவாயில்லை. பெண்கள் கூடுதலாக வேலைக் கமர வழிவகுக்கும் வியாபாரத் தடை நீக்கம், ஏற்றுமதி முகப்பட்ட கைத்தொழில் மயமாக்கம் ஆகியவை கொண்ட மாற்றுக் கோட்பாட்டையே இந்த நிலைமை வலியுறுத்துகின்றது.

பெண்கள் வேலைக்கமர்தலில் தாக்கம் கொண்ட அமைப்பியல் இணக்க நிகழ்ச்சித்திட்டக் கூறுகளாவன: குறைந்த கூலி, தொழிற் சந்தை கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை நெகிழ்தல், தனியார் மயமாக்கல் என்பனவாம். பெண் தொழிலாளர் பொதுவாகக் குறைந்த கூலி பெறுவதினாலும், அவர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்ய ஆண்களை விடக் கூடிய இசைவாளர்களாய் இருத்தலினாலும் பொதுவாகக் குறைந்த கூலியை அனுமதித்தல் அல்லது தாமெல்லை கூலிச்சட்ட வாக்கம் அரிபடுதல் ஆகியன ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களை வேலைக்கமர்த்தலுக்கு ஏதுவாகின்றது.

தொழிற் சங்கக் கட்டுப்பாட்டு நீக்கத்தைப் பொறுத்த வரையில் 1988 இல் 108 நாடுகள் சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பின் (I.L.O.) 100. ஆவது இலக்க சம ஊதிய உடன்படிக்கைக்கு உறுதிப்பாடு அளித்துள்ளன. எனினும், உறுதிப்பாடு அளிக்காத நாடுகளுள் இலங்கை போன்ற ஏற்றுமதி முகப்பட்ட கைத்தொழில் மயமாக்கற் சூழ்திறனை மேற்கொண்ட நாடுகள் அடங்கும். ஆனால், இந்தியா போன்ற நாடுகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறு வேறான கீழெல்லை வேதனங்களைக் கொண்டுள்ளன. தொழிற்சங்கக் கட்டுப்பாட்டு நீக்கத்தின் இந்தக் கூறு இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் பெண்களது சமூக பொருளாதார நிலையைப் பாதித்துள்ளது. தொழிலை முறை சாராமைப்படுத்தல் அல்லது அமைய நீர்மைப்படுத்தலும் சமவேதனக் கட்டுப்பாடுகளைப் பாதுகாத்தலை பலவீனப்படுத்துகிறது. தொழிற்சந்தை நெகிழ்ச்சியின் மூலம் உள்ளார்ந்த கட்டுப்பாட்டு நீக்கத்தை உண்டாக்குவதை இது கருதுகின்றது.

இந்நாடுகளில் அண்மைக் காலத்தில நிறுவப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் (EPZs) அரசாங்கங்கள் கைத்தொழிலில் சர்வதேச முதலீடுகளை ஊக்குவிக்க மேற்கொண்ட கொள்கைகளுள் ஒரு வகையெனலாம். ஏறக்குறைய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையங்களை நிறுவிய இந்த நாடுகள் எல்லாவற்றிலும் ஆண்களை விடப் பெண்களுக்கு வேலை வாய்ப்புப் பெருகியுள்ளதோடு பெண்கள் குறைந்த கூலிக்கு வேலைக்கமர்த்தப்படுதலும் விரைவாக அதிகரித்துளது. இக்கைத்தொழில்களின் உற்பத்தி பெரும்பாலும் ஏலவேயுள்ள உள்நாட்டு உற்பத்திக்கு ஊறுவிளைவிப்பது குறைவு எனக் கொள்ளலாம். ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில், உதிரிப் பாகங்களைச் சேர்த்தமைக்கும் வேலையிலும் பொருளுற்பத்தி வேலையிலும் பல பணிகள் குறைத்திறம் வேண்டுபவையாகவும், குறைந்த கூலியுடையன வாயுமுள்ளன. குறிப்பாக, ஆசியாவின் புதிதாகக் கைத்தொழில் மயப்பட்ட நாடுகளில் இளம் பெண்கள் தொழிற் சங்க உறுப்பினராகாது நீண்ட நேரங்களுக்குக் குறைந்த கூலியோடு உழைக்க இசைவுள்ளவர்களாயுள்ளனர். வயது ஏற அவர்களின் வினைத்திறன் குறைய, அவர்களை விலக்கிவிட்டுப் புதிய தொழிலாளர்களை அமர்த்துவர் (Standing 1989).

இந்த வலயங்களில் பெண்களுக்கான வேலை நியதிகள் நீண்டகால தொழிற் பாதுகாப்பு உறுதியையோ மேம்பாட்டு வாய்ப்பையோ அநேகமாக வழங்குவதில்லை. சுகாதார, இடர் காப்பு ஆகியனவற்றில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு. பெரிய முதலீட்டு ஒழுங்கமைப்புகளும் கொடையாளி நாடுகளும் / நிறுவனங்களும் ஏற்றுமதி நிலையங்களில் வேலை நியதிகளைக் கட்டுப்படுத்தும் சட்டவாக்கங்களிற் செல்வாக்குக் கொண்டிருக்க முடியாதிருக்கலாம். எனினும், அவை தமது கடன்களையோ, நன்கொடைகளையோ, அவற்றை ஏற்கும் நாடுகளின் தொழிலுக்கமர்த்தும் கொள்கைகளில் விளைவு ஏற்படுத்தக் கூடியளவுக்கு நெம்பிகளாகத் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

பல வளர்முக நாடுகளில், பொதுத் துறை முதலீடு முறைசார்ந்த துறை, பெண்களுக்கு முக்கியமான தொரு வேலைவாய்ப்பு வழியாக இருந்து வந்துள்ளது. மேலும், இப்பொதுத் துறை முயற்சிகள் தனியார் துறையைவிட பெண் தொழிலாளரின் சிறப்புத் தேவைகளில் கவனம் செலுத்துகின்றன. ஆனால், கடந்த தசாப்த காலமாக அல்லது சற்றுக் கூடிய காலமாக, பல வளர்முக நாடுகள் பொதுத் துறை முதலீட்டைக் குறைத்தும், பொதுத் துறை முயற்சிகள் சிலவற்றைத் தனியார் மயப்படுத்தியும் வந்துள்ளன. அமைப்பியல் இணக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இசைவான இந்தக் கொள்கை, சில வேலைகளை, குறிப்பாக கீழ்மட்ட வேலைகளை, இல்லாமற் பண்ணியே உற்பத்தியையும் வினைத்திறனையும் சிறப்பாக்கியுள்ளது.

பெண்களைப் பாதிக்கும் தொழில் ஒழுங்கு விதிகளைப் பொறுத்த மட்டில், வேலைக் கமர்த்துவோர் வேலைத் தளங்களில் குறைந்தளவு பாதுகாப்பு வசதி களையும், பிற சேவை களையும் வழங்க வேண்டும் என்ற சட்டமுறை யான கட்டுப்பாடுகளை அரசாங்கங்கள் விதித்தாலும், தொழிற்சங்கங்களும், சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பு (ILO)ஆகியன, தொழிலாளர் நலன், உரிமைகள் ஆகியவற்றை வற்புறுத்தி வாதிட் டாலும், வளர்முக நாடுகளில் தொழி லாளருக்குக் கிடைக்கும் சட்டமுறை யான பாதுகாப்பு நாட்டுக்கு நாடு கடும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. தொழிலாளரைப் பாதுகாக்கும் சட்டங்கள் பல நடைமுறையில் செயலற்று விடுவ தனால் பெண்கள், குறிப்பாக வேலைக்கமர்த்தும் விதிகள், தொழி லுயர்வு பற்றிய விதிகள் ஆகியவற்றி னடிப்படையில் ஓரங்கட்டப் படுகின்றனர்.

ஒன்றரைத் தசாப்தத்திற்குக் கூடிய காலத்துக்கு முன் தொடங்கிய தொழில் ஒழுங்குக் கட்டுப்பாட்டு நீக்கம் பெண்கூலி உழைப்பாளர் மீது நேரடி யானவும் மறைமுகமானவையுமான விளைவுகளைக் கொண்டுள்ளது. அரசாங்கங்கள் வேலைக்கமர்த்து வோரினதும், அமைப்பியல் இணக்கக் கொள்கை முன்மொழிவோரினதும் நெருக்கங்களுக்குச் செவிமடுக்கும் தறுவாய்களிலேயே இவ்விளைவுகள் குறிப்பாக, நிகழ்ந்துள்ளன. வெளி வேலையைத் தடுக்கும் சட்டங்களைத் தளர்த்தியதும், பெண்களுக்கு மறு படியும் இரவு வேலைகளை அனுமதித்ததும் இவற்றுக்கு எடுத்துக் காட்டாயுள்ளன. உற்பத்திச் செயல் முறைகளிற் சிலவற்றைத் தொழிலாளர் தத்தமது வீடுகளில் வைத்துச் செய்ய ஒப்பந்த அடிப்படையில் விடும் வேலைகளே இங்கு வெளி வேலை எனப்படுகின்றது.

வீடுகளில் இருந்து வேலை செய்யும் தொழிலாளருக்குச் சில உற்பத்திச் செயல்முறைகளை உப-ஒப்பந்த அடிப்படையில் கையளிக்கும் வெளி வேலை முறை, துரிதமாக வளர்ச்சியடையும் முறையாகவுள்ளது. இதில் பெருந்தொகையான பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஏழைப் பெண்களின் கவலையான நிலவரங்களைக் கண்காணிப்பது கடினம். உற்பத்தியை, வீடுகளிலிருந்து வேலை செய்வோரிடம், நகர்த்தி விடுவதனால், வாடகை, கருவிகள், பொறிகள் ஆகியவை சார்ந்த தமது செலவினங்களை உற்பத்தியாளர் ஒழித்து விடுகின்றனர். இதனால் வீட்டிலிருந்து வேலை செய்யும் தொழிலாளருக்கு மட்டுமல்லாது, அவர்களது முழுக் குடும்பங்களுக்குமே சுகாதாரம், பாதுகாப்பு ஆகியன பற்றிய இடர்கள் விளையும் தறுவாய்கள் பல கவனத்துக்கு வந்துள்ளன. இத்தகைய வெளி வேலையை ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதனால் பல பெண் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் பெரிதும் நன்மை அடைவர். இரவு வேலையை அரசாங்கம் அனுமதித்த பின், பெண்கள் தம்மிச்சைப்படி இரவு வேலைக்கு உடன்படுகிறார்களா அல்லது நெருக்கத்தின் பேரில் உடன்படுகிறார்களா என்பதனைக் கண்காணிப்பது கடினம். இடர்களை எதிர்கொள்ளக் கூடிய நிலவரங்களி லிருந்தும் பெண்கள் இரவு நேர வேலைகளை ஏற்கும்படி நெருக்கப் படுதல் நிகழுகின்றது.

## இலங்கையின் அனுபவம் / அடைவு

இலங்கையில் தொழிலாளர் தொகுதி பங்குகொள்ளலின் தொழில் முறையான பரம்பலைக் கூர்ந்து பார்த்தால் கடந்த தசாப்தத்தில் பெண், ஆண் தொழிலாளர்கள் பயிர்ச் செய்கைத் துறையை விட்டு விலகி நகர்ந்துள்ளது புலனாகும். கூடுதலான ஆண் தொழிலாளர்கள் சேவைத் துறையை நாடி நகரக் கூடுதலான பெண் தொழிலாளர் தயாரிப்புத் தொழிற் துறையை நாடி நகர்ந்துள்ளனர். 1980 களின் நடுப்பகுதிக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் பயிர்ச்செய்கைத் துறையில் பெண் தொழிலாளர் பங்குகொள்ளுதல் 9.8% தால் குறைய, தயாரிப்புத் துறையில் அது 7% தால் கூடியுள்ளது. அமைப்பியல் இணக்க நிகழ்ச்சித் திட்டத்தோடு இணைந்த ஏற்றுமதி முகப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள், ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் ஆகியன மூலமாகவும் கூடுதலான பெண்கள் உலகளாவிய சந்தைக்குள் இழுக்கப் பட்டனர். 1979 இலும், 1984 இலும், 1990 இலும் முறையே கட்டுநாயக்கா, பியகமை, கொக்கலை ஆகிய இடங்களில் மூன்று ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் நிறுவப்பட்டன. 1989 இல் ஏற்றுமதி முகப்பட்ட கைத்தொழில் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் கூடுதலாக வலியுறுத் தப்பட்டதுடன், முன்னர் வேறு வேறாக இயங்கிய பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரை மன்றும் முதலீட்டுச்சபை (B.O.I.) என்ற பெயருடைய ஒரே அலகாக ஒன்றிணைக்கப்பட்டன.

1991 ஆம் ஆண்டு கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டம், வெளிநோக்கான கைத்தொழில் மயமாக்கல் சூழ்திறன் களுக்கு முக்கியத்துவம் கொடுத்த தோடு, கிராமப் புறங்களில் நிறுவப் படும் 200 ஆடைத் தொழிற்சாலை களின் மூலம் கிராமப்புறங்களும் ஏற்றுமதிப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைக்கப் படுதலும், மூன்று பாரிய புடவை ஆலைகளும், 40 பிற அரச முயற்சிகளும், தனியார் மயப்படுத்தப் படுதலையும்கருத்திற் கொண்டது. உழைப்பு அல்லது தொழிலமர்வைப் பொறுத்தவரை தயாரிப்புத் தொழிலில் ஆண் தொழிலாளர் தொகுதி ஓரளவுக்குத் தளம்பல் இல்லாதிருக்க, 1985 ஆம் ஆண்டில் 18.6% ஆக இருந்த பெண தொழிலாளர் தொகை 1994 இல் 25.6% மாயிற்று (வடகிழக்கை விட). 1985 இல் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் தொகுதியில் 44.5% மாக இருந்த பெண் தொழிலாளர் தொகுதி, 1994 இல் 52.6% ஆக இருந்தது (வடகிழக்கை விட). உலகளாவிய சந்தையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவே இந்தப் பெருக்கம். இம்மாற்றங்களினால் பன்னாட்டுக் கம்பெனிகள் கூலிச் செறிவான கைத்தொழில்களையும், பதனிடுதற் றொழில்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு மாற்றி நிறுவின. இதற்கு மலிந்த பெண் தொழிலாளர்கள் கிடைக்கக் கூடியதாயிருந்ததலே பிரதானமான ஈர்ப்பாக இருந்துளது. அரசுகள் கூட இந்த மலிந்த உழைப்பு கிடைக்கக் கூடிய நிலைமையைச் சர்வதேசச் சந்தையின் ஒரு பொருளியல் வளமாகக் கொள்கின்றன.

இப் பெண்மயப்படுத்தல் முறை இலங்கையின் தயாரிப்புத் தொழிற் பிரிவில் மூன்று பிரதான பகுதிகளில் நிகழ்ந்துளது: அவை (1) உணவு (2) குடிபானமும் புகையிலையும் (3) இரசாயன, பெற்றோலிய,இறப்பர் பிளாஸ்டிக் உற்பத்திகள் ஆகியன. இம்மூன்று பகுதிகளுள் இரசாயன, பெற்றோலிய பகுதியல்லாத மற்றைய இரு பகுதிகளிலும் பெண்கள் கூடுதலாக பங்கு கொண்டுளர் (Jayaweera, 1995), நெசவுத் தொழில், ஆடைத் தொழில் ஆகியவற்றில் வேலைக்கமர்ந்த பெண்களின் பங்களிப்பு 1987 இல் 68% மாயிருந்து 1992 இல் 77.3% ஆக அதிகரித்தது. ஆனால், இப் பெண்களின் தொழில்சார் பெயர்வு மாற்றமடையாது நிலையாகவே யிருந்தது. கூடுதலான பெண்கள் ஓரளவு வினைத்திறன் பெற்ற தொழிலாளர் பிரிவிலேயே மேலதிக மாகக் காணப்பட்டனர், ஒரே தொழிற் பிரிவில் பெண் தொழிலாளர் எண்ணிக்கை ஆண்களைவிட மூன்று மடங்கு கூடுதலாயிருந்தது.

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் பெண் தொழிலாளரே கூடுதலாக உள. 1984 இல் மொத்த மாக இருந்த 30,199 தொழிலாளருள் 78.9% பெண்களாயிருந்தனர். 1987 இல் 45,047 தொழிலாளருள் 81.5% பெண்களாகவும், 1992 இல் 104,643 தொழிலாளருள் 78.4% பெண்களாகவும் இருந்தனர் (Cenwor, 1995, GCEC 1992). இப் பெண் தொழிலாளருக்கு கூலித் தொழில் பெறும் வாய்ப்புகள் அதிகரித்திருந்தும்,அவர்கள் தொழில் சார் படிநிலைகளில், குறிப்பாக ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில், தாழ் மட்டங்களிலேயே தொடர்ந்து காணப்படுகின்றனர். 1992 இல் இலங்கையின் மூன்று ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் ஓரளவு வினைதிறன் பெற்ற தொழிலாளருள் 90.2% தினரும், வினைத்திறனற்றோர் தொகையில் 72.9% தினரும், பயில்வோரில் 89.2% தினரும் பெண்களாயிருந்தனர் (Jayaweera, 1995).

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் வேலைக்கமர்ந்துள்ள பெண் தொழிலாளர் தமது குடும்பங்களின் வாழ்க்கைத் தராதரத்தைச் சீராக்கி, தாமும் ஓரளவு பொருளாதார வலுப் பெற்றவர்களாக முன்னேறியிருப்பினும் அவர்களுடைய தொழிற்றரமும் வேலை நில வரங்களும் மிகவும் மோசமான நிலையி லுள. மேலும் அவர்கள ஓரளவு வினைத்திறன் பெற்ற கூலிச் செறிவான உதிரிப்பாகங்களைச் சேர்க்கும் தொழில்களில் அல்லது வேலை உயர்ச்சி பெற முடியாத தொழில்களிலேயே தேங்கி நிற்கின்றனர். குறைந்தது இரண்டாந் நிலைக் கல்வித் தராதரத்தோடு இப் பெண்கள் தொழிலில் முன்னேற்றம் பெறக்கூடிய வாய்ப்புகளற்று 'வினைத் திறன் நீக்க'ப் பெறுகின்றனர்.

தொழிலின் தரம் குறைவா யிருப்பதோடு தொழில்சார் சட்டங் களும் அமுலாக்கப்படாதிருப்பதை இப் பெண் தொழிலாளர்கள் காணக்கூடிய தாகவுள்ளது. மேலும், உற்பத்திக் காலக் கெடுக்களிருப்பதனால், இப் பெண்களின் வேலை நேரங்கள் போதியளவு ஊதியங்களில்லாமல் அதிகரிக்கப்படுகின்றன. சர்வதேச தொழில் ஒழுங்கமைப்பின் இணக்க ஒப்பந்தத்திலிருந்து (ILO) 1984 இலங்கை வாபஸ் பெற்றதிலிருந்து இரவு நேர வேலை அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தத்திலிருந்து வாபஸ் பெற்ற பொழுது பெண் தொழிலாளரின் பாதுகாப்புக்கென உடன்பட்ட நடவடிக்கைகள் எவையேனும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

வர்த்தகச் சங்கங்கள் இல்லாத விடத்து இப் பெண் தொழிலாளர்கள் கட்டுப்பாடற்ற வேலை நீக்கத்திற்கு ஆளாகின்றனர். கைத்தொழில்கள் கூலி மலிவான இன்னுமொரு நாட்டிற்கு இடம் மாறலாம் என்பதோடு தொடர்பான தமது நிலையற்ற தொழில் வாய்ப்பினைப் பற்றிய விழிப் புணர்ச்சி இவர்களுக்கு இல்லை. இப்பெண் தொழிலாளருக்கு வதிவிட வசதி கொடுப்பதன் முன்னுரிமை நிலை குறைவாயிருப்பதனால் அவர்கள் தொடர்ந்து தரம் குறைந்த இடநெருக்கடி கொண்ட வாடகை இடங்களில் தங்கியுள்ளர்.

ஏற்றுமதி முகுப்பட்ட கைத் தொழிலாக்கத்தில் பாரிய நிறுவனங்கள் சிறிய அலகுகளுக்கு அல்லது மனை சார்ந்த தொழிலாளருக்கு உப ஒப்பந்தங்களின்படி வேலையைப் பகிர்ந்து கொடுப்பது ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இவ்வலகுகள் 1980 களிலும் 1990 களிலும் எண்ணிக்கையில் அதிகரித்தன.

இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் உற்பத்தி இலக்குகளின்படி பொருளுற்பத்தி செய்வதற்கு நீண்ட நேரம் வேலை செய்வதோடு குடும்ப அங்கத்தவர்களுடைய கூலியையும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வுப ஒப்பங்க உற்பத்தி முறையில் நடுவரா யிருப்பவரே பெருமளவு இலாபத்தைப் பெற்று தமது சமூக-பொருளாதார நிலையையும் சீராக்கிக் கொள்கின்றனர். பொதுப்படக் கூறின் தொழில் சட்டப் பாதுகாப்பின்றி இப் பெண் தொழிலாளர் நிரந்தரமற்ற தொழிலிலே மாய்ந்து போயுளர் எனலாம்.

1990 களின் ஆரம்பத்தில் நிறுவப்பட்ட ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் (EPV) உப-ஒப்பந்த நடவடிக்கைகளுள் இன்னுமொன் றாகும். இந்நடவடிக்கைகளின்படி, மக்கள் கம்பனிகள் ஏற்றுமதியாள ராகவும் சிறு அலகுகள், மனை சார்ந்த அலகுகளில் பணியாற்றும் தொழிலாளர் பங்குதாரராகவும் பங்கு கொள்கின்றனர். 1968 இல் சென்வோர் (CENWOR) நிறுவனம் நடாத்திய ஆய்வின்படி, கிராமிய உற்பத்தி யாளரில் பலர் பெண்களாயுளர். இவர்கள் விவசாயத்திலும், விவசாயஞ் சார்ந்த கைத்தொழில்களிலும் ஈடுபடுபவராயுளர் எனக் கூறப்படு கின்றது. இப் பெண்களுக்குச் சந்தை வசதியிருந்தும் அவர்களுடைய வருமானம் செய் தொழிலின் அடிப்படையில் வித்தியாசப்பட்டது. உதாரணமாக, முந்திரிக்கொட்டை பதனிடுதல், ஒரு வகைப் புல்லினால் பெட்டி இழைத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பெண்கள் பிஞ்சு மிளகாய் விளைவிக்கும் பெண்களிலும் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான உற்பத்தியாளராய் தென்படுதல்.

பொதுவாக இப் பெண் தொழிலாளரின் மொத்த உழைப்பு திருப்திகரமற்றதாகவுளது என அறிவிக்கப்படுகின்றது. தும்புத் தொழில் சார்ந்த ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களில் இத்தொழில்கள் இயந்திரமயமாக்கப்பட்டதனால் வேலையிழந்துள்ளர். குறை உற்பத்திக் கிராமங்களில் இப் பெண்களுக்கு மிகக் குறைந்த தொகையே வருமானமாகக் கொடுக்கப்படுகின்றது.

ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களுக்கு (EPZS) அப்பால் கிராமப் புறங்களில் நிறுவப்பட்ட ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் 81,000 இளைஞருள் 90% பெண்களளெனக் கூறப்படுகின்றது (Dissanayake, 1994). இத்தொழிற் சாலைகளுள் பல தொழிற் பிரச்சினைகளினாலும் கூலி தொடர்பான பிரச்சினைகளினாலும் அண்மையில் மூடப்பட்டுவிட்டன. இங்கு பெருமளவாக வேலைக்கமர்ந்த இளம் யுவதிகளே இப்பிரச்சினைகளுக்கு முதல் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அதுகோரள (1986) வின் ஆய்வின்படி 'பெண்மயப்பட்ட' கைத்தறி நெசவுத்தொழிலும், இறக்குமதிகளின் பதிலீட்டுத் தொழில்களில் சிலவும் அமைப்பியல் இணக்க நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய பாதிப்புக்கள் எனலாம். இக் கைத்தொழில்களில் பணியாற்றிய பெண்கள், 1970 களிலும் 1980 களிலும் உற்பத்திப் பொருட்களிற் கிருந்த பாதுகாப்பும் மானியங்களும் அகற்றப்பட்டதனால் இறக்குமதியாகிய மலிவான பொருட்களின் போட்டி நிலைமையினால், தங்கள் பிழைப் பூதியங்களை இழந்தனர். இந் நிலையைச் சீராக்க எடுத்த முயற்சிகள் முற்றாகப் பலனளிக்கவில்லை.

ஒழுங்கு முறைசாராப் பிரிவுகளில், 1980 களில் சுயதொழில் செய்வோர் எண்ணிக்கை மொத்தத் தொழிலாளர் தொகுதியுள் 25% மாக அதிகரித்திருப்பதாக மதிப்பீடுகள் காட்டுகின்றன. இப்பிரிவில் உள்ள பெண்கள்– கூலியில்லாத குடும்பத் தொழிலாளராகவே காணப்படுகின்றனர்.

மிகக் கூடிய வேலையில்லா நிலைமையை பெண்களிடையே ஆக்குவித்த உறுதி நிலைப்பாட்டு உத்திகளும் இணக்க நிலை உத்திகளும், அவர்களை சுயதொழிற் பிரிவிற்குள் தள்ளிவிட்டுள்ளன(Perera & Mudalige 1993). 1980 களிலும் 1990 களிலும் பெருமளவான பெண்களிற்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தன என முடிவாகக் கூறலாம். ஆனால், இலங்கைப் பொருளாதாரத்தின் சில குறிப்பான பிரிவுகளிற்குள் சேர்க்கப்பட்ட இப் பெண்கள் தொழில்வாய்ப்புகளின் படிநிலையின் தாழ் மட்டத்திலேயே தரங் குறைந்த தொழில்களைப் பெற்றுள்ளர். இந்நிலை தொழிற் சந்தையில் காணப்படும் சமனற்ற நிலையை வற்புறுத்திக் காட்டுகின்றது. உலகளாவிய தொழில் பெண்மயப் படுத்தல் புதிய, மிகக் குறைந்த கூலிகொண்ட தரங் குறைந்த தொழில்களுக்குள் உள்ளூர்ப் பெண் தொழிலாளரையும் ஈர்த்துவிட்டதென்பதையும் இந்நிலை எடுத்துக் காட்டுகின்றது.

தொழிற் தொடர்புகளின் சர்வதேச பெண்மயப்படுத்தல் பெண் தொழிலாளரின், குறிப்பாக இலங்கையைப் போன்ற விருத்தியடைந்து வரும் நாடுகளில், வடுபடத்தக்க நிலையையும், நிலையுறுதியற்ற தன்மையையும் அதிகரித்திருக்கின்றதென நாம் ஊகிக்கலாம். உலகப் பொருளாதார நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய, பெண் தொழிலாளர்கள், குறிப்பாக வளர்முக நாடுகளில், குறைந்த வருமானங் கொண்ட நிலையுறுதியற்ற நடவடிக்கைகளினால் தொடர்ந்து ஈர்க்கப்படுவர். இந்நிலை அவர்களின் ஈடேற்றத்தையும் தன்னுரிமை கொள்ளக்கூடிய வாய்ப்புகளைப் பெற்று அபிவிருத்தியில் தாங்களும் சம பங்காளராக பங்கு கொள்ளவையும் தடுத்து நிறுத்தும்.

உசாத்துணை நூல்கள்:


Atukorale,P. (1986) The impact of 1977 Policy Reforms on Domestic Industry.

Boserup Esther (1970) Women's Role in Economic Development, New York.

CENWOR (1988) Structural Adjustment and Women.

CENWOR (1988b) Export Production Villages

CENWOR (1994) Export Processing Zones in Sri Lanka: Economic Impact and Social Issues, ILO,Geneva.

CENWOR (1995) Facts of Change- Women in Sri Lanka - 1986-1995

Heyzen Nocleen (ed) (1985) Daughterns in Industry, Asian and Pacific Development Centure

Jayaweera, S & M.Dias (1989) sub-contracting in Industry: Impact on Woman Commonwealth Secretariat

Jayaweera,S. & Thana Shanmugam (1993) Employment & Occupational Mobility among Woman in Manufacturing Industries, Colombo ILO-ARTEP.

Jayaweera, S (1995) 'Women and Employment in Facets of Change, Woman in Sri Lanka, CENWOR.

Perera M. & Mudalige R (1993) Self Employment Schemes for humen in Sri Lanka, ILO, Geneva.

Standing Guy (1989) 'Global Feminisation through Flexible Labour' in World Development, Vol.17.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலாவணி விகிதம்

செலாவணி விகிதம் என்பது ஒரு நாட்டின் நாணய அலகு மற்றொரு நாட்டின் நாணய அலகுடன் பரிமாற்றம் செய்யப்படும் விகிதமாகும். இன்றைய உலக பொருளாதாரத்தில் செலாவணி விகிதம் பற்றிய பிரச்சினைகள் எழக் காரணம் பல்வேறு நாடுகள், பல்வேறு வகையான நாணய அலகுகளை உபயோகப்படுத்துவதாகும். 1944 இல் சர்வதேச நாணய நிதியம் உருவாக்கப்பட முன்னர், உலக பொருளாதாரத்தில் கடைப்பிடிக்கப் பட்ட செலாவணி விகிதமுறை தங்க அளவு முறை என அழைக்கப்பட்டது. இத்தங்க அளவு முறையின் கீழ், செலாவணி விகிதங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. தங்க அளவு முறை நிலையான செலாவணி விகித முறையாகும்.

தங்க அளவு முறையின் கீழ் ஒவ்வொரு நாடும் தனது உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை தங்கத்தால் நிர்ணயித்துக் கொண்டது. அவ்வாறு ஒவ்வொரு நாடும் தனது உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியை தங்கத்தினால் நிர்ணயித்துக் கொள்வதன் ஊடாகவே ஒவ்வொரு நாட்டினதும் நாணய வகையின் பரிமாற்ற விகிதம் - அதாவது, செலாவணி விகிதம் - தீர்மானிக்கப் பட்டது. உதாரணமாக, தங்க அளவு முறையின் கீழ், பிரிட்டிஷ் பவுண் ஒன்று 113 கிரேன்ஸ் தங்கமாக நிர்ணயிக்கப் பட்டிருந்தது; அமெரிக்கா 113 கிரேன்ஸ் தங்கம் - 4.86 டொலர்களாக நிர்ணயித்திருந்தது. இதன்படி, பிரித்தானிய பவுணுக்கும் அமெரிக்க டொலருக்கும் இடையிலான பரிமாற்ற விகிதம் பவுண் 1 - 4.86 டொலர்களாக தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறாக தங்க சமன்பாடுகள் (தங்க பரிமாற்ற விகிதம், தீர்மானிக்கப்பட்டு எல்லா நாடுகளும் இத் தங்கச் சமன்பாடுகளை பின்பற்றுவதனாலும் நாடுகளுக் கிடையே சுதந்திரமாக தங்க ஏற்றுமதி இறக்குமதிக்கான வாய்ப்புகள் இருந்ததனாலும் தங்க அளவு முறையின் கீழ் தங்க சமன்பாடுகளை பாதுகாத்துக் கொள்ள இயலுமாயிற்று.

தங்க அளவு முறையின் கீழ் தீர்மானிக்கப்பட்ட செலாவணி விகிதங்கள் அல்லது தங்க சமன்பாடுகள் சிறு அளவில் மாற்றம் அடைந்தன. தங்க ஏற்றுமதி இறக்குமதிக்கான போக்குவரத்துச் செலவுகளை ஏற்க வேண்டி இருந்தமை, பணத்தைத் தங்கமாக மாற்றிக் கொள்வதனால் ஏற்படும் வட்டி வருவாய் இழப்பு என்பன இத்தகைய மாற்றத்திற்கு ஏதுவாயிற்று. உதாரணமாக, பிரித்தானியா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான இறக்குமதிக் கேள்வியை அதிகரித்தால் பவுணின் வழங்கல் அதிகரித்து, டொலருக்கான கேள்வி அதிகரிக்கும். இங்கு நடைபெற வேண்டியது டொலரின் பவுண் விலை அதிகரிப்பாகும். எனினும், தங்க அளவு முறையின் கீழ், டொலரின் விலை அதிகரிப்புக்கு ஒரு எல்லை உண்டு. அவ் எல்லைக்கு அதிகமாக டொலரின் பவுண் விலை அதிகரிக்காது. அவ் எல்லைக்கு மேல் டொலருக்கான பவுண் விலை அதிகரித்தால், பிரித்தானிய இறக்குமதியாளர்களுக்கு பவுணை அளித்து டொலரை கொள்வனவு செய்வதை விட, தங்கத்தை அளிப்பது இலாபகரமானதாகும். உதாரணமாக, பிரிட்டனின் இறக்குமதிக் கேள்வி அதிகரிக்கமுன் பவுண் 1 - 4.68 டொலர்களாகும். இறக்குமதிக் கேள்வி அதிகரிப்பு மூலம் ஒரு டொலருக்கான பவுணின் விலை அதிகரிப்பதனால் ஒரு டொலருக்குச் செலுத்த வேண்டிய பவுணின் அளவு அதிகரிக்கும்; அல்லது ஒரு பவுணுக்கு கிடைக்கும் டொலரின் அளவு குறையும். இதன்படி, டொலருக்கான பவுணின் விலை பவுண் 1 - 4.76 டொலர் வரை மாற்றம் அடைந்ததெனக் கொள்வோம். அவ்வாறு நடந்தால் பிரிட்டனின் இறக்குமதியாளர்கள் நட்டம் அடைவர். இவ்வாறான நிலையில், பிரித்தானிய இறக்குமதியாளர்களுக்கு இன்னொன்று செய்ய முடியும்; அதாவது, தமது பவுண் ஒன்றுக்கு 11 கிரேன்ஸ் தங்கத்தை வாங்கி அதனை அமெரிக்காவுக்கு அனுப்பலாம். அமெரிக்க செலாவணி வங்கி 113 கிரேன்ஸ் தங்கத்திற்கு 4.68 டொலர்களை வழங்க கடமைப் பட்டுள்ளதுடன், அது ஒரு கட்டாய நிபந்தனையுமாகும். இதன்படி, பிரித்தானிய இறக்குமதியாளர்கள் அமெரிக்காவிற்கு தங்கத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் 113 கிரேன்ஸ் தங்கத்திற்கு 4.86 டொலர்களைப் பெற முடியும். எனினும், பிரித்தானியா விற்குள் பவுண் ஒன்றிற்கு 4.76 டொலர்களையே பெறமுடியும். இதன்படி பிரித்தானிய இறக்குமதி யாளருக்கு அமெரிக்காவிற்கு தங்கத்தை ஏற்றுமதி செய்வதன் மூலம் .10 டொலர் இலாபம் கிடைக்கிறது. எனினும், தங்கத்தை அனுப்பும் போக்குவரத்துச் செலவு .8 டொலர்களாகவும் பணத்தை தங்கத்து மாற்றும் பொழுது இழக்கும் வட்டி .2 டொலர்களாகவும் இருப்பின் பிரித்தானிய இறக்குமதியாளர்களுக்கு பலன் கிட்டாது. போக்குவரத்துச் செலவு மற்றும் இழக்கும் வட்டி என்பன .11 டொலர்களாயின் தங்க பரிமாற்றம் பிரதிகூலமாக அமைவதுடன், .9 டொலராயின் அனுகூலமானதாகும். இவ்வாறான நிலையில் தங்க அளவு முறையின் கீழ் தங்கச் சமன்பாட்டுப் பெறுமதி பவுண் 1 - 4.86 டொலராயின் பவுணின் விலை 4.76 டொலர்களுக்கு மேல் அதிகரிக்க முடியாது. உதாரணமாக, பவுண் 1- 4.76 டொலர்கள் வரை அதிகரித்தால் அது சிலிம் அல்லது தங்க ஏற்றுமதிச் சுட்டெண் என அழைக்கப்படும். இவ்வாறே அமெரிக்காவிலிருந்து பிரித்தானியாவுக்கு தங்கத்தை ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அப்பொழுது அது தங்க இறக்குமதிச் சுட்டெண் என அழைக்கப்படும். இதன்படி, தங்க அளவு முறையின் கீழ் தங்க சமன்பாடு அல்லது செலாவணி விகிதத்தில் ஏற்பட்ட மாற்றமானது தங்க ஏற்றுமதிச் சுட்டெண், தங்க இறக்குமதிச் சுட்டெண் என்பவற்றிற்கு இடையிலான மாற்றம் மட்டுமே.

வரலாற்று ரீதியாக பல தங்க அளவு முறைகள் நடைமுறையில் இருந்தபோதும் அவற்றின் அடிப்படை அம்சங்களில் பொதுத் தன்மையை காணக்கூடியதாக இருந்தது. தங்க அளவு முறையில் இரு பிரதான அம்சங்கள் காணப்பட்டன :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குறிப்பிட்ட விகிதாசாரத்தின் கீழ் பணத்தை தங்கத்திற்கு மாற்றக் கூடிய தன்மை காணப்பட வேண்டும்.

2. தங்கத்தை சுதந்திரமாக ஏற்றுமதி, இறக்குமதி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

தங்க அளவு முறையின் கீழ் உள்நாட்டு ரீதியாக புழக்கத்திலுள்ள எந்தவொரு நாணய வகையும் தங்கத்திற்கு மாற்றக் கூடியதாக அமைய வேண்டுமென்ற கட்டாயம் இருக்க வில்லை. வரலாற்று ரீதியாக பணத்தை தங்கத்திற்கு மாற்றுவது பல்வேறு மட்டங்களில் நிலவியது.

1914 க்கு முன்னர் பிரித்தானியா வில் காணப்பட்ட தங்க அளவீட்டு முறை பூரண தங்க அளவீட்டு முறையாகும். அது தங்க இருப்பு முறை என அழைக்கப்பட்டது. 1925 முதல் 1937 வரை பிரித்தானியாவில் நிலவிய முறை கடின தங்க அளவீட்டு முறை என அழைக்கப்பட்டது. கடின தங்க அளவீட்டு முறையின் கீழ் உள்நாட்டு ரீதியாக தங்க அளவீட்டு முறை செல்லுபடி ஆகாததுடன், வெளி நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு செல்லுபடியானதாக இருந்தது. அதனை வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டும் வரையறுக்கும் நோக்குடன் பணப் பரிமாற்றல் தொடர்பான நிபந்தனையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதாவது, ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தை தங்கமாக மாற்ற வேண்டுமாயின் குறைந்த பட்சம் 440 அவுன்ஸ் தங்கம் அவரிடம் இருத்தல் வேண்டும். இம் முறையின் கீழும் தங்கத்தை சுதந்திரமாக ஏற்றுமதி, இறக்குமதி செய்ய இடமிருந்தது. 1914 க்கு முன் இந்தியாவிலிருந்த தங்க அளவீட்டு முறை 'தங்கச் செலாவணி முறை' என அழைக்கப்பட்டது. பொதுவாக, பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் இம்முறை அமுலாக்கப்பட்டது. தங்கச் செலாவணி முறையின் கீழ் கருத்திற் கொள்ளப்பட்ட நாடு தனது வெளிநாட்டு இருப்பினை தங்கத்தில் வைத்திருக்கவில்லை. தங்கத்திற்கு மாற்றக்கூடிய பிறிதொரு நாட்டின் பணமாக வெளிநாட்டிருப்பை வைத்திருந்தது. பிரித்தானிய குடியேற்ற நாடுகள் தமது வெளிநாட்டு இருப்பினை பிரித்தானிய பவுண்களில் வைத்துக் கொண்டன.

ஏதாவதொரு நாடு தனது வெளிநாட்டுச் சொத்துக்களை தங்கத்தில் வைத்திருப்பதால் அதன் மூலம் எவ்வித இலாபத்தையும் ஈட்ட முடியாது. அதனை வேறொரு வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருந் தால் வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும் இவ்விதம் வெளிநாட்டு இருப்பாக வைத்திருக் கப்படும் நாணயத்துக்கும் தங்கத்துக்கும் இடையிலான பரிமாற்ற விகிதம் நிலையாக இருந்தால் தங்கத்தில் வைத்திருக்கும் சொத்துக்களின் பெறுமதி மாறாதிருக்கும். எனினும், தங்கம் அல்லாத வேறு பண வகையில் வைத்திருந்தால் பிரதிகூலம் ஏற்படலாம். 'எந்தவொரு நாடும் தனது வெளிநாட்டு சொத்துக்களை பவுணில் வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் பவுணின் வெளிநாட்டு பெறுமதி குறைவடையும்பொழுது நட்டம் ஏற்படும். பொதுவாக ஒரு பிரித்தானிய நாட்டுடன் அரசியல், பொருளாதாரத் தொடர்புகளை வைத்திருந்த நாடுகளே பெரும்பாலும் தங்க செலாவணி முறையை பின்பற்றி வந்தன.

தங்க அளவீட்டு முறையினை நோக்கும்பொழுது அது சிறந்ததா, இல்லையா என்ற கேள்விக்கான விடை காலத்திற்குக் காலம் மாறுபடும். 19ஆம் நூற்றாண்டில் பொருளியல் அறிஞர்கள் தங்க அளவீட்டு முறை அனுகூலமான முறை எனக் கருதி வந்தபோதிலும் பின்னர் இக் கருத்து மாற்றம் அடைந்தது. தங்க அளவீட்டு முறையின் கீழ் எத்தகைய அளவீட்டு முறை பயன்படுத்தப்பட்டாலும் அமுலாக்கலில் இவ்விரண்டிற்கும் இடையில் வித்தியாசங்கள் இல்லை.

பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் தங்க அளவீட்டு முறையின் கீழ் செயல்படுகிறதெனவும் இவ்விரு நாடுகளினதும் சென்மதி நிலுவை சமன்பாடுடையதெனவும் கருதுவோம். இந்நிலையில், அமெரிக்காவிலிருந்து பிரித்தானியா இறக்குமதி செய்யும் பொருட்களின் இறக்குமதிக் கேள்வி அதிகரிக்குமாயின் ஏற்படும் விளைவு டொலரின் பவுண் விலை அதிகரிப்பாகும். பிரித்தானியா டொலரை கொள்வனவு செய்து அமெரிக்காவிற்கு அனுப்புவதைவிட, அமெரிக்காவுக்கு தங்கத்தை அனுப்புவது இலாபகரமானதென்ற நிலை ஏற்படுவதன் மூலமே மேற் குறித்தவாறு டொலரின் பவுண் விலை அதிகரிப்பு ஸ்தம்பிதம் அடையும். மேலே நாம் எடுத்துக் கொண்ட உதாரணத்தின் பெறுமதி சரியான தாயின் (பவுண் - 4.66 டொலர், தங்க ஏற்றுமதிச் செலவு .8 டொலர், இழக்கப்படும் வட்டி .2 டொலர் எனக் கருதினால்) பவுண் 1 = 4.76 டொலருக்கு மேல் அதிகரிக்குமாயின், பிரித்தானியா அமெரிக்காவுக்கு தங்கத்தை ஏற்றுமதி செய்வது நிச்சயம். அதாவது, பிரித்தானியாவிலிருந்து அமெரிக்காவுக்குள் தங்கம் பிரவேசிக்கும். இதற்குக் காரணம் அமெரிக்காவுக்கு தங்கத்தை ஏற்றுமதி செய்வது பிரித்தானியாவுக்கு இலாபகரமானதாக இருப்பதாகும். இவ்வாறான நிலையில், 1914 க்கு முன்னர் நிலவிய தங்க இருப்பு முறையின் கீழ் பிரிட்டனின் பணம் வழங்கல் நிச்சயம் குறைவடையும். காரணம் பிரித்தானிய வாசிகள் பவுண் தங்கத்திற்கு மாற்றி அமெரிக்காவுக்கு அனுப்புவதாகும். எனினும், தங்க செலாவணி முறையின் கீழ் பணம் வழங்கல் கட்டாயமாக குறைவடைய வேண்டியதில்லை. தங்க செலாவணி முறையின் கீழ் பணம் வழங்கல் கூடுமா குறையுமா என்பது நாட்டின் நிர்வாகத்தின் கொள்கையின் அடிப்படையிலே தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் களை பூர்த்தி செய்யும் முகமாக ஒரு நாட்டின் குடிமக்கள் உள்நாட்டு பணத்தை தங்கத்திற்கு மாற்றுவதனால் ஏற்படும் பண அளிப்பு குறைவினை மீண்டும் அதிகரிப்பதற்காக நாட்டின் நிதி நிர்வாகம் புதிதாக பணத்தை வெளியிடலாம். இதன்படி தங்க இருப்பு முறையில் பிரிட்டனின் பணம் வழங்கல் குறைவடையும். தங்க செலாவணி முறையில் கீழ் பணம் வழங்கல் குறைவடையுமாயினும், தங்க செலாவணி முறையின் கீழ் பணம் வழங்கல் குறைவடைய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

தங்க இருப்பு முறையின் கீழ் பிரிட்டனின் பணம் வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடைவதுடன் அமெரிக்காவின் பணம் வழங்கல் அதிகரிக்கும். காரணம் பிரிட்டிஷ் வாசிகள் பணத்தை தங்கத்திற்கு மாற்றி அத்தங்கத்தை அமெரிக்காவுக்கு அனுப்பும் பட்சத்தில் அமெரிக்கர்கள் அத்தங்கத்தை மீண்டும் டொலருக்கு மாற்றுவதனாலாகும். சாஸ்திரீய பண அளவு வாதத்தின்படி பணம் வழங்கல் குறைவடைவதனால் பொதுவான விலை மட்டம் குறைவடைவதுடன், பண வழங்கல் அதிகரிப்பினால் பொதுவாக விலை மட்டம் உயர்வடையும். இதன்படி, பிரிட்டனில் பண வழங்கல் குறைவடைவதன் மூலம் அந்நாட்டின் பொதுவான விலை மட்டம் குறைவடைவதுடன், அமெரிக்காவின் பண வழங்கல் அதிகரிப்பதன் மூலம் பொதுவான விலைமட்டம் அதிகரிக்கும். இத்தகைய நிலையில் பிரிட்டனின் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் விலை வாசிகள் குறைவதால் பிரிட்டனின் பொருட்கள் அமெரிக்காவில் அதிகளவு போட்டித்திறனைப் பெற்று பிரிட்டனின் ஏற்றுமதிகள் அதிகரிக்கும். அவ்வாறே, அமெரிக்காவின் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் விலைவாசி அதிகரிப்பதால் அமெரிக்காவின் பொருட்கள் பிரிட்டனில் போட்டித் தன்மை குறைவடைந்து, பிரிட்டனின் இறக்குமதி குறைவடையும். இதன்படி, பிரிட்டனின் ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைவடைவதன் மூலம் வர்த்தக நிலுவை சாதக நிலை யடைந்து, சென்மதி நிலுவையில் மிகை ஏற்படும். அமெரிக்காவின் விலைவாசி உயர்வினால், ஏற்றுமதி குறைவடைந்து இறக்குமதி அதிகரிப்பதனால் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையினால் சென்மதி நிலுவையில் பற்றாக்குறை ஏற்படும். எனினும், ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் தங்க இருப்பு, மூலதனம் என்பவற்றை பாதுகாத்துக் கொள்ளும் முகமாக வட்டி விகிதத்தை மாற்றுவதனால் நாடுகளுக்கிடையில் குறுகிய கடன் பரிமாற்றங்கள் ஏற்படும். அது ஒவ்வொரு நாட்டி னதும் சென்மதி நிலுவை சமன்பட ஏதுவாகும். இதன்படி, தங்க அளவீட்டு முறையின் கீழ் உள்நாட்டு வட்டி விகிதம், பொது விலைவாசி என்பவற்றில் மாற்றங்களால் நாடுகளுக்கிடையில் மூலதன பரிமாற்றம் ஏற்படுவதால் சென்மதி நிலுவை சமன்பாடாகும்.

1920 களில் தங்க அளவீட்டு முறை பற்றி கருத்து தெரிவித்த டோஸிட், தங்க அளவீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும் பொழுது சென்மதி நிலுவை சமநிலையில் இருப்பதற்கு பொது விலை மட்டம், வட்டி விகிதம் என்பவற்றின் மாற்றங்கள் மட்டுமன்றி இரு நாடுகளுக்குமிடையிலான வருமான மட்டத்திலான மாற்றங்களும் நிர்ணயகரமான பங்கினை வகித்து வருவதாக குறிப்பிட்டார்.

பிரிட்டனில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை நிலவுமாயின், தங்க அளவீட்டு முறையின்படி சென்மதி நிலுவைக்குறையை நிவர்த்திக்க செயற்பாட்டில் பிரிட்டனின் வட்டி விகிதம் குறைவடையும். வட்டி விகிதம் அதிகரிக்கும் பொழுது முதலீடு குறை வடையும். முதலீடு குறைவடையும் பொழுது மொத்த கேள்வி குறை வடைந்து, அக் கேள்வி குறைவடையும் அளவுக்கு குணக நடைமுறை நடைமுறைப்படுத்தப்படுவதனால் மொத்தக் கேள்வி (முதலீடு) யின் குறைவடைந்த அளவினைப் போன்றே பன்மடங்காக வெளியீடுகளும் வருவாய்களும் குறைவடையும். வருவாய் குறைவடையும் பொழுது எல்லை இறக்குமதி சார்புள்ளமைக்கு ஏற்ப இறக்குமதியும் குறைவடையும். இவ்வாறு வருவாய் குறைவடைவதால் வருவாயின் பிரதிபலன்களான நுகர்வு, சேமிப்பு, நேர்வரி என்பனவற்றிலும் குறைவு ஏற்படும். அவ்வாறே தங்க அளவீட்டு முறையின் கீழ் வருவாய் மாற்றங்களின் பிரதிகூலங்களும் ஏற்படும். தங்க அளவீட்டு முறையின் கீழ் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பிரிட்டனில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை ஏற்படும் பொழுது அமெரிக்காவில் சென்மதி நிலுவை மிகை நிலவும். அமெரிக்காவின் பண வழங்கல் அதிகரிக்கும்.

பண வழங்கல் அதிகரித்து வட்டி விகிதம் குறைவடைவதன் மூலம் முதலீடு அதிகரிக்கும். முதலீடு அதிகரிப்பதனால் மொத்தக் கேள்வி அதிகரித்து, மொத்தக் கேள்வி அதிகரிக்கும் அளவுக்கு குணக நடைமுறை செயற்படுத்தப்படுவதன் மூலம் மொத்தக் கேள்வி (முதலீடு) அதிகரித்த அளவினை விட பன்மடங்கு அதிகமாக வெளியீடும் வருவாயும் அதிகரிக்கும். வருவாய் அதிகரிக்கும் பொழுது நுகர்வு, சேமிப்பு, நேர்வரி என்பன அதிகரிக்கும். அவ்வாறு வருவாய் அதிகரிக்கும் பொழுது கேள்வி அதிகரித்து, விலை மட்டம் அதிகரிக்கும். இவ்வாறு தங்க அளவீட்டு முறையின் கீழ் வருவாய் மாற்றங்களில் பிரதிகூலங்கள் சிக்கலான தன்மையில் இடம்பெறும்.

தங்க அளவீட்டு முறையின் கீழ் வருவாய் மாற்றமடையும் பிரதி கூலங்கள் மேலும் சிக்கலாகின்றன. எல்லை இறக்குமதி உயர் பெறுமதியை அடையுமாயின், அமெரிக்காவின் வருவாய் அதிகரிப்பினால் அந்நாட்டின் இறக்குமதி அதிக அளவில் அதிகரிக்கும். அப்பொழுது பிரிட்டனின் பொருளாதார தளம்பல்கள் - அதாவது, வருவாய், நுகர்வு, சேமிப்பு, நேர்வரி, விலைமட்டம், வெளியீடு முதலிய தளம்பல்கள் - மிகக் குறுந்த அளவிலே குறைவடைகின்றன. அவ்வாறே பிரிட்டனின் எல்லை இறக்குமதியும் உயர் பெறுமதியைப் பெறுமாயின், பிரிட்டனின் வருவாய் குறைவடைவதால் இறக்குமதியும் அதிக அளவில் குறைவடைவதால் அமெரிக்காவின் ஏற்றுமதியும் குறைந்த அளவிலே அதிகரிக்கும். எனவே, அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைகள் குறைந்த அளவிலே விரிவு பெறுகின்றன. இதன்படி தங்க அளவீட்டு முறையின் கீழ் வருவாய் மாற்றம் மூலம் பொருளாதார நடவடிக்கைகளின் மாற்றம் நாடுகளின் எல்லை இறக்குமதி மீது நிர்ணயிக்கப் படுகின்றது.

தங்க அளவீட்டு முறை அமுல் நடத்திபடும் பொழுது தங்கப் பவுண் அளவீட்டு முறையே பரவலாக நிலவி வந்தது. அதாவது, பிரித்தானிய தங்கப் பவுண்களில் ஏனைய நாடுகள் தமது வெளிநாட்டு இருப்புக்களை வைத்திருப்பதாகும். அவ்வாறே உண்மையில் சென்மதி நிலுவைமுறை அல்லது மிகை காணப்பட்ட நாடுகள் கோட்பாட்டு ரீதியாக எடுத்துக் காட்டப்பட்ட விதத்தில் நடைமுறையில் செயற்படவில்லை. மேலும் கோட்பாட்டு ரீதியான சென்மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலுவை மிகை காணப்படும் நாடுகளில் பண வழங்கல் அதிகரித்து, விலை மட்டம் அதிகரிக்க வேண்டியதுடன், சென்மதி நிலுவை பற்றாக்குறை உள்ள நாடுகளில் பண வழங்கல் குறைந்து, விலைமட்டம் குறைவடைய வேண்டும். எனினும், நடைமுறையில் காணக்கூடியது என்னவெனில், சென்மதி நிலுவைக்குறை, மிகை ஆகியன நிலவும் நாடுகளிலும் ஒரே காலத்தில் ஒரே திசையில் விலை மட்டம் மாற்றமடைந்துள்ளது என்பதாகும். அவ்வாறே கோட்பாட்டு ரீதியாக, தங்க அளவீட்டு முறையின் கீழ் விலை மட்டம் குறைவடைந்தாலும் சம்பள மட்டத்தில் குறைவடைதல் ஏற்படவில்லை. அவ்வாறே தங்க அளவீட்டு முறை சக்திவாய்ந்த நாடுகளைவிட வறிய நாடுகளுக்கு பாதகமானதாகும். இதற்கு காரணம் சக்திமிக்க நாடு ஒன்றில் சென்மதி நிலுவைக் குறை ஏற்படுமாயின் வறிய நாடுகளுக்குள் பிரவேசிக்கும் மூலதனம் குறைவடையும். அவ்வாறு ஏற்படின் வறிய நாடுகளின் வெளியீடு, வேலைவாய்ப்பு என்பன குறை வடையும். மற்றொரு வகையில் தங்க அளவீட்டு முறை 19ஆம் நூற்றாண்டில் வெற்றிகரமாகச் செயற்பட்டாலும் 20 ஆம் நூற்றாண்டில் தங்க அளவீட்டு முறையின் கட்ட திட்டங்களை சக்திமிக்க நாடுகள் சரிவர பின்பற்றவில்லை. இதனால் தங்க அளவீட்டு முறை செயலிழந்தது.

அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு

அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு மூலம், ஒரு நாட்டில் வதிவோருக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணியை உத்தியோகபூர்வ மூலங்களுக்கு விற்பனை செய்வதை உறுதிப்படுத்தல், சட்டபூர்வமாக அனுமதி பெற்ற விடயங்களுக்கு மட்டும் அதனை உபயோகிக்க வாய்ப்பளித்தல் என்பவற்றிற்கு இடமளிக்கப்படுகின்றது. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள், பெரும்பாலும் நீண்டகால சென்மதி நிலுவை நெருக்கடிகளை எதிர் கொண்டுவரும் நாடுகளிலே நடைபெறுகின்றது. அந்நியச் செலாவணிச் கட்டுப்பாட்டில் பொருட்கள், சேவைகள் ஏற்றுமதி, இறக்குமதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன இடம் பெறுகின்றன. நிலையான செலாவணி விகித முறையொன்று நிலவும் சந்தர்ப்பத்திலேயே செலாவணிக் கட்டுப்பாடு விசேடமாக நடை பெறுகின்றது. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் பொழுது அந்நியச் செலாவணி மோசடிகள் பெருமளவில் நடை பெறுவதுடன், அதிகாரபூர்வமற்ற வழிகளில் அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன. இங்கு பெரும்பாலும் ஏற்றுமதிகளின் உண்மையான பெறுமதியை விட குறைந்த பெறுமதியை உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தல் இறக்குமதிகளின் உண்மையான பெறுமதியை விடக் கூடிய பெறுமதியை பிரகடனப்படுத்தல் என்பன நடை பெறுகின்றன. இவ்வாறான முறையில் அந்நியச் செலாவணி மோசடிகள் செய்யப்படுகின்றன.

சென்மதி நிலுவை பிரச்சினை நிலவும் நாடுகளுக்கே அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு முக்கிய மாகின்றது. வேறு எவ்வகையிலும் சென்மதி நிலுவையைச் சமப்படுத்த முடியாமற் போகும் பொழுது அதனை சமப்படுத்திக் கொள்ள அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு முக்கியத் துவம் பெறுகின்றது. அவ்வாறே நேரடியாக செய்யப்படும் அந்நியச் செலாவணி கட்டுப்பாடு மூலம் உடனடியான பலன்களைப் பெற முடியும். அவ்வாறே நாடுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் குறுகியகால மூலதனத்தைக் கட்டுப்படுத்த அந்நியச் செலாவணி கட்டுப்பாடு முக்கியமாகும். அவ்வாறே, நிலையான செலாவணி விகித முறையின் கீழ் சென்மதி நிலுவை குறைவை சமப்படுத்தும் பொருட்டு நாணய பெறுமதியிறக்கம் செய்யும் பொழுதும் உள்நாட்டு ரீதியாக பணவீக்கம் ஏற்படுவதுடன், வர்த்தக விகிதம் நாட்டிற்கு பாதகமான முறையில் மாற்றமடைகின்றது. எனினும், அந்நியச் செலாவணி கட்டுப்பாடு மூலம் இவ்வாறான பிரதிபலன்களை தடுத்துக் கொள்ளலாம். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படும் பொழுது குணாம்சரீதியான விளைவுகள் கிடைக்கக் கூடியவாறும், நடைமுறைப்படுத்தல்கள் இறக்குமதி தொடர்பாக அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு செய்யும் பொழுது அத்தியாவசிய இறக்குமதிகளை குறைக்காது அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை குறைக்கும் வகையில் அந்நியச் செலாவணியை கட்டுப்படுத்தலாம்.

இறக்குமதி தொடர்பாக அந்நியச் செலாவணியை கட்டுப் படுத்தும் பொழுது இறக்குமதி குறையும். எனினும், இந்நிலையில் செயல்திறன் அற்ற உள்நாட்டு உற்பத்திகள் தோன்ற இடமுண்டு. அதாவது, அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு மூலம் வெளிநாட்டு பொருட்களால் தோன்றும் போட்டி தவிர்க்கப்படும் பொழுது தரமற்ற பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி யாகலாம். அவ்வாறே அந்நியச் செலாவணி கட்டுப்பாடு மூலம் இறக்குமதி கட்டுப்படுத்தப்படும் பொழுது, உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்காவிடின் உள்நாட்டு ரீதியாக அதிக பணவீக்க தாக்கமொன்று ஏற்படும். அவ்வாறே, இறக்குமதியை கட்டுப்படுத்தும்பொழுது சர்வதேச வர்த்தக வாய்ப்பு குறைவடைவதால் மிக திறன்மிக்க உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திகளை விரிவாக்கும் வழி வகைகளும் மட்டுப்படுத்தப்படுகின்றன. எனினும், இதன் மறுபக்கம் என்னவெனில், குறை விருத்தி நாடுகளில் கைத்தொழல்களை ஆரம்பிக்கும் பொழுது அக்கைத் தொழில்களுக்கு உடனடியாக உலகச் சந்தையில் போட்டியிட முடியாமை யாகும். இவ்வாறான நிலையில் ஓரளவுக்கு இறக்குமதிக் கட்டுப்பாடு அவசியமாகின்றது.

நாடுகளுக்கிடையில் காணப் படும் பல்வேறு நாணய வகைகள் மற்றும் தங்கம் பரிமாறப்படும் சந்தைகள் அந்நியச் செலாவணிச் சந்தைகளாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வளர்ச்சியடைந்த அந்நியச் செலாவணிச் சந்தைகள் காணப் படுவதுடன், போக்குவரத்து மையங் களில் முன்னேற்றமிக்க அந்நியச் செலாவணிச் சந்தைகள் உருவா கின்றன. அந்நியச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி, வர்த்தக வங்கி, வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், அரசாங்கம், தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோர் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். ஏற்ற இறக்கங்க ளாலும் செலாவணி விதிக முறையின் கீழ் அந்நியச் செலாவணிச் சந்தையின் கேள்வி, வழங்கல் சக்திகளின் அடிப்படையில் செலாவணி விகிதங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அந்நியச் செலாவணிச் சந்தைகளுக்கு இடையில் நிரந்தர தகவற் பரிமாற்றம் நிகழுமாயின் அச்சந்தைகளுக்கிடையில் செலாவணி விகிதங்களில் இணக்கம் இருக்க வேண்டும்.

உதாரணம் : பவுண் 1 – 2 டொலர்களாயின் மற்றும் பவுண் 1 – 100 ரூபாவாயின், டொலர் 1 – 50 ரூபாவாக இருக்க வேண்டும். எனினும், டொலர் 1 – 40 ரூபாவாக இருப்பின் இணக்கமின்மை ஏற்படும். அதாவது டொலர் 1 – 40 ரூபாவாக இருக்குமாயின், 80 ரூபாவுக்கு 2 டொலர்களை வாங்கி அந்த 2 டொலர்களுக்கு 1 பவுணை வாங்க முடியும். பின்னர் பவுணை ரூபாவாக மாற்றுவதன் மூலம் பவுண் 1 க்கு 100 ரூபாவைப் பெறலாம். இதன் மூலம் 20 ரூபா இலாபம் அடையலாம். அவ்வாறே 2 டொலர்கள் இருந்தால் அதனை பவுண் 1 க்கு மாற்றி, பின்னர் பவுண் 1 – 100 ரூபாவுக்கு மாற்றலாம். அதன் பின் 100 ரூபாவினால் 2.5 டொலர்களை கொள்வனவு செய்யலாம். இதன் மூலம் 0.5 டொலர் இலாபம் பெறலாம். அந்நியச் செலாவணி சந்தைகளுக்கு இடையில் செலாவணி விகதங்களின் இணக்கமின்மை இருக்குமாயின் மேற்குறித்தவாறு சந்தையின் கேள்வி, வழங்கல் சக்திகள் செயற்படும். இவ்வாறு செலாவணி விகிதங்களுக்கிடையில் இணக்கமின்மை காணப்படும்பொழுது அத்தகைய சந்தர்ப்பங்களில் இலாபமீட்ட செய்யப்படும் வியாபாரம் 'செலாவணி மாற்று வியாபாரம்' என அழைக்கப் படும்.

அந்நியச் செலாவணிச் சந்தையில் கைக்குக் கை வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றப்படும் சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் விலை 'சந்தர்ப்ப செலாவணி விகிதம்' என அழைக்கப்படும். சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய வர்த்தகர்கள் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையில் நிலவும் வேறுபாட்டின் மூலமே இலாபம் அடைகின்றனர். பொதுவாக சர்வதேச பரிமாற்றம் ஒரு கணத்தில் நடைபெறுவதில்லை. அதற்கு சிறிது காலம் எடுக்கும். சர்வதேச வியாபாரமொன்றில் ஏற்றுமதி யாளருக்கும் இறக்குமதியாளருக்கு மிடையில் ஒப்பந்தமொன்று ஏற்படுகின்றது. இவ் ஒப்பந்தம் செய்யப்படும் பொழுது, பொருட்களின் பெறுமதி, நிலவும் செலாவணி விகிதத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப் படுகின்றது. இப் பொருட்களின் பரிமாற்றம் முடிவடைய சிறிது காலம் எடுக்குமாயின் அக்கால இடை வெளிக்குள் சந்தர்ப்ப செலாவணி விகிதம் மாறுபடலாம். ஏற்ற இறக்கமடையும் செலாவணி விகித முறையின் கீழ் செலாவணி விகிதம் மாற்றமடைவது நிச்சயம். நிலையான செலாவணி விகித முறையின் கீழ் கூட அது குறைந்த பட்சமான அல்லது கூடிய பட்சமானதாக முடியும். அவ்வாறு நடந்தால் வர்த்தக நிலை யற்ற தன்மை ஏற்படும். சர்வதேச வியாபார மொன்று நிலவும் சந்தர்ப்ப செலாவணி விகித முறியின் கீழ் இணக்கம் காணப்பட்ட பின்னர் வியாபாரம் நடந்து முடிய முன்னர் செலாவணி விகிதம் மாற்றம் அடைவதனால் ஏற்றுமதி செய்யும் நபருக்கு உள்நாட்டுப் பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி அதிகரித்தல் பிரதிகூலமாவதுடன், உள்நாட்டு பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி குறைதல் அனுகூலமாகின்றது. எவ்வாறாயினும், இவ்வாறான இடர்ப்பாடான நிலைகளுக்கு முகங்கொடுக்க வர்த்தகர்கள் தாயாரா வதில்லை.

மேற்குறித்தவாறான இடர்ப் பாடான நிலைமைகளைத் தவிர்க்கும் பொருட்டே அந்நியச் செலாவணிச் சந்தையின் எதிர்கால வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தடைபெறுகின்றன. இத்தகைய எதிர்கால அந்நியச் செலாவணி பிணைப்பத்திரம் மூலம் வியாபாரத்தில் தொடர்புபடும் இரு நபர்களும் வியாபாரத்திற்கு இணங்கிய திகதி முதல் வியாபாரம் முடிவடையும் திகதி வரையுள்ள காலத்தில் செலாவணி விகித மாற்றங்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்களை கருத்திற் கொள்வ தில்லை என ஒப்பந்தம் செய்து கொள்வதாகும். இவ் எதிர்கால வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வங்கிகள் சம்பந்தப் படுத்தப்படுகின்றன. இக்கொடுக்கல் வாங்கல்களில் வங்கிகளுக்கு சாதகமோ அல்லது பாதகமோ ஏற்படலாம். இன்று சர்வதேச வர்த்தகத்திற்கான ஒப்பந்தமொன்று செய்யப்பட்டதெனக் கொள்வோம். இவ் வர்த்தகம் மூன்று மாதங்களில் முடிவடையுமெனக் கருதுவோம். இக் கொடுக்கல் வாங்கல் இலங்கைவாசி ஒருவர் 1000 பவுண் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்வதுடன் தொடர்பு படுகிறதெனவும், பவுண் 1 – 60 ரூபா எனவும் கொள்வோம். இதன்படி இன்று நடைபெறும் கொடுக்கல் வாங்கலுக்கு மூன்று மாதங்களில் 60,000 ரூபாவுக்கு 1000 பவுண்களை அளிப்பதற்கு வர்த்தக வங்கியொன்று இறக்குமதி செய்யும் நபருக்கு வாக்குறுதி வழங்குகின்றது. எனினும் மூன்றுமாத காலத்திற்குள் பவுண் 1 – 70 ரூபாவாக செலாவணி விகிதம் மாற்றமடைந்தால் வர்த்தக வங்கிக்கு நட்டம் ஏற்படுவதுடன் பவுண் 1 – 50 ரூபாவாயின் வர்த்தக வங்கி இலாபம் அடையும். எனினும் வர்த்தக வங்கிக்கு, அத்தகைய இலாபமோ அல்லது நட்டமோ ஏற்படாது 1000 பவுண்களை வழங்குவதென இறக்குமதியாளருக்கு உத்தரவாதம் அளித்தலுடன், இறக்குமதியாளருக்கு 1000 புண்களுக்கு 60,000 ரூபா வழங்குவதென வாக்குறுதி அளிக்கலாம். அப்பொழுது வங்கிக்கு நட்டமோ அல்லது இலாபமோ கிட்டாது. எனினும், இவ்வாறான நிலை ஏற்படாவிட்டால் வங்கிகளுக்கு இடர்களைத் தாங்கவேண்டி ஏற்படும். இதனால் வங்கியினாலும் பிணை முறியொன்று பெறப்படுகின்றது.

அந்நியச் செலாவணிச் சந்தையின் இலகுவான தொழிற்பாடு இதுவாயினும் நடைமுறையில் அந்நியச் செலாவணிச் சந்தையின் தொழிற்பாடு இதனைவிட சிக்கலானது. தற் காலத்தில் தனிப்பட்ட வர்த்தகர்கள் அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் அதிகளவு தொடர்பு பட்டுள்ளனர். அவர்கள் வங்கிகளில் விலையைவிட கூடிய விலையில் அந்நியச் செலாவணியை கொள்வனவு செய்வதுடன் கூடிய விலையில் விற்பனை செய்கின்றனர். அந்நியச் செலாவணிச் சந்தையில் நிலவும் சந்தர்ப்ப செலாவணி விகிதம் மற்றும் எதிர்கால செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீது பணச் சந்தைகளில் நிலவும் வட்டி விகிதம் பிரதான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சந்தைகளில் வட்டி விகிதங்களில் மாற்றம் ஏற்படின் அதனால் நன்மை அடைய வங்கிகள் வெளிநாட்டு செலாவணியினை வாங்கி விற்பனை செய்வதனால் இந்நிலை ஏற்படுகின்றது. இத்தகைய நிலையில் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல் மேலும் சிக்கலாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது. பதிவு எண் :QD/30/News/95


# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த இருபது வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- சுற்றுலாத்துறையும் பொருளாதாரமும்
- இலங்கைப் பங்குச் சந்தை
- வர்த்தக வங்கித்தொழில் : இன்றைய நிலை
- அமைப்பு ரீதியான சீராக்கங்களும் வளர்முக நாடுகளும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

இரட்டை இதழ் விலை : ரூ. 30/= ஆண்டு சந்தா : ரூ. 180/-
ஆண்டு சந்தா (வெளிநாடு),

தென்னாசியா - US$ 24
தென்கிழக்காசியா /ஆபிரிக்கா - US$ 24
ஜப்பான் - US$ 24
உலகின் ஏனைய பாகங்கள் - US$ 33-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review" என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்


உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் இடம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

**Printed at the Sumathi Book Printing (Pvt) Ltd, Colombo 14, Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org